உ

கணபதி துணை

# நினைவு மஞ்சரி

## (இரண்டாம் பாகம்)

(முதல் பதிப்பு)

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

**டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்**

எழுதியது.

இது

ஷை ஐயரவர்கள் குமாரர்

**எஸ். கலியாணசுந்தர ஐயரால்**

பதிப்பிக்கப்பெற்றது.

கபீர் அச்சுக்கூடம், திருவல்லிக்கேணி, சென்னை.

*Copyright Registered*] **1942** [விலை ரூ. 1—4—0

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | முகவுரை | iii |
| 1. | அம்பலப்புளி ... | 1 |
| 2. | கும்பகோணம் ... | 13 |
| 3. | தடைப்பட்டு நிறைவேறிய கல்யாணம் ... | 33 |
| 4. | சுப்பிரமணிய பாரதியார் ... | 43 |
| 5. | நாடக இலக்கியங்கள் ... | 52 |
| 6. | இளவரசர் துறவு ... | 60 |
| 7. | திருமலைராயன் பட்டணம் ... | 68 |
| 8. | ஆத்திரத்திற்கேற்ற தண்டனை ... | 77 |
| 9. | ராஜா கனபாடிகள் ... | 83 |
| 10. | எது தமிழ்? ... | 92 |
| 11. | பாவலர் மானங்காத்த பாவை ... | 102 |
| 12. | நகரங்களும் ஆலயங்களும் ... | 109 |
| 13. | கள்ளனும் புலியும் ... | 120 |
| 14. | ஸர் பொன்னம்பல இராமநாத துரை ... | 129 |
| 15. | சங்கீதப் பயிற்சி ... | 133 |
| 16. | குதிரையை அடக்கிய குப்பிச்சி ... | 142 |
| 17. | சில ஊர்களைப்பற்றிய குறிப்புகள் (திருப்பனந்தாள்—திருவேட்டீசுவரன் பேட்டை—வேலூர்—திருச்சிராப்பள்ளி) ... | 149 |
| 18. | வில்லைச் சேவகன் ... | 160 |
| 19. | ஹரதத்தர் சிவபக்தி ... | 167 |
| 20. | சைவமுந் தமிழும் ... | 174 |
| 21. | புலவர் தைரியம் ... | 180 |
| 22. | நான் கேட்டபடி ... | 187 |
| 23. | என்னுடைய ஞாபகங்கள் ... | 192 |
| 24. | பாபநாச முதலியார் ... | 209 |
| 25. | மகளிர் கல்வியும் கலைமகள் பெருமையும் ... | 215 |

# முகவுரை

என்னுடைய தந்தையாராகிய மகா மகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் பழந்தமிழிலக்கியங்களைத் தேடி ஆராய்ந்து வெளியிடும் பணியையே தம்முடைய வாழ்க்கை நோக்கமாகக் கொண்டிருந்தமையை அன்பர்கள் அறிவார்கள்.

மணிமேகலைப் பதிப்புக்கு அங்கமாக மணிமேகலைக் கதைச் சுருக்கத்தையும், புத்த சரித்திரத்தையும் எழுதிச் சேர்த்தார்கள். அவ்வாறே பெருங்கதைக்கு அங்கமாக உதயணன் கதைச் சுருக்கம் சேர்க்கப்பெற்றது. அப்பால் தனியே ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரத்தை விரிவாக எழுதி வெளிப்படுத்தினார்கள்.

மயிலாப்பூரில் 'கலைமகள்' என்னும் பத்திரிகை தொடங்கியது முதல் ஐயரவர்கள் தனியே கட்டுரைகள் எழுதும் தொண்டில் ஈடுபட்டார்கள். அப்பத்திரிகையில் வெளியானவற்றைத் தமிழ் நாட்டார் படித்து இன்புற்றுப் பாராட்டலானார்கள். வேறு பத்திரிகையாசிரியர்கள் தங்கள் தங்கள் பத்திரிகைகளின் ஆண்டு மலர்களுக்கும், பல சபைகள், சங்கங்கள் இவற்றின் தலைவர்கள் தங்கள் விசேஷ வெளியீடுகளுக்கும் எழுதும்படி கேட்கவே ஐயரவர்கள் அங்ஙனமே எழுதி வந்தார்கள்.

இவ்வாறு பல பத்திரிகைகளின் ஆசிரியர்களின் தூண்டுதலும் தமிழன்பர்களுடைய பாராட்டுக்களும் ஐயரவர்களுடைய ஞாபகத்திலிருந்த பல செய்திகள்

கட்டுரைகளாக மலர்வதற்குக் காரணங்களாயின. பாட புத்தகங்கள் வெளியிடுபவர்கள் ஐயரவர்களுடைய கட்டுரைகளைத் தங்கள் புத்தகங்களில் சேர்த்துப் பயன் படுத்தலாயினர்.

அன்பர்கள் பலரின் வேண்டுகோளின்படி ஐயரவர்கள் பத்திரிகைகளில் வெளியிட்டுவந்த கட்டுரைகளைத் தொகுத்து "**நான் கண்டதும் கேட்டதும்**", "**புதியதும் பழையதும்**", "**நல்லுரைக் கோவை**" முதலிய தனிப் புத்தகங்களாக வெளியிட்டார்கள். அங்ஙனம் அமைந்த தொகுதிகளில் இது நினைவு மஞ்சரி என்ற வரிசையில் இரண்டாம் பாகமாகும். இதில் ஐயரவர்கள் எழுதியனவும் செய்த பிரசங்கங்களுமாக இருபத்தைந்து கட்டுரைகள் உள்ளன. புத்தக வடிவத்தில் அமையக்கூடிய இன்னும் பல கட்டுரைகள் உள்ளன. காகிதம் கிடைப்பது அருமையாகவுள்ள இக் காலத்தில் அவை அனைத்தையும் தொகுத்து வெளியிட இயலவில்லை. நல்ல நிலைமை அமையும்போது அவை வெளியாகும்.

இந்த வசனத் தொகுதிகளிலுள்ள கட்டுரைகள் எழுதுவதற்கு முக்கியமான காரணமாயிருந்த '**கலைமகள்**' முதலிய பத்திரிகைகளின் ஆசிரியர்கள் முதலியோருடைய அன்பு மிகவும் பாராட்டுதற்குரியது.

இதிற் சேர்த்தற்குரிய படங்களை உதவிய அன்பர்களுக்கு என் நன்றியைச் செலுத்துகின்றேன்.

திருவேட்டீசுவரன்பேட்டை,
20—11—42.

இங்ஙனம்
**S. கலியாணசுந்தர ஐயர்**

# நினைவு மஞ்சரி

## (இரண்டாம் பாகம்)

## 1. அம்பலப் புளி*

கோயில்களுக்கும் அங்குள்ள சிற்பக் கலைக்கும் பெயர் பெற்றது தமிழ் நாடு. ஸ்தலங்களை வழிபடுதலும் ஆலயங்களைப் பாதுகாத்து நித்திய நைமித்திகங்களைக் குறைவின்றிச் செய்து வருதலும் இந்நாட்டு அரசர்களுடைய கடமைகளாக இருந்து வந்தன. ஆலய அமைப்புக்களை விரிவு படுத்துவதும் திருவிழா முதலியவற்றைச் சிறப்பாகச் செய்வித்தலுமாகிய காரியங்களில் அவர்கள் ஒருவரோ டொருவர் போட்டி போட்டுக்கொண்டு தொண்டு செய்தனர். அவர்கள் சரித்திரங்களையும் தர்மச் செயல்களையும் சிவ பக்திச் சிறப்பையும் தெரிந்து கொள்வதற்கு ஆதாரமாக உள்ள சிலாசாஸனங்கள் தமிழ்நாட்டுக் கோயில்கள் பலவற்றில் விளங்குகின்றன.

இவ்வாறு காப்பாற்றப் பெற்று வந்த ஆலயங்களுக்குச் சில காலங்களில் அயல் நாட்டு மன்னரது படையெடுப்பால் இடையூறுகள் நேர்வதும் உண்டு. அத்தகைய காலங்களில் கோயில்களிலுள்ள விக்கிரகங்களையும் வேறு பொருள்களையும் பிறர் அறியாமல் நிலவறைக்குள் மறைத்து வைப்பது வழக்கம். இதன் பொருட்டே பல கோயில்களில் நிலவறைகள் அமைக்

* ஆனந்த விகடன் தீபாவளி மலர், 1940.


கப்பட்டுள்ளன. அத்தகையவற்றை இன்றும் சில கோயில்களிலே காணலாம்.

புற மதத்தினராகிய அரசர்களிற் சிலர் கோயில்களுட் புகுந்து விக்கிரகங்களை உடைத்து வந்தனர். அவர்கள் கொடுமைக்கு உட்பட்ட பல அரிய விக்கிரகங்கள் தலையிழந்தும் கால் ஒடிந்தும் கை போயும் மூக்கறுந்தும் பல ஆலயங்களில் உள்ளன. சிற்பக் கலைத் திறனையும், தெய்வ பக்தியையும், மந்திர சக்தியையும் ஒருங்கே குலைத்துச் சென்ற அந்தக் கொடுமையாளருக்கு அஞ்சி மிகவும் தந்திரமாகத் தங்கள் தங்கள் ஊரிலுள்ள மூர்த்திகளை அடியார்கள் பாதுகாத்த வரலாறுகள் பல உண்டு.

* * *

ஒரு கலாப காலத்தில் சோழநாட்டின் மேல் வேறு மதத்தினனாகிய அரசனொருவன் படையெடுத்து வருவதாக ஒரு வதந்தி பரவியது. அப்போது ஜனங்கள் அஞ்சி நடுங்கினர். ஆலயங்களின் நிர்வாகிகளும் அடியார்களும் விக்கிரகங்களைப் பாதுகாத்து வைக்கும் முயற்சிகளைச் செய்யலாயினர். நாடு முழுவதும் கவலையும் குழப்பமும் குடி கொண்டன.

சிவ ஸ்தலங்களுக்குள் சிறந்ததாகிய சிதம்பரத்தில் உள்ள தீக்ஷிதர்கள் அந்தச் செய்தியை அறிந்து இடி விழுந்தவர்கள் போலாயினர். ஆலயத்தையும் ஸ்ரீ நடராஜ மூர்த்தியையும் தங்கள் உயிருக்கு மேலாகப் பாதுகாப்பவர்கள் அவர்கள். அம் மூர்த்தியைப் போற்றி வழி பட்டுப் பூஜை செய்வதே தங்கள் தொழிலாகவும் இன்பமாகவும் வாழ்க்கைப் பயனாகவும் எண்ணி .வந்தனர். நடராஜப் பெருமான்



சிதம்பரம் கோயில்

அவர்களுக்குத் தெய்வம் மட்டுமல்லர்; அவர்களுக்கெல்லாம் ஒரு ராஜா; தீக்ஷிதர்களெல்லாம் சேர்ந்த குடும்பத்திற்கு அவர் தலைவர். தில்லை வாழந்தணர்களாகிய அவர்களுக்குள் அம்மூர்த்தியும் ஒருவர் என்று சொல்வர் பெரியோர்.

பகையரசன் தன் கொடுமையை நடராஜாவிடம் காட்டத் துணிந்து விட்டால் என்ன செய்வது என்ற பயம் தில்லைவாழ் அந்தணர்களைப் பிடித்துக் கொண்டது. நடராஜப் பெருமான் பொன்னுலாகிய திருவுருவை உடையவர். ஆதலின் வரும் அரசன் அம்மூர்த்தியைக் கண்டால் பொன்னுசை கொண்டு எடுத்துச் சென்று விடுவானென்று அவர்கள் கருதினுர்கள்.

'இக் கோயிலில் எங்கே மறைத்து வைத்தாலும் அந்தப் பாதகன் விட மாட்டான். தில்லை எல்லையைத் தாண்டிச் சென்று வேறு எங்கேனும் இம் மூர்த்தியை யாவது சேமித்து வைக்க வேண்டும்' என்று தீக்ஷிதர்கள் எண்ணினர். யாவரும் ஒன்று கூடி ஆலோசித்தனர். அப்போது ஒவ்வொருவரும் ஒவ்வொரு யோசனையைக் கூறினர். கடைசியில் தங்களுக்குள் அறிவிலும் பலத்திலும் சிறந்த சிலரைத் தேர்ந்தெடுத்து, "நீங்கள் நன்ருக யோசித்து எங்கேனும் தக்க இடத்தில் ஸ்ரீ நடராஜ மூர்த்தியை வைத்து விட்டு வாருங்கள். ஈசுவர கிருபையால் எப்போது இந்தக் கலக்கம் தீருகின்றதோ அப்போது மீண்டும் எம்பெருமானை இங்கே எழுந்தருளச் செய்யலாம்" என்று சொல்லி அவர்களை அனுப்புவதாக நிச்சயம் செய்தார்கள். தினந்தோறும் ஸ்ரீ நடராஜ மூர்த்தியைத் தரிசியாவிட்டால் உள்ளங் கரைந்து கலங்கும் இயல்புடைய

அவர்கள், "இத்தகைய கெட்ட காலம் நமக்கு நேர்ந்ததே! நம் உயிரினும் சிறந்த பெருமானைப் பிரிந்து உயிர் வாழும் அபாக்கியமும் வந்து விட்டதே!" என்று புலம்பினர்.

தேர்ந்தெடுக்கப்பெற்ற தீக்ஷிதர்கள் நடராஜ மூர்த்தியை எடுத்துக்கொண்டு சிதம்பரத்திலிருந்து புறப்பட்டார்கள். விக்கிரகங்களுக்கு யமனாக வந்த கொடிய அரசன் எந்தச்சமயத்தில் வந்துவிடுவானோ என்ற பயத்தால், 'எப்படியாவது விரைவில் இந்த எல்லையைக் கடக்கவேண்டும்' என்ற கவலை அவர்களுக்கு இருந்ததேயன்றி, 'எங்கே போவது? எங்கே நடராஜமூர்த்தியை வைப்பது? எப்படி மறைப்பது?' என்ற யோசனை ஒன்றும் அவர்களுக்கு அப்போது தோன்றவில்லை.

அவர்கள் மிகவும் வேகமாகப் போய்க்கொண்டிருந்தனர். அங்கங்கே உள்ளவர்கள் அவர்கள் வருவதை எவ்வாறோ அறிந்து நடராஜ தரிசனம் செய்யவேண்டும் என்ற ஆசையால் அவர்களைச் சுற்றிக் கூடலாயினர். ஒருவரும் அறியாமல் செல்ல வேண்டுமென்று எண்ணிய தீக்ஷிதர்களுக்கு அது பெரிய தடையாக இருந்தது. ஊர் ஊராக அவர்கள் சென்றனர். 'இப்படியே போய்க்கொண்டிருந்தால் இதற்கு முடிவு எங்கே? ஒருகால் அந்தக் கொடியவன் நம்மைத் தொடர்ந்து வந்தால் என்ன செய்வது?' என்று அவர்கள் கவலை அடைந்தனர்.

'ஏதேனும் ஓர் ஊரிலுள்ள ஆலயத்தில் வைத்து விடலாம்' என்று முதலில் யோசித்தனர். "நடராஜ மூர்த்தி எங்கே இருந்தாலும் அது சிதம்பரமாகிவிடும்; ஜனங்கள் அப்பெருமானை விசேஷமாகப் பூஜை செய்

யத் தொடங்குவார்கள். அதனால் அவர் இருக்குமிடம் யாவருக்கும் தெரிந்துவிடும்; அபாயம் நேரும்" என்று ஒருவர் சொன்னார்.

"மனிதர்கள் பழகாத காட்டில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைத்து அடையாளம் குறித்துக்கொண்டு வந்துவிடலாம்" என்று வேறொருவர் சொன்னார். அவர் கூறிய யோசனை நல்லதென்று உணர்ந்த மற்றவர்கள் அப்படியே செய்யலாமென்று துணிந்தார்கள்.

போகும் வழியில் ஓர் ஊரில் ஓர் இடத்தில் பல புளிய மரங்கள் அடர்ந்திருந்தன. அவை மிகவும் பெரியன. அவற்றுள் ஒரு பழைய புளிய மரத்தில் ஒரு பெரிய பொந்து இருந்தது. அது தீக்ஷிதர்கள் கண்களில் பட்டது. 'எம்பெருமானை ஒளித்துவைக்கத் தக்க இடம் இதுவே' என்று அவர்கள் எண்ணி அன்று இரவில் அவ்விடத்திற்கு வந்து அந்தப் புளிய மரத்தின் பொந்தில் நடராஜ விக்கிரகத்தை வைத்துப் பொந்தை அடைத்தனர். பிறகு அம்மூர்த்தியைப் பிரியமாட்டாமல் வருந்தி அழுது நைந்தனர். "இனி மேல் மறுபடியும் தில்லையில் உன்னை எழுந்தருளச் செய்யும் காலமும் வருமா?" என்று ஏங்கி இரவு முழுவதும் அங்கே இருந்து புலம்பினார்கள். விடிந்ததும் அங்கே இருந்தால் இரகசியம் வெளிப்பட்டுவிடும் என்ற பயத்தால் அவர்கள் புறப்பட்டுச் சிதம்பரம் சென்றுவிட்டார்கள்.

* * *

சிதம்பரத்தில் நடராஜமூர்த்தி இல்லாமலே பூஜை நிகழ்ந்துவந்தது. கன்றைப் பறிகொடுத்த பசுவைப் போலத் தீக்ஷிதர்கள் வருந்தினாலும் அந்த வருத்தத்தை

வெளியே காட்டிக்கொள்ளவில்லை. தரிசிக்க வருவோருக்கும் அந்தச் செய்தியை வெளியிடவில்லை. சிதம்பர ஆலயம் முழுவதும் வன்னெஞ்சக் கள்வனாகிய அவ்வரசனால் அழிக்கப்பட்டாலும் நடராஜ மூர்த்தியை ஒன்றும் செய்யமுடியாது என்ற ஆறுதல் அவர்களுக்கு இருந்தது.

நல்ல வேளையாக அந்தக் கொடும் பாதகனது நோக்கம் சிதம்பரத்தில் செல்லவில்லை. ஆனாலும் என்றேனும் அவன் வரக்கூடுமென்ற திகில் தீக்ஷிதர்கள் நெஞ்சில் இருந்தேவந்தது.

பல வருஷங்கள் சென்றன. விக்கிரக விரோதியாகிய அரசன் இறந்ததனாலோ, தோல்வியுற்றதனாலோ விக்கிரகத்தை உடைக்கும் கொடுஞ் செயல் நின்றுவிட்டதென்று தீக்ஷிதர்கள் கேள்வியுற்றார்கள்; அப்பால் வரமாட்டானென்ற தைரியம் அவர்களுக்கு உண்டாயிற்று. அதற்குமேல் ஒரு கணமாவது நடராஜ மூர்த்தியைப்பிரிந்திருப்பதை அவர்கள் மனம் பொறுக்கவில்லை. முன்பு அம்மூர்த்தியைக் கொண்டு சென்ற தீக்ஷிதர்களும் வேறு சிலரும் அப்பெருமானை எழுந்தருளப்பண்ணிக் கொண்டுவரப் புறப்பட்டார்கள்.

அவர்கள் தாம் எந்த ஊரில் நடராஜப்பெருமானை ஒளித்து வைத்திருந்தார்களோ அங்கே வந்து சேர்ந்தார்கள். தாங்கள் அப்பெருமானை வைத்த புளிய மரத்தைத் தேடலானார்கள். இரவில் ஒருவரும் அறியாமல் வைத்தமையாலும், பல வருஷங்கள் ஆனமையாலும் இடத்தின் அடையாளம் தெரியவில்லை. எங்கெங்கே புளிய மரங்கள் இருந்தனவோ அங்கெல்லாம் தேடினார்கள். அந்த ஊரில் சில புளியந்தோப்புக்கள்

இருந்தமையால் அவர்கள் ஒவ்வொரு தோப்பாகவும், அத்தோப்பில் ஒவ்வொரு மரமாகவும் தேட வேண்டிய தாயிற்று. 'மிகவும் பழையதாக இருந்த அந்தப் புளிய மரம் இவ்வளவு காலத்திற்குள் பட்டுப்போய் வெட்டி விட்டார்களோ' என்ற சந்தேகம் வேறு உண்டா யிற்று. 'அப்படியானால் நடராஜ மூர்த்தி வெளிப் பட்டிருப்பார். அவர் மகிமை இங்கே இரகசியமாக அடங்கி இராது. தமிழ் நாடு முழுவதும் பரவி யிருக் கும்; நமக்கும் தெரிந்திருக்கும். இதுகாறும் தெரி யாமையால் அம்மூர்த்தி இன்னும் வெளி வரவில்லை என்றே தோற்றுகிறது' என்று சமாதானம் செய்து கொண்டனர். "எங்கள் பெருமானே, நாங்கள் பெரும் பாவம் செய்திருக்கிறோம். அதனால்தான் உன் னைப் பிரிந்து வாடுகிறோம். இப்போது உன்னைக் காணாமல் தவிக்கிறோம்" என்று தம்மை நொந்து கொண்டனர்.

மத்தியான்ன வேளை யாதலால் வெயில் கடுமை யாக அடித்தது. தீக்ஷிதர்கள் நடராஜ மூர்த்தியைக் கண்டு பிடிக்காமல் ஆகாரம் செய்வதில்லை யென்ற விரதம் பூண்டிருந்தனர். வெயிலாலும், அலைச்சலா லும், உணவின்மையாலும் அவர்களுக்குத் தளர்ச்சி உண்டாயிற்று; மனத் துயரத்தால் உண்டான தளர்ச்சி அதற்கு மேலே வலிவுடையதாக இருந்தது. கண்கள் இருளடைந்தன. 'ஐயோ, இனி எங்கே தேடு வோம்!' என்று மனம் இடிந்தவர்களாய் அவர்கள் திரிந்தனர்.

பக்கத்தில் இருந்த வயலில் சில உழவர்கள் உழுதுகொண்டிருந்தனர். மத்தியான்ன வேளையில்

அவர்கள் உணவு கொள்வதற்காக மாடுகளை அவிழ்த்து விட்டனர்.

"அந்த அம்பலப் புளியடியிலே கொண்டுபோய் மாடுகளை விடு. நான் வந்துவிடுகிறேன்" என்று ஒரு முதிய கிழவன் ஒரு சிறுவனிடம் சொன்னான்.

அவன் பேசியது தீக்ஷிதர்கள் காதில் விழுந்தது. "என்ன அது? அம்பலப் புளியா?" என்று ஆவலோடு ஒருவர் கேட்டார். "ஆமாம், அப்படித்தான் சொல்கிறான். விசாரித்துப் பார்க்கலாம்" என்றார் மற்றொருவர். யாவரும் அந்த இளைஞன் மாடுகளை ஓட்டிச் செல்லும்போது அவனைத் தொடர்ந்து சென்றார்கள். அவன் ஒரு புளிய மரத்தடியில் மாடுகளைக் கொண்டு போய் நிறுத்தினான். மரம் பெரிதாக இருந்ததால் நல்ல நிழல் இருந்தது.

"தம்பீ, இந்த மரத்துக்கு 'அம்பலப் புளி' என்று ஏன் பெயர் வந்தது?" என்று ஒரு தீக்ஷிதர் கேட்டார்.

"எனக்குத் தெரியாது சாமி; எங்கள் எசமான் அடிக்கடி இந்த மரத்திற்குப் பூசை போடச் செய்வார். அவர் வைத்த பேர் அது" என்று அவன் பதில் சொன்னான்.

தீக்ஷிதர்களுக்கு அப்போதுதான் உயிர் வந்தது. முன்னே வந்த தீக்ஷிதர்கள் அந்த மரத்தைக் கவனித்தார்கள். அதுவே நடராஜமூர்த்தி இருக்குமிடமென்பதைச் சந்தேகம் அறத் தெரிந்து கொண்டார்கள். 'இந்த விஷயம் ஒருவருக்கும் தெரியாமலிருக்க, இவனுடைய எசமானுக்கு மட்டும் எப்படித் தெரிந்தது? அவர் விஷயம் தெரிந்து இரகசியமாக வைத்திருப்பது ஆச்சரியம். அவர் பெரிய பக்தராகவும் அறிவாளியாக

வும் இருக்க வேண்டும். அவரைக் கண்டு சமாசாரத்தைத் தெரிந்து கொண்டு பிறகு எம்பெருமானை வெளிப்படுத்தலாம்' என்று அவர்கள் நிச்சயித்துக் கொண்டனர்.

அந்த இளைஞனைத் துணையாக அழைத்துக்கொண்டு அவனுடைய 'எசமா'னிடத்திற்கு அவர்கள் சென்றார்கள். சிதம்பரம் தீக்ஷிதர்கள் வந்துள்ளார்களென்று அறிந்தவுடனே அந்த 'எசமான்' ஓடி வந்து அவர்களை நமஸ்காரம் செய்து எழுந்தார். அவர் முகத்தில் நல்ல ஒளி இருந்தது. விபூதி ருத்திராக்ஷ தாரணம் செய்திருந்தார். அவரைப் பார்த்தபோதே அவர் நல்ல குடியிற் பிறந்த சைவ வேளாளரென்பதைத் தீக்ஷிதர்கள் உணர்ந்து கொண்டார்கள்.

"உங்கள் அம்பலப் புளியைச் சோதிப்பதற்காக உங்கள் அனுமதியைப் பெற வந்திருக்கிறோம்" என்று அவர்கள் கூறினார்கள்.

"ஏன்?" என்று கேட்டார் வேளாளர்.

"எங்கள் சொத்து அதற்குள் இருக்கிறது. அதை எடுத்துக் கொள்ள வேண்டும்."

"உங்கள் சொத்தா? அங்கே எப்படி வந்தது?"

அறிவாளியாகிய அவ்வேளாளர் உண்மையை முன்னமே ஊகித்து உணர்ந்தவர். ஆயினும் விஷயத்தை விளக்கமாகத் தெரிந்துகொள்ளும் பொருட்டே இவ்விதம் பேசினார்.

"உங்களுக்கு விஷயம் தெரியாமல் இராது. 'அம்பலப் புளி' என்று நீங்கள் அதற்குப் பேர் வைத்ததிலிருந்தே இது தெரிய வருகிறது. எங்களை இன்னும் அதிகக் கவலைக்கு உள்ளாக்க வேண்டாம். நாங்கள்

பட்ட துயரமும் அலைந்த அலைச்சலும் போதும். எங்கள் மூர்த்தியை இவ்வளவு காலம் பாதுகாத்து வைத்திருந்த உங்களுக்கு இனிப் பிறவியே இல்லை. நடராஜமூர்த்திக்கு நீங்களே உண்மையான பக்தர்'' என்று தீக்ஷிதர்களுக்குள் தலைவர் சொல்லும்போதே அவருக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. அதைப் பார்த்த வேளாளப் பெரியார் உருகினார். 'இனிமேல் இவர்களைக் காக்க வைத்தல் பிழை' என்று எண்ணி அவர் அவர்களுடன் புறப்பட்டார். போகும் போதே தாம் உண்மையை உணர்ந்த வரலாற்றைச் சொல்லலானார்:

"அந்தக் கலாப காலத்தில் நான் ஒரு நாள் திடீ ரென்று அந்தப் புளிய மரத்துப் பொந்தைக் கவனிக்க நேர்ந்தது. திறந்திருந்த பொந்து அடைபட்டிருப் பதைக் கண்டபோது அதற்குள் ஏதோ இருக்கு மென்று எண்ணினேன். அந்த மரம் எனக்குச் சொந்த மான இடத்தில் உள்ளது. நான் சோதித்தபொழுது உள்ளே நடராஜ மூர்த்தி இருப்பதை அறிந்தேன். கலாபம் காரணமாக அம்மூர்த்தி அங்கே வந்திருக்கலா மென்பதை உணர்ந்தேன். இரகசியமாக இருக்க வேண்டுமென்றே அங்கே அப்படி வைத்திருப்பதாக ஊகித்தேனாதலால், அவரை வெளிப்படுத்த எண்ண வில்லை. பின்னும் நன்றாக அந்தப் பொந்தை மறைத் தேன். நடராஜப் பெருமான் பூஜை யில்லாமல் இருக் கிறாரே என்ற துக்கம் மாத்திரம் என் மனத்தில் இருந் தது. அப்போது நல்ல வேளையாக ஒரு தந்திரம் செய்ய எனக்குத் தோற்றியது. அந்தப் புளிய மரத்தில் ஒரு தெய்வம் இருப்பதாகக் கனவு கண்டேனென்று

சொல்லி அடிக்கடி அம்மரத்திற்குப் பூஜை செய்ய ஏற்பாடு செய்தேன். உங்களுடைய தேவோபசாரங்களுக்கிடையே மகிழ்ந்தாடிய அப்பெருமான் இங்கே இந்த ஏழையடியேன் ஏற்பாடு செய்த நிவேதனங்களை ஏற்றருள நேர்ந்தது காலத்தின் கோலந்தான். இப்பெருமான் இருப்பதால் அந்த மரத்திற்கு அம்பலப் புளி என்று பெயர் வைத்தேன்."

தீக்ஷிதர்கள், "பொன்னம்பலத்திலே நடந்த பூஜையைப் போல் இந்தப் புளியம்பலத்திலே நடவாவிட்டாலும், இங்கே அன்பு மிகுதியாக இருப்பதை ஸ்ரீ நடராஜ மூர்த்தி அறிவார்" என்றனர்.

பேசிக்கொண்டே அம்பலப் புளியை அடைந்த அவர்கள், அந்தப் பொந்தைத் திறந்து அதிலிருந்து நடராஜப் பெருமானை எடுத்துத் தக்க சிறப்புக்களுடன் சிதம்பரத்திற்கு எழுந்தருளச் செய்துகொண்டு சென்றார்கள்.

நடராஜ மூர்த்தி இருந்த புளிய மரத்தின் சொந்தக்காரராகிய வேளாளர் அன்று முதல் **புளியன்** என்னும் பெயரால் வழங்கப்பட்டார். அவர் இருந்த ஊர் **புளியங்குடி** என்னும் பெயரை அடைந்தது. புளியன்குடி என்பதே அவ்வாறு ஆயிற்று. இவ்வூர் சோழ நாட்டின் தென்பால் உள்ளதென்பர். அவரது பரம்பரையினர் **புளியங்குடியா**ரென்னும் குடிப்பெயரை உடையவர்களாயினர். இன்றும் வேளாளருள் அப்பெயரைக் கொண்டு விளங்கும் குடியினர் பலர் இருக்கின்றனர்.

[பரம்பரைக் கேள்வியாலும், சோழமண்டல சதகம் 99-ஆம் செய்யுளாலும் அறிந்தவற்றைக்கொண்டு எழுதியது இவ்வரலாறு.]

# 2. கும்பகோணம்*

## கும்பேசுவரஸ்வாமி கோயில்

**சோழ** நாட்டில் ஒரு பெரிய நகரமாக விளங்கும் கும்பகோணம் பல ஆலயங்களைத் தன்னிடத்தே கொண்டு அதனுற் சிறப்புப்பெற்ற சிறந்த ஸ்தலமாகும். கும்பகோண மென்னும் வடமொழிப் பெயர் தமிழில் குடமூக்கு என்று கூறப்படும். அது குடந்தையெனவும் திருக்குடந்தையெனவும் மருவி வழங்குகின்றது. ஒரு பிரளய காலத்தில் அமிர்தகும்பம் மிதந்து வந்த போது இவ்விடத்தில் சிவபெருமான் கிராத வடிவங் கொண்டு அதனை விழச் செய்து திருக்கோயிலில் எழுந் தருளினுரென்று புராணம் கூறும். கும்பேசுவரர் கோயில் இவ்வூரிலுள்ள சிவாலயங்களில் தலைமை பெற்றது. அதற்குத் தேவாரம் உண்டு. இங்கே எழுந்தருளியுள்ள அம்பிகையின் திருநாமம் மங்களாம்பிகை என்பது. இந்த ஸ்தானம் சக்தி பீடங்களுள் ஒன்ருகிய மந்திர பீட மாதலின் மந்திரபீடேசுவரி என்ற திருநாமமும் அம்பிகைக்கு வழங்கும். இவ்வாலயத்து விநாயகருக்கு ஆதி விநாயகரென்பது திருநாமம். ஏகபாண சாஸ்தாவின் திருவுருவமும் கிராத ரூபத்திலுள்ள சிவபிரான் திருவுருவமும் ஆலயத்தில் உள்ளன.

## நாகேசுவரஸ்வாமி கோயில்

இந்த நகரத்திலுள்ள நாகேசுவரஸ்வாமி கோயிலும் தேவாரம் பெற்றதே. குடந்தைக் கீழ்க் கோட்டம்

---

* கும்பகோணம் காலேஜில் 1932-ம் ளு செய்த பிரசங்கம்.

என்று இக்கோயில் தேவாரத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. மடந்தையார் கோயிலென்ற திருநாமமும் இதற்கு உரியது. இக்கோயிலில் உள்ள சபாபதிக்கு ஆடல்வல்லாரென்பது திருநாமம். இங்கே சிவபெருமானைச் சூரியன் பூசித்துப் பேறு பெற்றதாகத் தல புராணம் கூறும். இதற்கு அறிகுறியாக இவ்வாலயத்தில் தனியே சூரியனுக்கு ஒரு கோயில் இருக்கிறது. அது சிறந்த சிற்ப அமைதியுடையது.

ஒவ்வொரு வருஷமும் சித்திரை மாதம் 11, 12, 13 இந்த மூன்று தேதிகளில் சூரியனொளி காலையில் நாகேசுவரசுவாமி திருமேனியில் படிவதுண்டு. ஆலயம் அதற்கேற்ப ஆதிகாலத்தில் சிற்பிகளால் அமைக்கப்பட்டுள்ளது. அது சூரியன் பூஜை செய்வதாகக் கருதப்பெறும். அதனைத் தரிசிக்கப் பல அன்பர் வந்து கூடுவர். ஸ்வாமி கோயிலின் உட்பிராகாரத்தில் இராமாயணகதை முழுவதையும் தெரிவிக்கும் சிற்ப அமைப்புக்களைக் காணலாம்.

## விசுவநாத சுவாமி கோயில்

இங்குள்ள விசுவநாத சுவாமி கோயிலுக்குத் தேவாரம் உண்டு. குடந்தைக் காரோணம் என்ற திருநாமம் தேவாரப் பதிகத்தில் காணப்படும். இவ்வாலயத்தில் நவதீர்த்தங்களும் கன்னிகையர் வடிவமாக அமைக்கப்பட்டுள்ளன. தங்கள் பாவங்களைப் போக்கிக்கொள்ளும் பொருட்டு அக்கன்னியர் மகாமக தீர்த்தத்தில் நீராடவரும் ஐதிஹ்யத்தைப் புலப்படுத்துகின்றன அந்தத் திருவுருவங்கள். அந்த ஒன்பதின்மரும் இங்கே வந்தபொழுது கங்கை வீரபத்திரர், கங்கை விநாயகர் என்னும் மூர்த்திகளும் இங்கே

எழுந்தருளினரென்று கூறுவர். மகாமகக் குளத்தின் வட கரையில் கங்கை வீரபத்திரரும் நாகேசுவரசுவாமி கோயிலில் கங்கை விநாயகரும் இப்போது எழுந்தருளி யிருக்கின்றனர்.

## சாரங்கபாணிப் பெருமாள்

திருமால் கோயில்கள் பலவற்றுள்ளும் ஆழ்வார் களுடைய மங்களாசாஸனம் பெற்றது ஸ்ரீ சாரங்க பாணிப் பெருமாள் கோயிலொன்றே. ஆராவமுதன் என்ற தமிழ்ப் பெயரே பெருமாளுக்கு விசேஷமாக வழங்கும். அதனை வட மொழியில் 'அபரியாப்த அம்ருதன்' என்பர். திருவாய்மொழி முற்றும் வெளிப் படாத காலத்தில் இத்திருப்பதியில் பாடி வந்த திரு வாய் மொழிச் செய்யுட் பகுதியாகிய "ஆயிரத்துளிப் பத்தும்" என்பதனாலேதான் திருவாய்மொழி ஆயிர மென்பதை முதலில் அறிந்து கொண்டார்களென்பர்.

காட்டுமன்னார் கோயிலென்னும் தலத்தில் ஒரு பக்தர், "ஆராவமுதே.....குடந்தையுள், ஏரார் கோலங் கண்டேன் எம்மானே குருகூர்ச்சட கோபன் சொன்ன, ஓராயிரத்துளிப்பத்தும் வல்லார்" என்னும் பதிகத்தைச் சேவித்தனராம். அதனைக் கேட்ட பாக வதர்கள் 'நம்மாழ்வார் பாடியவை ஆயிரம் போலும்' என்று அறிந்து அவற்றை எப்படித் தெரிந்து கொள்வ தென்று ஏங்கி நின்றார்களாம். நம்மாழ்வாரைத் துதித்து மதுரகவியாழ்வார் பாடிய "கண்ணி நுண் சிறுத்தாம்பு" என்ற பதிகத்தைப் பல முறை ஓதிச் சடகோபரை வழிபட அவர் பிரசன்னமாகித் திருவாய் மொழி முழுவதையும் வெளிப்படுத்தினராம். திருவாய் மொழி ஆயிரமென்பதை முதல் முதலில் அறிவதற்கு

இப்பர்சுரம் காரணமாயிற்றென்பதை இவ்வரலாற்றி னல் உணரலாம்.

திருமழிசையாழ்வார் இத்தலத்தில் பல வருஷங் கள் இருந்து யோகஞ் செய்தாரென்பர். அவர் ஆராவ முதரைத்துதிக்கும் போது,

"நடந்த கால்கள் நொந்தவோ
நடுங்கு ஞால மேனமாய்
இடந்த மெய்கு லுங்கவோ
இலங்கு மால்வ ரைச்சுரம்
கடந்த கால்ப ரந்தகாவி
ரிக்க ரைக்கு டந்தையுட்
கிடந்த வாறெ ழுந்திருந்து
பேசு வாழி கேசனே"

என்னும் பாசுரத்தைப் பாடத் தொடங்கினர். அது கேட்ட பெருமாள் அவ்வாழ்வார் கூறியபடியே கிடந்தவாறே எழும்போது 'வாழிகேசனே' என்று பாடி முடித்ததும் அப்படியே தங்கினராம். இவ்வாறு திருமுடியைச் சிறிது தூக்கிய திருக்கோலத்தோடு பெருமாள் எழுந்தருளியிருப்பதை இன்றும் காணலாம். இத்திருக் கோலத்தை '**உத்தான சயனம்**' என்று பெரி யோர் கூறுவர். திருமழிசையாழ்வாருக்கு இங்கே மூர்த்தி செட்டித் தெருவில் ஒரு தனிக்கோயில் இருக் கிறது.

திருமங்கையாழ்வார் முதல் முதலில் அருளிச் செய்ததாகிய "வாடினேன் வாடி" என்னும் திரு மொழி இத்திவ்ய தேச விஷயமானதே. ஆராவமுதப் பெருமாளைச் சித்திரைத் தேருடையானென்பர். சித் திரை மாதம் திருத் தேர் விழா நடைபெறும். திரு

மங்கை மன்னர் அருளிய திருவெழு கூற்றிருக்கையை யுடைமையால் சித்திரத் தேருடையவரென்றும் அப் பெருமாளைக் கூறலாம். இவ்வாலயத்துள் பிராகாரத்தில் உத்தராயணமென்றும் தட்சிணாயனமென்றும் இரண்டு மார்க்கங்களுண்டு. அங்கே ஒரு பிம்பம் உள்ளது. அதை நெய்தல் வாயிலுடையான் வடிவமென்பர். ஒரு கலகக் காலத்தில் கலகக்காரர் வந்து இக்கோயிலை அழிக்காத வண்ணம் இக்கோயில் முழுவதையும் வைக்கோல் போரால் மூடிவைத்து ஒரு வேளாளர் பாதுகாத்தாராம். அவரே நெய்தல் வாயிலுடையானென்பவர். அவருக்குக் கோயிலில் சில மரியாதைகள் உண்டு.

லக்ஷ்மீநாராயணஸ்வாமி யென்ற ஸ்ரீ வைஷ்ணவரொருவர் சாரங்கபாணிப் பெருமாள் ஆலயத்துக் கோபுரத்தைக் கட்டினர். அவருக்குப் பெருமாளைத் தவிர வேறு யாரிடத்தும் பற்றில்லை. அவர் பரமபதத்தை அடைந்தபொழுது அவர் உடலத்தை ஸம்ஸ்காரம் செய்வதற்கு யாரும் வரவில்லையாம். அப்பால் கோயில் திட்டத்திலிருந்து அவருக்கு ஈமக் கடன்களைச் செய்ய வேண்டுமென்று பெருமாள் ஆவேச முகமாகத் தெரிவித்தனராம். வருஷந்தோறும் அப்பெரியாருக்குக் கோயில் திட்டத்திலிருந்தே செலவு செய்து சிராத்தம் நடைபெற்று வருகின்றதென்பர்.

சாரங்கபாணிப் பெருமாள் விஷயமாக ஒரு நொண்டி நாடகம் உள்ளது. போர்க்களத்தில் குதிரை திருடச்சென்ற ஒருவன் கால் வெட்டுண்டு நொண்டியாகிப் பெருமாள் திருவருளால் வளர்ந்த வரலாற்றைச் சொல்வது அது.

## பிறகோயில்கள்

அபிமுக்தேசுவரர் கோயில், கௌதமேசுவரர் கோயில், சோமநாதசுவாமி கோயில், சக்கரபாணிப் பெருமாள் கோயில், இராமஸ்வாமி கோயில் முதலிய வேறு பல கோயில்கள் இங்கே உள்ளன. இராமஸ்வாமி கோயிலில் இராமாயணக்கதை ஆரம்ப முதல் இறுதி வரையில் சுவரில் வர்ண சித்திரங்களால், புலப்படுத்தப் பெற்றிருக்கிறது. பிரம தேவருக்குத் தனியே கோயில் மிகச் சில இடங்களில்தான் இருக்கின்றன. இந்நகரத்தின் தென் பாகத்தில் ஒரு கோயில் உள்ளது. அக்கோயில் உள்ள தெருவுக்குப் பிரமன் கோயில் தெருவென்று பெயர். ஜைனர்கள் வழிபடும் ஆலயமொன்றும் இங்கே இருக்கிறது.

## தீர்த்தங்கள்

இந்த ஊரில் மகாமகதீர்த்தம் மிக்க விசேடமுள்ளது. பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒரு முறை இங்கே நடைபெறும் மகாமகத்திற்கு இமய முதல் குமரிவரையிலுள்ள நாடுகளிலிருந்து ஜனங்கள் வந்து மகாமக நீராடிச் செல்வார்கள். காவிரி நதி இந்நகரத்திற்கு அணியாக விளங்குகிறது. ஒரு காலத்தில் திருவலஞ் சுழியினருகில் காவிரி பாதலத்திற் புகுந்து மறைந்ததாம். ஹேரண்டரென்னும் முனிவர் அவ்விடத்திற் புக்குக் காவிரியை மேலே வரச் செய்தாராம். அக்காலத்தில் சுவாமி மலையினின்று கும்பகோணம் வரை வந்த காவிரிக்குக் குமார தாரையென்ற பெயர் உண்டாயிற்று.

## மண்டபங்கள்

மகாமகக் குளத்தின் வட கரையில் துலாபார மண்டபம் என்று ஒன்று உள்ளது. தஞ்சையில் அரசாண்ட அச்சுதப்ப நாயக்கரென்பவர் இம்மண்டபத்தில் துலாபாரதானம் செய்தனராம். ஒரு தராசுத்தட்டில் ஒருவர் ஏறித் தமது எடையுள்ள பொன்னை மறு தட்டில் வைத்து அதனைத் தக்காருக்குத் தானம் செய்வதைத் துலாபாரதானமென்பர். இம் மண்டபத்தின் நடுவே உச்சியில் அம்மன்னர் தானம் செய்யும் காட்சியைப் புலப்படுத்தும் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஸ்ரீ நாகேசுவரஸ்வாமி இம்மண்டபத்தில் தங்கித் தீர்த்தம் கொடுத்தருள்வர். கோவிந்த தீக்ஷிதரென்னும் பெரியார் மகாமக தீர்த்தத்தைப் பிற மதத்தினர் தங்களதென்று கவர்ந்து கொள்ளாதபடி அதைச் சுற்றிலும் பதினாறு சிவலிங்கங்களைப் பிரதிஷ்டை செய்து ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கோயிலைக் கட்டுவித்தார். அப்பெரியார் தஞ்சையில் அரசாண்ட அச்சுதப்ப நாயக்கருக்கு அமைச்சராக இருந்தவர். திருவையாறு, கும்பகோணம், திருவிடை மருதூர், திருவலஞ் சுழி ஆகிய இடங்களில் புஷ்ய மண்டபப் படித்துறைகளும் கட்டிவைத்தனர். பல சிவாலயங்களில் சொக்கட்டான் மண்டபங்களைக் கட்டுவித்தவரும் அவரே.

## மடங்கள்

இந்நகரத்தில் சில மடங்கள் இருக்கின்றன. ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் ஸ்தாபித்த பீடங்களுள் ஒன்றாகிய ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்திற்குரிய மடம் ஒன்று இங்கே இருக்கிறது.

மகாமகக் குளத்தின் வடகரையில் ஒரு பழைய வீர சைவ மடம் உள்ளது. அதைப் பெரிய மடமென்று வழங்குவர். துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளுடைய சகோதரராகிய **வேலையர்** இயற்றிய வீரசிங்காதன புராணமென்னும் நூல் இந்த மடத்தின் பெருமையைக் கூறுகிறது. ஒட்டக் கூத்தர் தக்கயாகப் பரணி இயற்றினதற்குக் காரணம் இம்மடத்தின் சம்பந்தமான நிகழ்ச்சி ஒன்றென்று அப்புராணம் கூறும். ஆனால் அதற்குத் தக்க ஆதாரம் ஒன்றும் இல்லை. தக்கயாகப் பரணி எழுதியிருந்த ஏட்டுச்சுவடிகளில் ஒரு பிரதியில்

"குடந்தையம் பதியிற் கோதிலாப் பெரிய
மடந்தனில் வாழ்வீர மயேச்சுரர் வாழியே"

என்ற செய்யுளொன்று இருந்தது. முற் காலத்தில் இம்மடத்தில் தக்கவர்கள் தலைவர்களாக இருந்தார்களென்று தெரிய வருகிறது.

இந்த வீர சைவ மடத்தின் வழியாக எவரும் பல்லக்கேறிச் செல்லலாகாதென்னும் அதிகாரம் இம்மடத்தினருக்கு முன்பு இருந்ததாம். வேறொரு மடத்தின் தலைவர் இம்மடத்தினருக்கு அஞ்சாது காவிரிக்குச் சென்று நீராடி இவ்வழியே பல்லக்கில் ஏறிச் சென்றாராம். அந்த நிகழ்ச்சியைக் குறிப்பாகத் தெரிவிக்கும் கடிதம் ஒன்று நீதி ஸ்தலத்திற்கு வந்தது. அதிலுள்ளவற்றிற்குப் பொருள் விளங்காத மொழி பெயர்ப்பாளர் அதனை என்னிடம் கொண்டு வந்து கொடுத்தார். "...அம்மடத்தார் ஆஸ்தானத்தில் சாக்கிய நாயனார் மூர்த்தமாக எழுந்தருளியிருந்தும் தகப்பன் சாமிக் குழவியின் பேருதவியினால்......மடத்தார் நீராடி இவ்வழியே சிவிகையேறிச் சென்றார்கள்" என்றிருந்தது.

சாக்கிய நாயனர் மூர்த்தமாக எழுந்தருளியிருந்தன ரென்பது கல்லுங்கையுமாக இருந்தாரென்பதையும் தகப்பன் சாமிக் குழவியென்பது * சிவகுருப்பிள்ளை யென்பதையும் உணர்த்துவதாகச் சொன்னேன்.

வியாசராயர் மடமென்ற மத்வமடம் ஒன்று இங்கே இருக்கிறது. அதனைச் சார்ந்து பல மாத்துவ குடும்பங்கள் இங்குள்ளன. மாத்துவ அந்தணர்களிற் சிலர் சிறந்த வித்துவான்களாக விளங்கினர். பாரதம் சாமண்ணாசார் என்ற ஒரு பெரியாருக்கு வியாச பாரதம் முழுவதும் மனனமாக இருந்தது.

## அடியார்கள்

அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராகிய மூர்க்க நாயனர் இங்கே தங்கியிருந்து மகேசுவர பூஜை செய்துவந்து முத்தியடைந்தனரென்பர். பகவர் என்னும் முனிவர் ஒருவர் இவ்வூரில் தவம்புரிந்து வாழ்ந்து முத்திபெற்றனர். இவருடைய திருவுருவம் நாகேசுவர ஸ்வாமி திருமஞ்சன வீதியிலுள்ள பிள்ளையார் கோயிலில் இருக்கிறது. காவிரியிலுள்ள பகவத் படித்துறை யென்பது இவர் பெயரால் அமைந்ததே. யாப்பருங்கலவிருத்தியில் 'குடமூக்கிற் பகவர் செய்த வாசுதேவனர் சிந்தம்' என்ற ஒரு நூலின் பெயர் வருகிறது. முன்னே சொன்ன பகவரும் இந்த நூலாசிரியராகிய பகவரும் ஒருவரென்றே தோற்றுகிறது. வாசுதேவ மனனமென்ற பெயரோடு வடமொழியில் ஒரு வேதாந்த நூல் உண்டு. வாசுதேவனர் சிந்தமென்பது

* சிவ குருப்பிள்ளை யென்பது கும்பகோணத்தில் தாசீல்தாராக இருந்த ஒருவருடைய பெயர்.

அந்நூலின் மொழி பெயர்ப்பாகவேனும், அவ் வடநூல் இதன் மொழிபெயர்ப்பாகவேனும் இருக்கலாம்.

## புலவர்கள்

பேட்டைத் தெருவிலிருந்த அபிஷேகஸ்தர் ஒருவர் சிவரகசியத்தில் ஒரு பாகத்தைத் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார். கும்பகோண விஷயமாகப் பழைய புராணம் ஒன்று உண்டு. அதனை இயற்றிய வித்துவானும் இவ்வூரில் இருந்தவரே.

என்னுடைய ஆசிரியராகிய மகாவித்துவான் ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இவ்வூர் சம்பந்தமாகத் திருக்குடந்தைப் புராணம், மங்களாம்பிகை பிள்ளைத் தமிழ், குடந்தைத் திரிபந்தாதியென்ற மூன்று நூல்களை இயற்றியிருக்கின்றனர். புராணம் பாடி அரங்கேற்றிய பிறகு பிரபுக்கள் பலர் அப்புலவர் பெருமானைப் பல்லக்கில் இருக்கச்செய்து பட்டணப் பிரவேசம் செய்வித்தனர். அப்பொழுது இவ்வூரிலிருந்த பெரிய செல்வர்கள் இருவர் பல்லக்கின் முன்னும் பின்னும் நின்று ஏனையவர்களுடன் அப்பல்லக்கின் கொம்பைத் தம் கையால் தாங்கிக் கல்வியின் பெருமையையும் கற்றார்க்குரிய நன்மதிப்பையும் காட்டினார்கள்.

பிள்ளையவர்களுடைய மாணாக்கர்களில் சிறந்தவராகிய வித்துவான் தியாகராச செட்டியார் இந்நகர்க் காலேஜில் தமிழாசிரியராக இருந்து காலேஜிலும் வீட்டிலும் பல மாணாக்கர்களுக்குத் தமிழ்ப்பாடம் சொல்லி இன்புறுத்தியதை யாவரும் அறிவார்கள். தியாகராச செட்டியார் இங்கே இருந்தமையால் அடிக்கடி மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இந்நகரத்திற்கு வந்து தங்கவும், அப்புலவர் பிரானிடம்

பலர் பழகிப் பாடம் கேட்கவும் அனுகூலம் உண்டாயிற்று.

## சங்கீத வித்துவான்கள்

இயற்றமிழ் இசைத்தமிழ்களில் நல்ல பயிற்சியுள்ளவராகிய பாபநாச முதலியாரென்பவர் இவ்வூரில் இருந்தவரே. அவர் சிவ ஸ்தலங்களைப்பற்றிப் பல கீர்த்தனங்கள் பாடியிருக்கிறார். அந்த அந்த ஸ்தலங்களின் சிறப்புக்கள் அவற்றில் அமைந்திருக்கும். கும்பேசுவரர் விஷயமாக ஒரு குறவஞ்சி நாடகத்தை அவர் இயற்றியிருக்கிறார்.

நந்தனர் சரித்திரக் கீர்த்தனத்தை இயற்றிய கோபாலகிருஷ்ண பாரதியார் ராமதாஸ் என்பவரிடம் சங்கீத அப்பியாஸம் செய்தார். அந்த ராமதாஸ் என்பவர் இவ்வூரினரே. அவர் உஞ்சவிருத்தி பண்ணிக் கொண்டிருந்தபொழுது திருவிடை மருதூரிலிருந்த பிரதாப சிம்ம மகாராஜா அவருடைய சங்கீதத்திலும் பக்தியிலும் ஈடுபட்டு அவரை உபசரித்து அழைத்துச் சென்று தம் ஆஸ்தான வித்துவானக வைத்துக் கொண்டார்.

பல்லவி கோபாலையரென்ற சங்கீத வித்துவான் ஒருவர் இங்கே இருந்து புகழ்பெற்றார். அவருக்குத் தஞ்சையரசர் மஹிமாலை என்ற ஊரிற் சில நிலங்களை மான்யமாகக் கொடுத்தனர். த்ஸௌகம் சீனுவையங்காரென்ற ஸ்ரீவைஷ்ணவ சங்கீத வித்துவாரொருவர் தஞ்சை மகாராஷ்டிர அரசருடைய ஆதரவுபெற்று இந்நகரத்தில் வாழ்ந்து வந்தார். அவர் சக்கரபாணிப் பெருமாள் ஸந்நிதி வித்துவானக இருந்தார்.

சங்கராபரணம் நரஸையரென்ற சங்கீத வித்துவான் இவ்வூரில் வசித்து வந்தார். ஒருசமயம் அவர் கபிஸ்தலம் சென்று அக்காலத்திலிருந்த ராமபத்திர மூப்பனரென்பவரிடத்தில் தமக்குப் பணம் கடனாக வேண்டுமென்று சொல்லி அதற்கு ஈடாக ஓர் ஆபரணத்தைத் தாம் வைப்பதாகக் கூறினர். மூப்பனர் ஆபரணத்தைக் காட்டும்படி சொல்லியபோது, "சங்கராபரண ராகத்தை நான் அடகு வைக்கிறேன். இந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்கும்வரையில் நான் சங்கராபரணத்தைப் பாடமாட்டேன்" என்று கூறிப் பணம் வாங்கிக்கொண்டார்.

சில தினங்களுக்குப் பின் இந்நகரத்தில் பலர் கூடிய மகாசபை ஒன்றில் அவரைச் சங்கராபரண ராகம் பாடவேண்டுமென்று பலர் கேட்டுக்கொண்டனர். அவர் தாம் அதனை அடகு வைத்திருப்பதாகச் சொன்னர். உடனே இந் நகரத்திலிருந்த பெரிய செல்வராகிய வாலிஸ் அப்புராய ரென்பவர் பொருளுதவி செய்து அந்தக் கடனிலிருந்து அவரை மீட்டுச் சங்கராபரண ராகத்தைப் பாடச் சொல்லிக் கேட்டு ஆனந்தமடைந்தார்.


## வடமொழி வித்துவான்கள்

ஒவ்வொரு சாஸ்திரத்தில் தனித்தனியே பாண்டித்தியம் வாய்ந்தவர்களும், பல சாஸ்திரங்களில் ஒருங்கே தேர்ச்சியுடையவர்களுமாகிய வடமொழி வித்துவான்கள் பலருக்கு இருப்பிடமாகும் பெருமை இந்நகருக்கு அமைந்திருக்கிறது. தர்க்கத்தில் பாரங்கதரான தர்க்க வாசஸ்பதி குறிச்சி ரங்காசாரியாருடைய புலமைக்கு எல்லை இல்லை. மீமாம்ஸையில் வல்லவராக இருந்த

குப்புசாமி சாஸ்திரிகளும், கும்பகோணம் காலேஜில் பண்டிதராக இருந்த மகா மகோபாத்தியாய பெருக வாழ்ந்தான் ரங்காசாரியாரும், வியாகரணம் வராகக் குளம் சடகோபாசாரியாரும், குமாரகிருஷ்ண சாஸ்திரி களும், இவர்களைப்போன்ற வேறு பலரும் இந் நகரத் தைக் கலாபீடமாக்கி வைத்த மகோபகாரிகளாவர். ஒரு சமயம் வடநாட்டிலிருந்து வந்த ஸம்ஸ்கிருத வித்துவானொருவர் போர்ட்டர் ஹாலில் தம்மோடு வா தம் செய்ய வரும்படி இந்தப்பக்கத்து வித்துவான்களை அறைகூவி அழைத்தார். அப்போது குமாரகிருஷ்ண சாஸ்திரிகள் தைரியமாக முன்வந்து அவரோடு வாதம் புரிந்து சைவ மதமே சிறந்ததென்ற கட்சியை ஸ்தாபித் தார். இவர் வேணுகானத்தில் புகழ்பெற்ற சரப சாஸ்திரிகளுடைய முன்னோராவர்.

## காலேஜ்

கும்பகோணம் காலேஜ் கல்வித்திறத்தில் தென் னிந்தியக் கேம்பிரிட்ஜ் என்ற புகழ்பெற்றது. இங்



கும்பகோணம் காலேஜ்

இருந்த பேராசிரியர்கள் யாவரும் சிறந்த அறிவாளி களாகவும் மாணாக்கர்களுக்குக் கல்வி புகட்டும் ஆற்றல் மிக்கவர்களாகவும் விளங்கினார்கள். இக்காலேஜில் பிரின்ஸிபாலாக இருந்த போர்ட்டர் துரையின் புகழ் இன்றும் இங்கே நிலவுகிறது. அவர் பெயரால் அமைந்த மண்டபம் அவருடைய ஞாபகத்தைப் பிற் காலத்தாருக்கும் உண்டாக்கும் அடையாளமாக விளங்குகிறது.



த. கோபாலராவ்

தண்டலம் கோபாலராவைப் பற்றித் தெரிந் தவர்கள் பலர் இன்னும் இருக்கின்றனர். அவரு டைய மேதையும், தூய்மையும், நல்லொழுக்கமும்

அவரோடு பழகிய யாவரையும் அவரைத் தெய்வாம்ச முடையவராகவே எண்ணச் செய்தன.


சாது சேஷையா, ஆர். வி. ஸ்ரீநிவாசையர், பி. ஹநு



சாது சேஷையர்

மந்தராவ் முதலிய ஆசிரியர்கள் இந்தக் காலேஜில் இருந்து இதற்குப் பெருமையை உண்டாக்கினர்கள்.

பூண்டி அரங்கநாத முதலியார் சில காலம் இங்கே கணித ஆசிரியராக இருந்ததுண்டு. அவர் ஆங்கிலத்தி



பூண்டி ரங்கநாத முதலியார்

லும் தமிழிலும் ஒருங்கே தேர்ச்சி பெற்றவர் கச்சிக் கலம்பகமென்ற நூலை இயற்றியிருக்கிறார். கோபால

ராவும் ஸ்ரீநிவாசையரும் தமிழறிவு வாய்ந்தவர்களே. சில சமயங்களில் கோபாலராவ் காலேஜில் தமிழ்ப் பாடம் நடத்தியதுண்டு. முதலில் ஸ்ரீரங்கம் ஹை ஸ்கூலில் தமிழ்ப் பண்டிதராக இருந்த தியாகராச



ஆர். வி. ஸ்ரீநிவாசையர்

செட்டியாரின் தகுதியை அவர்பால் படித்த மாணாக்கன் ஒருவன் மூலமாக அறிந்து செட்டியாரை வருவித்து இங்கே நியமித்தவர் அவரே. தியாகராச செட்டியாருடைய பேரன்பினால் எனக்கு இந்தக் காலேஜில் வேலையானபோது என்னைப் பரீக்ஷித்தவர்களுள் ஆர். வி. ஸ்ரீநிவாசையரும் ஒருவர்.

### பிரபுக்கள்

இங்கு வியாசராயர் என்ற ஒரு தாசில்தார் இருந்தார். அவர் தம் சம்பளத்தில் செலவுபோக மிகுதிப்



திவான் சேஷையா சாஸ்திரியார்

பணத்தைக் கொண்டு ஓர் அக்கிரகாரம் கட்டினர். திருவனந்தபுரத்தில் திவானாக இருந்து புகழ்பெற்ற ஸர். டி. மாதவராயரும் பரோடா திவானாக இருந்த மாதவராயரும் இவ்வூரினரே. புதுக் கோட்டையில் திவானாக இருந்து பல அரிய செயல்களைச் செய்த அ. சேஷையா சாஸ்திரியார் இந்நகரத்தினரே.

முற்காலத்தில் இவ்வூரில் திருத்தங்கியென்ற செல்வன் ஒருவனும் மருத்தன் என்ற கொடையாளி ஒருவனும் இருந்தனர். ஒரு முறை ஔவையார் இங்கே வந்திருந்தபோது அவ்விருவருடைய இயல்புகளையும் அறிந்து ஒரு பாடல் கூறினர்.

"திருத்தங்கி தன்வாழை தேம்பழுத்து நிற்கும்
மருத்தன் திருக்குடந்தை வாழை—குருத்தும்
இலையுமில பூவுமில காயுமில யென்றும்
உலகில் வருவிருந்தோ டுண்டு"

என்பதே அது. அதில் திருத்தங்கியைப் புகழ்பவர் போல அவனுடைய லோபத்தனத்தையும், மருத்தனை இகழ்பவர்போல அவனுடைய விருந்தோம்பும் தன்மையையும் குறிப்பாக ஔவையார் தெரிவித்திருக்கிறார்.

## பெரும்பாண்டிச் சாம்பான்

காவிரிக்கு வடகரையில் பெரும்பாண்டி என்ற கிராமம் இருக்கிறது. அங்கே ஒரு பழைய சிவாலயம் உள்ளது. காவிரிக்கு வடபால் ஸ்மசானம் இருக்கிறது. அங்கே வருகிறவர்கள் பெரும்பாண்டியிலுள்ள ஒரு குளத்தில் நீராடிச் செல்லுவது வழக்கம். அந்தக் குளம் மிகவும் அசுத்தமாக இருந்தது. ஸ்மசானத்துக்கு

வருகிறவர்கள் 'தலைவிதியே!' என்று அதில் மூழ்கி விட்டுப் போவார்கள்.

ஒரு சாம்பான் ஜாதியினர் இதை அறிந்து பலரிடம் பொருள் தொகுத்து அந்தக் குளத்தைச் செப்பம் செய்து ஆலயத்தையும் திருப்பணி செய்வித்தார். அவருக்குப் பெரும்பாண்டிச் சாம்பானென்ற பெயரே வழங்கலாயிற்று. விபூதி ருத்திராட்ச தாரணத்தோடு தலையில் ருத்திராட்சத்தால் அமைந்த சிவலிங்கத்தை அணிந்து இடுப்பில் பல மணிகளைக் கோத்துக் கட்டிக் கொண்டு தெருவின் நடுவிலே செல்வார். கையைக் குவித்துக்கொண்டே போவார். போகும்போதே தாம் செய்யும் தர்மத்துக்கு உதவி செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொண்டு போவார். அவரைப் பார்த்தால் நந்தனாருடைய ஞாபகம் வரும். இவ்வூரிலும் பிற ஊரிலுமுள்ளவர் யாவரும் அவரை நன்கு மதித்துப் பாராட்டினர். அவர் இலங்கை சென்று அங்கும் இந்தப் பணிக்காகப் பொருள் சேகரித்து வந்தார்.

கடைசியில் குளத்தை மிக நன்றாக அமைத்தார். ஊராரெல்லாம் அவரைக் கொண்டாடினார்கள். அவருடைய சிவபக்தியும் அடக்கமும் எல்லோருடைய கருத்தையும் கவர்ந்தன.

சிறந்த ஸ்தலம், நதிதீரம், கலைக்கு இருப்பிடம், பெரியவர்கள் வாழ்ந்த இடம், நாகரிகத்திற் சிறந்த ஊர் என்று பலபடியாகப் பாராட்டுதற்குரிய பெருமைகள் கும்பகோணத்திற்கு இருக்கின்றன. அதன் பெருமை முழுவதையும் சொல்லி முடிப்பதென்பது சாத்தியம் அன்று.

## 3. தடைப்பட்டு நிறைவேறிய கல்யாணம் *

சென்னைக் கிறிஸ்டியன் காலேஜில் தமிழாசிரியரா்க இருந்த கா. ஸ்ரீ. கோபாலாசாரியாரென்பவர் இலக்கண இலக்கியப் பயிற்சியிலும் பிரசங்கம் செய்வதிலும் செய்யுள் இயற்றுவதிலும் பத்திரிகைகளுக்கு விஷயம் எழுதுவதிலும் சிறந்தவராக இருந்தார். திவ்யப்பிரபந்த வியாக்கியானங்களில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தமையின் பல வைஷ்ணவப் பிரபுக்கள் அவரை அன்புடன் ஆதரித்து வந்தார்கள். அவர் பல வருஷங்கள் சென்னை ஸர்வகலாசாலையில் தமிழ்ப் பரீக்ஷகராகவும் இருந்தார். அவர் கௌரவமான நிலையிலே வாழ்ந்து வந்தார். அவருடைய சொந்த ஊர் ராஜமன்னார்குடிக்குப் பக்கத்தேயுள்ள காரப்பங்காடு என்பது.

அவர் எனக்கு முக்கியமான நண்பர். திருவல்லிக்கேணியில் திருக்குளத்துக்குக் கீழ்கரையில் ஒரு வீட்டில் வசித்துவந்தார்.

கோபாலாசாரியார் தம்முடைய குமாரிக்கு விவாகம் செய்ய எண்ணிப் பல இடங்களில் வரன் தேடினார். கடைசியில் மன்னார்குடியில் பந்துக்களுள் செல்வமுள்ள குடும்பத்தைச் சார்ந்த ஒரு பிள்ளையைப் பார்த்து நிச்சயம் செய்து முகூர்த்தம் வைத்தார். கல்யாணத்தை மிக்க செலவில் விமரிசையாக நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருந்தார். கல்யாணம் நடத்துவதற்காகத் தனியே ஒரு ஜாகையைத் திட்டம் செய்தார். பந்தல் மிகவும் சிறப்பாக

* கலைமகள், விக்கிரம, ஆடி.

அமைக்கப்பட்டது. சம்பந்திகள் தங்குவதற்குக் குளத்தின் வடகரையில் ஒரு பெரிய ஜாகையைத் திட்டம் செய்திருந்தார்.

கல்யாணத்திற்கு முன்னே நடைபெறவேண்டிய சுபகாரியங்கள் எல்லாம் சிறப்பாக நடைபெற்றன. கல்யாணத்துக்கு முதல் நாள் காலையிலேயே சம்பந்திகள் மன்னார்குடியிலிருந்து சென்னைக்கு வந்து விட்டார்கள். அவர்களைத் தக்கபடி வரவேற்று அவர்களுக்காக அமைக்கப்பெற்ற ஜாகையில் அவர்களை இருக்கச் செய்தார். அவர்களுக்கு வேண்டிய ஆகார வகைகளை அனுப்பி உபசரித்தார். முதல் நாள் இரவு மாப்பிள்ளை அழைப்பு (ஜான்வாஸா) உயர்ந்த முறையில் நடைபெற்றது. கல்யாண தினத்தன்று காலையில் பெண் வீட்டிலும் பிள்ளை வீட்டிலும் தனித்தனியே நடைபெறவேண்டிய வைதிக காரியங்களும் ஒழுங்காக நடந்தன. அப்பால் மாப்பிள்ளை பரதேசக் கோலம் வந்தார். பிறகு பெண்ணும் மாப்பிள்ளையும் கல்யாண வீட்டு வாசலில் மாலை மாற்றிக்கொண்டார்கள்.

மாலை மாற்றிக்கொள்கையில் பெண்ணையும் மாப்பிள்ளையையும் அவர்களுடைய அம்மான்மார்கள் தோளில் எடுத்துச் செல்வது வழக்கம். அவர்களுக்குப் பதிலாக வேறு சிலர் அவர்களை எடுத்துக்கொண்டு இடசாரி வலசாரியாகச் செல்வதும் ஆடுவதும் ஸ்ரீ வைஷ்ணவ குடும்பங்களில் நடைபெற்று வருகின்றன. இவ்வாறு தோளெடுப்பதற்காகவே காஞ்சீபுரத்தில் தேக வன்மையுள்ள ஒரு கூட்டத்தினர் உண்டு.

கோபாலாசாரியார் வீட்டுக் கல்யாணத்திலும் இந்த வைபவம் நிகழ்ந்தது. தோள் எடுப்பவர் இரு

வரும் ஒருவருக்கு ஒருவர் சலியாமல் குதித்தும் ஆடியும் ஓடியும் மேளதாளத்திற்கேற்ப நடனம் செய்தும் உத்ஸாகத்தோடு தங்கள் வன்மையைக் காட்டினர். கல்யாணத்துக்காக வந்திருந்த ஜனங்களோடு வேறு ஜனங்களும் இந்த வேடிக்கையைப் பார்க்கக் கூடிவிட்டனர். ஜனங்களுடைய சந்தோஷ ஆரவாரமும் வாத்திய கோஷமும் கல்யாணத்துக்கு வந்திருந்தவர்களுடைய குதூகலமும் நிறைந்திருந்த அந்தக் காட்சியைக் கண்டு கோபாலாசாரியார் மனம் சந்தோஷ சாகரத்தில் நீந்தியது. அவருடைய சம்பந்தியாகிய கனவானும் மிக்க சந்தோஷத்தோடு திண்ணையில் உட்கார்ந்து இந்தக் காட்சியை அநுபவித்துக்கொண்டிருந்தார்.

இவ்வாறு இருந்த சமயத்தில் யாரோ ஒருவர் மெதுவாகச் சம்பந்திக்கு அருகில் சென்றார். இரகசியமாக அவர் காதண்டை சில வார்த்தைகள் சொன்னார். அந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் சம்பந்தியின் முகமலர்ச்சி மாறியது. அவர் திடீரென்று திண்ணையிலிருந்து கீழே குதித்து இறங்கினார். ஒருவர் தோளில் ஆரோகணித்திருந்த தம் குமாரரிடம் சென்றார். "கீழே இறங்கு" என்று கூறி அவரை அழைத்துக்கொண்டு நேரே தாம் தங்கியிருந்த ஜாகைக்குப் போய்விட்டார். அங்கிருந்த யாவருக்கும் 'அவர் ஏன் அப்படிச் செய்தார்?' என்பது விளங்கவே இல்லை. அவரைச் சேர்ந்தவர்களும் அவர் போவதைக் கண்டு ஒருவர் பின் ஒருவராகச் சென்று விட்டனர். ஒரு நிமிஷத்தில் அங்கிருந்த ஆரவாரம் எல்லாம் மாறிவிட்டது.

கோபாலாசாரியார் பல நண்பர்களுக்கு விவாக

முகூர்த்தப் பத்திரிகை அனுப்பியிருந்தார். எனக்கும் வந்திருந்தது. கல்யாண தினத்து மாலையில் பாட்டுக் கச்சேரி ஒன்று ஏற்பாடாகியிருந்தது. நான் முகூர்த்தத் தன்று பிற்பகலில் கல்யாணம் விசாரிப்பதற்காகக் காலேஜ் விட்டவுடன் நேரே விவாகம் நடைபெறும் ஜாகைக்குச் சென்றேன். நான் போன சமயம் நான்கு மணியிருக்கும்.

அங்கே என்னைப்போலப் பலபேர்கள் கல்யாணம் விசாரிக்க வந்திருந்தார்கள். கோபாலாசாரியாரும் வேறு சிலரும் வந்தவர்களுக்குச் சந்தனம், புஷ்பம், கற்கண்டு, தாம்பூலம், தேங்காய் முதலியவற்றை வழங்கிக்கொண்டிருந்தனர். வந்தவர்களிற் சிலர் தாம்பூலம் பெற்றுக்கொண்டு திரும்பினர். சிலர் அங்கேயே உட்கார்ந்திருந்தனர்.

நான் போனவுடன் கோபாலாசாரியார் எனக்கும் சந்தனதாம்பூலம் கொடுத்தார்; அவர் முகத்தில் சோர்வுதான் காணப்பட்டது. நான் சாதாரணமாக, "முகூர்த்தம் சரியான காலத்தில் நடந்ததா?" என்று விசாரித்தேன்.

"அதுதான் இல்லை" என்றார் அவர்.

"ஏன்? நாழிகை ஆகிவிட்டதோ?" என்று கேட்டேன்.

"முகூர்த்தமே நடக்கவில்லை" என்று அவர் சொன்னார். நான் திடுக்கிட்டேன்; "என்ன? முகூர்த்தம் நடக்கவில்லையா? சந்தன தாம்பூலம் கொடுக்கிறீர்களே!"

"நாளை ஆறுமணிக்கு வேறு பையன் வந்துவிடுவான். காஞ்சீபுரத்திற்குச் சொல்லியனுப்பி யிருக்கி

றேன். இதைப்போல இரண்டு மடங்கு விமரிசையாக முகூர்த்தம் நடந்துவிடும்.”

எனக்கு ஆச்சரியத்தின்மேல் ஆச்சரியம் உண்டாயிற்று.

“என்ன சொல்லுகிறீர்கள்? வேறு பையனுவது! வரவாவது! இந்தப் பையன் என்ன ஆனுன்? விஷயத்தை விளங்கச் சொல்லுங்கள்” என்றேன்.

“சொல்வது என்ன இருக்கிறது? மனுஷ்யர் சமயத்தில் இப்படி அவமானப்படுத்துவாரென்று எண்ணவே இல்லை. ஹூம்! நம்மேல் தப்பு. மனுஷ்யருடைய தராதரம் அறிந்து நிச்சயம் செய்திருக்கவேண்டும்!’ என்று சொல்லிக்கொண்டே அவர் பெருமூச்சு விட்டார்.

அருகில் இருந்த ஒருவர் என்னிடம் விஷயத்தை விரிவாகச் சொல்லலானுர்; “முகூர்த்தத்திற்கு முன்பு நடக்கவேண்டிய காரியங்களெல்லாம் நன்ருகவே நடந்தன. எல்லோரும் திருப்தியாகவே இருந்தோம். பெண்ணும் பிள்ளையும் மாலை மாற்றிக்கொண்டார்கள். அப்போது எங்கிருந்தோ சனீசுவரன்போல் ஒருவன் வந்தான். சம்பந்தி காதைப் போய்க் கடித்தான். அந்த மனுஷ்யர் கொஞ்சமாவது மரியாதையைக் கவனிக்காமல் திடீரென்று பையனை அழைத்துக்கொண்டு ஜாகைக்குப் போய்விட்டார். அவர் பிறகு வருவாரென்று எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தோம். அங்கிருந்து ஒருவரும் வரவில்லை. இங்கிருந்தும் ஒருவரும் அங்கே போகவில்லை.

“மத்தியான்னம் போஜனம் செய்தீர்களா?”

“போஜனமா? காலையில் ஆகாரம் பண்ணினது தான். அப்பால் ஒன்றும் சாப்பிடவே இல்லை.”

'இதில் ஏதோ சிறு விஷமம் நடந்திருக்கிறது. கௌரவத்தைப் பெரிதாக எண்ணிக்கொண்டு ஒரு வருக்கொருவர் மனஸ்தாப மடைந்திருக்கிறார்கள். சமா தானம் செய்வார் யாரும் இல்லை' என்று நான் தெரிந்து கொண்டேன். பிள்ளை வீட்டுக்காரரும் எனக்குத் தெரிந்தவராதலின், 'நாம் இதில் தலையிட்டுச் சமா தானம் பண்ணவேண்டும்' என்று நிச்சயம் செய்து கொண்டேன்.

"சரி; என்னுடன் சம்பந்தி ஜாகைக்கு நம்பிக்கை உள்ள ஒருவரை அனுப்புங்கள்" என்று கோபாலா சாரியாரிடம் சொன்னேன்.

"தாங்கள் ஒன்றும் சிரமப்படவேண்டாம். அவர் கள் செய்த அவமானத்தால் அவர்களைப் போய்ப் பார்த்துக் கெஞ்சுவதற்கு என் மனம் சம்மதிக்கவில்லை" என்றார் அவர். கௌரவத்தை விடாமல் அவர் இவ் வாறு சொன்னாலும் 'எப்படியாவது இதற்கு ஒரு வழி ஏற்படாதா!' என்ற எண்ணம் அவருக்கு இருந்த தென்பதில் சந்தேகம் சிறிதும் இல்லை.

"நீங்கள் இவ்வாறு சொல்லுவது தவறு. இவ் வளவு ஏற்பாடு செய்துவிட்டு இப்படிப் பிடிவாதம் செய்வதனால் லாபம் என்ன? பொருள் நஷ்டம், அவ மானம் முதலியவையே உண்டாகும். ஆக்ஷேபிக்காமல் என்னுடன் ஒருவரை அனுப்புங்கள்" என்று நான் வற்புறுத்திக் கூறினேன். அவர் தம் பந்து ஒருவரை அனுப்புவதாகச் சொல்லி உள்ளே சென்றார்.

அவர் சென்ற சமயம் பார்த்து அங்கே உட்கார்ந் திருந்தவர்களில் ஒருவர், "இந்தப் பயலுக்கு இது வேணும்" என்றார்.

"ஏன்?" என்றேன் நான்.

"நான் அப்பொழுதே சொன்னேன். இந்த ஸம்பந்தம் வேண்டாமென்று முட்டிக்கொண்டேன். ஒரு வார்த்தை என்னிடம் சொன்னுனு? ஏதடா, பெரியவன் ஒருவன் இருக்கிருனே, அவனைக் கேட்போமென்று நினைத்தானு? இப்போது அதன் பலனை அநுபவிக்கிருன்."

"இவ்வளவு கோபமாகப் பேசும் இந்த ஸ்வாமி யார்?" என்று அருகிலுள்ள ஒருவரைக் கேட்டேன்.

"இவர் கோபாலாசாரியாருடைய தமையனுர்" என்றுர் அவர்.

இதற்குள் கோபாலாசாரியார் தம் பந்து ஒருவரை அழைத்துவந்து என்னுடன் அனுப்பினுர். அவரைக் கையில் சந்தனம் தாம்பூலம் புஷ்பம் எடுத்துக்கொள்ளச் சொல்லி உடன் அழைத்துக்கொண்டு சம்பந்திகள் தங்கி யிருக்கும் ஜாகைக்குச் சென்றேன்.

அங்கே சம்பந்தி ஒரு நாற்காலியில் முகவாட்டத்துடன் உட்கார்ந்திருந்தார். அருகே ஒரு பலகையில் சிலர் இருந்தனர். சிலர் கீழே ஜமுக்காளத்தின்மேல் அமர்ந்திருந்தனர். எல்லோருடைய முகங்களும் சோர்வடைந்திருந்தன. யாவரும் உத்ஸாகத்தை இழந்துமத்தியான்ன உணவில்லாமையால் பசி ஒரு பக்கம் வருத்த, இன்னது செய்வதென்று தோற்றுமல் இருந்தனர்.

நான் சம்பந்தியிடம் போய், "என்ன இப்படிச் செய்து விட்டீர்களே! கல்யாணம் எவ்வளவு சிறப்பாக நடந்திருக்க வேண்டும்!" என்றேன்.

அவர், "நீங்கள் எப்படிச் சொல்லுகிறீர்களோ, அப்படி நடக்கிறேன்" என்றுர்.

சமாதானம் பண்ணுவதற்கு ஒருவரும் வராமையால் அவர் மிகவும் மனம் கலங்கி உட்கார்ந்திருந்தாரென்று தோற்றியது.

"கல்யாணத்துக்காக எவ்வளவு விரிவான ஏற்பாடுகள் செய்திருக்கிறார்? எவ்வளவு பந்துக்கள் வந்திருக்கிறார்கள்? எவ்வளவு சிநேகிதர்கள் வந்து வந்து விசாரிக்கிறார்கள்? நீங்கள் திடீரென்று இப்படிச் செய்யலாமா? ஏதாவது தோஷத்தைக் கண்டீர்களா? முன்பே தீர யோசித்துத்தானே இந்தச் சம்பந்தத்துக்கு ஒப்புக் கொண்டிருப்பீர்கள்?"

அவர் பதில் சொல்லாமல் எதையோ யோசித்தார்; பெருமூச்சுவிட்டார்; பிறகு பேசலானார்:

"ஏதோ நடந்தது நடந்துவிட்டது; அவர்கள் எங்களை மதித்திருந்தால் உடனே வந்து கூப்பிட்டிருக்கலாமே. நாங்கள் மத்தியான்னம் கூடச் சாப்பிடவில்லை; காலையில் ஆகாரம் பண்ணியதுதான். அவர்களில் யாராவது வருவார்கள் வருவார்கள் என்று எதிர்பார்த்துக்கொண்டே இருந்தோம். எங்களை இவ்வளவு சங்கடமான நிலைமையில் அவர்கள் வைத்தது நியாயமா?"

"நீங்கள் திடீரென்று வந்துவிட்டீர்களாமே; உங்களுடைய அபிப்பிராயம் என்னவென்று தெரியாமல் உங்களிடம் வருவதில் அவர்களுக்குத் தைரியமில்லை. என்ன காரணமென்று சொல்லக்கூடுமானால் சொல்லுங்கள்."

"அதெல்லாம் இப்போது எதற்காகச் சொல்லிக்கொண்டிருக்கவேண்டும். ஏதோ சகுனம் சரியாக

இல்லை யென்று தெரிந்தது. அதனல் வரவேண்டியதாயிற்று."

"இப்போது கல்யாணம் நடப்பதில் தங்களுக்கு எவ்விதமான ஆக்ஷேபமும் இல்லையே; முகூர்த்தத்தை நிறைவேற்றிவிடலாமல்லவா?"

"பேஷாக நடத்தலாம்."

உடனே கல்யாண ஜாகைக்கு உடன் வந்தவரை அனுப்பி, பிள்ளை வீட்டுக்காரருக்கு அந்தச் சமயத்தில் பசியை அடக்கக்கூடிய பலகாரங்களை அனுப்பச் செய்தேன். விசாரித்ததில் அஸ்தமனத்துக்குப் பின் ஒரு முகூர்த்தம் இருப்பதாகத் தெரிந்தது. அதற்கு முன் சதிபதிகளாக உள்ள சிலரைக் கற்கண்டு, சர்க்கரை, சந்தனம், புஷ்பம், தாம்பூலம் முதலியவற்ரேடும் வாத்தியத்தோடும் மாப்பிள்ளைவீட்டார்களை அழைப்பதற்கு வரும்படி செய்தேன். யாவரிடமும் அதுவரையிலும் மனஸ்தாபத்தாலும் சோர்விஞலும் மறைந்திருந்த உத்ஸாகம் இரண்டு மடங்கு அதிகமாயிற்று. சம்பந்திகள் புறப்பட்டார்கள். வாசலில் அடி வைத்தவுடன் ஒரு சுமங்கலி நிறைகுடத்தோடு எதிரே வந்தாள். அடுத்தபடி கையில் பால் எடுத்துக்கொண்டு இரண்டு பிராமணர்கள் வந்தனர். இப்படியே கல்யாண ஜாகைக்கு அவர்கள் போகும் வரையில் நல்ல சகுனங்கள் உண்டாயின. அவ்வாறு வரும்வண்ணம் ஜாக்கிரதையாக ஏற்பாடு செய்யவேண்டுமென்று சொல்லியிருந்தேன்.

கல்யாண ஜாகையின் வாசலில் மீண்டும் மாலை மாற்றும் வைபவம் சுருக்கமாக நடைபெற்றது. உடனே முகூர்த்தமும் நிறைவேறியது. திருமங்கலிய

தாரணம் ஆகும்வரையில் நான் இருந்தேன். தாலி கட்டியவுடன் சம்பந்தியிடம் என்ன சகுனத்தடை உண்டாயிற்றென்று கேட்டேன். அவர், "எங்களுக்குத் தெரிந்த ஜோஸ்யர் ஒருவர் என்னிடம் வந்து பெண்ணின் ஜாதகத்தில் தோஷம் இருக்கிறதென்றும், காலையில் புறப்படும்போது நல்ல சகுனம் ஆகவில்லையென்றும் சொன்னார். சகுனம் ஆகாதது எனக்கும் தெரியும். என் மனத்தில் அந்த விஷயம் உறுத்திக்கொண்டே இருந்தது. அதோடு அவர் தோஷமென்று சொன்ன காரணமும் சேரவே, நான் பொறுமையை இழந்து அவ்வாறு செய்தேன். ஜாகைக்குப் போன பிறகு மற்றொரு ஜோஸ்யரைக்கொண்டு பார்த்ததில் தோஷமே இல்லையென்று தெரிந்தது. ஆனால் நாங்களாக வலிந்து வந்தால் கௌரவக் குறைவென்றும், அவர்கள் வந்து கூப்பிட்டால் போகலாமென்றும் எண்ணினோம். அவர்கள் வராமையால் ஒன்றும் செய்ய இயலாத நிலையில் இருந்தோம். தாங்கள் வந்து எங்கள் சங்கடத்தைப் போக்கினீர்கள். காலையில் சகுனமாகாததன் பலன் மத்தியான்னம் பட்டினி கிடந்ததோடு சரியாகப் போய்விட்டது" என்றார்.

தாலிகட்டினவுடன் மிக்க திருப்தியோடு முதல் தாம்பூலத்தை நான் வாங்கிக்கொண்டு விடைபெற்று விடுவந்து சேர்ந்தேன். கல்யாண கோஷ்டியில் இருசாராரும், இந்த விஷயத்தை அறிந்த பிறகும் என்னை வாழ்த்தினர்.

# 4. சுப்பிரமணிய பாரதியார்*

பிறந்த தேசம், பழகும் மனிதர்கள் முதலிய தொடர்புகளால் ஒருவருடைய வாழ்க்கையில் சில பழக்கங்கள் அமைகின்றன. ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் எட்டயபுரத்திற் பிறந்தவர். இவர் பிறந்த பாண்டி நாடு தமிழுக்கு உரிய நாடு. தமிழ் நாடென்று பழைய காலத்தில் அதற்குத்தான் பெயர். கம்பராமாயணத்தில் ஆஞ்சநேயர் முதலியவர்கள் சுக்கிரீவனால் தென் தேசத்துக்கு அனுப்பப்பட்ட போது அங்கே உள்ளவற்றைச் சுக்கிரீவன் சொல்லுவதாக உள்ள பகுதியொன்றுண்டு; அங்கே ஒரு பாட்டில்,

"தென்றமிழ்நாட் டகன்பொதியிற் றிருமுனிவன்
தமிழ்ச்சங்கம் சேர்கிற் பீரேல்,
என்றுமவ னுறைவிடமாம்"

என்று அவன் கூறியதாக இருக்கிறது; "நீங்கள் பாண்டிய நாட்டை அடைந்தால், அங்கே உள்ள பொதியில் மலைக்கருகில் செல்லும்பொழுது போகும் காரியத்தை மறந்து விடக் கூடாது; ஏனென்றால் அம்மலையில் அகத்தியருக்குரிய தமிழ்ச் சங்கத்தை அணுகினால் தமிழ் நயத்தில் ஈடுபட்டு விடுவீர்கள்" என்று அவன் சொன்னதாகத் தெரிகிறது. இதனால் பாண்டி நாட்டின் பெருமை வெளிப்படுகிறதல்லவா?

பாரதியார் பிறந்த எட்டயபுர ஸமஸ்தானத்தில் பல வித்துவான்கள் இருந்தார்கள். அந்த ஸமஸ்தானத்து வித்துவானாகிய கடிகை முத்துப் புலவருடைய பெரு

* 1936-ல் அகில இந்தியக் காங்கிரஸின் பொன் விழாவில் சென்னைக் காங்கிரஸ் மண்டபத்தில் பாரதியாருடைய படம் திறக்கப்பட்ட போது செய்த பிரசங்கம்.

மையை யாரும் அறிவார்கள். அவருடைய மாணுக்கருள் ஒருவராகிய உமருப் புலவரென்னும் முகம்மதிய வித்துவான் முகம்மத் நபியின் சரித்திரமாகிய



பாரதியார்

சீருப்புராணத்தை இயற்றியிருக்கிருர். அந்நூல் ஒரு தமிழ்க் காவியமாக இருக்கிறது. எட்டய புரத்தில் அங்கங்கே உள்ளவர்கள் தமிழ்ப் பாடல்களைச் சொல்லியும்

கேட்டும் இன்புற்று வருபவர்கள். இதனால் பாரதியாருக்கு இளமை தொடங்கியே தமிழில் விருப்பம் உண்டாயிற்று. அது வர வர மிக்கது.

இவர் இளமையில் ஆங்கிலக் கல்வி கற்றார். தம்முடைய தமிழறிவை விருத்தி செய்துகொள்ளும் பொருட்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் சேர்ந்து சில காலம் படித்தார். சிறு பிராய முதற்கொண்டே இவருக்குச் செய்யுள் இயற்றும் பழக்கம் உண்டாயிற்று. அக்காலத்திலேயே தேசத்தின் நிலைமை இவருடைய மனத்திற் பதிந்தது. தெய்வத்தினிடத்திலும், தேசத்தினிடத்திலும், பாஷையினிடத்திலும் அன்பில்லாதவர்களைக் கண்டு இவர் மிக வருந்தினார். முயற்சியும் சுறுசுறுப்பும் இல்லாமல் வீணாகக் காலத்தைப் போக்குபவர்களை வெறுத்தார். புதிய புதிய கருத்துக்களை எளிய நடையில் அமைத்துப் பாடவேண்டுமென்ற உணர்ச்சி இவருக்கு வளர்ந்து கொண்டே வந்தது.

இவர் சிலகாலம் சேதுபதி ஹைஸ்கூலில் பண்டிதராக இருந்ததுண்டு. பிறகு, சென்னைக்கு வந்தார். இங்கே ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் இவரிடத்தில் ஈடுபட்டுச் 'சுதேசமித்திரன்' ஆசிரியர்களுள் ஒருவராக இருக்கச் செய்தார். கட்டுப்பாடான வேலைகளைச் செய்வதிற் பிரிய மில்லாத பாரதியார் அந்த வேலையில் அதிக காலம் இருக்கவில்லை.

சென்னையில் இவர் இருந்த காலத்தில், நான் இவரோடு பல முறை பழகியிருக்கிறேன். பிரசிடென்ஸி காலேஜில் வாரந்தோறும் நடைபெறும் தமிழ்ச் சங்கக் கூட்டத்துக்கு வருவார்; பேசுவார்; புதிய பாட்டுக்களைப் பாடுவார். வருஷ பூர்த்திக் கொண்டாட்டங்



வி. கிருஷ்ணசாமி ஐயர்

களில் புதிய செய்யுட்கள் செய்து வாசிப்பார். ஒரு முறை, வி. கிருஷ்ணசாமி ஐயர் தலைமையில் அச் சங்கத்தில் ஜி. ஏ. வைத்தியராமையர் பேசினார். கிருஷ்ணசாமி ஐயருடைய தமிழபிமானமும், தமிழ் வித்துவான்களை ஆதரிக்கும் இயல்பும் தெரியாத பலர், "இவருக்குத் தமிழ்ப் பாஷையில் பழக்கம் இல்லையே; தமிழில் என்ன பேசப்போகிறார்?" என்று நினைத்தனர். அவரோ, "தமிழைப்பற்றி அதிகமாகப் பேசுவானேன்; உலகத்திலுள்ள பல பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு விளங்கும் திருக்குறளைத் திருவள்ளுவர் இயற்றிய பாஷை இந்தப் பாஷை. நவரஸமும் பொருந்திய இராமாயணத்தைக் கம்பர் செய்த பாஷை இது. எல்லோருடைய மனத்தையும் கரைத்து உருக்கித் தெய்வ பக்தியை உண்டாக்கும் தேவாரத்தை நாயன்மார்கள் இயற்றிய பாஷை இது. ஆழ்வார்கள் திவ்வியப் பிரபந்தத்தைப் பாடிய பாஷை இது" என்று உத்ஸாகத்தோடு பிரசங்கம் செய்தார். கேட்ட யாவரும் ஆச்சரியமுற்றார்கள். அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த பாரதியார், அந்தப் பிரசங்கத்தில் மிகவும் ஈடுபட்டார். பின்பு கிருஷ்ணசாமி ஐயர் பாஷையின் பெருமையையும், தேசத்தின் பெருமையையும் வெளிப்படுத்தி யாவருக்கும் விளங்கும்படியான பாட்டுக்களைப்பாடியனுப்ப வேண்டுமென்று என்னிடம் சொன்னார். எனக்கு அவகாசம் இல்லாமையால் வேறொருவரை அனுப்பினேன். அவருடைய பாட்டுக்கள் அவருக்குத் திருப்தியை அளிக்கவில்லை. பிறகு பாரதியாரே அவருடைய விருப்பத்தைப் பூர்த்திசெய்தார். ஸ்ரீ கிருஷ்ண

சாமி ஐயரது பிரசங்கத்தில் இருந்த கருத்துக்களே பாரதியார், "கம்பன் பிறந்த தமிழ் நாடு" என்பது போன்ற பகுதிகளை அமைத்துப் பாடுவதற்குக் காரணமாக இருந்தன.

தேசத்தின் பெருமையை யாவரும் அறிந்து பாராட்டும்படியான பாட்டுக்களைப் பாடவேண்டுமென்ற ஊக்கம் இவருக்கு நிரம்ப இருந்தது. அதனால் இவர் பாடிய பாட்டுக்கள் மிகவும் எளிய நடையில் அமைந்து படிப்பவர்களைத் தம்பால் ஈடுபடுத்துகின்றன. இவர் உண்மையான தேச பக்தியுடன் பாடிய பாட்டுக்களாதலின் அவை இவருக்கு அழியாத பெருமையை உண்டாக்குகின்றன.

பாரதியார் தேசீயப் பாட்டுக்களைப் பாடியதோடு வேறு பல துறைகளிலும் பாடி யிருக்கிறார். இசைப் பாட்டுக்கள் பலவற்றைப் பாடியிருக்கிறார். இவர் சங்கீதத்திலும் பழக்கம் உடையவர்.

கவிகளின் தன்மையை உபமானமாக அமைத்து ஒரு புலவர்,

"கல்லார் கவிபோற் கலங்கிக்
கலைமாண்ட கேள்வி
வல்லார் கவிபோற் பலவான்றுறை
தோன்ற வாய்த்துச்
செல்லாறு தோறும் பொருளாழ்ந்து
தெளிந்து தேயத்
தெல்லாரும் வீழ்ந்து பயன்கொள்ள
இருந்த தன்றே"

என்று சொல்லி யிருக்கிறார். அதற்கேற்ப விளங்குபவை இவருடைய செய்யுட்கள். இப்பாட்டில்

"தேசத்து எல்லாரும் வீழ்ந்து பயன் கொள்ள" என்றது இவருடைய பாட்டுக்களுக்கு மிகவும் பொருத்தமுடையதாகும்.

பாட்டுக்களின் பாகம் ஐந்து வகைப்படும். அவை நாளிகேர பாகம், இக்ஷு பாகம், கதலீபாகம், திராக்ஷா பாகம், க்ஷீரபாகம் என்பனவாம். நாளிகேரபாக மென்பது தேங்காயைப் போன்றது. தேங்காயில் முதலில் மட்டையை உரிக்கவேண்டும்; பிறகு ஓட்டை நீக்க வேண்டும்; அதன் பிறகு துருவிப் பிழிந்து வெல்லம் சேர்த்துச் சாப்பிட வேண்டும். இந்த வகையிலுள்ள பாட்டுக்கள் சில உண்டு. அதைப் பாடுபவர்கள் தம்முடன் அகராதியையும் எடுத்துக்கொண்டு போக வேண்டும். சில சமயங்களில் அவர்களுக்கே தாங்கள் செய்த பாட்டுக்களுக்கு அர்த்தம் விளங்காமற் போய் விடும்.

இக்ஷுபாகமென்பது கரும்பைப்போன்றது. கரும்பைக் கஷ்டப்பட்டுப் பிழிந்து ரஸத்தை உண்ணவேண்டும். கதலீபாகமென்பது வாழைப் பழத்தைத் தோலுரித்து விழுங்குவது போலச் சிறிது சிரமப்பட்டால் இன்சுவையை வெளிப்படுத்துவது. திராக்ஷா பாகம் முந்திரிப் பழத்தைப்போல எளிதில் விளங்குவது. க்ஷீரபாகம் அதினிலும் எளிதில் விளங்குவது; குழந்தை முதல் யாவரும் உண்பதற்குரியதாகவும், இனிமை தருவதாகவும், உடலுக்கும் அறிவுக்கும் பயன் தருவதாகவும் இருக்கும் பாலைப்போல இருப்பது. பாரதியாருடைய கவிகள் க்ஷீரபாகத்தைச் சார்ந்தவை. சிலவற்றைத் திராக்ஷா பாகமாகக் கொள்ளலாம்.

ஆங்கிலம், வங்காளம் முதலிய பாஷைகளிற் பழக்கமுடையவராதலால் அந்தப் பாஷைகளிலுள்ள முறைகளை இவர் தம் கவிகளில் அமைத்திருக்கிறார். இவருடைய கவிதைகள் ஸ்வபாவோக்தி யென்னும் தன்மை நவிற்சியணியை யுடையவை. பழைய காலத்தில் இருந்த சங்கப் புலவர்கள் பாடல்களில் தன்மை நவிற்சிதான் காணப்படும். அனாவசியமான வருணனைகளும் சொல்லடுக்குகளும் கவியின் ரஸத்தை வெளிப்படுத்துவனவல்ல. சில காலங்களில் சில புலவர்கள் தங்கள் காலத்திலிருந்த சில ஜமீன்தார்கள், பிரபுக்கள் முதலியவர்களுடைய வற்புறுத்தலுக்காக அனாவசியமான வருணனைகளை அமைத்ததுண்டு.

பாரதியாருடைய பாட்டுக்களில் தெய்வ பக்தியும், தேச பக்தியும் ததும்புகின்றன. தனித்தனியாக உள்ள பாட்டுக்கள் இயற்கைப் பொருள்களின் அழகை விரித்தும், நீதிகளைப் புகட்டியும், உயர்ந்த கருத்துக்களைப் புலப்படுத்தியும் விளங்குகின்றன.

இவருடைய வசனத்தைப் பற்றிச் சில சொல்ல விரும்புகிறேன். பாட்டைக் காட்டிலும் வசனத்திற்குப் பெருமை உண்டாயிருப்பதன் காரணம் அது பாட்டைவிட எளிதில் விளங்குவதனால்தான். பாரதியாருடைய பாட்டும் எளிய நடையுடையது. வசனமும் எளிய நடையுடையது. வருத்தமின்றிப் பொருளைப் புலப்படுத்தும் நடைதான் சிறந்தது. பாரதியாருடைய வசனம் சிறு வாக்கியங்களால் அமைந்தது; அர்த்த புஷ்டியுடையது. இவருடைய கவிகளின் பொருள் படிக்கும்போதே மனத்துக்குள் பதிகின்றது. வீரரஸம், சிருங்காரரஸம் ஆகிய இரண்டும் இவ

ருடைய பாட்டுக்களில் அதிகமாகக் காணப்படுகின்றன. பாரதியார் அழகாகப் பேசும் ஆற்றல் வாய்ந்தவர்.

இவருடைய பாட்டுக்கள் எல்லோருக்கும் உணர்ச்சியை உண்டாக்குவன; தமிழ் நாட்டில் இவருடைய பாட்டை யாவரும் பாடி மகிழ்வதினாலேயே இதனை அறிந்துகொள்ளலாம். கடல் கடந்த தேசங்களாகிய இலங்கை, பர்மா, ஜாவா முதலிய இடங்களிலும் இவருடைய பாட்டுக்கள் பரவி யிருக்கின்றன. அங்கே உள்ளவர்களில் சிலர் இவரைப்பற்றி எழுத வேண்டுமென எனக்குக் கடிதங்கள் எழுதியதுண்டு. "மணவைமன் கூத்தன் வகுத்தகவி, தளைபட்ட காலுடனே கடலேழையுந் தாண்டியதே" என்று ஒரு புலவருடைய கவியைப் பற்றி வேறொரு புலவர் பாடியிருக்கிறார். ஸ்ரீ ராமனுடைய கவியாகிய ஆஞ்சநேயர் ஒரு கடலைத் தான் தாண்டினார்; மணவைக் கூத்தன் கவியோ ஏழு கடல்களையும் தாண்டி விட்டது. ஸ்ரீ ராமனுடைய கவி தளையில்லாமல் தாண்டியது; அங்ஙனம் செய்தது ஆச்சரியமல்ல. இந்தப் புலவர் கவியோ, தளையுடைய காலோடு ஏழு கடலைத் தாண்டியது என்கின்றார். தளை யென்பதற்கு விலங்கென்றும் கவிக்குரிய லக்ஷணங்களுள் ஒன்றென்றும் பொருள். இந்தப் பாட்டுக்கு இப்போது இலக்கியமாக இருப்பவை பாரதியாருடைய கவிகளாகும்.

பாரதியார் தாம் எவ்வளவு கஷ்டப்பட்டாலும், ஜனங்களுக்கு நன்மை உண்டாக வேண்டுமென்ற கொள்கையை யுடையவர். தைரியமுடையவர். இவருடைய புகழ் தமிழ் நாட்டின் புகழாகும்.

# 5. நாடக இலக்கியங்கள்

## மூன்று பிரிவுகள்

தமிழை இலக்கணம், இலக்கியம், கலையென்னும் மூன்று பிரிவாகப் பிரிக்கின்றார் ஒரு புலவர்.

"பஞ்சிபடா நூலே பலர்நெருடாப் பாவேகீண்
டெஞ்சியழுக் கேறு வியற்கலையே"

என்று தமிழ்விடுதூதில் ஒரு கண்ணி வருகின்றது. 'பஞ்சினாலே உண்டாக்கப்படாத நூலே, பலரால் நெருடப்படாத பாவே, கிழிப்பதனால் குறைந்து அழுக் கேறாத இயல்பையுடைய கலையே' என்பது இதன் பொருள். நூலென்றது இலக்கணத்தை; கலையென்றது இசைநாடகம் முதலிய கலைகளை. எந்த நாட்டில் நாகரிகம் மிகுந்து இருக்கின்றதோ அங்கே கலைவளம் சிறந்து நிற்கும்.

## நாடகக்கலையின் சிறப்பு

தமிழ்நாட்டின் நாகரிகம் மிகவும் பழமையானது. பழங்காலமுதல் இதன் கலைவளம் உயர்நிலையில் இருந்தது. தமிழையே இயல் இசை நாடகமென்னும் மூன்று பிரிவாகத் தமிழர் பிரித்தனர். முன்னே சொன்ன இலக்கணமும் இலக்கியமும் இயற்றமிழில் அடங்கும். இசையும் நாடகமும் கலைகளிற் சிறந்தன. அவ்விரண்டினுள் நாடகம் தலைமை பெறுவது. அதன் கண் இயலும் இசையும் இசைந்துநிற்கும். சிலப்பதிகாரம் என்னும் காவியத்திலுள்ள அரங்கேற்று காதையில் இசைவல்லோன் இசைக்கருவி வல்லோர் என்பார் இயல்பும், கவிஞன் இலக்கணமும் சொல்லப்படு

கின்றன. அவை நாடக இயலுக்கு அங்கமாக உள்ளன.

## நாடக இலக்கணங்கள்

தமிழுக்கு இலக்கணம் வகுத்த அகத்திய முனிவர் இயல் இசை நாடகம் என்னும் மூன்று தமிழுக்கும் இலக்கணம் அமைத்தார். அவருக்குப் பின் ஒவ்வொரு தமிழுக்கும் விரிவாக இலக்கணங்கள் எழுந்தன. அவ்வாறு எழுந்த நாடகத் தமிழிலக்கண நூல்கள் பரதம், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், பஞ்சமரபு, பரதசேனுபதீயம், மதிவாணர் நாடகத் தமிழ் முதலிய பலவாகும். அவற்றுட் பல இக் காலத்தில் கிடைக்கவில்லை. சிலப்பதிகார உரை முதலியவற்றில் சில சூத்திரங்கள் மாத்திரம் காணப்படுகின்றன.

நாடகச் சுவைகளைப்பற்றியும் அவிநயங்களைப் பற்றியும் விரிவான ஆராய்ச்சி தமிழ் நாட்டில் முன்பு இருந்தது. நாடக இலக்கணங்களுக்கு ஏற்ப நாடக இலக்கியங்களும் பல இருந்திருக்க வேண்டும்.

## நாடகத்தைப்பற்றிய செய்திகள்

தொல்காப்பியத்தில், "நாடக வழக்கினு முலகியல் வழக்கினும்" என்று வரும் சூத்திரத்தில் புலவர்கள் நாடக இலக்கியங்களைப் பெரும்பாலும் கலிப்பாவினுலும் பரிபாடலினுலும் இயற்றுவரென்ற மரபு புலப்படுகிறது. இப்போது கிடைக்கும் நூல்களுள் அவ்விருவகைப் பாடல்களாலும் முறையே அமைந்த கலித்தொகை, பரிபாடலென்னும் இரண்டு சங்கநூல்களிற் பலவிடங்களில் சம்பாஷணை உருவத்தில்

அமைந்தபகுதிகளைக் காணலாம். அவ்வாறு வரும் கலிப்பாவை உறழ்கலி யென்பர்.

சிலப்பதிகாரத்தை நாடகக் காப்பியமென்று கூறுவர். அது முழுவதும் தனி நாடகச் செய்யுளென்று கூற இயலாவிடினும் அதன்கண் பல இடங்களில் பலர் சேர்ந்து கூறும் கூற்றுக்களின் தொகுதி காணப்படும்.

பழங்காலத்தில் இயற்றப்பெற்ற நாடகத் தமிழ் இலக்கியம் ஒன்றும் இப்போது கிடைக்கவில்லை. விளக்கத்தார் கூத்து என்பது போன்ற சில நாடகப்பெயர்கள் மாத்திரம் தெரியவருகின்றன.

நாடகச் சுவைகளில் தலைமைபெற்றது சிருங்காரம். அதனை இன்பச் சுவையென்றும் உவகையென்றும் கூறுவர். நவரஸங்களும் அமைந்த நாடகங்கள் பல தமிழில் இருந்தன.

## நாடக வகைகள்

இந்த நாடகங்கள் அகநாடகமென்றும் புறநாடகமென்றும் இருவகைப்படும். சத்துவ ராஜஸ தமோ குணங்களினால் விளைந்த விளைவுகளைக் கூற்றினாலும் உடற் குறிப்பினாலும் தெரிவிக்கும் இயல்பையுடையது அகநாடகம். அதனை அகக்கூத்தென்றும் சொல்வர். அவ்வகக் கூத்தில் பலவேறு வகைகள் உண்டு. வசைக் கூத்து, புகழ்க்கூத்து என்பன ஒருவகை; வேத்தியல், பொதுவியல் என்பன ஒருவகை; வரிக்கூத்து, வரிச் சாந்திக்கூத்து என்பன ஒரு திறம்; சாந்திக்கூத்து, விநோதக்கூத்து என்பன ஒரு பிரிவு; ஆரியம், தமிழ் என்பன ஒரு வகுப்பு; இயல்புக் கூத்து, தேசிக்கூத்து என்பன ஒரு வரிசை. இவ்வாறு இரண்டிரண்டாக

அமைந்த பிரிவுகள் தம்முள்ளே வேறுபட்ட அமைப்பை யுடையன. இவற்றுள் ஒவ்வொன்றிலும் வெவ்வேறு பிரிவுகள் உண்டு.

உதாரணமாக: சாந்திக் கூத்து என்பது நான்கு வகைப்படும். சொக்க நிருத்தம், மெய்க்கூத்து, அவி நயக்கூத்து, நாடகமென்பன அவை. இப்படியே விநோதக் கூத்தென்பது குரவை, கலிநடம்,குடக்கூத்து, கரணம், நோக்கு, தோற்பாவை எனப் பலவாகும். இந்தப் பிரிவுகளும் பல கிளைகளாக விரியும்.

இப்படியே புறக்கூத்து அல்லது புறநாடக மென்பதும் வென்றிக்கூத்து முதலிய பலவேறு வகை களையுடையது.

நாடகங்களுள் அகத்தே எழும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் நுண்ணிய கலைத்திறன் அமைந்த வற்றை அகமென்றும், புறத்தே தோற்றும் செயல்களை மிகுதியாக உடையவற்றைப் புறமென்றும் முன்னோர் கொண்டனரென்று தெரிகின்றது.

கதை தழுவிவரும் கூத்தாகிய நாடகம் பலவகைப் படும். அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு வகைப் பொருள்களை உள்ளுறையாக உடையது நாடகக் கதை. இந்நான்கும் ஒருங்கே வருவதும் தனித் தனியே சிறப்புப்பெற்று வருவனவுமாகிய நாடகங்கள் உண்டு.

கதைப்போக்கில் பல வேறுபாடுகள் உண்டு. கதா நாயகர்களிலும் பலவகை உண்டு. உள்ளோன் தலைவ னாக உள்ளதொரு பொருள்மேற் செய்தலும், இல் லோன் தலைவனாக உள்ளதொரு பொருள்மேற் செய் தலும், (உள்ளோன் தலைவனாக இல்லதொரு பொருள்

மேற் செய்தலும், இல்லோன் தலைவனாக இல்லதொரு பொருள்மேற் செய்தலுமாகக் கதை யமைப்பு நான்கு வகைப்படும். இவ்வமைப்பை யோனி என்னும் பெய ராற் குறிப்பது நாடக இலக்கண வழக்கு.

அறம் பொருளாகத் தெய்வமும் மானிடரும் தலை வராக வரும் நாடகத்தைச் சாத்துவதி யென்பர். பொருள் பற்றிய வரலாறுகளைக் கூறுவதாய் வீரராகிய மானிடர் தலைவராக வருவது ஆரபடி யென்னும் நாடகம். காமம் பொருளாக இன்பச்சுவை தலைமை பெற வரும் அமைப்பை யுடையதும் காமுகராகிய மக்கள் தலைவராக வருவதுமாகிய நாடகத்தைக் கைசிகி என்னும் வகைப்படுத்துவர். கூத்தன் தலைவனாக நட னும் நடியும் சேர்ந்து அபிநயங்களோடும் கூற்றுக்க ளோடும் நடத்துவது பாரதி யென்னும் நாடகம்.

ஒரு பழங் கதையை நாடகத்திற்கேற்ப மாற்றி அமைத்துக்கொள்வதும் உண்டு. அதனைச் சேதம் என்று சொல்வர். அஃது ஆரிய மென்றும் தமி ழென்றும் இருவகைப்படும்.

இவ்வாறு விரிந்து செல்கின்ற நாடக வகைகளைப் பற்றி அறிந்துகொள்ளப் பெருந் துணையாக உதவுவது சிலப்பதிகார உரை. அவ்வுரையினால் நாடக இலக் கணங்கள் பலவற்றின் பெயர்களை அறிய முடிவதே யல்லாமல் நாடக இலக்கியங்களின் பெயர்கள் தெரிய வில்லை. இலக்கணம் விரிவாக இருப்பதை ஆதார மாகக் கொண்டு இலக்கியங்கள் பல இருந்திருக்க வேண்டும் என்று ஊகிக்க நேர்கின்றது.

## நாடகச் செய்யுட்களின் இனம்

திருக்குறளிலுள்ள காமத்துப்பால் முழுவதும் கூற்று வகையாக அமைந்ததாதலின் அப்பகுதியை நாடக இலக்கியத்தின்பாற் படுத்தலாம். அறத்துறைகளைப் பொருள் தொடர்பு படக் கோத்துப் பிற்காலத்தார் அமைத்த கோவைகளும் நாடகச் செய்யுளுக்கு இனமேயாகும். திருச்சிற்றம்பலக் கோவையார், பாண்டிக்கோவை முதலிய நூற்றுக்கணக்கான கோவைகள் இன்பச்சுவை ஒன்றனையே பொருளாகக் கொண்டு எழுந்த பிற்காலத்து நாடகப் பிரபந்தங்களாம். அவ்வாறே மற்றப் பிரபந்தங்களுள் குறவஞ்சி, பள்ளு, நொண்டி என்பவற்றையும் நாடக வகைகளுள் சேர்த்தல் பொருந்தும். சரபேந்திரபூபால குறவஞ்சி நாடகம், முக்கூடற்பள்ளு நாடகம், நொண்டி நாடகமென்னும் பெயர்களே இவை நாடக வகைகளென்பதைத் தெரிவிக்கும். குறவஞ்சியைச் சார்ந்து குளுவ நாடகமென்ற ஒரு வகையும் உண்டு.

மேலே சொன்ன நாடகப் பிரபந்தங்களில் கோவையென்பது ஒரு தலைவனும் தலைவியும் நல்லூழ் வசத்தால் ஒருவரை யொருவர் கண்டு காமுற்று இன்பந்துய்த்துப் பிறகு மணம் புரிந்து இல்வாழ்க்கை நடத்தும் வரலாற்றை விரித்துக் கூறுவது.

குறவஞ்சி யென்பது ஒரு தலைவன்பால் காதல் கொண்ட ஒருத்திக்கு அவனோடு சேரும் பேறு கிடைக்குமென்று ஒரு குறத்தி நிமித்த வகைகளால் ஆராய்ந்து கூறுவதாக அமைவது.

பள்ளென்பது ஒரு பள்ளனுக்குரிய இரண்டு மனைவியர்களுள் மூத்த பள்ளி இளைய பள்ளிமேற்

பொருமை கொண்டு ஆண்டைபால் முறையிடுவதும் அதனால் பள்ளன் தண்டனைக்கு உள்ளாவதும் பிறகு மூத்தவள் மனம் வருந்தி மீட்பதுமாகிய செய்திகளை விரிவாகச் சொல்வது. இது பள்ளேசல் எனவும் வழங்கும்.

நொண்டி நாடகமென்பது ஒரு போருக்குச் சென்ற வீரன் அங்கே தன் காலையிழந்து நொண்டியான வரலாற்றை அவன் கூறுவதாக அமைவது. இவ்வகைப் பிரபந்தத்தில் வரும் சிந்து நொண்டிச்சிந்தென்ற பெயரைப் பெற்றது. இப்படியே கோவையில் வரும் கட்டளைக் கலித்துறைக்குக் கோவைக் கலித்துறையென்ற பெயர் வழங்கும்.

இந்தப் பிரபந்தங்கள் பெரும்பாலும் புனைந்துரை வகையைச் சார்ந்தன; ஒரே மாதிரியான அமைப்பை யுடையன; ஒரு குறிப்பிட்ட சரித்திரச் செய்தியையோ கதையையோ ஆதாரமாகக் கொண்டு எழுந்தன அல்ல.

## சரித்திர நாடகங்கள்

சரித்திர வரலாற்றின்மீது எழுந்த நாடகங்கள் தமிழில் முன்பு இருந்தன. அவற்றுள் இராஜராஜ நாடகம் என்பது ஒன்று. அபயகுல சேகரனாகிய முதலாம் இராஜராஜனது வெற்றிச்சிறப்பைப் பாராட்டும். அந்நாடகத்தைத் தஞ்சைப் பிருகதீசுவரர் ஆலயத்தில் முன்பு ஆடிவந்தார்களாம். அப்படியே குலோத்துங்கன் வீரச்சரிதையைச் சொல்லும் குலோத்துங்க சோழன் நாடகம் என்ற நூற்பெயரும், திருப்பாதிரிப் புலியூர்ச் சிவபெருமான் பெருமையைப் புலப்படுத்தும் புலியூர் நாடகமென்ற ஒரு நூற்பெயரும்

சிலாசாஸனங்களால் தெரியவருகின்றன. சுரகுரு நாடகம், பூம்பாவை விலாசமென்பன திருக்கழுக் குன்றத்திலும் மயிலாப்பூரிலும் முறையே முன்பு நடை பெற்று வந்தன.

## பிற்காலத்து நாடகங்கள்

பிற்காலத்தில் கர்நாடக சங்கீதம் தமிழ் நாட்டில் பரவப்பரவ அந்தப் போக்கைத் தழுவிய பாட்டுக்களை வித்துவான்கள் இயற்ற ஆரம்பித்தனர். இராமாயண பாரதங்களையும் புராணங்களையும் கீர்த்தன ரூபமாக இயற்றத் தொடங்கினர். சீகாழி அருணாசலக் கவி ராயர் இராமாயணக் கீர்த்தனத்தை இயற்றினார். அரிச்சந்திரன் கதை நாடகமாக இயற்றப்பெற்றது. இப்படியே பல நாடகங்கள் எழுந்தன. வேதாந்த பரமான நாடகங்கள் இயற்றப்பெற்றன. ஜீவப்பிரம் மைக்கிய சரித்திரம் முதலிய நாடக நூல்கள் அவ் வகையைச் சார்ந்தவையே.

நாடகத்தில் ஜனங்களுக்கு அதிக விருப்பம் உண் டாக உண்டாக நாடகக் காட்சிகளில் கவனமும் நாட கக் காப்பியத்தில் கவனமின்மையும் உண்டாயின. சங்கீதத்தில் சாகித்தியத்தைப் புறக்கணித்தது போல நாடகத்திலும் கதை யமைப்பின் காம்பீர்யத்தைப் புறக்கணித்தனர். இயல், இசை இவ்விரண்டும் சிறந் திருக்கவேண்டிய நாடகம் வரவர அவ்விரண்டுக்கும் தக்க இடம் கொடுப்பதை விடுத்தது.

ஆதலின் இப்போது நாடக இலக்கியங்களென்ற பெயருடன் வருவனவற்றிற் பெரும்பாலன படிப்ப தற்கு மாத்திரம் பயன்படுவனவாக உள்ளன. நடிப் போர்கள் உபயோகிக்கும் கூற்றுக்கள் முதலியன நடிக்

கும்போது மற்றக் கவர்ச்சிகளால் தம் உண்மை நிலையை மறைத்து நிற்கின்றன. தனியே படிக்கும் போது அவற்றின் குறைகள் தெளிவாகத் தெரி கின்றன.

பல நாடகங்கள் வசனத்தில் இக்காலத்தில் எழு தப் பெறுகின்றன. அவற்றுள் இலக்கியமென்று சொல்லக்கூடிய தகுதிவாய்ந்தவை மிகச் சிலவே ஆகும். காளிதாஸர் ஷேக்ஸ்பியர் முதலிய மகா கவி கள் இயற்றிய நாடகங்கள் எவ்வளவு காலமாளுலும் அவ்வக்காலத்துக்கு ஏற்ற அமைப்பை ஏற்றுக்கொள் ளும் கலைத்திறம் பெற்று விளங்குகின்றன. அத் தகைய நாடகங்கள் தமிழிலும் உண்டாகும் காலம் வருமென்றே நம்புகிறேன்.

## 6. இளவரசர் துறவு*

சேர அரசர்களுள் ஒருவனுகிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனென்பவன் வெற்றி மிடுக்கோடு வஞ்சி மாநகரத்தில் தனது சிங்காசனத்தில் வீற்றிருந்தான். கடம்ப அரசர்களை வென்று ஜயங்கொண்டதும், தமிழ்நாடு முழுவதையும் அடிப்படுத்தி வடநாட்டுக்கும் சென்று இமயமலை வரையில் தன் வீரத்தை நிலைநாட்டி அப்பெருமலை மிசையே தனது விற்கொடியை ஏற்றிக் குமரிமுதல் இமயம் வரையில் தன் பெயர் வழங்கச் செய்ததும் ஆகிய பெருஞ் செயல்களை வந்தியர் வாழ்த் திக்கொண்டிருந்தனர். அச்சக்கரவர்த்தி எல்லா வகை

* கலைமகள், விக்கிரம, தை.

யிலும் மகிழ்ச்சி நிரம்பி நவமணி பதித்த திருமுடி இலங்கப் பெருமிதத்தோடு இருந்தான்.

தமிழ்ப் புலவர்களும் வடமொழி வித்துவான்களும் எப்பொழுதும் ஆராய்ச்சி மிக்க வாதசபைகளை நடத்துவதற்கு இடமாக இருந்தது வஞ்சிமாநகரம். அரிய கலாவிற்பன்னர்கள் கூடித் தம்முடைய ஆற்றலைக் காட்டி அரசனிடம் பரிசு பெற்றுச் சென்றனர். தன்னுடைய ஆட்சிக்காலத்தில் பெரும் போர்களைச் செய்து வெற்றி மகளை மணந்துகொண்ட அரசன் அப்பொழுது தன் வாழ்வை அமைதியாகக் கழிக்க எண்ணினன். தனக்குப் பின் பட்டத்துக்கு ஏற்றவனாகவும் இளமையிலேயே அருள் வலி ஆண்மை கல்வி யென்னும் குணச்சிறப்புடையவனாகவும் விளங்கிய தன் மூத்த மகன் செங்குட்டுவனுக்கு இளவரசுப் பட்டம் ஈந்து அரசியலிற் பெரும்பகுதியை அவனே கவனிக்கும்படி அமைத்தான். செங்குட்டுவனுக்கு இளையவனாகிய அரசகுமாரன் ஒருவன் இருந்தான். அவன் கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவனாகவும், பக்ஷபாதமற்ற நடையுடையவனாகவும் திகழ்ந்தான். அவனையும் அரசியலில் பயன்படுத்திக் கொள்ள எண்ணிய அரசன் பெருநம்பி யென்னும் பதவியை அவனுக்கு அளித்தான்.

செங்குட்டுவன் இளவரசனாக இருந்து சேரநாட்டு அரசியலை நெறி வழுவாமல் நடத்தும் திறமையைப் பெறலானான். அவனுக்கு இளைய அரசிளங்குமாரனே பெருநம்பிப் பட்டம் பெற்று மந்திரிகளுக்கெல்லாம் தலைவனாகி அரசியலில் தலைமைபெற்ற காரியங்களை யெல்லாம் நிர்வகித்து வந்தான்.

இவ்வாறு தன் மக்கள் இருவரும் அரசியல் தேரை இனிது நடத்தி வந்ததைத் தன் கண்ணுற் கண்ட பேரரசனாகிய நெடுஞ்சேரலாதன், 'நம் காலத்திற்குப் பின்னும் இவ்விருவரும் நல்லுறவு பூண்டு இவ்வாறே விளங்குவர். சேர நாட்டுக்கு இரண்டு கண்மணிகளைப் போல இவர்கள் இருப்பார்கள்' என்று எண்ணி உள்ளம் பூரித்தான்.

ஒருநாள் பொன்னும் மணியும் இழைத்த திருவோலக்க மண்டபத்தில் சிங்கம் சுமந்த பொங்கணை மீமிசை, இருபக்கமும் மகளிர் கவரி வீச அரசன் வீற்றிருந்தபோது அவ்வரச சபைக்கு ஒரு சோதிடன் வந்தான். அவன் சேர அரசனது அவைக்களத்துச் சோதிடனல்லன்; அரசன் கலைவல்லுநர்களைப் பாராட்டிப் பரிசளிப்பவனென்பதைக் கேள்வியுற்று அவனைப் பார்த்துச் செல்ல வந்தவன். அவன் வந்து அரசனைப் பணிந்து அங்கே இருக்கையில் அரசன் அவனது வரலாற்றை விசாரித்தான். அவன் ஒரு சோதிடனென்பதை அறிந்து மகிழ்ச்சி அடைந்தான்.

"உமக்கு அந்தக் கலையில் எத்தகைய வன்மை உண்டு?" என்று சேர அரசன் கேட்டான்.

"ஜாதக சக்கரம் இல்லாமல் ஒருவருடைய அங்க அமைப்பைக் கொண்டே அவருடைய எதிர்கால நிகழ்ச்சிகளைச் சொல்வேன்" என்றான் அவன்.

"அப்படியாயின் நாம் இவ்வரசாட்சியை இன்னும் எவ்வளவு காலம் தாங்க வேண்டியிருக்கும்?" என்று அரசன் கேட்டான்.

சோதிடன் பெரிய தர்ம சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டான். அரசன் தன் ஆயுட்காலம் எப்போது

முடிவடையுமென்பதையே வேறு வகையாகக் கேட்டான். அதை எப்படிச் சொல்வது? அரசன் ஆயுட்காலம் முடிவதற்குமுன் சோதிடனது ஆயுட்காலம் முடிந்தாலும் முடியலாம். சேர அரசன் அத்தகையவனல்ல னென்பதைச் சோதிடன் அறிவான். ஆனாலும் எப்படித் துணிந்து சொல்வது?

அவனது மனக்கலக்கத்தை அரசன் உணர்ந்தான்; "தைரியமாகச் சொல்லும். சாஸ்திர விஷயங்களில் பக்ஷபாதமே கூடாது; பொய்யும் சொல்லக்கூடாது. நம்முடைய நாட்டிலே சாஸ்திரத்துக்கு யாவரும் தலை வணங்குவர். நாம் சக்கரவர்த்தியென்ற நினைவை மறந்து உண்மையைச் சொல்லும்" என்று அரசன் வற்புறுத்தினன்.

சோதிடனுக்குத் துணிவு பிறந்தது. 'அறிவாளியாகிய இவ்வரசனிடத்தில் உண்மையைச் சொல்வதால் ஒரு கேடும் வராது. அப்படி ஏதாவது அபாயம் உண்டானல் இவனுக்கே அழியாப் பழி நேர்ந்துவிடும்' என்று எண்ணியவனகி எழுந்து அரசனை அடிமுதல் முடிவரையில் நோக்கினன். பிறகு சொல்லத் தொடங்கினன்:

"மன்னர் பிரானுடைய அங்க அடையாளங்கள் இறைவன் திருவருளைப் பெறுவதற்கு நெடுங்காலம் காத்திருக்க வேண்டாம் என்பதைத் தெரிவிக்கின்றன" என்றான் அவன். அரசனுக்கு விஷயம் இன்னதென்று விளங்கிவிட்டது. சோதிடன்பால் அவனுக்கு எள்ளளவும் கோபம் உண்டாகவில்லை.

சிறிது நேரத்திற்குப் பிறகு, "சரி, இதோ இருக்கிறார்களே; இவர்களைப் பார்த்து ஏதேனும் சொல்ல

முடிந்தால் சொல்லும்" என்று இரண்டு அரச குமாரர்களையும் சுட்டிக் காட்டியபடியே அரசன் கேட்டான்.

சோதிடனுக்கு உண்மையைக் கூறுவதனால் அந்த ராஜ சபையில் தீங்கு ஒன்றும் நேராது என்ற தைரியம் பலமாக உண்டானதால் உடனே அவ்விருவரையும் உற்று நோக்கினான்; பெருநம்பியாக விளங்கிய இளைய குமாரனைக் கூர்ந்து பார்த்தான்.

"அரசர்க்கரசே, இவ்விளங்குமரன் அந்தமில்லாத இன்பத்தையுடைய அரசை ஆளும் உரிமை பெறுவானென்று இவனது முகக்குறிகள் காட்டுகின்றன."

இவ்வாறு சோதிடன் சொன்னபோது அங்கிருந்த யாவருடைய முகத்திலும் திடீரென்று மேகம் படர்ந்தாற் போன்ற வேறுபாடு ஒன்று உண்டாயிற்று. அரசன் நிலை கலங்கிப் போனான். இளவரசப் பட்டத்தில் இருந்த செங்குட்டுவனுக்குக் கண்கள் சிவந்தன; அவை அரசனைப் பார்த்தபடியே நின்றன; "என்ன இது?" என்று கேட்டதுபோல் இருந்தது அவன் பார்த்த பார்வை.

'இந்த விஷயம் உண்மையாகுமா? அரசனுடைய மூத்த குமாரன் அல்லவா அரசாட்சிக்கு உரியவன்? இளைய குமாரனுக்கு எப்படி அவ்வரசுரிமை கிடைக்கும்? ஒருகால் செங்குட்டுவனுக்கு ஆயுட்பலம் போதாதோ!' என்றெல்லாம் சபையிலிருந்த சான்றோர் எண்ணலாயினர்.

இந்தச் சோதிடத்தைச் சொன்ன நிமித்திகன் கருங்கற் சிலைபோல அங்கே இருந்தான். சிறிது நேரம்

அலையோய்ந்த கடலைப்போல அச்சபை ஒலியடங்கி இருந்தது.

பெருநம்பியாக இருந்த அரசிளங்குமரன் ஒரு முறை சுற்றிலும் பார்த்தான். எல்லோருடைய முகங்களும் ஒளியை இழந்திருந்தன. தன் தமையன் கண்கள் தீப்பொறி கக்குவதைக் கண்டான். சிங்கவேறு போலத் திடீரென்று எழுந்தான். சோதிடன்மீது அவன் பார்வை சென்றது.

"சோதிடரே, நீர் உம்முடைய கலையில் வல்லவராக இருந்தாலும், கால தேச வர்த்தமானங்களைத் தெரிந்து உண்மையை ஆராய வேண்டும். மூத்தமகன் இருக்க இளையவன் பட்டம் பெறுவதென்பது இந்த நாட்டில் நிகழாத காரியம். நீர் முறை மறந்து சொல்லிவிட்டீர். உம்முடைய சோதிடம் பொய்யாகி விடுமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. தர்மத்துக்கு மிஞ்சிய சாஸ்திரம் ஏது? முந்தையோர் நெறியினின்றும் வழுவுவதென்பது இந்த மண்ணில் இல்லை. உம்முடைய சோதிடம் பொய்த்துப் போவதை இனிப் பல வருஷங்கள் கழித்துப் பார்க்க வேண்டிய அவசியமும் இல்லை. என் தந்தையார் மனக் கலக்கத்தை நான் உணர்கிறேன். அவர் முதிய பருவத்தில் சோதிடத்தால் அஞ்சி இனி என்ன ஆகுமோ என்று ஏங்க வேண்டாம். என்னுடைய தமையனும் எம் தந்தையாருக்குப்பின் அரசராவதற்குத்தனியுரிமை உள்ளவருமாகிய செங்குட்டுவர் தம் சினத்தை ஒழிவாராக. இங்குள்ள சான்றோர் தர்மம் வழுவி விடுமோ என்று இப்போது அஞ்சுகிறார்களென்று தெரிகிறது. அந்த அச்சமும் அவர்களுக்கு வேண்டாம். இதோ இந்த நிமிஷத்திலே எல்லோ

ருடைய கவலையையும் போக்கி விடுகிறேன். என் சபதத்தைக் கேளுங்கள்.''

அந்த வீரத் தொனி எல்லோரையும் கனவுலகத்திற்குத் தூக்கிக்கொண்டு போய்விட்டது. "இவர் என்ன சொல்லப்போகிறார்? என்ன சபதம்?" என்ற தீவிரமான ஆவல் எல்லோருடைய உள்ளத்தையும் பற்றிக் கொண்டது.

"ஆம். நான் சபதம் செய்கிறேன். எல்லாம் வல்ல இறைவன் இதற்குச் சாக்ஷி. தர்ம தேவதை இதைக் கேட்கட்டும். இங்குள்ள சான்றோர் கேட்டு ஆசீர்வாதம் செய்யட்டும். என் தந்தையார் பொறுமையோடு கேட்டுக் கலக்கமின்றி இருக்கட்டும். என் தமையனாரும் கேட்டு ஆறுதல் பெறட்டும். தெய்வத்தின்மேல் ஆணையாக நான் இன்றே, இப்பொழுதே, துறவு பூண்கின்றேன்."

அங்குள்ளவர் எல்லோருடைய உள்ளங்களையும் உயிர்களையும் அவ்வார்த்தைகள் உருக்கிவிட்டன.

வார்த்தைகளோடு அவன் நிற்கவில்லை. தன்மேல் உள்ள ஆபரணங்களைக் கழற்றித் தந்தையார் முன் வைத்தான்.

அரசன் கண் கலங்கினான். சான்றோர் அழுதனர். செங்குட்டுவன் ஓடிச்சென்று இளவலைக் கட்டித் தழுவிக் கோவென்று கதறினான்.

"என்னப்பா இது! இந்தச் சபதம் செய்யலாமா?" என்றார் சேரலர் கோமான்.

"எல்லோருக்கும் நலம் தரும் சபதம் இது. இது வரையில் இவ்வரண்மனை என்க்குரிய வீடாக இருந்தது. இன்று முதல் குணவாயிலிலே இருக்கும்

கோயிலே என் இருப்பிடமாகும். இந்தச் சோதிடரே எனக்கு இத்தகைய வைராக்கியம் உண்டாவதற்குக் காரணர் ஆனார். இவர் கூறிய சோதிடம் பொய்படவில்லை. மற்றவர்கள் நினைத்தபடி ஆகாமல் அந்தச் சோதிடம் பொய்த்ததேயன்றி உண்மையாக அது பொய்க்கவில்லை. நான் இதுவரையில் யுவராஜனாக இருந்தேன். இனி நான் தவராஜனாக இருப்பேன். செங்குட்டுவர் சேரநாட்டு அரசுரிமையைப் பெறுவார். நானோ சோதிடர் கூறியபடி சிந்தைக்கும் எட்டாததும் அந்தமில்லா இன்பத்தை யுடையதுமாகிய மோக்ஷ சாம்ராஜ்யத்தின் அரசுரிமையைப் பெறுவேன். நான் விடை பெறுகிறேன்.''

இளங்கோவாகிய அவர் கம்பீரமாக நடந்து போனபோது அங்கிருந்தோர் கண்களிலிருந்து பொங்கித் துளித்த நீர்த்துளிகள் அவர் திருவடிமலர்களுக்குப் பாத்திய நீராயின.

இளங்கோவாக இருந்த அப்பெருமான் இளங்கோ அடிகளானார். அருள் நிரம்பிய நெஞ்சுடைய அவர் இயற்றியதே சிலப்பதிகாரமென்னும் அரும் பெருங் காப்பியம்.

# 7. திருமலைராயன்பட்டணம்*

## முன்னுரை

மித்திரனில் முன்னம் தெரிவித்தபடி திருமலைராயன் பட்டணம் முதலிய இடங்களுக்குப் போய்ப் பார்க்கவேண்டிய இடங்களைப் பார்த்தும், விசாரிக்க வேண்டியவைகளை விசாரித்தும், கையெழுத்துப் பிரதிகள் உள்ள இடங்களிற் சென்று அவற்றைப் பார்வையிட்டு அறிய வேண்டியவற்றை அறிந்தும் இன்று காலை இவ்விடம் வந்தேன். யாத்திரை செய்தலும், பழக்கமில்லாதவர்களை அடுத்து அவர்களுக்கு இரக்கமுண்டாகும்படி நடந்து குறையிரந்து உத்தேசித்தவற்றைப் பெறுதலும் மிகக் கடினமான காரியம்; இருந்தாலும் முடிவில் அவை சிறந்த இன்பத்தை விளைவிக்கும். இது யாவருக்கும் தெரிந்ததே. நன்றாக ஆராய்ந்து பார்க்கையில், இத்தமிழ்நாட்டின்கண் முற்காலத்தில் அவ்வவ்விடங்களிலிருந்த கவிஞர்கள், அரசர்கள், பிரபுக்கள் முதலியோருடைய உண்மையான சரித்திரங்களை அறிந்தோர் வாயிலாக விசாரித்து ஆராய்ந்து ஒழுங்குபடுத்தி எழுதி வெளியிட்டால் அவை படிப்

---

* ஐயரவர்கள் கும்பகோணத்தில் இருந்தபோது ஏட்டுச் சுவடிகளைத் தொகுப்பதற்காக வெளியூர்களுக்குச் சென்று வருவதுண்டு. அவ்வாறு சென்றபோது அங்கங்கே கண்டும் கேட்டும் அறிந்தவற்றைச் சிலகாலம் சுதேசமித்திரன் பத்திரிகையில் எழுதி வந்தார்கள். இது 14—5—1901-இல் எழுதப்பெற்றது; 1901 மே மாதம் 25-ஆம் தேதி **மித்திரனில்** வெளியாயிற்று.

போர்க்கு நற்குண நற்செய்கைகளை மேன்மேலும் பெருகச் செய்து மிகுந்த நன்மையை விளைவிக்கும்; அவ்வாறு முயற்சி செய்வோர்களும் அதற்காகப் பொருள் செலவிடுவோர்களும் செல்வர்களில் இக்காலத்தில் பெரும்பாலும் இல்லையே யென்று வருந்துகிறேன்.

திருமலைராயன்பட்டணம் என்பது நாகபட்டினத்திற்கு அருகில் உள்ள ஓரூர். இதில் ஐந்து சிவாலயங்களும், ஐந்து விஷ்ணு ஆலயங்களும், வேறு ஆலயங்கள் பலவும் உள்ளன. நூற்றுக்கு மேற்பட்ட குளங்கள் பண்டைநிலை குலைந்து காணப்படுகின்றன. ஒவ்வொரு சாதியாரும் வேறு சாதிக் கலப்பின்றி வாழ்வதற்குரிய தெருக்கள் பல உள்ளன. அகலமும் நீளமும் உள்ள அவை இடையிடையே வீடுகள் சிதைந்தனவாய்த் தோற்றமளிக்கின்றன. அழகழிந்து குலைந்து சிதறுண்ட சின்னங்களுடன் அமைந்த இவ்வூரை இப்பொழுது உள்ள நிலையில் பார்த்தாலும் வியப்பை அளிக்கிறது. இது பண்டைக்காலத்தில் மிகவும் செவ்விதாக அமைந்த பெரிய நகரமாக விளங்கியது என்பதை இதனைக் கண்டார் எல்லாரும் உணர்ந்துகொள்வர்.

இதனைச் சூழவுள்ள ஊரினர் பலரும் இதனை யாதொரு விசேடணமும் கொடாமல் பட்டணம் என்றே வழங்குகின்றனர். இந்தப் பக்கத்தில் முற்காலத்தில் இது தலைசிறந்த நகரமாய் இருந்ததென்பதை அவ்வழக்கம் நன்கு தெரிவிக்கின்றது. இவ்வூரிலும் இதனைச் சார்ந்த ஊர்களிலும் உள்ளவர்கள் இந்நகரத்தைப்பற்றியும், இதனை ஆண்ட திருமலை

ராயன் என்னும் அரசனைப்பற்றியும், இங்கே வந்து தம் புலமையை நிலைநிறுத்திய **காளமேகம்** என்னும் கவிஞரைப்பற்றியும் பல வரலாறுகளைச் சொல்லு கிறார்கள்.

இந்த நகரம் **திருமலைராயன்** என்னும் அரசனால் தனக்குரிய இராசதானியாகப் பலவகைச் சிறப்புக் களுடன் புதிதாக அமைக்கப்பட்டது. பழைய நகரம் ஒன்று இதன் மேற்கே ஒரு நாழிகை வழித்தூரத்தில் பண்டைக்காலத்தில் மிகப் பெரியதாக இருந்ததாம். அதுவே புலவர்பெருமானாகிய **காளமேகத்**தின் வசைக் கவியால் மண்மாரி பெய்ய அழிந்துபோயிற்று என்று சொல்கின்றனர். அந்த இடம் இப்பொழுது மரம், செடி, கொடி ஒன்றும் இன்றி ஒரே வெளியாகத் தோற்றுகிறது. நொறுங்கிய செங்கற்களும் உடைந்த நவபாண்ட ஓடுகளும் எங்கும் மிகுதியாகப் பரவி யுள்ளன. அங்கே மிகவும் பழையதான சிவாலயம் ஒன்றுமாத்திரம் இருக்கிறது. வேறு கட்டிடம் ஒன்றும் காணப்படவில்லை. அவ்வாலயம், '**பொன் னீசுவர சுவாமி கோயில்**' என்று வழங்குகின்றது. ஒரு காலத்தில் நகரமாக விளங்கிய அவ்விடம் இப்பொழுது வெறும் பாழ்வெளியாகக் கிடப்பதைப் பார்க்கும்போது உள்ளம் உருகுகிறது. "வசைபாடக் காளமேகம்" என்ற ஆன்றோர் மொழியின் பொருள் நன்கு புலப் படுகின்றது.

இராமாயணம், யுத்தகாண்டத்தின் முதற்போர்ப் படலத்தில், இராமபிரானோடு போர் செய்து தோற்று எல்லாவற்றையும் இழந்து நின்ற இராவணனைக் **கம்பர்** வர்ணிக்கின்றார்:

"மாற்ற ருந்தட மணிமுடி யிழந்தவா ளரக்கன்
ஏற்ற மெவ்வுல கத்தினு முயர்ந்துளா னெனினும்
ஆற்ற னன்னெடுங் கவிஞரோ ரங்கத முரைப்பப்
போற்ற ரும்புக ழிழந்தபே ரொருவனும் போன்றன்."

எல்லாம் இழந்த இராவணன், கவிஞர்களது வசைக்குப் பாத்திரமாகி எல்லாவற்றையும் இழந்த ஒருவனை ஒத்தான் என்று இங்கே கூறுகிறார். **நள வெண்பா**விலும் கலிதொடர் காண்டத்தில் இத்தகைய கருத்துள்ள செய்யுளொன்று வருகிறது. சக்கரச் செல்வத்தை இழந்து மக்களைப் பிரிந்து துக்கமுற்றுக் கணவனும் பிரிய வருந்திய தமயந்தி புலம்பிய செய்தியைப் **புகழேந்தி** பின்வரும் செய்யுளில் கூறுகிறார் :

"வண்டமிழ்வா ணர்ப்பிழைத்த வான்குடிபோற் றீத்தழன்மீ
மண்டு கொடுஞ்சுரத்தோர் மாட்டிருந்து—பண்டையுள
வாழ்வெல்லாம் தானிழந்து மற்றழுதாண் மன்னிழைத்த
தாழ்வெல்லாந் தன்றலைமேற் றந்து."

இங்கும் தமிழ்ப்புலவர்களுக்கு அபராதம் இழைத்தவர் கெடுவர் என்பது உவமை வாயிலாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பாழ்பட்ட பழைய திருமலைராயன் பட்டணத்தைக்கண்டு காளமேகப் புலவரின் வரலாற்றை நினைத்துப் பார்த்தபொழுது இந்த இரண்டு செய்யுட்களின் பொருளும் தெளிவாக விளங்கிற்று.

இப்பொழுது உள்ள புதிய நகரத்திலிருந்து பழைய நகரம் இருந்த இடத்திற்குப்போகும் வழியில் சில புன்செய் நிலங்கள் உள்ளன. அவ்விடத்திற்கு **மன்னன் கோயில் வழிச்சேரித் திடல்** என்ற பெயர் வழங்குகிறது. அந்த இடம் திருமலைராயனது அரண்மனைக்குப் போகும் வழியாக இருந்தது என்றும், அங்கே மக்கள்

குடியிருந்த வீதி இருந்ததென்றும் அப்பெயர் தெரிவிக்கின்றது. இவ்வூருக்குத் தென்புறத்தில் **புறவுடையான்** என்ற ஆறு மேற்கிலிருந்து கிழக்கே ஓடுகின்றது. அதைப் புற்றுடையான் என்றும் சொல்லுவர். அதன் கரையில் உடைந்த செங்கற்கள் பரவிக் கிடக்கும் மேடொன்று காணப்படுகின்றது. அவ்விடத்திற்குக் **கோட்டை மேடு** என்பது பெயர். அதுதான் பழைய நகரத்துக் கோட்டையின் தென்பாகம் என்று ஊகிக்கின்றனர்.

இவ்வூரின் தென்பாகத்தில் **போலகம்** என்னும் பெயருள்ள ஊர் இருக்கிறது. அப்பெயருக்குப் பொருள் இன்னதென்று புலப்படவில்லை. ஆனாலும் அவ்விடத்திலுள்ள ஒரு சிவாலயத்தைப் **புகலீசுவரர் கோயில்** என்று வழங்குகின்றனர். அப்பெயரைக் கொண்டு ஆராய்ந்தால், போலகம் என்பது **புகலகம்** என்பதன் திரிபாக இருத்தல்கூடும் என்று தோற்றுகிறது. புகலகம் - புகும் இடம். இப்பெயர் பழைய திருமலைராயன் பட்டணத்திற்குக் கோட்டை வாயில் வழியாகப் புகும் இடமென்பதைக் குறிப்பிக்கும்.

இவ்வூருக்கு வடக்கே **நிரவி** என வழங்கும் ஊரொன்று உண்டு. இரவி என்பதே அவ்வாறு மாறி வழங்குகிறது என்பர். சிவபெருமானைச் சூரியன் பூசித்த தலமாதலின், சூரியனுக்குரிய பெயராகிய இரவி என்பதே இதற்கும் பெயர் ஆயிற்று என்றும், நாளடைவில் அது நிரவி என்று மாறிற்று என்றும் காரணம் கூறுவர். அவ்வூரிலேதான் திருமலைராயனுடைய ஆஸ்தான வித்துவான்களும், **காளமேகத்தை** அவமதித்து அவருக்குப் பல இடையூறுகள் செய்தவர்

களுமாகிய (அதிமதுர கவிராசசிங்கம் முதலியவர்கள் இருந்தார்களாம். தமிழ்நாவலர் சரிதையால் அதிமதுர கவிராயருக்கும் காளமேகத்திற்கும் வாதம் நிகழ்ந்த செய்தியும், அதில் காளமேகப்புலவர் வென்றதையும், பிறகு அவ்விரண்டு கவிஞர்களுக்கும் நட்பு உண்டான தையும் அறியலாம். காள்மேகம் இறந்தபொழுது அதி மதுர கவிராயர், "ஆசு கவியால்" என்னும் வெண்பா வைப்பாடி இரங்கினர் என்று அந்நூல் கூறும்.

இந்நகருக்கு அருகில் உள்ள கடற்றுறையில் ஓரிடத்தில் பழங்காலத்தில் முத்து எடுத்தார்களாம். அவ்விடம் திருமலைராயனுடைய ஆட்சிக்கு உட் பட்டிருந்தது. காளமேகம் அவ்வரசனிடம் வந்தது முத்துக்கச்சு ஒன்றைப் பெறுதற்கு என்றும், அவர் வந்தபொழுது அரசனைச் சார்ந்தோர்கள் * யமகண்டம் பாடச்செய்து பரீக்ஷித்துச் சுற்றிலும் இருந்து பல கேள்விகளைக் கேட்க, அவர் சிறிதும் வருத்தமின்றி அவற்றையெல்லாம் ஒழுங்காகப் பாடி முடித்தனர் என்றும், பின்னும் அவர்கள் உதாசீனர்களாகவே இருக்கக்கண்டு அக்கவிஞர் உளம்நொந்து கடுங்கோபம் உற்று "கோளரிருக்குமூர்" என்னும் வெண்பா வைப் பாடி மண்மாரி பெய்வித்து இந்நகரத்தை அழியச் செய்தார் என்றும் இங்குள்ளோர் கூறு கின்றனர். அந்த வெண்பாவின் பின் இரண்டு அடி களும் தனிப்பாடற்றிரட்டில் காணப்படுகிறபடியன்றி வேறுவிதமாக இவ்வூரில் பலரிடத்தும் வழங்குகின்றன.

---

* உயிருக்கு அபாயமான நிபந்தனைக்கு உட்பட்டுக் கவி பாடுதல்.

இந்த ஊர்ச் சிவாலயங்களுள் ஒன்று **இராசராச சோளீசுவரமுடையார் கோயில்** என்னும் பெயருடைய தென்பதைச் சிலாசாஸனத்தால் அறிந்தேன். அங்கே உள்ள கல்வெட்டொன்றில் '**மாலைப்பாடித் திருமலையா அய்யன்**' என்ற பெயர் காணப்பட்டது. அதனால் மாலைப்பாடித் திருமலைராயன் என்பது அரசனது முழுப்பெயர் என்னும் செய்தி வெளியாயிற்று.

இவ்வூரில் பல இடங்களுக்கும் அழைத்துச் சென்று உதவி செய்தவர்கள் இவ்வூர் இடைத் தெருவிலுள்ள ஸ்ரீமான் இராமசாமி வாத்தியார், சொக்கநாத முதலியார் முதலியவர்கள். கர்ண பரம்பரையாகக் கிடைத்த செய்திகளை உரைத்தவர்கள் இவ்வூரில் உள்ளவரும் எழுபத்து நான்கு பிராயம் உள்ளவருமான வீரப்ப முதலியார் முதலியோர். இவ்வூர் ஸ்ரீமான் சோமசுந்தர கவிராயர் வீட்டிலும், இவ்வூருக்கு மேற்கே உள்ளதாகிய மண்டபக்குளத்தின் மேல்கரை மடத்திலும் இருந்த ஏட்டுப் புத்தகங்களைப் பார்த்தேன். கவிராயர் வீட்டுப் பிரதிகளுள் ஒன்றாகிய திருமயிலைத் திரிபந்தாதியில் பின்னுள்ள செய்யுட்கள் காணப்பட்டன.

(கட்டளைக்கலித்துறை)

**"போத வனத்தனவ் வாசவன் போற்றும் புனிதனடை**
**யோத வனத்தன மாமுமை யாளுரை பாகனுயர்**
**சீத வனத்தன மாமேரு வில்லன் செழுங்குயில்சேர்**
**சூத வனத்தனம் மாயூர நாதன் றுணைநமக்கே."**

**"விஞ்சலை சூழ்புவி மேன்மட வாரை விரகமதாற்**
**கெஞ்சலை நீக்கி நினைந்தால் வருமுத்தி கேண்மனனே**
**மஞ்சலை மாமதில் சூழ்மயி லாபுரி வாழடியார்க்**
**கஞ்சலை யஞ்சலை யென்றருள் செய்திடு மஞ்சலையே."**

இவ்விரண்டு செய்யுட்களும் இதுவரையில் ஒரு பிரதியிலும் காணப்படவில்லை. மேற்கூறிய மடத்தில்

சைவ சித்தாந்த நூலாகிய ஞானமிர்த உரையொன்றிருந்தது.

## நாகபட்டினம்

நாகபட்டினத்தில் பலவிடங்களுக்குச் சென்று பார்த்தற்கு அவகாசமில்லாமையால், என்னுடன் வந்திருந்த கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் முதல் தமிழ் பண்டிதர் ஸ்ரீமான் நாராயணஸ்வாமி ஐயரை அங்கேயிருந்து பார்த்துவருமாறு கேட்டுக் கொண்டேன். மேற்படி நகரத்துள்ள புண்டரீக தீர்த்த மேல்கரையிலிருக்கும் சிரஞ்சீவி பொன்னம்பலம் பிள்ளை என்பவருடைய உதவியால் சில இடங்களுக்குச் சென்று பார்த்ததில் **நிரஞ்சனநாதர்** என்னும் தமிழ்க் கவிஞரால் செய்யப்பட்டதான **பழைய திருநாகைக்காரோண புராணம்** முதலிய சில நூல்கள் கிடைத்தனவென்று அவர் எழுதிய கடிதத்தால் தெரிந்து மகிழ்வடைந்தேன். **தமிழ் நாவலர் சரிதை**யால் நிரஞ்சன நாதர் என்னும் தமிழ்க் கவிஞர் ஒருவர் இருந்தாரென்று முன்னம் தெரிந்திருந்தது.

## ஸ்வாமிமலை

சென்ற ஞாயிற்றுக்கிழமை இவ்விடத்திற்குச் சமீபத்தில் உள்ளதாகிய ஸ்வாமிமலைக்குச் சென்று விசாரித்த பொழுது, அங்கே ஸ்தலவாசம் செய்துகொண்டிருப்பவரும், திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களுடைய மாணாக்கர்களுள் ஒருவருமாகிய ஸ்ரீமான் சொக்கலிங்க முதலியார் என்பவரால் பிள்ளையவர்களுடைய தனிப்பாடல்களில் மூன்றும், வேறு சில கவிஞர்களுடைய சரித்திரங்களும் தெரிந்து கொண்டேன்.

இவர் பல ஊர்களுக்குச் சென்று பல செய்திகளை அறிந்துகொண்டு வந்தவர். இப்போது துறவறம் பூண்டு

காஷாயதாரியாக இருக்கிறார். இவருக்கு இப்போது உள்ள பெயர் தொண்டர் சீர் பரவுவார் என்பது.

## கவித்தலம்

அதற்கு அடுத்த திங்கட்கிழமை கவித்தலம் போய் ஆண்டுள்ள ஸ்ரீமான் சிவப்பிரகாச பிள்ளை என்பவர் வீட்டிலிருக்கும் ஏட்டுப் புத்தகங்களை யெல்லாம் பார்த்தேன். அப்புத்தகங்களுள் கவித்தலம் **வேலையர்** என்னும் வீரசைவக் கவிஞரால் செய்யப்பட்டதான **திருப்பழூர்ப் புராண**மும், தொண்டை நாட்டுள்ள கோடைநகர் **அரங்கர்** என்னும் கவிஞரால் செய்யப்பட்டதான **சுங்கந் தவிர்த்த புராணத்**தில் சிறிது பாகமும் காணப்பட்டன.

மேற்படி சிவப்பிரகாச பிள்ளையால் மேற்கூறிய வேலையருடைய இருப்பிடம் முதலியனவும் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களுடைய தனிப்பாடல் ஒன்றும் தெரியவந்தன. எனக்கும் என்னுடன் வந்தவர்களுக்கும் வெயிலாலும், சஞ்சாரத்தாலும் உண்டாகிய மெய் வருத்தம் முதலியவை தணியும்படி கவித்தலம் ஸ்ரீமான் துரைசாமி மூப்பனாருடைய குமாரரான சிரஞ்சீவி சந்திரப்பிரகாச மூப்பனார் வசதியான இடமளித்து ஆதரித்து நிரம்பப் பாராட்டினர். இவர் யௌவனமும், பெருஞ் செல்வமும் உடையவராக இருந்தும் சிறிதும் செல்வச் செருக்கின்றி அடக்கமுற்று நற்காரியங்களில் அன்புவைத்து ஒழுகுதல் இக்காலத்தில் மிகவும் பாராட்டற்பாலது.

இனிச் செல்லும் இடங்களில் தெரிவனவற்றைப் பின்னர் எழுதுவேன்.

# 8. ஆத்திரத்திற்கு ஏற்ற தண்டனை*

கும்பகோணம் காலேஜில் நான் வேலை பார்த்து வந்தபோது ஆரம்பத்தில் சுந்தரராவ் என்ற ஒருவர் ஆங்கில ஆசிரியராக இருந்தார். பிரின்ஸிபாலாக இருந்த ஸ்ரீ தண்டலம் கோபாலராவின் மருமகர் அவர்; சிறந்த ரஸிகர்; வேடிக்கையாகப் பேசுவார். அவரோடு பேசிக்கொண்டிருந்தால் நிமிஷத்திற்கு நிமிஷம் சிரிப்பு உண்டாகும். பொழுது போவதே தெரியாது.

காலேஜில் உள்ள ஆசிரியர்கள் யாவரும் அவ ரிடத்தில் மிக்க அன்போடு இருந்தனர். அவர் பிரின்ஸி பாலுக்கு அடுத்தபடியாக இருந்தாராயினும் எல்லா ஆசிரியர்களோடும் சாதாரணமாகப் பழகிவந்தார்.

அவர் நல்ல சுகபுருஷர். அழகான மேனியை உடையவர். சுந்தரராவென்னும் பெயர் அவருக்குத் தகுதியானதே. ஒவ்வொரு நாளும் காலேஜ் ஆசிரி யர்கள் இடைவேளையில் உண்பதற்குரிய உணவுகள் அவரவர்கள் வீடுகளிலிருந்து வரும். சுந்தரராவுக்குக் காலேஜில் முற்பகலில் வேலை முடியும் சமயத்தில் அவருடைய சமையற்காரன் ஏதேனும் சிற்றுண்டியை எடுத்து வருவான். அது சுடச்சுட இருக்கும். எல் லோரும் உண்டு பேசி இளைப்பாறுவதற்காக ஒரு தனி அறையுண்டு. அங்கே கொண்டுவந்து சிற்றுண்டியை அவன் வைத்துவிடுவான். சுந்தரராவ் பெரும்பாலும் வகுப்பில் குறிப்பிட்ட நேரத்துக்கு மேல் இருந்து பாடம் சொல்லிவிட்டுத் தாமஸமாகவே வருவார்.

---

* **கலைமகள்**, விக்கிரம, ஐப்பசி.

இடைவேளை மணி அடித்தவுடனே வகுப்பை விட மாட்டார்; மேலும் கால் மணியோ இருபது நிமிஷமோ பாடம் சொல்லிவிட்டுத்தான் வருவார். சில நாட்களில் உரிய நேரத்தில் பாடத்தை முடித்துவிட்டும் வருவ் துண்டு.

அவருக்கு ஒவ்வொரு நாளும் இடைவேளையாகா ரத்தின் பொருட்டு வரும் சிற்றுண்டிகள் புதிய புதிய மாதிரியாக இருக்கும். அதிகமாகவும் வரும். அவர் அவற்றை மற்ற ஆசிரியர்களுக்கும் கொடுத்து உண்பார். இதனால் அவருக்கு வரும் ருசியான சிற்றுண்டிக்காக மற்ற யாவரும் ஒவ்வொரு நாளும் அவர் வரும் வரைக்கும் ஆவலோடு காத்திருப்பார்கள்.

ஒரு நாள் சுந்தரராவ் ஆகாரம் செய்ய வருவதற்கு நேரமாயிற்று. அவருக்கு என்ன ஆகாரம் வந்துள்ள தென்று அறிவதில் ஓர் ஆசிரியருக்கு மிக்க ஆவல் உண்டாயிற்று. "அவர் வருவதற்குள் பார்த்துவிட லாமே" என்று சொல்லி அவருக்காக வந்திருந்த பாத்திரத்தைத் திறந்து பார்த்தார். திறக்கும்போதே நெய் வாசனையும் உளுந்தின் வாசனையும் கம்மென்று வீசின. சுடச்சுட உளுத்தம் வடைகள் பாத்திரத்தில் நிறைய இருந்தன. "இவ்வளவு பக்குவமாகச் சுடச் சுட வடை வந்திருக்கும்போது இந்தச் சூடு ஆறுவ தற்குள் தின்னுமல், இன்னும் பாடம் சொல்லிக்கொண் டிருக்கிறுரே! மணி அடித்துக் கால் மணிக்கு மேல் ஆகிறது. இன்னும் என்ன பாடம் வேண்டியிருக் கிறது!" என்று அந்த ஆசிரியர் சொன்னுர். மற்றோர் ஆசிரியர், "அந்த வடையில் ஒன்றை எடுத்துத்தான் பாருமே. சூட்டோடு தின்பதற்கு அவருக்குத்தான் வகை

யில்லை யென்றால் நாம் கொஞ்சம் ருசி பார்ப்போமே. எப்படியும் நமக்குப் பங்கு கிடைக்கப்போகிறது. அந்தப் பங்கை அவர் வந்த பிறகு சாப்பிடுவதைவிட இப்போதே சுடச்சுட எடுத்துக்கொண்டுவிடுவோம்" என்றார். அருகில் இருந்த ஆசிரியர்கள் அந்த ஏற்பாட்டுக்கு இணங்கினார்கள். எல்லோரும் சம்மதித்தபோது தடை என்ன? பாத்திரத்தில் இருந்த வடைகள் ஒவ்வொன்றாக அவர்கள் வயிற்றில் சென்றன.

"எல்லாவற்றையும் தின்றுவிட்டால் அவருக்கு வேண்டாமா?" என்றார் ஒருவர்.

"வடை மிகவும் ருசியாய் இருக்கிறது. இன்றைக்கு எல்லாவற்றையும் தீர்த்துவிடுவோம். அவர் வந்தால் நம்முடைய ஆகாரத்தைக் கொடுத்துவிடலாம். ஒரு நாள் அவருடைய ஆகாரம் அவருக்கு இல்லாவிட்டால் என்ன?" என்று ஒருவர் சமாதானம் சொன்னார்.

சிலர் ஆக்ஷேபிப்பதும் சிலர் சமாதானம் கூறுவதுமாக அந்த வடைகள் அவ்வளவையும் அவர்களே உண்டுவிட்டார்கள். உண்ட பிறகு ஒருவர், "இதுவும் நல்லதற்குத்தான். இனிமேலாவது காலத்தில் வந்து சாப்பிடவேண்டுமென்று அவர் தெரிந்துகொள்வார்" என்று சொன்னார்.

அப்பால் சுந்தரராவ் வந்தார். அவரோடு மிகவும் நெருங்கிப் பழகும் ஓர் ஆசிரியர் அவரைப் பார்த்து, "நீங்கள் இப்படி வகுப்பில் நெடுநேரம் இருந்து பாடம் சொல்வது நன்றாக இல்லை. நாங்கள் காத்துக் காத்துப் பார்த்தோம். உங்கள் வடைகள் எங்கள் மனத்தைக் கொள்ளை கொண்டன. நாங்கள் அவற்றைக் கொள்ளை

கொண்டுவிட்டோம். சரியான காலத்தில் நீங்கள் வராததனால் வந்தது இது" என்றார்.

"என்ன? என்ன சமாசாரம்?"

"சமாசாரம் இதுதான். உங்கள் வீட்டிலிருந்து வந்த வடைகளைச் சுடச்சுட நாங்கள் உண்டுவிட்டோம்; பாத்திரந்தான் மிஞ்சியிருக்கிறது. உங்களுக்கு எங்கள் ஆகாரத்தைக் கொடுப்பதாக எண்ணியிருக்கிறோம்."

சுந்தரராவ் சிரித்துக்கொண்டே, "இதுதானா பிரமாதம்? உங்களுக்கு இன்னும் வேண்டுமானாலும் கொண்டுவரச் சொல்லுகிறேன்" என்றார்.

"வேண்டாம்; வேண்டாம்; இதுவே போதும். நீங்கள் ஆகாரம் செய்துகொள்ளுங்கள்."

சுந்தரராவ் அன்று மற்றவர்கள் கொடுத்த சிற்றுண்டிகளை உண்டார்.

அதுமுதல் இந்த மாதிரியான திருட்டு அடிக்கடி நிகழ்ந்து வந்தது. சுந்தரராவ் வருவதற்கு நேரமானால் அவர் ஆகாரத்தில் சிறிதளவு எடுத்து மற்ற ஆசிரியர்கள் ருசிபார்த்து வந்தார்கள். இது வழக்கமாகப் போயிற்று.

ஒரு நாள் சுந்தரராவ் வர நேரமாயிற்று. மற்ற நாட்களைக் காட்டிலும் அன்று அதிகமான தாமஸம் நேர்ந்தது. மற்ற ஆசிரியர்கள் வழக்கப்படி தங்கள் காரியத்தை ஆரம்பித்தனர். சுந்தரராவின் பாத்திரத்தின் மூடி திறக்கப்பட்டது. அதனுள் பெரிய பெரிய வடைகள் இருந்தன. "இன்றைக்கு நல்ல வேட்டைதான். பாவம்! சுந்தரராவுக்கு ஒன்றும் மிஞ்சப் போகிறதில்லை" என்று சொல்லிக்கொண்டே ஒருவர் சர்வ சுதந்திரத்தோடு அந்த வடைகளை எடுத்து

மற்றவர்களிடம் அளித்துவிட்டுத் தாமும் அவசர அவசரமாகத் தம் பங்கை எடுத்துக்கொண்டார். எல்லோரும் அதிக ஆவலோடு அந்தவடைகளை முறித்து வாயில் போட்டுக்கொண்டனர். ஆனால் அவற்றை மெல்லும்போது அவர்கள் முகத்தில் ஒருவித மாறுதல் தோற்றியது. முன் இருந்த உத்ஸாகம் காணப்பட வில்லை. ஒவ்வொருவரும் வடையை விழுங்க முடியாமல் தவித்தனர். சிலர் வாந்தியெடுக்க ஆரம்பித்தனர். தாழ்வாரத்திற்குச் சென்று எல்லாவற்றையும் கீழே துப்பினார்கள்; காறிக் காறி உமிழ்ந்தார்கள்.

"இதென்ன, வேப்பிலை வாசனை வருகிறதே" என்றார் ஒருவர்.

"ஒரே கசப்பு; வயிற்றைக் குழப்புகிறது. ராயர் வேண்டுமென்றே இப்படி ஏற்பாடு செய்திருக்கிறாரென்று தெரிகிறது. வேப்பிலையை உளுந்தோடு சேர்த்து அரைத்து வடை செய்யச் சொல்லியிருக்கிறார். நம்முடைய ஆத்திரத்திற்கு ஏற்ற தண்டனை இது" என்று சொல்லிக்கொண்டே எல்லோரும் அருகிலுள்ள காவிரிக்குச் சென்று நன்றாக வாயைக் கொப்புளித்துச் சுத்தம் செய்துகொண்டு வந்தனர்.

"இனிமேல் இந்த மாதிரியான காரியத்தை நாம் செய்யக்கூடாது என்று ராயர் புத்தி புகட்டிவிட்டார். உணவில் கை வைக்கக்கூடாது" என்று அவ்வாசிரியர்கள் நிச்சயித்துக்கொண்டார்கள்.

சிறிது நேரத்திற்குப் பின் சுந்தரராவ் வந்தார்; அவர் வரும்போதே அவரைப் பார்த்துச் சில ஆசிரியர்கள், "நல்ல காரியம் செய்தீர்கள்! எங்கள் நாக்கு நீளத்திற்கு இதுதான் வழியென்று யோசித்து வேப்பிலை

வடையைக் கொண்டுவரச் சொன்னீர்களோ?" என்று கேட்டனர்.

"நீங்கள் சொல்வது எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே!" என்றார் அவர்.

"விளங்குமா? இன்னும் அந்த வேப்பிலை வாசனை எங்கள் வாயை விட்டு நீங்கவே இல்லை. நாங்கள் பண்ணுவது தவறென்று எங்களிடம் நேரே சொல்லியிருக்கலாமே. இந்தத் தண்டனையை அளிக்க வேண்டுமா?"

சுந்தரராவ் சிரித்தார்; "அடே!" என்று அங்கே காத்துக்கொண்டிருந்த சமையற்காரனைக் கூப்பிட்டார். "மற்றொரு பாத்திரம் கொண்டுவரவில்லையா? எங்கே? கொண்டுவா" என்றார்.

அவன் வேறோரிடத்தில் வைத்திருந்த மற்றொரு பாத்திரத்தை எடுத்துவந்தான். அதில் நல்ல வடைகள் இருந்தன.

"இந்தாருங்கள்; எடுத்துக் கொள்ளுங்கள்" என்று சுந்தரராவ் சொன்னார்.

"நாங்களாக இனிமேல் அதைத் தொட மாட்டோம். நீங்களே எடுத்துத் தாருங்கள். போதும், நாங்கள் பட்டபாடு!" என்று சொல்லிக்கொண்டே ஆசிரியர்கள் அந்த வடைகளை உண்ணத் தொடங்கினர்.

# 9. ராஜா கனபாடிகள்*

இயற்கையறிவும் செயற்கையறிவும் உள்ள வித்துவான்கள் எங்கே இருந்தாலும் சிறப்பை அடைகிறார்கள். அவர்கள் தங்கள் அறிவின் திறத்தால் தாங்கள் சந்தோஷமடைவதுபோலப் பிறரையும் மகிழ்ச்சி அடையச் செய்கிறார்கள். இத்தகைய இயல்புகள் பொதுவாக எல்லா வித்துவான்களிடமும் இருப்பினும், சிலரிடம் சிறப்பாக அமைந்துள்ளன. அத்தகையவர்களது பேச்சிலே ஒரு வகை இன்பம் இருக்கும்; மற்றவர்கள் பேசும் வார்த்தைகளைக் காட்டிலும் அவர்களுடைய வார்த்தைகளிலே அறிவின் மணமும் சுவையும் நிரம்பியிருக்கும்.

இவ்வாறு கேட்போர் மனத்தைக் கவரும்படி பேசுபவர்களுள் திருவிடைமருதூர் ராஜா கனபாடிகள் என்ற பெரியாரும் ஒருவர். அவர் மூன்று வேதங்களையும் நன்றாக அத்தியயனம் செய்தவர். சாஸ்திரங்களிலும் ஆழமான பயிற்சி உடையவர். எந்த ஸம்ஸ்தானத்துக்குச் சென்றாலும் அங்குள்ள தலைவர்கள் மனத்தை வசீகரித்து வித்துவான்களுடைய உள்ளத்தில் பயபக்தியை உண்டாக்கிவருவார். எப்போதும் விபூதி ருத்திராக்ஷதாரணத்தோடே இருப்பார். வித்தையின் ஒளி அவர் முகத்தில் நன்றாக விளங்கும்.

அவர் சிறந்த வித்வத் பரம்பரையிலே பிறந்தவர். உச்சிஷ்ட கணபதி உபாஸகர். சிலகாலம் புதுக்கோட்டை ஸமஸ்தானத்தில் தானாதிகாரியாக விளங்

* **கலைமகள்**, விக்கிரம, கார்த்திகை.

கினர். வேத சாஸ்திரங்களில் அவருக்கு இருந்த இணையற்ற திறமையை உணர்ந்த புதுக்கோட்டை அரசர் அவருக்குப் பலவகையான ஸம்மானங்களைச் செய்தது தன்றி அவர் கரத்தில் ஒரு தோடாவை அணிவித்தார்.

அவர் திருவிடைமருதூரில் பச்சையப்ப முதலியார் தெருவில் வாழ்ந்துவந்தார். அது பல வித்துவான்கள் வாழ்ந்துவந்த வீதியாக விளங்கியது. ஒருமுறை திருவனந்தபுரம் சென்று அங்குள்ள அரசர் ஸமுகத்தில் தம்முடைய வேதஞானத்தையும் சாஸ்திர காவிய விற்பத்தியையும் கனபாடிகள் புலப்படுத்தினர். இவ்விரண்டு வகை ஆற்றலும் ஒருங்கே ஒருவரிடம் அமைந்திருத்தல் மிக அரிது. அன்றியும் வேதசாஸ்திரங்களைச் சிக்கறக் கற்றுத் தேர்ந்த அவர் எந்தச் சமயத்திலும் எந்தத் துறையிலும் எந்த விஷயத்திலும் தம் இணையற்ற பேரறிவை வெளிப்படுத்தும் நிலையில் இருந்தார். அவர் சக்தியை அறிந்த சேரநாட்டு அரசர் பல ஸம்மானங்களை அவருக்குச் செய்தனர். புதுக்கோட்டை ஸமஸ்தானத்தில் ஒரு தோடாப் பரிசுபெற்ற அவருக்கு இரண்டு தோடாக்களை அணிவித்து, "வேதத்தில் உள்ள ஸம்பூர்ணஞானத்திற்காக ஒரு தோடாவும், சாஸ்திரத் திறமைக்காக ஒரு தோடாவும் அணிவித்தோம். உங்களுக்கு இரண்டு கைகளே உள்ளன. மேலும் சில கைகள் இருந்தால் அவைகளுக்கும் தோடா அணிவித்திருப்போம்" என்று சொல்லிவிட்டு, "நாம், இந்த நாட்டிலுள்ள ஜனங்களுக்கெல்லாம் ராஜா; தாங்கள் வேதவித்துக்களுக்குள் ராஜா" என்று பாராட்டினர். அதுமுதல் அப்பெரியாருக்கு ராஜா கனபாடிகள் என்ற பெயரே வழங்கலாயிற்று.

அதற்கு முன் அவருக்கு இருந்த இயல்பான பெயர் தெரியவில்லை.

* * * *

திருவிடைமருதூரில் இருந்த காலத்தில் அவர் திருவாவடுதுறை ஆதீனவித்துவானாக விளங்கினர். ஆதீன கர்த்தராக இருந்த மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய



ஸ்ரீ மேலகரம் சுப்பிரமணிய தேசிகர்

தேசிகர் அவரை அடிக்கடி வருவித்து ஸல்லாபம் செய்து இன்புறுவார். வருஷந்தோறும் வருஷாசனம் அவருக்கு

அளித்து வந்தார். வித்துவான்களுடைய வார்த்தைகளைக் கேட்டுத் தேசிகரது முகம் மலரும்; தேசிகரது ஆதரவைப் பெற்ற வித்துவான்கள் முகமும் மலரும். அவர்களது முகமலர்ச்சி கண்டு தேசிகர் அகம் மலரும். இவ்வாறு செல்வமும் பதவியும் படைத்த பயனை உலகம் புகழ அனுபவித்து வந்த சுப்பிரமணிய தேசிகருக்கு ராஜா கனபாடிகளிடத்தில் நல்ல மதிப்பு இருந்து வந்தது வியப்பன்று; தேசிகரிடத்தில் கனபாடிகளும் பேரன்புடையவராக இருந்தார்.

ஒருநாள் திருவாலங்காட்டுத் தியாகராஜ சாஸ்திரிகள் மடத்திற்கு வந்திருந்தார். சுப்பிரமணிய தேசிகருக்கு வடமொழி நூல்களைப் பாடஞ் சொன்னவர் அவர். அப்போது ராஜா கனபாடிகளும் வந்தார். இருவருக்கும் புதுக்கோட்டையில் அதிகப் பழக்கம் உண்டு. கனபாடிகளுடைய பெருமையைப்பற்றித் தேசிகரும் தியாகராஜ சாஸ்திரிகளும் உரையாடினர். வேதத்தில் எந்த மூலையானாலும் கரதலாமலகம்போல அவருக்கு வரும் என்று தேசிகர் சொன்னார். அப்போது கனபாடிகள், "எந்தப் பாகத்திலாவது உள்ள ஸ்வரத்தை மாத்திரம் சொன்னால் அந்தப் பாகத்திலுள்ள மூல ருக்கைச் சொல்வேன்" என்றார்.


சாஸ்திரிகள் உடனே வேதத்தில் எங்கோ ஓரிடத்தில் வரும் மந்திரங்களின் ஸ்வரத்தைமாத்திரம் சொன்னார். அதற்குமுன் தாம் குறிப்பித்த வேதருக்கை எழுதிச் சுப்பிரமணிய தேசிகரிடம் கொடுத்துவிட்டார். அவர் ஸ்வரம் சொல்லிமுடிந்தவுடனே கனபாடிகள் அக்ஷரம் தவறாமல் அந்த மந்திரங்களை ஸ்வரத்தோடு சொன்னார். சாஸ்திரிகளுக்கு ஆச்சரியம் தாங்கமுடிய

வில்லை; "அட, ராக்ஷஸா!" என்று மூன்றுதரம் சொல்லி ஸந்தோஷப்பட்டார். தம்மிடம் கொடுக்கப் பெற்ற வேதருக்கைப் பார்த்து அப்படியே இருப்பதை உணர்ந்து கனபாடிகளுடைய ஞாபக சக்தியைத் தேசிகரும் பாராட்டினர்.

* * * *

திருவிடைமருதூரில் உள்ள மகாரதம் மிகச் சிறப்பு வாய்ந்தது. ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் காலத்தில் ரதோத்ஸவம் விமரிசையாக நடந்துவந்தது. அவருடைய முயற்சியினுல் நடைபெறும் எந்த விசேஷமும் வித்துவான்கள் இல்லாமல் நிகழாது. வித்துவான்களுடைய கூட்டத்தின் மத்தியில் இருந்து அவர்களோடு ஸல்லாபம் செய்து கொண்டே பொழுதுபோக்குவதில் விளையும் ஆனந்தம் வேறு எதனுலும் அவருக்கு உண்டாவதில்லை.

ஒரு வருஷம் புஷ்யோத்ஸவத்தில் மகாரதம் நிலைக்கு வந்த பிறகு சுப்பிரமணிய தேசிகர் தேர்முட்டி மண்டபத்தில் வீற்றிருந்தனர். பல பிரபுக்களும் வித்துவான்களும் அருகில் இருந்தார்கள். மகாரதம் நிலைக்கு வருவதென்பது மிகவும் சிரமமான காரியம். ஆயிரக்கணக்கான பேர்கள் சேர்ந்து இழுக்கவேண்டிய அத்தேரைப் பிரபுக்களுடைய உதவியினுலும் மடத்தைச் சேர்ந்த கிராமங்களிலிருந்து வரும் ஆட்களின் சகாயத்தாலும் ஒரே நாளில் நிலைக்குக் கொண்டுவரச் செய்த தேசிகரது பெருமையை யாவரும் பாராட்டினுர்கள். வித்துவான்களில் ஒவ்வொருவரும் தமக்குத் தோற்றியபடி தேசிகர் குணப் பெருமையையும் கொடைப் பெருமையையும் எடுத்துச் சொன்னுர்கள்.



திருவிடை மருதூர் மகாரதம்

அக் கூட்டத்தில் வித்துவான்களோடு சேர்ந்து உட்கார்ந்திருந்த ராஜா கனபாடிகள் பேச ஆரம்பித்தார். அவர் பேசத் தொடங்கினல் எல்லோரும் அமைதியாக இருந்து அவரையே கவனிப்பார்கள்; அவ்வளவு ரஸமாக இருக்கும் அவரது பேச்சு.

"இவ்வளவு பேர்கள் இவர்களுடைய பெருமையை எடுத்துக் கொண்டாடினார்கள்; இவ்வளவு பெருமை யாருக்கும் இராதென்று சொன்னார்கள். என்ன இருந்தாலும் ஒரு விஷயத்தில் இவர்களுக்கு முன்பு இருந்த பண்டார ஸந்நிதிகளுடைய பெருமை இவர்களுக்கு இல்லை" என்று அவர் கூறினர்.

எல்லோரும் இதைக் கேட்டுத் திடுக்கிட்டனர்; 'என்ன, கனபாடிகள் இப்படிச் சொல்லுகிறாரே! இவர்களைக் காட்டிலும் முன் இருந்தவருக்கு என்ன அதிகமான பெருமை?" என்று ஒவ்வொருவரும் யோசிக்கலாயினர்.

"நான் பொய் சொல்லவில்லை. அந்தப் பெருமை இவர்களுக்கு இனிமேல் உண்டாவதற்கும் இடமில்லை" என்று பின்னும் கனபாடிகள் பேசலானார்.

அந்தக் கூட்டத்தில் கனபாடிகள் பெருமையை நன்கு அறியாத செல்வர் சிலர் இருந்தனர். அவர்கள், 'இந்த மடிசஞ்சி இவ்வாறு உளறுகிறதே! பூஜை வேளையில் கரடியை விட்டாற்போல இந்தப் பைத்தியம் எங்கே வந்து சேர்ந்தது?' என்று கூட எண்ணினார்கள்.

"இவர்களுக்கு முன் இருந்தவர் எல்லாக் குணங்களும் பூர்ணமாகவுடைய இவர்களைத் தேர்ந்து எடுத்துத் தமக்குப் பின் ஆதீனகர்த்தராக இருக்கும்படி

நியமித்தார்களே ; அப்படிச் செய்தது எவ்வளவு பெருமையான காரியம்? இவர்களுக்கு அந்தமாதிரியான பெருமை வரவேண்டுமானுல் இவர்களைப் போல ஒருவரைத் தேடி எடுக்க வேண்டுமே ; அது யாரால் சாத்தியம்? இவர்களைப் போல ஒருவரும் இல்லையென்று இவ்வளவு பேரும் இப்பொழுது சொன்ஞர்கள். ஆகையால் இவர்கள் எவ்வளவு சிரமப்பட்டாலும் தமக்கு ஸமானமானவரைத் தேடி எடுக்கமுடியாது. அதனுல், முன் இருந்தவரைப் போலச் செய்யவும் முடியாது. அவர் பெருமை இந்த விஷயத்தில் அதிகமல்லவா ?" என்று சொல்லிமுடித்தார் கனபாடிகள்.

எல்லோருக்கும் வியப்பும் ஸந்தோஷமும் உண்டாயின. யாவரும் ஸந்தோஷ ஆரவாரம் செய்தனர். "எல்லோரும் பேசுகிருர்கள் ; இவரும் பேசுகிருர் ! இவர் பேச்சிலே எவ்வளவு ரஸம் !" என்று வித்துவான்கள் குதூகலம் அடைந்தார்கள்.

* * * *

ஒருநாள் ராஜா கனபாடிகள் எதிர்பாராதபடி பிற்பகல் இரண்டுமணிக்குத் திருவாவடுதுறை மடத்துக்கு அவசரமாக வந்தார். சொல்லியனுப்பாமல் தாமே வலிய அவர் வந்ததை அறிந்த சுப்பிரமணிய தேசிகர் அவரை வரவேற்று இருக்கச் செய்து, "கனபாடிகள் இந்த ஸமயத்தில் வந்தது அபூர்வமாயிருக்கிறதே ! ஏதாவது விசேஷம் உண்டோ ?" என்று கேட்டார்.

"விசேஷந்தான் : இன்று நான் பூஜை செய்ய உட்கார்ந்தேன். உடனே யாரோ ஒருவன் வந்து 'திருவாவடுதுறையிலிருந்து நெல் வந்திருக்கிறது ;

எந்தக் குதிரில் கொட்டுவது?' என்று கேட்டான். இருபது கலம் பிடிக்கும் குதிர்கள் மூன்றில் அறுபது கலம் நெல்லைக் கொட்டி நிரப்பினான்; பிறகு குதிருக்கு மண்பூசி மூடினான். போய்வருகிறேனென்று சொல்லிக் கொண்டபோது அவனுக்கு இனும் கொடுக்கச் சில்லறையை நீட்டினேன். அவன் வேண்டாமென்று



திருவாவடுதுறைமடம்

சொல்லி மறுத்து வந்துவிட்டான். இப்படி உபகாரம் பண்ணும் அவ்விடத்தை வாழ்த்தினேன். என் ஸந்தோஷம் என்னை அங்கே இருக்கச் செய்யவில்லை. பூஜையையும் ஆகாரத்தையும் முடித்துக்கொண்டு உடனே புறப்பட்டேன். இப்படி தாத்ருத்வம் உடையவர்கள்

வேறு எங்கே இருக்கிறார்கள்? இந்த வருஷம் பகுதான்ய வருஷம். எங்கள் வீட்டில் பகுதான்ய வருஷம் (தான்ய மழை) ஏற்பட்டது. இந்த வருஷத்திற்கு இந்தப் பெயர் உண்டானது மிகவும் பொருத்தமே. பகுதான்யத்தைத் தருவதனால் பகுதான்ய என்னும் பெயரும் [1] பகுவ்ரீஹி (அன்மொழித்தொகை) யாக நிற்கிறது. இப்படி எங்களைப் போஷித்துவரும் அவ்விடம் சிரஞ்சீவிகளாக வாழவேண்டுமென்பதே எங்கள் பிரார்த்தனை" என்று கனபாடிகள் சொல்லி முடித்தார்.

"தான்ய வருஷத்தைக் காட்டிலும் உங்கள் [2] சொல் மழை நம் உள்ளத்தைக் குளிர்விக்கிறது. உங்களைப் போன்றவர்களுக்குக் கனக வருஷமல்லவா வருஷிக்க வேணும்!" என்று விடை கூறினார் தேசிகர்.

## 10. எது தமிழ்? *

நாம் நம்முடைய நண்பர்களுடன் சந்தோஷமாக ஒரு சங்கீத வினிகை கேட்கப்போகிறோம். வித்துவான் பெரிய பெரிய சபைகளில் பாடிப் புகழ்பெற்றவர். ராக ஆலாபனமும், கீர்த்தனங்களும் அமிர்தம் போலப் பொழிந்து வருகிறார். இனிய மெல்லிய

1. பகுவ்ரீஹியென்பது அன்மொழித் தொகையைக் குறிக்கும் வடமொழிப் பெயர்; பல நெல் என்பது அந்தத் தொடரின் சொற்பொருள்.

2. சொல் என்பதற்கு நெல் என்ற பொருளும் உண்டு.

* திருச்சிராப்பள்ளி அகில இந்திய ரேடியோ நிலயத்தில் 29-9-41-இல் படிக்கப் பெற்றது.

தம்புரு சுருதியை வைத்துக்கொண்டு பாடுகிறார். இந்த இனிமையானசந்தர்ப்பத்தில் தம்புராவின் தந்தி அறுந்துவிடுகிறது. சுருதி நிற்கிறது. எல்லோருக்கும் மனம் எப்படி இருக்கும்! பக்கவாத்தியக்காரர்களும் சங்கீதவித்துவானும் பூரணமான ஆற்றலைக் காட்டினாலும் சுருதி நின்றால் எல்லாம் நின்று விடுகிறது. அது சங்கீதவினிகையாகத் தோன்றுகிறதில்லை.

வேறு ஒரு சமயத்தில் நம்முடைய நண்பர் ஒருவர் வீட்டுக்குப் போயிருக்கும்போது அவர் தம்முடைய பெண்ணைப் பாடச்சொல்லுகிறார். வருஷக் கணக்காகச் சங்கீதத்தில் பழக்கமில்லாவிட்டாலும் சாரீரம் இருக்கிறது. அபஸ்வரமில்லாமல் பாடுகிறாள். "சுருதி சுத்தமாக இருக்கிறது. இது போதும், குடித்தனம் செய்யும் பெண்களுக்கு" என்று சொல்லி நாம் பாராட்டுகிறோம்.

பெரிய சங்கீதக் கச்சேரியானாலும் சாதாரணமாகப் பாடுவதானாலும் சுருதி சுத்தமாக அமைய வேண்டும். சங்கீதத்துக்கு முதல் அங்கம் சுருதி. வித்துவான் தம் ஆலாபனத்தில் மேக மண்டலத்தை அளாவினாலும், சுரம் போடுவதில் நாட்டியக்குதிரையை வென்றாலும், பாவத்தில் இருதயத்தைக் கொள்ளைகொண்டாலும் சுருதியிலிருந்து வழுவக் கூடாது.

சங்கீதத்தின் பலவிதமான அமைப்புக்களுக்கும் ஆதாரபீடமாகச் சுருதி இருப்பது போலவே ஒவ்வொரு மொழிக்கும் அந்த அந்த மொழிக்குரிய தனி மரபு ஒன்று இருக்கிறது. செய்யுளானாலும் வசனமானாலும், பாட்டானாலும் பேச்சானாலும், விளம்பர

மாலும் செய்தியாலும் இந்த மரபு என்னும் சுருதி இல்லாவிட்டால் அது நல்லநடையில் அமைந்த தென்று சொல்லமுடியாது. தமிழ்மொழியைப் பார்க்கலாமே. நாம் தினந்தோறும் பேசுகிறோம்; தமிழிலேதான் பேசுகிறோம். கோபத்திலே குமுறியும், சந்தோஷத்திலே உள்ளம் பூரித்தும், துக்கத்திலே நைந்து போயும், இளைப்பிலே மெலிந்தும் பேசும் தமிழிலே ஒரு தனி மரபு இருக்கிறது. உள்நினைப்பும் வாய் வார்த்தைகளும் தமிழாகவே வருகின்றன.

ஒரு முட்டாளைப் பார்த்து, 'மரமே, குட்டிச் சுவரே' என்று வைகிறோம். ஸம்ஸ்கிருதமாகச் சொன்னால் 'மண்டூகமே, ஜடமே' என்று பரிகாசம் செய்கிறோம். 'வாத்தே' என்று வைகிறதில்லை. இங்கிலீஷில் 'கூஸ்' என்று வைகிறார்கள். 'கூஸ்' என்ற **வார்த்தையை** மொழிபெயர்த்தால் 'வாத்து' என்று ஆகும்; ஆனால் கூஸ் என்ற **வசவை** மொழிபெயர்க்கும்போது 'வாத்தே' என்றால் அது தமிழ் வார்த்தையாகத்தோன்றினாலும் தமிழாகாது. அதில் தமிழ் மரபென்னும் சுருதி இல்லை. 'குட்டிச் சுவரே' என்றால் தான் சொல்லுகிறவனுடைய கோபமும்,வசவை அடைகிறவனுடைய முட்டாள் தனமும் நன்றாகத் தெரியும்.

இந்த மாதிரியே வசன நடையிலும், செய்யுள் நடையிலும் தமிழ் மரபு ஒன்று தனியே ஒலித்துக் கொண்டிருக்கும்; இந்த மரபைத் தமிழிலே பிறந்து தமிழிலே பழகினவர்களே நன்றாக அறிந்துகொள்ள முடியும்.

பிரான்சு தேசத்தில் ஜூலியன் வின்ஸோன் என்ற ஓர் அறிஞர் இருந்தார். அவர் தமிழ் படித்தவர்.

என்பால் மிக்க அன்புடையவர். அவர் பாரிஸ் நகரத்திலிருந்து எனக்குப் பல கடிதங்களை எழுதினார். அவர் தமிழிலக்கணம் தெரிந்தவர். ஆனாலும் தமிழ் மரபு தெரிவதற்கேற்ற பழக்கம் அவருக்கு இல்லை. அதனால் அவர் எழுதிய கடிதங்களிற் பல தமிழில் இருந்தாலும் அவற்றைத் தமிழென்று சொல்வதற்கில்லை.

அவருக்கு ஒருசமயம் நான் பதிப்பித்த இரண்டு புஸ்தகங்களை அனுப்பினேன். புதிய தமிழ்ப் புஸ்தங்களைக்கண்டால், அவருக்கு அளவற்ற மகிழ்ச்சி உண்டாகும். அவற்றைப் பெற்றவுடனே அவர் எனக்கு ஒரு கடிதம் எழுதினார். கடிதத்தின் முதற் பகுதியை வாசிக்கிறேன் :—

**எனதன்பிற்குரிய ஐயாவே,**

**நீரனுப்பின 2 புத்தகங்களும் எழுதின கார்டும் என்கிட்ட சேர்ந்தன. ஆதலால் மிகவும் சந்தோஷம் பெற்றிருக்கிறேன். நீர் பெரிய வேலைக்காரனென்றும் மகாகனம் பொருந்திய வித்துவானு யிருக்கவேணுமென்றும் நினைத்து வருகிறேன்.........**

இந்தப் பாஷையே ஒரு தனிப்போக்காக இருக்கிறது. ஒரு பெரிய காரியத்தைச் சாதித்திருப்பதாக என்னைப் பாராட்ட விரும்பிய அவர், 'நீர் பெரிய வேலைக்காரனென்று......நினைத்து வருகிறேன்' என்று எழுதி யிருக்கிறார். தந்திரத்தால் ஒரு காரியம் செய்பவர்களைத் தமிழர்கள், 'அவன் பலே வேலைக்காரன்' என்று சொல்வது வழக்கம். என்னைப் பாராட்ட வந்த ஜூலியன் வின்ஸோன் அதற்கு ஏற்ற மரபறிந்து எழுதவில்லை. வார்த்தை என்னவோ தமிழ்தான். வேலை, காரியம், தொழில், செயல் என்று ஒரே பொருளுக்குப் பல வார்த்தைகள் இருக்கின்றன. இருந்தாலும்

'பெரிய வேலைக்காரன்' என்பதற்கும், 'பெரிய காரியங்களைச் சாதிக்கிறவன்' என்பதற்கும் எவ்வளவு வித்தியாசம்! அதையே பின்னும் மாற்றித் திருக்குறளிலுள்ளபடி 'செயற்கரிய செய்யும் பெரியோன்' என்று சொன்னால் எவ்வளவு அழகாகக் காதிலே விழுகிறது.

மணமென்பதும் நாற்றமென்பதும் ஒரே அர்த்தத்தையுடைய வார்த்தைகளே. ஆனாலும் பேசும்பொழுது, 'ரோஜாப்பூநாற்றம் அதிகமாக இருக்கிறது" என்றால் அது தமிழாகுமா? தமிழும் ஆகாது; வேறு பாஷையும் ஆகாது.

இப்படி வார்த்தைகளின் உபயோகத்திலேயே தமிழ் மரபு இருக்கிறதென்றால், வார்த்தைகளைச் சேர்த்துச் சொல்லும் வாக்கியங்களிலே, வாக்கியங்களைச் சேர்த்துப்பேசும் பேச்சிலே, பேச்சைக்காட்டிலும் திருத்தமும் ஆழமுமுடைய கட்டுரையிலே, கட்டுரையைவிட ஆழமும் மாட்சியுமுடைய கவிதையிலே தமிழ்மரபு பின்னும் நன்றாக அமைந்திருக்கவேண்டும். அப்போது தான் அவை தமிழாகும்.

ஒரு பாஷையின் சிறப்பியல்பு அப்பாஷையின் வாக்கிய அமைப்பிலே இருக்கிறது. மொழி நூலை ஆராய்ந்து கூறுபவர்கள், இன்ன இன்ன பாஷை இன்ன இன்ன இனத்தைச் சார்ந்தது என்று பிரித்து அமைத்திருக்கிறார்கள். வாக்கிய அமைப்பைக் கொண்டே இன்ன இனமென்று தெரிந்து கொள்ளலாமென்று அவர்கள் சொல்லுகிறார்கள். எழுவாய், பயனிலை, செயப்படு பொருள், எச்சங்கள் என்பவை ஒரு வாக்கியத்தில் எந்த எந்த இடத்தில் அமையவேண்டுமென்ற வரையறை ஒரு மரபாகும்.

'குதிரை வேகமாகப் போகிறது' என்று சொல்வது தமிழுக்குரிய இயல்பான நடை. வேகமாகப் போகிறதா, மெல்லப் போகிறதா என்ற விஷயம் வந்தால், 'வேகமாகப் போகிறது குதிரை' என்றும் சொல்லலாம். சில சமயங்களில் ஏதேனும் ஒரு பயனைக் கருதி 'குதிரை போகிறது வேகமாக' என்று சொல்லலாம். ஆனால் எப்போதும் 'குதிரை போகிறது வேகமாக' என்றே எழுதினால் அது தமிழாகாது.

மற்றப் பாஷைகளில் நீள நீளமான வாக்கியங்கள் இருக்கின்றன. அவற்றை மொழி பெயர்ப்பவர்கள் அந்த நீளத்தைத் தமிழிலேயும் புகுத்தி வெறும் வார்த்தைகளை நிரப்பி விஷயம் விளங்காமற்செய்து விடுகிறார்கள். 'வார்த்தைக்கு வார்த்தை இருக்கிறதே' என்று அவர்கள் சொல்லலாம். உயிருள்ள ஒரு பிராணியின் உடலில் தனித் தனியே அங்கங்களைத் துணித்து வேறோரிடத்தில் சேர்த்துவைத்து, 'இதோ பெயர்த்து வைத்திருக்கிறேன்' என்றால் நியாயமாகுமா? ஒவ்வோர் அங்கமும் அந்த அந்த இடத்தில் இருக்கிறதென்பது உண்மைதான். ஆனால், அந்த அங்கங்களெல்லாம் சேர்ந்த தொகுதியில் உயிர் இல்லாமற் போய்விடுமே; அதற்கு என்ன செய்வது?

இப்பொழுது ஒரு வாக்கியத்தைக் கவனிக்கலாம்.

**'புது விஷயக் கண்டு பிடிப்பு, மனித முயற்சிக்கு அளித்துள்ள அதிக ஆற்றலும் விரிவும் நிகழ்காலத்தைச் சிதிலமான, கலகிக்கும், மேற் சொன்னவற்றின் நிர்வாகத்தை அதிகமாக அதிகமாக வீணாகவும் அபாயகர மானதாகவும் செய்கின்றன.'**

இங்கிலீஷில் உள்ள ஒரு வாக்கியத்தின் மொழி பெயர்ப்பு இது. நான் செய்ததன்று; மொழிபெயர்த்து

என்னிடம் கொடுத்திருக்கிறார்கள். மற்றொரு மொழி பெயர்ப்பைக் கேளுங்கள்.

**'நூதன விஷய ஞானத்தால் ஏற்பட்ட மனுஷிய எத்தனத்தினுடைய சக்தி வியாபகத்தின் காரணமாக மேற்சொல்லப்பட்ட வியவஹாரங்களின் நிர்வாகம் தாத்காலிக திசையில் சிதிலமாயும் பரஸ்பர விரோதமாயும் நடப்பதால், விரயமும் ஆபத்தும் அதிகமாகின்றன.'**

இந்த மொழிபெயர்ப்பில் ஸம்ஸ்கிருத வார்த்தைகள் அதிகமாக இருக்கின்றன. இந்த இரண்டு வாக்கியங்களும் படிக்கும்போதே, விஷயத்தைத் தெளிவாக்கவில்லை. முதலிலே சொன்ன மொழிபெயர்ப்பில் அதிக வடமொழிக் கலப்பில்லை; ஆனால் வார்த்தைக்கு வார்த்தை வைத்துச் செய்த மொழிபெயர்ப்பென்று தெரிகிறது. 'புது விஷயக் கண்டுபிடிப்பு மனித முயற்சிக்கு அளித்துள்ள அதிக ஆற்றலும் விரிவும்' என்பது முதல் வாக்கியத்தின் எழுவாய். 'நூதன விஷய ஞானத்தால் ஏற்பட்ட மனுஷியத் தனத்துடைய சக்தி வியாபகத்தின் காரணமாக' என்பது இரண்டாவது மொழிபெயர்ப்பின் ஆரம்பம். புது விஷயக் கண்டு பிடிப்பென்பது நூதன விஷயஞானமாக மாறியிருக்கிறது. இரண்டாவது சொன்னது தமிழ் வார்த்தைகளாக இராவிட்டாலும் வாக்கியப் போக்கு முன்னதைவிட நன்றாயிருக்கிறது; நடை தமிழாக இல்லை.

புதிய புதிய பொருள்களையும் உண்மைகளையும் அறிஞர்கள் கண்டு பிடிக்கிறார்களென்பதும், அதனால் புதிய சக்தியும் தொழில் விரிவும் மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன என்பதுமே இந்த முற்பகுதியின் பொருள். அந்தப் பொருள் மொழிபெயர்ப்பிலே அமையவேண்டும். வார்த்தைக்கு வார்த்தை இரா

விட்டால் ஒன்றும் குறை நேர்ந்துவிடாது. எல்லாவற்றையும் சேர்த்து வாசிக்கும்போது தமிழ் மாத்திரம் தெரிந்தவர்களுக்கும் நன்ருக விளங்கவேண்டும். எழுதுபவனுடைய கருத்தை அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இப்போது முன் சொன்ன வாக்கியத்தை இன்னும் தெளிவாகச் சொல்லலாம் [illegible] கலாம்.

**'புதிய புதிய விஷயங்களை அறிஞர்கள் கண்டு பிடிப்பதனல் மனிதனுடைய முயற்சி அதிகமான சக்தியையும் விரிவையும் அடைந்திருக்கிறது. அவற்ருல் இப்போதே சிதறுண்டும் முரண்பட்டும் இருக்கும் மேற்சொன்னவற்றின் நிர்வாகமானது மேலும் மேலும் பயனற்றதாகவும் அச்சம் விளைவிப்பதாகவும் ஆகிறது.'**

முன்னே சொன்ன இரண்டுவகையான மொழிபெயர்ப்புகளும் ஒரே வாக்கியமாக இருக்கின்றன. இப்போது சொன்னதோ இரண்டு வாக்கியங்களாக இருக்கிறது. சிறு சிறு வாக்கியங்களில் விஷயத்தைச் சொல்வதனுல் அதிகத் தெளிவு உண்டாகும். வாக்கிய அமைப்பில் உண்டாகும் சிக்கல்களைச் சிறு வாக்கியங்களாகப் பிரித்தமைத்து மாற்றிவிடலாம். ஆனுல் அப்படி அமைக்கும்போது எந்த வாக்கியம் முன்னே இருக்கவேண்டும், எது பின்னே இருக்கவேண்டுமென்பதைக் காரண காரியத் தொடர்பைக் கொண்டு நிச்சயிக்கவேண்டும்.

ஒரே விஷயத்தைச் சந்தர்ப்பத்திற்கும், யாரைப் பார்த்துப் பேசுகிருேமோ அவர்கள் நிலைக்கும் ஏற்றபடி சொல்லவேண்டும். இந்த மரபு மாறினுல் சொல்லும் விஷயம் தெளிவாகப் புலப்பட்டாலும் அழகாகத்

தோற்றுது. ஓர் ஏழை வேலைக்காரனைப் பார்த்து, ‘சோறு தின்ருயா?’ என்று கேட்கலாம். ஒரு கனவானைப் பார்த்து அப்படிக் கேட்கக்கூடாது. கேட்பதில் இலக்கணக்குற்றம் ஒன்றும் இல்லை; அர்த்தமும் விளங்காமற் போகவில்லை. ஆனலும் அப்படிக் கேட்பது தமிழன்று; தமிழ் மரபன்று. ‘போஜனம் ஆயிற்ரு?’ ‘சாப்பிட்டீர்களா?’ என்று கேட்கலாம். ஆசாரியர்களை, ‘நிவேதனம் ஆயிற்ரு?’ என்று கேட்பதும், துறவிகளை ‘பிக்ஷை ஆயிற்ரு?’ என்று வினவுவதும் சம்பிரதாயங்கள்.

நான் பிரஸிடென்ஸி காலேஜில் இருக்கும்போது ஓர் ஐரோப்பிய கனவானேடு தமிழைப்பற்றிப் பேச நேர்ந்தது. இங்கிலீஷ் தெரியாத எனக்கும், தமிழ் தெரியாத அவருக்கும் இடையே துவிபாஷியாக ஓர் ஆசிரியர் இருந்தார். தமிழ்ச் சுவடிகளைப் பற்றிப் பேசினேம். அந்த ஆசிரியர் நான் சொல்வதை அந்தக் கனவானுக்கு மொழிபெயர்த்துச் சொன்னர்; அவர் கேட்கும் கேள்விகளை எனக்குத் தமிழிலே எடுத்துச் சொன்னர்.

சம்பாஷணை நடந்துவரும்போது அந்தத் துவிபாஷி என்கையில் வைத்திருந்த ஏட்டுச் சுவடிகளைச் சுட்டிக்காட்டி, ‘இந்தச் **சருகுகளில்** பிழை ஒன்றும் இராதா என்று துரை கேட்கிருர்?’ என்ருர். எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. ஓலைச் சுவடியைச் சருகு என்று அவர் மொழி பெயர்த்துச் சொன்னதுதான் அதற்குக் காரணம். சிரிப்பை அடக்கிக்கொண்டேன்.

எனக்கு விஷயம் விளங்கினலும் அவர் சொன்னது தமிழன்று. அந்தச் சந்தர்ப்பத்தில் துரையின்

வார்த்தையாகச் சொல்லுகையில் அப்படிச் சொல்லி யிருக்கக்கூடாது. ஓலையைச் சருகென்றது சரியன்று. ஆனால் ஓலையைச் சருகென்று சொல்லும் மனிதரும் சந்தர்ப்பமும் சேர்ந்தால் அங்கே அது தமிழாக இருக் கும். அத்தகைய சந்தர்ப்பம் ஒன்று தமிழ் இலக்கியத் தில் வருகிறது.

ஓர் அரசன் மறவர் ஜாதியில் பிறந்த அழகிய பெண் ஒருத்தியைக் கல்யாணம் செய்துகொள்ள விரும்புகிறான்; உடனே, தன் கருத்தைத் தெரிவித்து அப்பெண்ணைப் பெற்றவனுக்கு ஒரு கடிதம் எழுது கிறான்; அந்தக் காலத்தில் காகிதம் ஏது? ஓலையில் விஷயத்தை எழுதி ஒரு தூதன் மூலமாய்க் கொடுத் தனுப்புகிறான்.

தூதன் மறவன் வீட்டுக்குப்போய் விஷயத்தைச் சொல்லி ஓலையை நீட்டுகிறான். படிப்பு வாசனையே அற்ற அந்த மறவனுக்கு அந்தவோலை அரசனது திருமுகமென்று உணரும் சக்தி இல்லை; "என்னடா இது? பனஞ்சருகை வாரிச் செதுக்கிக்கொண்டு வந் திருக்கிறாய்?" என்று கோபத்தோடு கேட்கிறான்.

> "தீண்டரிய மடற்பனையின் சருகை வாரிச்
> சிற்றிரும்பாற் சுற்றிவரச் செருக்கிக் கூட்டி
> நீண்டதுவும் சுருண்டதுமா வரைந்து சுற்றி
> நிருபமெனக் கொடுத்தெதிரே நிற்கும் தூதா'

என்று சொல்வதாக இருக்கிறது பாட்டு. படிப்பில் லாத மறவன் பேச்சிலே ஏட்டைச் சருகென்று சொல் வது தமிழாக இருக்கும். ஆனால் படித்தறிந்த ஒரு கனவான் பேச்சில் வரும்போது அது தமிழாகாது.

இப்படிப் பேச்சிலும் எழுத்திலும் தமிழல்லா தவை பல தமிழென்னும் பெயரால் மலிந்து கிடப்ப

தைப் பார்க்கிறேன். எழுதுபவர்கள் தமிழ் மரபை அறிந்து கொண்டு எழுதவேண்டும். மற்றப் பாஷைகளிலிருந்து கருத்தை எடுத்துக்கொள்ளலாம்; வார்த்தைகளைக் கூட உசிதமாக எடுத்துக்கொள்ளலாம். ஆனால் அவற்றைத் தமிழிலே இழைக்கவேண்டும்; தமிழாகவே ஆக்கிவிடவேண்டும்.

தமிழ் இலக்கண நூல்களுள் மிகப் பழமையான தொல்காப்பியத்தில் மொழிபெயர்ப்பைப் பற்றி வரும்போது, 'மொழி பெயர்த்து அதர்ப்பட யாத்தல்' என்று ஆசிரியர் சொல்லுகிறார். அதர் என்பது வழி அல்லது மரபு; தமிழின் போக்கிலே மொழிபெயர்ப்பு அமையவேண்டும். படித்தால் மொழிபெயர்ப்பென்று தோன்றாதபடி தமிழாகவே இருக்கவேண்டும் என்ற கருத்தைக்கொண்டே, 'அதர்ப்பட யாத்தல்' என்று விரித்துச் சொன்னார்.

அந்த அதர் அல்லது வழிதான் தமிழ்மரபு; அதுவே தமிழுக்குச் சுருதிபோன்றது; தமிழ் மொழிக்கே சுவாசத்தைப் போன்றது. அந்த மரபு இல்லாவிட்டால் அது தமிழாகாது.

## 11. பாவலர் மானங்காத்த பாவை*

**சோழ**நாட்டை இரண்டாம் குலோத்துங்க சோழன் ஆண்டு வந்த காலத்தில் ஒட்டக் கூத்தர் அவனுடைய ஆஸ்தான வித்துவானாகவும் குருவாகவும் விளங்கினார். அவனுடைய ஆதரவு பெற்றுப் பல வித்துவான்கள் தங்கள் புலமைத் திறத்தை வெளிப்

*ஆனந்தவிகடன், தீபாவளிமலர், 1941.

படுத்தி அக் காலத்திற் பல நூல்களை இயற்றினார்கள். சைவத்திலும் தமிழிலும் பற்றுடைய அம் மன்னன் ஆங்கங்கே தக்க அதிகாரிகளை நியமித்துத் தன்னுடைய பேரரசைப் பாதுகாத்து வந்தான்.

அவனது ஆட்சியின் கீழ் அவனுடைய முன்னோர்கள் வென்று அடிப்படுத்திய வேற்று நாடுகளும் இருந்தன. தொண்டை மண்டலமும் சோழர்களுக்கு அடங்கியதாக இருந்தது. அதனால் அம்மண்டலத்துக்கு ஜயங்கொண்ட சோழ மண்டலமென்ற பெயர் வழங்கி வந்தது.

சோழ நாடு முதலிய இடங்களிலுள்ள உட்பிரிவுகளுக்கும் தொண்டை நாட்டிலுள்ள உட்பிரிவுகளுக்கும் சில வேறுபாடுகள் உண்டு. தொண்டை நாடு இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரிக்கப் பெற்றிருந்தது. அவற்றுள்ளே புலியூர்க் கோட்டமென்பது ஒன்று. சென்னையைச் சார்ந்த கோடம்பாக்கம் முதலிய ஊர்களை உள்ளடக்கியது அது. **சேக்கிழார்** இருந்த குன்றத்தூரென்பது அக் கோட்டத்தில் இருப்பதே.

நெற்குன்றமென்பது அக் கோட்டத்திலுள்ள ஓர் ஊர். அவ்வூரில் நெற்குன்றவாண முதலியாரென்னும் வேளாளச் செல்வரொருவர் வாழ்ந்து வந்தார். ஏழை மக்களுக்கு வேண்டிய பொருள்களை ஈவதிலும், வித்துவான்களை ஆதரிப்பதிலும், சிவபெருமானிடத்துப் பக்தி பூண்டு ஒழுகுவதிலும் அவர் சிறந்தவர். சிறந்த தமிழ்ப் புலமையும் அவருக்கு உண்டு.

சிவபக்திச் செல்வம் மிக்கவராதலின் ஒவ்வொரு வருஷமும் சிலகாலம் யாத்திரை செய்து தம் நாட்டி

லும், சோழ நாடு பாண்டிய நாடு முதலிய வேறு நாடுகளிலும் உள்ள சிவ ஸ்தலங்களைத் தரிசித்து வருவது அவர் வழக்கம். சோழ நாட்டு ஸ்தலங்களைத் தரிசித்து வந்தபோது திருப்புகலூர் என்னும் ஸ்தலத்தில் அவருக்கு ஈடுபாடு அதிகமாயிற்று. அதனால் அடிக்கடி அந்த ஸ்தலத்துக்குச் சென்று சிவதரிசனம் செய்து வருவதில் அவர் மிக்க இன்பத்தைக் கண்டார். அந்த ஸ்தலத்தில் சில நிவந்தங்களையும் அமைத்தார்.

ஒரு வருஷம் மழையின்மையால் நாட்டில் பஞ்சம் உண்டாயிற்று. அதனால் நெற்குன்ற வாண முதலியாருடைய நிலவளம் சுருங்கவே அவர் இயல்பாகச் செய்யும் தருமங்களைச் செய்ய முடியாமல் வருந்தினர். சிலவற்றைக் குறைத்துக் கொண்டார். ஆயினும் திருப்புகலூர் சென்று தரிசனம் செய்வதை மாத்திரம் நிறுத்த அவர் மனம் துணியவில்லை.

அரசனுக்குச் செலுத்த வேண்டிய வரிப் பணத்தைச் செலுத்துவதற்கும் வழியில்லாமல் அவர் மிகவும் வருந்தினர். சோழ சக்கரவர்த்தியின் அதிகாரியாக இருந்தவருக்கு நெற்குன்றவாண முதலியாரைக் கண்டிக்க மனம் வரவில்லை. பல முறை வற்புறுத்தினர்; இறுதியில் சக்கரவர்த்திக்குத் தெரிவித்து அவரிடம் வரியை வாங்குவதற்குத் தண்ட முறையைப்பின் பற்றுவதே தகுதியென்று விண்ணப்பம் செய்து கொண்டார்.

இந்த நிலையில் தமக்கு நேர்ந்துள்ள இடையூற்றுக்குப் புகலூர்ப் பெருமானையே புகலாக எண்ணிய முதலியார் சோழ நாட்டுக்குப் போய்ப் புகலூரை அடைந்தார். அப்போது, அப்பெருமான் சுந்தரமூர்த்தி நாயனருக்குச் செங்கல்லைப் பொன்னாக்கி யுதவின

அருள் விளையாட்டு ஞாபகத்துக்கு வந்தது. சக்கரவர்த்தியின் அதிகாரத்தால்தான் அவரிடம் வரியை வாங்க முடியுமென் றெண்ணியிருந்த தொண்டை மண்டல அதிகாரி அந்தச் சந்தர்ப்பத்தில் காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளலாமென்று எண்ணினர். உடனே முதலியார் புகலூருக்கு வந்துள்ளாரென்றும் அங்கே அவரை அதிகாரத்தால் வற்புறுத்தி வரியை வாங்க முயற்சி செய்யலாமென்றும் அரசனுக்கு விண்ணப்பம் செய்து கொண்டார்.

நெற்குன்ற வாண முதலியார் புகலூரை அடைந்து அந்த ஸ்தலத்து மூர்த்திகளைத் தரிசனம் செய்வதிலே மனத்தை ஈடுபடுத்தி உலகையே மறந்திருந்தார். திருப்புகலூரில் முக்காலத்துக்கும் தலைவராகிய சிவபெருமானுடைய மூர்த்தங்கள் எழுந்தருளி யிருக்கும் பூதேசுவரம், வர்த்தமானேசுவரம், பவிஷ்யேசுவரம் என்ற மூன்று சந்நிதிகள் உண்டு. அவற்றுள் வர்த்தமானேசுவர மென்னும் சந்நிதியில் எழுந்தருளியுள்ள பெருமானைத் தனியே பாராட்டும் தேவாரப் பதிகம் ஒன்று உண்டு. அங்கே ஓரகழி இருக்கிறது. அதன் கரையில் பதினெட்டுச் சித்தர்களுடைய ஆலயங்கள் உள்ளன.

முதலியார் அந்த ஸ்தலத்தில் இருப்பதை யறிந்த அதிகாரிகள் அவரைச் சிறைப்படுத்த உத்தரவு செய்தனர். காவலாளர் ஒரு நாட் காலையில் அவரைத் தேடிக் கண்டுபிடித்து அழைத்துச் செல்லலாயினர். அப்பொழுது அவர்களை முதலியார் நோக்கி, “ உங்களிடம் ஒரு விண்ணப்பம் செய்து கொள்ளுகிறேன். நான் தினந்தோறும் காலையில் ஸ்நானம் செய்து சிவ பூஜையும், சிவதரிசனமும் செய்வது வழக்கம். எதிர்

பாராதபடி என்னைக் காவலில் வைக்கும் நிலை ஏற்பட்டு விட்டது. இனிப் புகலூர்ப் பெருமானை எப்பொழுது காண்பேனோ! காணாமலே என் வாழ்க்கை முடிந்து விடுமோ, அறியேன். ஆதலால் இன்று மாத்திரம் அப் பெருமானைத் தரிசித்துக் கொண்டுவர அநுமதி செய் தால் உங்களுக்கு எவ்வளவோ புண்ணியம் உண்டு" என்று கண்ணீர் விடாக் குறையாகக் கூறினார். அவரது கம்பீரமான தோற்றத்தினாலும், நடையுடை பாவனைகளாலும், பேச்சின் அமைதியாலும் அவர் பெருந்தன்மையை உணர்ந்த காவலாளர்கள் மன மிரங்கி, "செய்யலாம்" என்று சொல்லி அனுமதி செய்தனர்.

பெரும்பேறு பெற்றவரைப் போல மகிழ்ந்த நெற் குன்ற வாணர் மரண காலத்தில் உள்ளம் ஒன்றிய பக்தியோடு இறைவனை நினைந்துருகும் சிவ பக்தரைப் போல ஆனார். உடனே அகழியில் நீராடி முறைப்படி ஆலய தரிசனம் செய்யத் தொடங்கினார். முதலில் அங்கே எழுந்தருளிய விநாயகரைத் தரிசித்தார். அவ ருடைய பக்தியும் புலமையும் இணைந்து நின்றன. அவ் விநாயகர் விஷயமாக ஒரு செய்யுள் இயற்றிப் பாட லானார்; அது வருமாறு:—

"உரைசெய் மறைக்கும் தலைதெரி
யாவொரு கொம்பையென்றே
பரசு மவர்க்குப் பெருநிழ
லாக்கும் பழனமெல்லாம்
திரைசெய் கடற்றுறைச்
சங்க முலாவுந் திருப்புகலூர்
அரசி னிடத்து மகிழ்வஞ்சி
யின்றவோ ரத்திநின்றே."

[வயல்களி லெல்லாம் அலையைச் செய்யும் கடல் துறையி லுள்ள சங்குகள் உலவும் திருப்புகலூர் இறைவனது வாம பாகத்தில் எழுந்தருளிய உமாதேவியார் ஈன்ற யானை முகப் பிராணுகிய விநாயகர், தோத்திரஞ் செய்யும் வேதத்தின் சிரமாகிய உபநிடதத்தாலும் அறியப்படாத ஒற்றைக்கொம்பை யுடையா யென்று துதி செய்பவர்களுக்கு மிக்க தண்ணளியைச் செய்வார். இதில் அரசு வஞ்சி அத்தி என்னும் மூன்று மரப் பெயர்கள் ஈற்றடியில் ஒருங்கே தொனிக்கின்றன. ஒரு கொம்பை – ஒற்றைக் கொம்பை உடையாய். பரசும் – துதிக்கும். நிழல் – சாயை, தண்ணளி ; சிலேடை. பழனம்–வயல். திருப்புகலூர் அரசு –திருப்புகலூர்ச் சிவபெருமான். வஞ்சி – உமா தேவியார்.]

அந்த ஸ்தலத்து ருத்திர கணிகையர்களுள் ஒருத்தியும், பல திருப்பணிகள் செய்தவளும், பிராயமும் செல்வமும் நிறைந்தவளுமாகிய ஒரு பெண்மணி அன்று காலையில் நீராடி விட்டு அவ்வழியே ஆலய தரிசனத்துக்காக அப்போது போய்க்கொண்டிருந்தாள். அவள் காதில் நெற்குன்ற வாணர் சொல்லிய பாடல் விழுந்தது. அந்தப் பாட்டு அழகாக அமைந்திருப்பதை அவள் அறிந்து அதனைப் பாடியவர் யாரென்று பார்த்தாள். யாரோ வித்துவானுக இருக்கலாமென்று ஊகித்த அவள், ‘ இந்த அழகான செய்யுள் விநாயகர் விஷயமாக இருக்கிறது. இத்தலத்துச் சிவபெருமான் விஷயமாகவும் இவர் பாடினுல் எவ்வளவோ நன்ருக இருக்குமே ’ என்று எண்ணினுள். உடனே வாய் விட்டு, “ இந்தப் பாட்டை ஓர் அந்தாதிக்குக் காப்பாக்கலாமே ” என்று மெல்லச் சொன்னுள்.

அதுகாறும் விநாயக வணக்கத்தில் மூழ்கியிருந்த முதலியார் இந்த வார்த்தையைக் கேட்டுத் திரும்பினார். ஒரு தாசி சிவ வேடப் பொலிவோடு நின்று கொண்டிருந்ததைப் பார்த்தார். "ஆம், அந்தாதிக்குக் காப்பாக்கலாம். ஆனால்..." என்று எதையோ நினைந்துருகினார். அந்தக் கணிகைக்கு விடை சொல்லவேண்டுமென்ற உணர்ச்சியொன்று அவர் உள்ளத்தே இருந்து தூண்டியது.

"உண்மைதான்; அந்தாதிக்குக் காப்பாக்கலாம். காப்பாக்கினால் அரசனுக்குப் பணம் ஆகுமா?" என்று அவர் கேட்டு விட்டார்.

அந்தக் கேள்வி கணிகைக்கு விளங்கவில்லை. அவர் ஏதோ சங்கடமான நிலையில் அகப்பட்டுக்கொண்டுள்ளார் என்று மட்டும் ஊகித்துக்கொண்டாள். அப்போதுதான் அவள் அருகில் நின்றவர்களை உற்றுப் பார்த்தாள். காவலாளர் நிற்பதை உணர்ந்து அவர்களிடமே விஷயத்தை விசாரித்தாள். வரி கொடுக்க இயலாத நிலையில் அவரைச் சிறைப்படுத்தப் போகும் செய்தியை அறிந்து மிக்க வருத்தத்தை அடைந்தாள்.

உடனே, "எவ்வளவு வரி செலுத்த வேண்டும்?" என்ற கேள்வி அவள் வாயிலிருந்து எழுந்தது. காவலர் மூலமாகத் தொகை இன்னதென்று அறிந்துகொண்டு, "அரசனுக்குப் பணத்தைச் செலுத்தி விடலாம். இனி இவரை விட்டு விடுங்கள். இவர் பணத்தை நான் கொடுத்து விடுகிறேன்" என்று சொல்லிப் பணத்தையளித்து முதலியாரை மீட்டாள்.

சிவபக்தி மிக்க அவள் செயல் புகலூர்ப் பெருமானுடைய திருவருளால்நிகழ்ந்ததென்று கருதியமுதலி

யார் மிக்க நன்றி யறிவோடு அவளைப் பாராட்டினர். அவள் "எல்லாம் திருவருட் செயல். நீங்கள் சொன்ன விநாயக வணக்கத்தைக் காப்பாக வைத்துக்கொண்டு ஓர் அந்தாதி பாடி முடிக்கவேண்டும்" என்று கேட்டுக் கொண்டாள்.

"ஆம், அச்செய்யுள் காப்புச் செய்யுளாக இருக்கும் தகுதி யுடையதுதான். என் மானத்துக்கும் உயிருக்கும் காப்பை அளித்த அச்செய்யுள் அந்தாதிக்குக் காப்பாகவும் இருக்கும்" என்று சொல்லி நூறு செய்யுட்களால் ஓர் அந்தாதி பாடி நிறைவேற்றினர். அது திருப்புகலூரந்தாதி என்ற பெயரோடு வித்துவான்களால் பாராட்டப் பெற்று விளங்குகின்றது.

நெற்குன்ற வாணர் தம் ஊர் சென்றார். பஞ்ச காலம் போய் நல்ல காலம் வந்தவுடன் தம்மைச் சிறை மீட்ட கணிகைக்கு ஒரு பெருந் தொகையை அனுப்பி நன்றி பாராட்டினர். அப் பெண்மணி அப் பொருளைப் புகலூர்ப் பெருமான் திருப்பணிக்கே வழங்கி விட்டாள்.

# 12. நகரங்களும் ஆலயங்களும்

நம்முடைய நாட்டினர் எந்தக் காரியத்தைச் செய்தாலும் தத்தமக்கு உரிய கடவுளை வணங்கித் தொடங்குதல் தொன்று தொட்ட வழக்கமாக இருக்கிறது. அவர்களுடைய தினசரி வாழ்க்கையில் கடவுள் வணக்கமே முதற்கடமையாக உள்ளது. காவியங்களையும்,

கலைகளையும், தொழில்களையும் கடவுள் திருவருளை முன்னிட்டுக் கொண்டே வளர்த்து வந்தார்கள்.

மிகவும் பழைய காலத்தில் இந்நாடு பெரும்பாலும் வனங்கள் நிரம்பியிருந்தது. அவ்வனங்களில் தெய்வங்களைப் பிரதிஷ்டை செய்து அங்கங்கே உள்ள முனிவர்கள் முதலியோர் வழிபட்டு வந்தனர். இவ்வாறு வழிபட்டு வந்த இடங்கள் பிற்காலத்தில் காடு அழிந்து நாடானபோது அங்கிருந்த மரங்கள் முதலியன அழிந்தாலும் அவை காடாக இருந்தனவென்பதற்கு அடையாளமாகிய பெயர்களும் பிற சின்னங்களும் இப்போதும் இருத்தலைக் காணலாம்; இப்பொழுதும் தலங்களுக்குரிய விருக்ஷங்கள் தனியே உள்ளன. மனிதர் ஒருங்கு கூடி வாழும் இடத்தில் தெய்வத்தைத் தலைமையாகக்கொண்டு வழிபட்டு வந்தனர் என்ற செய்தி பழைய நூல்களால் விளங்குகின்றது.

நாளடைவில் மனிதர்களுடைய ஒற்றுமையும் முயற்சியும் விரிய விரிய நகரங்கள் உண்டாயின. அத்தகைய நகரங்களிற் பெரும்பாலன தெய்வத்தின் திருக்கோயிலை நடுநாயகமாக வைத்து அமைக்கப்பெற்றன. **பரிபாடல்** என்னும் சங்ககாலத்து நூலிலேயுள்ள ஒரு பாட்டில், மதுரையில் சிவபெருமானது திருக்கோயில் நகரத்துக்கு நடுநாயகமாக அமைந்துள்ளதென்பது சொல்லப்பட்டுள்ளது. 'மதுரையானது திருமால் திருவுந்தியில் உண்டான தாமரைப்பூவைப்போல இருந்தது. அம்மலரின் இதழ்களைப்போல இருந்தன அதன் தெருக்கள். அவற்றின் நடுவே தாமரை மலரின் உட்கொட்டையைப்போல ஆலயம் விளங்கியது' என்னும் பொருளுடையது அப்பாட்டு.

நகர அமைப்பிலே கடவுளது ஆலயம் நடுவில் இருத்தல் வேண்டுமென்பது சிற்ப சாஸ்திரங்களிலும் சொல்லப்பெற்றதாகக் கூறுவர். இன்றும் மதுரை, ஸ்ரீரங்கம், திருவானைக்கா முதலிய நகரங்களில் இவ்வமைப்பைக் காணலாம். நகரென்னும் பெயருக்குக் கடவுளது ஆலயம் என்றும், மனிதர் வாழும் பேரூர் என்றும் இரண்டு பொருள் உண்டு.

**"முக்கட் செல்வர் நகர்வலம் வரற்கே"**

என்பது **புறநானூறு** என்னும் பழைய நூலிற் காணும் ஒரு செய்யுட்பகுதி. அதன்கண் நகர் என்னும் சொல் கோயிலைக் குறிக்கின்றது. கோயில் என்னும் தமிழ்ச் சொல் தலைவனது இருப்பிடம் அல்லது தலைமையான ஆலயம் என்னும் பொருளையுடையது. அச்சொற் பொருள் ஆலயம் ஒரு நகரத்திலே தலைமை பெற்று விளங்குதற்குரியது என்பதை விளக்குகின்றது.

**"ஊரானோர் தேவகுலம்"**

என்னும் பழைய வாக்கியம் ஊர் இருக்கும் இடந்தோறும் கோயில் இருக்கவேண்டிய அவசியத்தைக் குறிக்கின்றது. ஆலயம் இல்லாத ஊர் எவ்வளவு அழகுடையதாயினும் அது லக்ஷ்மீகரம் அற்றது என்றே பெரியோர் கொண்டனர்.

**"திருக்கோயி லில்லாத திருவி லூரும்"**

என்பது திருநாவுக்கரசு நாயனார் **தேவாரம்.**

**"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"**

என்று **உலக நீதி** கூறுகின்றது. கடவுளை மனம், வாக்கு, காயம் என்னும் முக்கரணங்களாலும் வழிபடவேண்டும். மக்களுக்கு அன்பு உண்டாக

உண்டாக அவர்கள் வழிபாடு வரவரச் சிறப்பை அடையும். உடம்பால் வணங்குபவருக்கு அன்பு மிக மிக அவர்கள் வாக்கால் வாழ்த்துதல் அதிகமாகும். பின்னும் அன்பு அதிகமாக ஆக அவர்கள் மனத்தினுல் வழிபடும் தியானம் வலிபெறும். இம் மூவகை வழிபாட்டிலும் உடம்பால் வழிபடுதல் எல்லோராலும் செய்தற்குரியது. தெய்வ பக்தியின் முதற்படி அவ்வணக்கமே ஆகும். எல்லாச் சமயத்தார்க்கும் பொதுமறையாக நூலியற்றிய **திருவள்ளுவர்,**

> **“ கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்**
> **தாளை வணங்காத் தலை ”**

என்று கூறுகின்றனர். இங்கே கடவுளுக்கு உடலால் செய்யும் வழிபாட்டை அவர் உரைத்தனர். கடவுளுக்கு உருவம் அமைத்து அதனை வணங்கும் வழக்கத்தை மனத்துட்கொண்டே இதனை அவர் இயம்பினரென்று கொள்ளவேண்டும். சிந்தைக்கு எட்டாத கடவுளுக்குத் திருவுருவம் அமைத்தல் அவரை யாவரும் வணங்குதற்பொருட்டேயாகும். அவ்வாறு கடவுளுக்கு உருவம் அமைத்து வழிபடவேண்டுமாயின், அவ்வுருவம் இருத்தற்கு ஓர் இடமும் வேண்டுமன்றோ? அவ்விடமே ஆலயமாகும். வீடுகளில் மூர்த்திகளை வைத்துப் பூசிப்பதற்கு உரிய இடம் தனியே இருக்க வேண்டுமென்பது மனைநூற் கொள்கை.

காவிரிப்பூம்பட்டினத்தில் பல தெய்வங்களுடைய ஆலயங்கள் இருந்தன என்று **சிலப்பதிகாரம்** கூறுகின்றது. அங்ஙனமே காஞ்சீபுரம் முதலிய நகரங்களிற் பல கோயில்கள் இருந்தன என்று மற்ற நூல்களால் அறிகிறோம். பழங்காலத்திற் கோயிலுள்ள இடங்

களிற் பாதுகாப்புக்காக அரசர் படைகளை வைத்திருந்தனர். அதனால் கோயிலுக்குப் படைவீடு என்னும் பெயரொன்று வழங்குகின்றது.

தமிழ் நாட்டில் எல்லா வகையான தெய்வங்களுக்கும் கோயில்கள் இருந்தன. அரசர் பக்ஷபாதமின்றி அவற்றைப் பாதுகாத்தனர். காவிரி[illegible]ம்பட்டினத்தில் சிவாலயம் முதலிய பல ஆலய[illegible]இருந்தன என்றும், அங்கங்கே உரிய காலங்களி[illegible]றப்பாக நித்திய பூசைகளும் திருவிழாக்களும் நடைபெற்றன என்றும் தெரிகின்றது. **கோச்செங்கட் சோழர்** என்பவர் பெரிய சிவபக்தர்; அவர் சிவபெருமானுக்குப் பல ஆலயங்களை இயற்றியது போலவே திருமாலுக்கும் பல ஆலயங்களைக் கட்டுவித்தார்.

கோயில்களால் தெய்வ பக்தி நாட்டில் வளர்ந்தது. நாளடைவில் திருக்கோயில்கள் எல்லோருடைய மனத்தையும் கவரவேண்டுமென்று கருதிய பெரியோர்கள் அவற்றைப்பலவிதமான நிகழ்ச்சிகளுக்கும் இடமாக்கினர். சங்கீதத்தில் தேர்ச்சி பெற்றவர்கள் கோயிற் பணியை மேற்கொண்டனர். ஆடலிற் சிறந்தவர் அவ்வாடலைப் பிறருக்காக நிகழ்த்தாமல் கடவுள் ஆலயத்திலே நிகழ்த்தினர். சிற்பியர் கோயில்களில் தங்கள் சிற்பத்தை நிலைநிறுத்தினர். ஒவ்வோர் ஊரிலும் கோயிலே அரசாங்க நிலயத்தைப் போலத் தலைமை பெற்றது. அங்கே பொக்கிஷமும் இருந்தது. ஊரில் நிகழும் பொதுச்சபைகள் ஆலயத்திலே நடந்தன. நியாய சபைகளும் கோயிலைச் சார்ந்தே நடைபெற்றன. நிலத்தை வாங்குதல் விற்றல் முதலிய செயல்களையும் கிராம சபையார் கவனித்தனர். அந்தச் சபையின் நிகழ்

ச்சிகள் ஆலயங்களிலே கல்லெழுத்தில் பொறிக்கப் பட்டன. நம் நாட்டுச் சரித்திரத்தை அமைப்பதற்கு மிகவும் முக்கியமான ஸாதனமாக இந்தச் சிலாசாஸனங்கள் உதவுகின்றன.

நைமித்திகமாகிய விழா ஊரினர் அனைவரும் ஒருங்கு சேர்ந்து களிப்பதற்கு உரியதாக அமையும். தம் தம் தொழில்களை நிறுத்தி வைத்து யாவரும் மனமொன்றுபட திருவிழாவில் ஈடுபட்டார்கள். ஊரினரது ஈடுபாடு திருவிழாக் காலத்தில் நன்கு காணப்படும். தலங்களின் சிறப்புக்கேற்பத் தலவிழாவில் கூட்டம் இருக்கும். சிற்றூரில் நிகழும் விழாவில் அவ்வூரிலுள்ளோர் கூடுவர். பேரூரில் நிகழும் விழாவில் பல சிற்றூரினர் கூடுவர். சில விழாக்களில் நாடு முழுவதும் ஒருங்கு கூடும். காவிரிப்பூம்பட்டினத்தில் நிகழ்ந்த இந்திர விழா அத்தகையதாக இருந்தது. இராசதானி நகரில் நிகழும் விழாவில் நாடு முழுவதும் கூடிக் களித்தல் இயல்பு. மதுரை ஏழு நாள் விழா, உறையூர்ப் பங்குனி உத்திரம், கருவூர் உள்ளிவிழா முதலியன அக்காலத்தில் சிறப்பாக நிகழ்ந்தன. இப்போதும் மகாமகம் முதலிய விழாக்களில் பலதேசத்திலுள்ளார் கூடுவதைக் காணலாம்.

ஊரிலுள்ள கைத்தொழிலாளர்களுக்கு வேலை கொடுப்பதற்காக அடிக்கடி கோயில்கள் விரிவு படுத்தப் பெற்றன. ஒவ்வொரு காலத்தில் அரசர்கள் அங்கங்கே பல திருக் கோயில்களை எழுப்பியும், பழங் கோயில்களைப் புதுப்பித்தும், விரிவு படுத்தியும் வந்திருக்கின்றனர். பல்லவர்கள் மலைகளைக் குடைந்து ஆலயங்களை நிருமித்தனர். பின்வந்த சோழர்களும்

பாண்டியர்களும் பிறரும் செங்கல்லாலும் கருங்கல்லாலும் ஆலயங்களை விரிவு பெற அமைத்தனர்.

ஆலயங்களில் பலவகைகள் உண்டாயின. மாடக்கோயில், ஷண்மங்கல க்ஷேத்திரம் என்பன போன்ற பலவகைகள் உண்டு. விமானம், கோபுரம், திருவுண்ணழி, திருமதில் என்பனபோலக் கோயிலுறுப்புக்களிலும் பலவகைகள் உண்டு. தூரத்திலிருந்து பார்க்கும்பொழுது இக் கோயில் இன்ன மூர்த்திக்கு உரியதென்று புலப்படும் வண்ணம் திருமதில்மேல் பிம்பங்களும் கோபுரங்களில் சிற்பங்களும் அமைப்பதுண்டு. வெளியிலிருந்து கோபுர தரிசனம் செய்து இன்புறுவாரும் இருந்தனர். சிவாலய கோபுரத்தைப் பஞ்சலிங்கங்களுள் ஒன்றாகக் கூறுவர்.

நாட்டிலுள்ள கலைஞர்களை ஆலயங்களின் திருப்பணியிலே ஈடுபடுத்தினர். கவிஞர், தேவாரம் பாடுவார், சங்கீத வித்துவான்கள், பரத நாட்டியம் செய்வார், பஞ்ச கன்மிகள் முதலிய கலைஞர்களையும் கணக்கர், மாலை தொடுப்பார் முதலியோர்களையும் நியமித்தனர். இதனால் அக் கலைஞர்கள் விருத்தி யடைந்தனர்; கலைத் திறமையும் உயர்ந்து வந்தது. திருப்பரங்குன்றம் கோயிலில் பலவகையான அழகிய ஓவியங்கள் இருந்தனவென்றும், அவற்றால் புராண வரலாறுகள் புலப்பட்டன என்றும், ஆலயம் செல்வோர் அவற்றைக் கண்டு களித்தனர் என்றும் **பரிபாடல்** தெரிவிக்கின்றது. கோயில்களைச் சார்ந்து பல வித்தியாசாலைகள் நடைபெற்று வந்தன. வித்தியாசாலைக்கும் கோயிலுக்கும் உரிய பொதுப் பெயராகிய பள்ளி என்பது இரண்டற்கும் உள்ள ஒற்றுமையை வெளியிடும்.

தெய்வ பக்தியை வளர்ப்பதற்காக வித்துவான்கள் நூல்களை இயற்றினர். புராணங்களும், பிரபந்தங்களும் அவ்வத் தலங்களைத் தனிச் சிறப்புடையனவாய்ப் பாராட்டின. அதனால் ஜனங்களுக்குத் தலங்களின்பால் பக்தி அதிகமாயிற்று. அந்த அந்தத் தலத்தில் உள்ளவர்கள் தங்கள் தங்கள் ஊரிலே அபிமானம் பூண்டு வாழ்வாராயினர்.

பெரியோர்கள் வழிபட்ட காரணத்தால் தலங்களுக்குச் சிறப்பு அதிகமாயிற்று. சிவ தலங்களில் சைவ சமயாசாரியர்களால் பாடப் பெற்றவை பாடல் பெற்ற தலங்கள் என்றும், ஆழ்வார்களால் போற்றப் பெற்ற விஷ்ணு ஸ்தலங்கள் மங்களா சாஸனம் பெற்றவை என்றும் வழங்கப்பெறும். புராணம் பெற்ற தலங்களைப் புராண ஸ்தலங்கள் என்று கூறுவர். பெரியோர்களுடைய பாடல்களாற் பாராட்டப்பெற்ற தலங்களுக்கே மதிப்பு அதிகமாயிற்று.

அரசர்களும், பிரபுக்களும் ஆலயங்களில் நித்திய நைமித்திகங்கள் எக்காலத்தும் நடைபெற்று வருவதற்குத் தேவதானங்கள் அளித்தார்கள். நாளடைவில் ஆலயத்துக்குரிய சொத்துக்கள் அதிகமாயின. அவற்றைப் பாதுகாத்தற்குரிய அதிகாரிகளும் இருந்தனர். அரசருடைய அதிகாரிகள் ஆலய நிர்வாகத்தை மிக்க கருத்தோடு கவனித்து வந்தனர்.

கோயிலைச் சார்ந்து தீர்த்தங்களும் நந்தவனங்களும் செங்கழுநீரோடைகளும் பசுமடங்களும் இருக்கும். அவை மிகவும் தூய்மையாக இருக்கவேண்டுமாதலின் அவ்விடங்களில் அசுத்தம் செய்யக்கூடாதென்ற வரையறை அமைந்தது. நதி, பொய்கை,

கிணறு எனத் தீர்த்தங்கள் வேறுவேறு உருவத்தில் இருக்கும். திருக்குளங்கள் சுத்தமாக இருக்கும் வண் ணம் பழையநீர் வெளிச்செல்ல வடிகாலும், புதுநீர் புகுவதற்குப் பாய்காலும் அமைக்கப் பெற்றன. சில சில நிலங்களிலுள்ள நீருக்குச் சில சிறப்பியல்புகள் உண்டு. அத்தகைய சிறப்பாலும் தூய்மையாலும் அந் நீர் சில பிணிகளைப் போக்குவதாக இயற்கையிலே அமைந்திருக்கும். இதனால் பெரும் புண்ணியமாகக் கருதிப் பக்தியோடு தீர்த்தங்களில் பக்தர்கள் நீராடி நற்பயனைப் பெற்றனர்.

கடவுள் வழிபாட்டுக்குத் தூய்மை மிகவும் அவ சியமென்பதை நம் நாட்டினர் நன்கு உணர்ந்திருந்தனர். மருந்தில்லாமலே தூய்மையாக இருத்தலினால் உடல் வன்மை பெறுமாதலின் அதற்கேற்ற சில வழக்கங்க ளைப் பெரியோர் அறிவுறுத்தினர். நன்னீரில் நீராடி நல்ல காற்று வீசும் பரந்த வெளியிடையே அமைந்த ஆலயங்களை வலம் வருவதனால் அவர்களுடைய உடல் வன்மை பெற்றது. நமஸ்காரம் செய்வதனால் உடம் பின் தசைகள் வலிவுறும். மலைகளின்மேல் உள்ள கோயில்களுக்குச் சென்று தரிசித்து வருதலால் பல பிணிகள் நீங்கின. மலையின்மேல் ஏறினால் அங்குள்ள தூய்மையான காற்று உடம்பிலே படும்போது உடம்பு ஆரோக்கியமுறுகின்றது.

ஆலயங்கள் தூய்மையாக இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் அமைக்கப் பெற்றன. அங்கே இடை யூறாக முளைக்கும் செடிகள் முதலியவற்றை அகற்றுவ தற்குப் பணியாட்கள் நியமிக்கப்பட்டனர். அவர்க ளுக்குக் காடுவெட்டி என்று பெயர். திருநாவுக்கரசு

நாயனார் இத்தகைய திருப்பணியைச் செய்வதே இன்ப மளிப்பது என்று கருதி அவ்வாறே செய்து வந்தார். கோயிலில் வழியிலுள்ள புல் முதலியவற்றைச் செதுக் குவதற்கு உரிய கருவி ஒன்று உண்டு. அதற்கு உழ வாரம் என்று பெயர். அதைக் கையிலே வைத்துக் கொண்டு இருந்தமையால் திருநாவுக்கரசு நாயனாருக்கு உழவாரப் படையாளி என்று ஒரு பெயர் உண்டா யிற்று.

வெறும் உடல் தூய்மையினால் மட்டும் மக்களுக்கு இன்பம் உண்டாகாது. உள்ளமும் தூயதாக இருத்தல் வேண்டும். அதுபற்றியே திருக்கோயில்களில் தெய்வ பக்தியை வளர்ப்பதற்கு உரிய சாதனங்கள் அமைக்கப் பெற்றன. கடவுளுடைய பெருமையையும் கருணை யையும் புலப்படுத்தும் பல வரலாறுகளைப் பெரியோர் களும் கவிஞர்களும் அறிவுறுத்தினர்.

மனிதன் அகங்காரத்தினின்றும் நீங்கித் தாழ்ந்து வணங்கினால் உயர்வடைவான். ஆதலின், தல சம்பந்த மான வரலாறுகளில் இந்த நோக்கம் கைகூடுவதற் குரிய செய்திகள் சிறப்பாகச் சொல்லப்பட்டன. தன் பால் அன்புடையவர்களுக்கு இறைவன் அருள் செய்தா னென்றும், அன்பில்லாதார் இறுதியில் துன்புற்றன ரென்றும் தல புராணங்கள் கூறுகின்றன. அறிவாலும், ஆற்றலாலும், செல்வத்தாலும் சிறப்பெய்தினவர்க ளும் கடவுளை வணங்காமல் அகங்கரித்து அழிந்த வரலாறுகளைப் பல புராணங்கள் சொல்லுகின்றன. சிறிதும் அறிவில்லாதனவேனும் ஈ எறும்பு முதலியன கூட இறைவனிடத்து அன்பு பூண்டமையின் அவ னருள் பெற்றுச் சிறப்பெய்தின என்று ஈங்கோய் மலை,

திருவெறும்பீச்சுரம் முதலிய தலங்களின் புராணங்கள் கூறுகின்றன. அத்தலங்களின் பெயர்களே அவ்வரலாறுகளைக் குறிப்பித்துக்கொண்டு நிற்கின்றன. இறைவன் திருமுன்னர் அன்பு ஒன்றுதான் மதிக்கப்பெறுமென்பதும், மற்றவையெல்லாம் அங்கே கருதற்குரியன அல்ல என்பதுமே இந்த வரலாறுகள் எல்லாவற்றாலும் தெளிவுறுத்தப்படும். இந்த வரலாறுகளைப் படித்துப் படித்துப் பழக்கப்பட்டவர் கடவுள் ஆலயத்திற்குச் செல்லும்பொழுது இவற்றின் நினைவால் தம் அகங்காரம் அவ்விடத்தில் இருக்குமளவாவது மறைந்து நிற்கப் பெறுவர். 'இறைவனது சந்நிதியில் யாவரும் வணங்கி ஒழுகவேண்டும்; அகங்காரம் அடங்கி நிற்றல் வேண்டும்' என்ற வரையறையினால் ஆலயத்தளவிலேனும் அத்தகைய அனுஷ்டானங்களை ஜனங்கள் கைக்கொண்டனர். உலக முழுவதும் இறைவன் சந்நிதியே என்ற உணர்ச்சி வரும்போது எப்போதும் அகங்காரம் அடங்கி நிற்கும் நிலையைப் பெறுகின்றனர்.

இத்தகைய அகண்ட உணர்ச்சி வருவதற்குரிய பழக்கம் முதலில் ஆலய வழிபாட்டிலிருந்து உண்டாகிறது. ஆலய வழிபாட்டிலே உடல் ஆரோக்கியமடைவதுபோலவே உள்ளமும் அமைதி பெறுகின்றது. இவ்வுண்மையை அறிந்து ஆலயத்தைத் தொழுபவர்கள் நாளடைவில் அந்தப் பழக்கம் விரிவுறுதலால் பெரிய ஞானியாகத் திகழ்வர். அதனாலேதான் தாயுமானவர் என்னும் மெய்ஞ்ஞானச் செல்வர்,

> " மூர்த்திதலந் தீர்த்த முறையாத் தொடங்கினர்க்கு
> வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே "

என்றார்.

# 13. கள்ளனும் புலியும்*

தமிழில் ஐம்பெருங்காப்பியங்கள் என்று சொல்லப்பெறும் ஐந்து நூல்களுள் முதலிலே வைத்து எண்ணப்படுவது சீவகசிந்தாமணியாகும். நான் முதன் முதலில் பதிப்பித்ததும் பின்பு பழைய நூல்களை வெளியிடும் ஊக்கம் உண்டாவதற்குக் காரணமானதும் அக் காப்பியமே யாகும். அதுகாறும் நான் அறிந்திராத பல விஷயங்களை அந்நூலை ஆராயும்போது அறிந்து கொண்டேன். ஒரு புது துறையிலே இறங்கினமையால் ஆரம்பத்தில் எல்லா விஷயங்களும் தெளிவாக விளங்கவில்லை. பிற்காலத்துத் தமிழ்க் காப்பியங்களுக் கெல்லாம் உரையாணியாக இருத்தலின் அதனால் பல பழைய தமிழ் மரபுகள் தெரியவரும். ஜைனசமயக் காப்பியமாதலின் அச்சமய சம்பந்தமான பல செய்திகளை அதனால் அறியலாம். தமிழ் நூலாராய்ச்சியாலும் பல அறிஞர்களிடமிருந்து அறிந்துகொண்ட விஷயங்களாலும் சிறிது சிறிதாக அந்நூல் முழுவதையும் பரிசோதித்து வெளியிடும் தைரியம் எனக்கு உண்டாயிற்று. நெடுநாட்களாக அறியப்படாமல் இருந்த பல செய்திகள் எதிர்பாராத சந்தர்ப்பங்களில் எதிர்பாராத மனிதர்கள் மூலமாகத் திடீரென்று விளங்கியதுண்டு.

சீவக சிந்தாமணியின் கதாநாயகனாகிய சீவகன் ஒரு வணிகன் வீட்டிலே இருந்து வளர்ந்து வருகையில் நாளுக்கு நாள் அவனுடைய ஆற்றல்கள் உலகத்தாருக்கு வெளிப்பட்டு வந்தன. சீவகனுடைய தந்தையைக் கொன்று நாட்டைக் கைப்பற்றிய கட்டியங்கார

---

* **கலைமகள்**, விக்கிரம, மார்கழி.

னென்பவன் சீவகனை அரசன் மகனென்று அறியா விடினும் அவன் புகழ் பெருகி வருதலைக்கண்டு பொறாமையால் புழுங்கினன்.

காந்தருவதத்தை என்னும் வித்தியாதர மங்கை ஒருத்தி ஸ்ரீதத்தனென்னும் வணிகன் பாதுகாப்பிலே ஒரு கன்னிமாடத்திலே இருந்தாள். ஸ்ரீதத்தன் கட்டியங்காரனைக் கண்டு அவன் உடம்பாடு பெற்று ஒரு மண்டபம் கட்டுவித்து, "இக்காந்தருவதத்தையை வீணையில் வெல்வோரே இவளை மணத்தற்குரியர்" என்று பிரசித்தம் செய்தனன். அதனை அறிந்த பல தேசத்தாரும் அவ்விடத்தே வந்து கூடினார்கள். பின்பு ஸ்ரீதத்தன் காந்தருவதத்தையை அழைத்துச் சென்று அம்மண்டபத்தே இருந்து யாழ் வாசிக்கச் செய்தான். அவளது யாழிசையைக் கேட்ட யாவரும் ஆச்சரியமடைந்தனர். இசையில் வல்லவர்களாக அங்கே வந்தவர்களில் ஒவ்வொருவரும் தனித் தனியே வந்து பாடியும் யாழ் வாசித்தும் அவளை வெல்லுவதற்குத் தக்க திறமை இல்லாமல் தோல்வியுற்றனர். இப்படி ஆறு நாட்கள் சென்றன.

இந்தச் செய்தியை உணர்ந்த சீவகன் தன்னுடைய இசைத் திறத்தைக் காட்ட எண்ணி அம்மண்டபத்தை அடைந்து யாழிசையை வெளிப்படுத்திக் காந்தருவதத்தையை வென்றனன். உடனே அவள் அவனுக்கு மாலை யிட்டனள்.

பொறாமைத் தீயால் வெம்பிய கட்டியங்காரன் சீவகனை எவ்வாறேனும் தொலைக்க வேண்டுமென்று எண்ணினன். அங்கே வந்திருந்த அரசர்களிடம் கோபம் மூளத்தக்க வார்த்தைகளை அவன் கூறி,

"உங்களுள் யார் இந்தச் சீவகனை வெல்கின்றானோ அவனே காந்தருவதத்தையை மணப்பதற்குரியவன்" என்று உரைத்தான். அதுகேட்டு அவ்வரசர்கள் ஒருங்கு திரண்டுவந்து சீவகனோடு போர் செய்து தோல்வியுற்றனர். அப்பால் சீவகன் காந்தருவதத்தை யைத் தன் மனைக்கு அழைத்துச் சென்று சுப முகூர்த் தத்திலே அவளை மணம் செய்து கொண்டு வாழ்ந்து வந்தான்.

இந்த வரலாற்றைச் சீவக சிந்தாமணியில் மூன்றா வது பிரிவாக உள்ள காந்தருவதத்தையாரிலம்பகம் மிகவும் விரித்து அழகாகச் சொல்லுகின்றது. எந்த நூலை யும் ஒரு மனத்தோடு மற்ற வேலைகளைக் கவனியாது ஆராய்ந்தால்தான் உண்மை வெளியாகின்றது. இதனை அனுபவத்திலே உணர்ந்த யான் தமிழ் நூல்களைப் படித்து வரும்போது பொழுது போவது தெரியாமல் அந்நூற் பொருளில் ஆழ்ந்திருப்பேன். தெளிவான இடங்களில் என் அறிவு வெகு வேகமாகச் செல்லும். அந்த வேகம் ஒரே மாதிரி இராது. சில இடங்களில் முட்டுக்கட்டை வந்து விட்டால் நாட்கணக்காக மேலே ஓடாமல் நின்றுவிடும்.

காந்தருவதத்தையார் இலம்பகத்தில் அத்தகைய இடம் ஒன்றில் என் அறிவைச் செலுத்த முடியாமல் தடைப்பட்டேன். 'சீவகன் சங்கீதத்தில் வெற்றி பெற்றதை அறிந்து ஜனங்களெல்லாம் ஆரவாரிக்கும் போது அதுகண்டு பொறாமை கொண்ட கட்டியங் காரன் அங்கிருந்த மன்னர்களை நோக்கிச் சில வார்த் தைகளைச் சொன்னான்' என்ற கருத்தையுடைய செய் யுளே அத்தடைக்குக் காரணம்.

"வெள்ளிலே வேற்க ணுனைச்
சீவகன் வீணை வென்ருன்
ஒள்ளிய னென்று மாந்தர்
உவாக்கடல் மெலிய வார்ப்பக்
கள்ளராற் புலியை வேறு
காணிய காவல் மன்னன்
உள்ளகம் புழுங்கி மாதோ
உரைத்தனன் மன்னர்க் கெல்லாம்"

(சீவகசிந்தாமணி, 741)

என்பது அச்செய்யுள்.

'சீவகன், தத்தையை யாழும் பாட்டும் வென்ருன், நல்லனென்று மாந்தர் ஆர்ப்ப, அது பொருதே கட்டியங்காரன் மனம் புழுங்கி, அரசரைக் கொண்டு சீவகனைப் போர் காண வேண்டி, அரசர்க்கெல்லாம் சில தீமொழிகளைக் கூறினுனென்க'

என்பது அதற்கு நச்சினுர்க்கினியர் எழுதிய உரை.

செய்யுளிலே உள்ள வார்த்தைகளெல்லாம் பொருள் விளங்கும் சொற்களே. செய்யுளின் திரண்ட கருத்து இன்னதென்று தெரிந்துகொள்வதிலும் சிரமம் உண்டாகவில்லை. மூலத்தில், "கள்ளராற் புலியை வேறு காணிய" என்றுள்ள பகுதி எனக்கு நன்ருக விளங்கவில்லை. 'கள்வர்களால் புலியை வேருகக் காணும்பொருட்டு' என்று வார்த்தைகளுக்கு மாத்திரம் அர்த்தம் தெரிந்தது. ஆனுல் அங்கே கள்ளரும் புலியும் வரக் காரணம் என்ன? உரையில் நச்சினுர்க்கினியர் கள்ளரையும் புலியையும் விட்டுவிட்டார். நான் சென்றுகொண்டிருந்த ஆராய்ச்சிப் பாதையிலே அந்தக் கள்ளரையும் புலியையும் கண்டு அஞ்சி என் அறிவுத் தேர் ஓடாமல் நின்றுவிட்டது.

உரையில் உள்ள 'அரசரைக் கொண்டு சீவகனைப் போர் காணவேண்டி' என்ற பகுதிக்கு ஏற்ற சொற்கள் மூலத்தில் இல்லை. "கள்ளராற் புலியை வேறு காணிய" என்ற பகுதிக்குரிய தாற்பரியமாகத்தான் அவ்வுரை இருக்கவேண்டுமென்று தீர்மானித்தேன். 'அப்படியானால் கள்ளரை மன்னர்களுக்கும் புலியைச் சீவகனுக்கும் உவமையாக நூலாசிரியராகிய திருத்தக்க தேவர் சொல்லியிருக்கிறாரா? இங்கே கள்ளரென்பதும் புலியென்பதும் உவம ஆகு பெயராய் மன்னர்களையும் சீவகனையும் குறித்தன என்று கொள்ளவேண்டும் போலும்' என்று ஊகித்தேன். 'சீவகனைப் புலியென்று சொன்னவர் புலியைத் தாக்குதற்கு இயலாத பசுக் கூட்டங்களாக மன்னரைச் சொல்லியிருந்தால் நன்றாக இருக்குமே. கள்ளராகச் சொன்னதில் என்ன நயம் இருக்கிறது? இங்கே நூலாசிரியர் ஏதேனும் கதையை மனத்தில் வைத்துக்கொண்டு சொல்லுகிறாரா? நச்சினார்க்கினியர் இந்த விஷயத்தை விளக்காமற் போனாரே' என்று எழுந்த சந்தேகங்களாலும் ஆராய்ந்து தெரிந்து கொள்ள முடியாத பலஹீனத்தாலும் தெரிந்து கொள்ள முடியவில்லையே என்ற ஏக்கத்தாலும் பல வகையான உணர்ச்சிகள் என் உள்ளத்திலே மோதத் தத்தளித்தேன்.

சிலநாள் யோசித்தும் விளங்காமையால் வேறு வழியின்றிக் கள்ளரையும் புலியையும் விட்டு விட்டு மேலும் சிந்தாமணி ஆராய்ச்சியைச் செய்து வந்தேன். இப்படி இடையிடையே உண்டாகும் சந்தேகங்களைக் கூடியவரையில் முயன்று தெளிந்து கொள்வேன். ஏதனுலும் சாத்தியமில்லாவிடின் மனம் சோராமல்

மேற்கொண்ட காரியத்தை நிறைவேற்றும் விஷயத்தில் அறிவைச் செலுத்துவேன்.

சீவகசிந்தாமணி இறைவன் திருவருளால் 1887-ஆம் வருஷம் பதிப்பித்து நிறைவேறியது. அதனைப் பதிப்பித்த பின்னர் எனக்கு வேறு பிரதிகள் கிடைத்தன. என் தமிழாராய்ச்சியும் கேள்வியும் விரிவடைந்தன.

கும்பகோணத்தில் பக்தபுரி அக்கிரகாரத்தில் நான் வசித்து வந்த வீட்டுக்கு அடுத்த ஜாகையில் சாமப்பா என்ற ஒரு கிழவர் இருந்தார். அவர் எளியவர். சிலசில தினங்கள் எங்கள் வீட்டிற்கு வந்து போஜனம் செய்து செல்வார். அவர் வரும்போது தம்முடைய அனுபவத்திலே அறிந்த விஷயங்களையும் தமக்கு நன்மை செய்தவர்களையும் தீமை செய்தவர்களையும் பற்றிச் சொல்வார்.

ஒருநாள் அவர் வழக்கம்போல் பேசத் தொடங்கினார். அவருக்கு வேண்டாதவராகிய ஒருவர் மற்றொருவரிடம் கிழவரைப்பற்றிக் குறைகூறி இருவருக்கும் சண்டை மூட்டி விட்டாராம். "எப்படியாவது நாங்கள் முட்டி மோதிக்கொண்டு சாகட்டுமே என்பது அவன் அபிப்பிராயம். நாங்கள் இரண்டுபேரும் அவனுக்கு வேண்டாதவர்களே. அதற்குத்தான் '**கள்ளா வா! புலியைக் குத்து**' என்கிறான். நானா ஏமாந்து போவேன்!" என்று அவர் சொன்னார்.

வழக்கப்படியே அவர் பேச்சிலே சிறிதும் சிரத்தையில்லாமல் கேட்டுக்கொண்டிருந்த நான் அப்போது திடீரென்று நிமிர்ந்து அவரைப் பார்த்து, "என்ன அது? கள்ளன், புலி என்று சொல்கிறீர்களே ?" என்றேன்.

"அந்தப் பயலைத்தான் சொல்கிறேன். 'கள்ளா வா! புலியைக் குத்து' என்று சொல்லித் தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ளப் பார்க்கிறான்" என்றார் அவர்.

திருத்தக்கதேவரின் சிந்தாமணிச் செய்யுள் எப்படி எனக்கு விளங்கவில்லையோ, அப்படியே அந்த முதியவர் பேச்சும் எனக்கு விளங்கவில்லை. திருத்தக்க தேவர் பாடிவிட்டுப் போய்விட்டார். அவரைத் தேடிப் பிடித்து, 'இதற்கு என்ன அர்த்தம்?' என்று கேட்க முடியாது. அந்தக் கிழவரோ என் முன்னே இருந்தார். அவரைக் கேட்கலாம். திருத்தக்க தேவர் சொன்னதைத்தான் அவரும் சொன்னார். தேவரைக் கேட்பதற்குப் பதிலாக கிழவரைக் கேட்கலாமல்லவா? திருத்தக்கதேவரே அந்தக் கிழவராக வந்து நின்றால் எப்படிச் சந்தேகத்தைக் கேட்க ஆவலுடன் ஆரம்பிப்பேனோ அப்படித்தான் கேட்கலானேன்.

"கள்ளா வா! புலியைக் குத்து என்று சொன்னீர்களே; அதற்கு என்ன அர்த்தம்?"

அவருக்குச் சிறிது ஏமாற்றம் உண்டாயிற்று. யாரைப்பற்றி அவர் குறைகூறுகிறாரோ 'அந்தப் பயலை'ப் பற்றி நான் கேட்பதாக அவர் முதலில் நினைத்தார். நான் அவர் வாயிலிருந்து நழுவிவந்த வார்த்தைகளுக்கு அர்த்தம் கேட்கத் தொடங்கவே அவருக்கு ஏமாற்றம் உண்டானதில் ஆச்சரியமில்லை. கோபத்தோடு பேசிக்கொண்டிருந்த அவரது தொனி இறங்கியது.

"அதுவா? அது பழைய பழமொழி" என்றார் அவர்.

எனக்கு அது புதுமொழியாகத்தான் இருந்தது.

"பழமொழியா! அதற்கு என்ன அர்த்தம்? தயை செய்து சொல்லவேண்டும். மிகவும் உபகாரமாக இருக்கும்" என்று பணிவோடு அவரை இரந்தேன். திருத்தக்கதேவரையே கேட்பதாக எனக்குப் பாவனை.

"ஒரு மனுஷ்யன் பண மூட்டையோடு ஒரு காட்டு வழியாகப் போய்க்கொண்டிருந்தான். அப்போது ஒரு திருடன் அவனைக் கண்டு துரத்தினான். எதிரில் ஒரு புலி உறுமிக்கொண்டு வந்தது. இந்த இரண்டு அபாயங்களிலிருந்தும் தப்புவதற்கு அந்த வழிப்போக்கன் ஒரு தந்திரம் பண்ணினான். திருடனைப் பார்த்து, 'அதோ பார்; அந்தப் புலியைக் குத்திக் கொன்றுவிடு; நான் உனக்கே பண மூட்டையைத் தந்து விடுகிறேன்' என்றான். திருடன் அப்படியே புலியை எதிர்த்தான். புலி அவனை அடித்துத் தின்று பசி தீர்ந்தது. அதற்குள் வழிப்போக்கன் தப்பிப் பிழைத்து ஓடிப்போய் விட்டான். அவன் தனக்குப் பகையாக வந்த புலியையும் கள்ளனையும் முட்ட விட்டுத் தான் தப்பினான். இந்த விஷயத்தைத்தான் பழமொழி சொல்லுகிறது" என்று அக்கிழவர் சொல்லி முடித்தபோது எனக்கு உண்டான சந்தோஷம் தாங்காமல், "ஹா! ஹா!" என்று ஆரவாரித்தேன்.

'கட்டியங்காரன் தனக்கு ஒரு சிரமமும் இல்லாமல் சீவகனையும் அரசர்களையும் தம்முள்ளே போர் செய்யவிட்டுத் தன் காரியத்தைச் சாதிக்க எண்ணினானென்ற கருத்துக்கு இந்தப் பழமொழியிலே அமைந்த வரலாறு எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது!' என்

றெண்ணி வியந்தேன். கள்ளரும் புலியுமாகிய உவமைகளின் நயத்தை உணர்ந்து உணர்ந்து இன்புற்றேன். இயல்பாகவே ஒரு நயம் இருந்தாலும் பலகாலம் விளங்காமற் கிடந்து பிறகு விளங்கினமையால் அந்த நயத்தின் மதிப்புப் பல நூறு மடங்கு அதிகமாகத் தோற்றியது.

"கள்ளராற் புலியை வேறு காணிய"

என்ற அடிக்கு, 'கள்ளர்களாகிய அரசர்களால் புலியாகிய சீவகனை வெற்றி கொள்ளுதலைக் காணும் பொருட்டு' என்று விளக்கமாகப் பொருள் செய்து கொண்டேன்.

பழமொழியினால் அறிந்த புதுப் பொருளிலே ஆழ்ந்திருந்த நான் சிறிது நேரம் அந்த முதியவரை மறந்தேன். பிறகு விழித்துக்கொண்டு அவரைப் பார்த்து, "நீங்கள் இன்று செய்த பெரிய உபகாரத்தை நான் என்றும் மறக்கமாட்டேன்! இந்த வீட்டில் எப்போது வந்தாலும் நீங்கள் போஜனம் செய்யலாம்" என்று சொல்லி விடை கொடுத்தனுப்பினேன்.

சீவகசிந்தாமணி இரண்டாம் பதிப்பு வெளியிட்ட போது (1907-ஆம் ௵) என்னை மயக்கிய செய்யுளின் கீழ், 'கள்ளா வா! புலியைக் குத்து' என்பது ஒரு பழமொழி என்னும் குறிப்பைச் சேர்த்தேன்.

# 14. ஸர் பொன்னம்பல இராமநாததுரை*

சிதம்பரத்தில் பொன்னம்பலத்திற்கு முன்புதான் முதன்முறையாகப் பொன்னம்பல ராமநாத துரையவர்களுடைய பழக்கம் எனக்கு உண்டாயிற்று. அதற்குப் பலவருஷங்களுக்கு முன்பிருந்தே அவரோடு கடித மூலமாகப் பழக்கம் இருந்தது. அதனால் அவருடைய தமிழபிமானத்தை நன்கு உணர்ந்திருந்தேன். நேரிற் கண்டபொழுது அவரது கம்பீரமான தன்மையும், எதையும் ஆராய்ந்து உணரும் சுறுசுறுப்பும், சிவபக்தியும், தமிழிலும் வடமொழியிலும் சங்கீதம் முதலிய கலைகளிலும் உள்ள அபிமானமும் தெளிவாக விளங்கின. அவரது ராஜகளை பொருந்திய தோற்றம் என் உள்ளத்தைக் கவர்ந்தது.

பரம்பரையாகச் செல்வம் நிரம்பிய குடும்பத்திலே பிறந்த அவரும் அவருடைய சகோதரர் இருவரும் மும்மணிகளாகவே விளங்கினர். இலங்கையில் அம்மூவருக்கும் இருந்த செல்வாக்கும் புகழும் வரவர விருத்தியடைந்தன. மூவரிலும் நடுநாயகமாக விளங்கியவர் பொன்னம்பல ராமநாதர்.

சீவக சிந்தாமணியை நான் பதிப்பித்து வெளியிட்டது தொடங்கி அவரும் அவருடைய சகோதரர் இருவரும் எனக்குப் பொருளுதவி புரிந்துவந்தனர். இராமநாத முதலியார் எனக்கு அடிக்கடி கடிதம் எழுதுவதுண்டு. அக்கடிதங்களில் அன்பு ததும்பும்.

---

* இராமநாதன்கல்லூரி வெள்ளிவிழாவின்போது எழுதியனுப்பியது.

சிதம்பரத்தில் நான் அவரைச் சந்தித்த காலத்தில் எவ்வளவோ அன்போடு பேசி அளவளாவினோம்.



ஸர் பொன்னம்பலம் இராமநாததுரை

அவருடைய பரந்த கல்வியறிவையும், தைரியத்தையும், ஆற்றலையும் பற்றிப் பலர்கூற நான் அறிந்திருந்தேன். நேரில் பழகியபோது அவை உண்மையென்று உணர்ந்

தேன். சிதம்பரம் திருக்கோயிலில் தரிசனம் செய்வதற்குள் அவர் அங்குள்ளவர்களையெல்லாம் கேட்டுக் கேட்டு அறிந்த செய்திகள் பல. ஒரு தீக்ஷிதரிடம் கோயிலுக்குரிய வைதிக முறைகளைப்பற்றிக் கேட்டார்; ஒரு தீக்ஷிதரிடம் நடராஜ தத்துவத்தைக் கேட்டார். அவர்கள் கூறிய நுட்பமான விஷயங்களைக் கேட்டறிந்து உவப்புற்றார். அப்பால், ஒருவரைச் சிற்பத்தைப்பற்றிக் கேட்டார்; வேறொருவரைத் தேவாரத்தைப்பற்றிக் கேட்டார். இப்படிப் பலரைப் பல கேள்விகள் கேட்டார். அவ்வளவு கேள்விகளையும் அவர் மிக்க ஆவலோடும் விஷயத்தை அறிந்துகொள்ள வேண்டுமென்ற அன்போடும் கேட்டார். சிலர் விடை சொல்ல அறியாமல் விழித்தனர்; "இந்த விஷயங்கள் தெரியாமல் இங்கே இருக்கிறீர்களே!" என்று அவர்களைப் பார்த்து அவர் சொன்னபோது அவருடைய அதிகார இயல்பை நான் ஒருவாறு ஊகித்துக் கொண்டேன். அவர் மேற்பார்வையில் நடைபெறும் காரியங்கள் மிக ஒழுங்காகவே இருக்குமென்பது அந்த ஒரு நாளிலே எனக்குப் புலப்பட்டது.

"தில்லையென்று சிதம்பரத்திற்கு ஏன் பெயர் வந்தது?" என்று கேட்டார். "இந்த ஸ்தலவிருக்ஷம் தில்லையென்பது. அதனால் இப்பெயர் வந்தது" என்று சொன்னார்கள். உடனே அந்த விருக்ஷத்தைப் பார்க்க வேண்டுமென்ற தீவிரம் அவருக்கு உண்டாயிற்று. கொண்டுவரச் செய்து பார்த்தார். அதோடு நிற்கவில்லை. அந்த மரத்தின் கன்று ஒன்றைப் பக்குவமாக மண்ணை அணைத்துக் கட்டுவித்துத் தம் ஊருக்குக் கொண்டுபோய்த் தம் தோட்டத்தில் வைத்து வளர்ப்

பித்தார். அது தில்லைத் தரிசனத்தின் அடையாளமாக அங்கே நிலவியது.

இராமநாதரவர்கள் சில சபைகளில் அக்கிராசனம் வகித்தபோது நான் பார்த்திருக்கிறேன். அவருடைய பேச்சு கண்டிப்பாக இருக்கும். ஒரு சபைக்குத் தலைவ ராக இருக்கும் தகுதியை அவர் உபந்யாஸங்கள் வெளிப்படுத்தும். பிரசங்கம் புரிவோர் உண்மைக்கு மாறான செய்திகளைக் கூறின் அவற்றை மறுத்து உண்மையைக் கூறுவதில் அவருக்கு ஊக்கம் அதிகம் உண்டு.

செல்வம் கல்வி இரண்டும் அவர்பால் நிரம்பி யிருந்தன. செல்வம் அவருடைய உதாரகுணத்தாற் சிறப்படைந்தது; கல்வி அவரது சொல் வன்மையால் மேன்மை பெற்றது. செல்வத்தைக் கல்வித்துறையிற் செலவழித்துப் புகழைப்பூண்டார். அவர் அமைத்த கல்லூரிகள் யாழ்ப்பாண மக்களில் இருபாலாருக்கும் அறிவு விளக்கம் உண்டாக்கிக்கொண்டு நிலவுகின்றன. சைவசமயப்பற்றும் சிவபக்தியும் அவருடைய செல்வத் தால் வளர்ச்சிபெற்றனவேயன்றிக் குறையவில்லை. ஆங் கிலத்தில் அவர் புலமை மிகச் சிறந்ததென்று சொல் வார்கள். வெள்ளைக்காரரைப் போலவே பேசுவாராம். நான் கேட்ட தமிழ்ப்பேச்சுக்களிலே தமிழ் மணத்தை ஆங்கிலத்தோடு இயைத்துக் குழப்பாமல் ஆங்கிலம் அறியாதவரைப் போலவே அவர் பேசும் திறமையை அறிந்துவியந்தேன்.

அவர் செல்வத்தைப் படைத்திருந்தார்; மேன் மேலும் ஈட்டினார், அறம்புரிந்தார்; இன்பந்துய்த் தார்; அறிவுத்துறையில் பொருளைப் பயன்படுத்தித்

தம் உழைப்பை இறவாமற் செய்துவிட்டார். சைவம், சங்கீதம், தமிழ், பிறகலைகள் யாவும் அவருடைய செல்வமாகிய ஏரியின் உதவியால் ஆதரவுபெற்றன ;

"ஏரி நிறைந்தனைய செல்வன்" (தேவாரம்)

என்ற சிறப்பை அவருக்கும் கூறலாம்.

பல தர்மஸ்தாபனங்களை அவர் நிறுவியிருக்கின்றார். அவற்றையெல்லாம் அவர் உள்ளக்கருத்தின் படியே அவருடைய குடும்பத்தினர் பாதுகாத்து வருகின்றார்கள். அவை மேன்மேலும் வளர்ச்சியுற்று விளங்கும்படி அருள்செய்யும் வண்ணம் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

இலங்கைத் தீவிலுள்ளார் தம்முடைய நாட்டுக்குப் பெருமையையுண்டாக்கிய பொன்னம்பல ராமநாத துரையவர்களை இன்றும் போற்றுகின்றனர் ; தமிழ் நாட்டினரும் அவரைத் தமிழ்வளர்த்த பெருந்தகையாளருள் ஒருவராக வைத்துப் போற்றுதல் கடனாகும்.

---

# 15. சங்கீதப் பயிற்சி*

## இளமைப் பயிற்சி

* * *

கல்வியை எப்பொழுதும் கற்றுக்கொள்ளலாமென்று சொல்கிறார்கள். சங்கீதத்தை இளமையிலேயே கற்றுக்கொண்டு சாதகம் பண்ணினாலொழிய வராது. சிலர் பென்ஷன் பெற்றுக்கொண்ட பிறகு சங்கீதம் கற்றுக்கொள்ளுகிறார்கள். அவர்களுடைய சங்கீதம்

* 1937 ஜனவரி முதல் தேதி, சென்னை ஸங்கீதக் கழகத்தின் பரிசளிப்பு விழாவில் தலைமை வகித்தபோது செய்த பிரசங்கம்.

அவர்களுக்குத்தான் இனிமையாக இருக்கும். பிறரால் அதை ரஸிக்க முடியாது. சில உத்தியோகஸ்தர்கள் சங்கீதம் தெரியுமென்று தம்மைத் தாமே மதித்துக் கொண்டு ஆரவாரம் செய்வதுண்டு. அவர்களைச் சேர்ந்த சிலர் அவருடைய தயையை எதிர்பார்த்து அவருடைய சங்கீதத்துக்கு ஸமானமே யில்லை யென்று கை தட்டுவார்கள். இந்தக்காலத்தில் நடைபெறும் வேடிக்கைகளில் இவை சில.

## சங்கீதக் கவர்ச்சி

இளமையிலேயே குழந்தைகளுக்குச் சங்கீதத்தில் கவர்ச்சி ஏற்படுகின்றது. சங்கீதம் குழந்தைகளுடைய நிர்மலமான மனத்தை வசீகரிக்கின்றது. பசுக்களையும், பாம்புகளையும் சங்கீதம் வசப்படுத்துமென்று சொல்லுகிறார்கள். "ஆடிக் கறக்கும் மாட்டை ஆடிக் கறக்க வேண்டும்; பாடிக் கறக்கும் மாட்டைப் பாடிக் கறக்க வேண்டும்" என்பது ஒரு பழமொழி. சில மாடுகள் எவ்வளவு துஷ்டத்தனம் செய்தாலும் பாடிக்கொண்டே யிருந்தால் சாதுவாக நின்று பால் கறப்பதற்குத் தடை செய்யாமல் இருக்கும். **ஆனாய நாயனாரும் கண்ணபிரானும்** பசுக்களைச் சங்கீதத்தால் வசப்படுத்தினார்கள். ஆனாய நாயனார் பசுபதியையும் வசமாக்கினார்.

கண்ணன் தன்னுடைய வேய்ங்குழற் கானத்தால் செய்த அற்புதமான செயல்களைப் புலவர்கள் பலர் மனமுருகி வர்ணித்திருக்கிறார்கள். பாகவதத்தில் கண்ணன் வேய்ங்குழலூதிய அத்தியாயமென்ற தனிப் பகுதி ஒன்று இருக்கிறது. திவ்ய கவி பிள்ளைப்

பெருமாளையங்காரென்பவர், " ஆக்குவித்தார் குழலால் அரங்கேசர் " என்று பாடுகிறார். பல்லாயிரக் கணக்காக மேய்ந்துகொண்டிருக்கும் பசுக்களை மாலைக் காலத்தில் ஒருங்கே வரச்செய்து வீட்டிற்குக் கொண்டு போய்ச் சேர்ப்பதற்குத் தன்னுடைய வேய்ங்குழற் கீதத்தை உபாயமாகக் கண்ணன் கொள்கின்றானும். அவனுடைய வேணுகானத்தைக் கேட்ட மாடுகள் ஒன்றுபட்டு அவனைச் சுற்றிக் கூடுகின்றன. அப்படியே அவற்றை ஊருக்கு ஓட்டிச் செல்லுகிறான்.

**அழகர் கலம்பகம்** என்ற பிரபந்தத்தில் கண்ணன் வேய்ங்குழலூதிய சிறப்பை ஒரு கவிஞர் மிகவும் அழகாக வருணிக்கின்றார்.

" அவனுடைய குழலோசையினால் நீளத் திரிந்துழன்ற மேகம் தடைப்பட்டு அவ்வோசையின் குளிர்ச்சியினால் குறுந் துளிகளைத் துளிக்கின்றது. அப்பொழுது பந்தலிலிருந்து பன்னீர்த் துளிகள் துளிப்பது போன்ற காட்சி உண்டாகின்றது. பின்னும் கண்ணனது கானமிர்தமானது பசுக்கள் தின்பதற்காக இடையர்கள் வெட்டிய மரங்களைத் தழைக்கச் செய்கின்றது. இடையர்கள் மரங்களை முழுவதும் அறும்படி வெட்ட மாட்டார்கள். அப்படியே சாய்ந்து தொங்கும்படி வெட்டுவார்கள். அப்படி வெட்டப்பட்ட கிளையிலுள்ள தழையை ஆடுகளும் மாடுகளும் தின்னும். அங்ஙனம் தின்றதனால் தழையற்று மொட்டையாக இருந்த கிளைகள் தழைத்து அலர்ந்து பழுத்து அப்பழங்களை விரும்புவோருக்குத் தாழ்ந்து உதவுகின்றன. புலிகளும் பாம்புகளும் தம்முடைய கொடுமையை மறந்து ஈடுபட்டுக் கிடக்கின்றன. கருங்கல் வெண்ணெயைப்

போல உருகி வழிகிறது. கன்றை நினைந்து ஓடிவந்த பசுக்களும் பசுக்களை நினைந்து ஓடிவந்த காளைகளும் தம் உணர்ச்சியை இழந்து மெய்ம்மறந்து நிற்கின்றன. இத்தகைய நிலையில் கண்ணன் மூன்று வகைக் கோணலோடு குழலூதுகின்றான். அம்மூவகை வளைவைத் திரிபங்கி யென்பர். இத்தகைய காட்சியை அப்புலவர்,

"குறித்தமுகில் பந்தரிட்டுக் குறுந்துளிதூற் றிடவாயர்
தறித்தமரம் அத்தனையும் தழைத்தலர்ந்து பழுத்துதவக்
கடும்புலிகள் அயர்ந்துசித்ர காயமெனும் பெயர்விளக்கக்
கொடும்பணிகள் மாலையதாக் குலரத்ன விளக்கேற்றக்
கருங்கற்றான் வெண்ணெயெனக் கரைந்துருக விரைந்தோடி
வருங்கற்றான் இமைப்பொழிய மழவிடையங் கயர்ந்துநிற்ப
மிகவிளங்கோ வியரெழுத வெள்கியத்ரி பங்கியுடன்
சுகவிளங்கோ வியர்மழலை தொனித்தகுழல் இசைத்தோய்கேள்"


என்று வருணிக்கிறார்.

வண்டிக் காளைகள் வண்டிக்காரர்கள் பாடும் தெம்மாங்கு ராகத்தில் ஈடுபட்டு எவ்வளவு பாரமாக இருந்தாலும் இழுத்துச் செல்லுகின்றன. குழந்தைகள் தம் தாயார் பாடும் தாலாட்டுப் பாட்டில் மதிமயங்கித் தம் சண்டித்தனத்தை நீத்து உறங்குகின்றன.

## இளைஞர் கடமை

சங்கீதத்தைப் பாதுகாக்கவேண்டியது இளைஞர்கள் கடமை. அதற்கு முக்கியமான சாதனம் நல்லொழுக்கம். மிகவும் நன்றாக இருந்த சாரீரம் ஒழுக்கக் கேட்டால் சீக்கிரத்தில் கெட்டுப்போனதைப் பலரிடம் நான் கண்டிருக்கிறேன். சங்கீதப் பயிற்சிக்கு ஆகார நியமம் அவசியமாகும். கண்ட கண்ட ஆகாரங்களை கண்டபொழுதெல்லாம் உட்கொள்ளுவது சாரீரத்தைக் கெடுத்துவிடும். மகா வைத்தியநாதையர்

ஆகார நியமத்தில் தவறியதே யில்லை. அவர் இரண்டு முட்டைக் கரண்டிகளுக்குமேல் நெய்யைச் சேர்த்துக் கொள்ளார். பாலே சாப்பிடுவதில்லை. நீர்மோர் சாப்



மஹா வைத்தியநாதையர்

பிடுவார். இந்தக் காலத்தில் இது மிகவும் ஆச்சரிய மாகவே தோற்றும். அப்படி அவர் இருந்ததனால் தான் அவருடைய சாரீரம் அவர் சொன்னபடி கேட்டுக் கொண்டிருந்தது.

சிறு பிராய முதற்கொண்டு சங்கீத அப்பியாசம் செய்தவர்களுள் மகாவைத்தியநாதையர் ஒருவர். ஞான சம்பந்தரும் நம்மாழ்வாரும் சிறு பிராயத்திலே கடவுளைத் தம்முடைய பாட்டுக்களால் வசப்படுத்தினர்கள்.

## சங்கீத மருந்து

சங்கீதத்தால் மனவருத்தமும் நோய் வருத்தமும் போய்விடும். இதைப் பல சமயங்களில் பலர் அறிந்திருக்கக்கூடும். திருவாவடுதுறை ஆதீனகர்த்தராக இருந்த மேலகரம் சுப்பிரமணிய தேசிகரவர்கள் வாயுப்

பிடிப்பினால் உபத்திரவமடைந்தார்கள். ஒரு நாள் பெரிய வைத்தியநாதையரென்ற சங்கீத வித்துவானுடைய சங்கீதத்தைக் கேட்டு நோயின் துன்பத்தை மறந்தார்கள்.

காவடிச் சிந்து பாடிய அண்ணாமலை ரெட்டியார் சிலகாலம் என்னிடம் பாடம் கேட்டார். அவருக்கு இலக்கிய இலக்கணங்களில் அதிகமாகப் புத்தி செல்லவில்லை; புதிய செய்யுள் இயற்றுவதிலேயே போய்க் கொண்டிருந்தது. அவரை ஆதரித்துப் போற்றியவர் ஊற்றுமலை ஜமீன்தாராகிய ஹிருதயாலய மருதப்பத் தேவரென்பவர். அந்த ஜமீன்தார் தமிழ்ப் பயிற்சியுடையவர். ஒரு சமயம் கழுகுமலைக்குக் காவடியெடுக்கும் பிரார்த்தனை செய்துகொண்டார். அதன்படி காவடி யெடுத்தபோது உடன் அண்ணாமலை ரெட்டியாரும் சென்றார். ரெட்டியார் அதற்கு முன் தாம் இயற்றி வைத்திருந்த காவடிச்சிந்தை வழி நெடுகப் பாடிக்கொண்டே சென்றார். அதைக் கேட்டு இன்புற்ற ஜமீன்தாருக்கு வழி நடையில் உண்டான சிரமமே தோற்றவில்லையாம். இந்தச் செய்தியை அந்த ஜமீன்தாரே என்னிடம் சொல்லியிருக்கிறார்.

பண்டைக் காலத்தில் நம்முடைய நாட்டில் பல வீரர்கள் இருந்தனர். போர்க்களத்தில் புண்பட்டு வீழ்ந்த வீரர்களை அவர்களுடைய மனைவிமார் சென்று பாதுகாப்பார்கள். அப்பொழுது அவர்கள் இனிய பாடலைப் பாடுவார்கள். அவற்றைக் கேட்டு அவ் வீரர்கள் தம்முடைய புண்ணால் உண்டாகும் வருத்தத்தை மறந்துவிடுவார்கள். இந்த வரலாறு புறப்பொருள் வெண்பா மாலையில் சொல்லப்படுகிறது.

ஆகவே சங்கீதமும் ஒரு மருந்தாக உபயோகப்படு மென்பதை நாம் அறிகிறோம்.

## சிவபெருமான் இசை விரும்புதல்

இசையைப் போன்ற வித்தை வேறு இல்லை. எல்லா வித்தைக்கும் தலைவராக இருக்கும் சிவ பெருமான் சங்கீதத்தில் அதிக பக்ஷபாதமுடையவராக இருக்கிறார். சங்கீதத்துக்கு மூலமாகிய சாமகானத்தை அவர் எப்பொழுதும் செய்து கொண்டிருக்கிறார். கம்பளர், அசுவதரர் என்ற இரண்டு கந்தர்வர்களை அவர் இரண்டு கோடுகளாகத் தம் திருச் செவியில் அணிந்துகொண்டு எப்பொழுதும் அவர்களுடைய கானத்தைக் கேட்டு மகிழ்ந்துகொண்டிருக்கிறார். அப்படிக் கேட்டுக்கொண்டிருந்தால் மற்றவர்களுடைய தோத்திரங்களையும் நம்முடைய குறைகளையும் எப்படிக் கேட்பாரென்ற சந்தேகம் தோன்றலாம். அவருடைய செவிகள் நம்முடையவை போன்றன அல்ல. அவர் எங்கும் செவியுடையவர். ஆயிரம் முகம், ஆயிரம் தலை, ஆயிரம் பாதமுடையவர் என்று வேதம் கோஷிக்கிறது. "எங்கும் செவியுடையாய் கேளாயோ" என்று ஓர் அன்பர் கூறியிருக்கிறார். ஆதலின் உலகத்தில் உண் டாகும் எல்லா ஒலிகளையும் அவர் கேட்டுக்கொண்டு தான் இருக்கிறார். ஆயினும் சங்கீதத்தைத் தாமே விரும்பி எப்பொழுதும் கேட்கிறார். அவரே வீணை வாசிப்பார். "எம்மிறை வீணை வாசிக்குமே" என்பது தேவாரம். தக்ஷிணாமூர்த்தி பேதங்களில் வீணா தக்ஷிணா மூர்த்தி என்பது ஒன்று. அந்த மூர்த்தி எப்பொழுதும் வீணை வாசித்துக்கொண்டே யிருப்பார்.

## தமிழ்ப் பண்

நம்முடைய தமிழ் நாட்டில் பண்கள் திறங்களென்ற வரையறை சங்கீதத்தில் உண்டு. ஸம்பூர்ண ராகத்தைப் பண்ணென்றும், ஜன்ய ராகத்தைத் திறமென்றும் சொல்லி வந்தார்கள். ஆகமங்களில் உத்ஸவத்தில் திக்பந்தன காலத்தில் இன்ன திக்கில் இன்ன பண்ணைப் பாட வேண்டுமென்ற வரையறை இருக்கிறது. இதனால் பண்களின் பழமையை உணரலாம். தமிழ் நாட்டில் இருந்த பண்களையமைத்தே தேவாரங்கள் பாடப்பட்டன. திவ்யப் பிரபந்தமும் அத்தகையது தான். ஆயினும் இக்காலத்தில் புத்தகங்களில் ஒவ்வொரு பாட்டுக்கும் தனித் தனியே இராகம் அமைத்திருக்கிறார்கள். இப்பொழுது கோயில்களில் திவ்யப் பிரபந்தத்தை யோதுபவர்கள் அந்த ராகத்திற் பாடுவதில்லை. பழைய பண்ணும் இப்பொழுது தெரியவில்லை.

ஒவ்வொரு பண்ணும் இன்னகாலத்திற் பாடப்பட வேண்டுமென்ற ஒருவரையறையுண்டு. எல்லாக் காலத்திற்கும் பொதுவான பண்களும் உள்ளன. பலர் கூடியுள்ள கூட்டத்தில் ஒருத்தி தன் நாயகனுக்கு இரவில் வரவேண்டுமென்று குறிப்பிக்க எண்ணினாள். அதன்பொருட்டு வீணையில் இராத்திரிக்குரிய குறிஞ்சிப் பண்ணை வாசித்தாள். அவன் அவளது குறிப்பை உணர்ந்துகொண்டான்.

ஒரு பெரிய செல்வருடைய பாதுகாப்பில் இருந்த சங்கீத வித்துவான் ஒருவன் காலம் மாறி ராகங்களை வாசித்தான். "ஏன் இப்படி மாறி வாசிக்கிறான்?" என்று அந்தச் செல்வர் கேட்டார். அருகிலிருந்த ஒரு

புலவர், "எல்லாம் உங்களால் தான் ஏற்பட்ட விபத்து. அவனுக்குக் கவலையே யில்லாமல் விருந்து பண்ணி வைத்ததனுல் அவன் வித்தையையே மறந்துவிட்டான். ராத்திரி வாசிக்கிறதைக் காலையில் வாசிக்கிறுன். காலையில் வாசிக்கிறதை ராத்திரி வாசிக்கிறுன்" என்றுர். இது புறநானூற்றில் உள்ள வரலாறு.

ஒவ்வொரு காலத்துக்கும் தனித் தனியே ராகம் இருப்பதைப்போல ஒவ்வொரு ரஸத்துக்கும் தனித்தனி ராகம் உண்டு. இன்ன இன்ன வகையான பாட்டுக்களை இன்ன இன்ன ராகத்திற் பாடவேண்டுமென்ற நியதியும் உண்டு. வெண்பாவைச் சங்கராபரணத்திற் பாட வேண்டும். கலித்துறையைப் பைரவியிற் பாட வேண்டும். அகவலை ஆரபியிற் பாடலாம்.

## சங்கீதமும் சாகித்தியமும்

சங்கீத வித்துவான்கள் தமிழ்ப் பாட்டுக்களைப் பிழை யில்லாமல் பாடவேண்டும். சாகித்தியம் எப்படி யிருந்தாலென்ன வென்று நினைக்கக்கூடாது. அவர்கள் பாஷையிலும் அறிவுடையவராக இருப்பது விசேஷம். ஆபாஸமான முறையில் பதங்களை வெட்டியும் கொலை பண்ணியும் விழுங்கியும் பாடுவதனுல் அவர்கள் பாஷைக்குப் பெரிய தீங்கு இழைக்கிறுர்கள். பழைய காலத்தில் சங்கீத வித்துவான்கள் சாஸ்திரப் பயிற்சி யுடையவராக இருந்தனர். படித்த வித்துவான்களாக இருந்தால், சாகித்தியத்தின் பொருளைத் தெரிந்து கவியினது மனுேபாவத்தை உணர்ந்து பாட முடியும். இந்த முயற்சியைச் சங்கீத வித்துவான்கள் மேற்கொண்டால் மிகவும் உபயோகமாக இருக்கும்.

# 16. குதிரையை அடக்கிய குப்பிச்சி*

**கொ**ங்கு நாட்டிலே கோயம்புத்தூர் ஜில்லாவைச் சார்ந்த பூந்துறை என்னும் ஊரில் **மாட்டையாக் குப்பிச்சி** என்ற ஒரு மல்வீரன் இருந்தான். கொங்கு வேளாளரில் காடை குலமென்னும் வமிசத்தில் பிறந்தவன் அவன்; நல்ல தேகவலிமையும் மனோதைரியமும் வாய்ந்தவன். பல மல்வீரர்களோடு மற்போர் புரிந்து வெற்றி பெற்றவன்.

அவன் பல நாடுகளுக்குச் சென்று அங்கங்கேயுள்ள விசேஷங்களை அறிந்து வருவதற்காகப் புறப்பட்டான். அக்காலத்தில் கொங்கு நாட்டிற் பெரும்பகுதி விஜய நகரத்து அரசர்களது ஆட்சியில் இருந்தது.

குப்பிச்சி யென்னும் அந்த மல்வீரன் தன் பிரயாணத்தில் விஜயநகரத்திற்கும் சென்றான். அங்கே அரண்மனையில் ஒரு சிறந்த மல்லன் இருந்தான். யாரேனும் வீரர்கள் வெளிநாட்டிலிருந்து வந்தால் அவனோடு போர் புரிந்து ஜயித்த பின்பே அரசரைப் பார்க்கமுடியும். இல்லையெனின் அந்த வீரனுக்குப் பணிந்து போக வேண்டும். ஒரு நீண்ட சங்கிலியை அரண்மனை முதல் வாயிலில் மேலே வளைவாகத் தொங்கவிட்டு அதன் ஒரு நுனியை அவன் தன் இடக்கால் விரலால் பற்றிக் கொண்டிருப்பான். வெளிநாட்டிலிருந்து வரும் வீரர்கள் தலை வணங்கி அச்சங்கிலியின் கீழ் நுழைந்து செல்ல வேண்டும். தன் கால்பட்ட சங்கிலிக்கும் வருவோர் பணிந்து போகும் வண்ணம் அவ்வளவு வன்மையும் பெருமையும் தனக்கு உண்டென்று அவன் இறுமாந்

* **கலைமகள்**, விக்கிரம, புரட்டாசி.

திருந்தான். விஜயநகரத்து அரசரும் அவன் செயலைக் கவனியாமல் இருந்தார்.

குதிரையேற்றத்தில் வல்லவராக யாரேனும் வந்தால் அத்தகையோரைப் பணிவிப்பதற்குரிய செயல் ஒன்றையும் அந்த மல்லன் செய்து வந்தான். துஷ்டத்தனமுள்ள ஒரு குதிரையை அவன் வளர்த்து வந்தான். அது வேறு யாருக்கும் அடங்காது. யாரேனும் அயலார் அதன்மேல் ஏறினால் உயிருடன் மீள்வது அருமை. அது தன் மேல் ஏறியிருப்பவனைப் பலவிதமாக அலைத்துக் கலக்கி வருத்தத்தை உண்டாக்கும்; பின்பும் அவன் கலங்காமல் இருப்பின் அவ்வூரில் உள்ள பெரிய ஏரிக்கு வேகமாகச் சென்று அதில் இறங்கும்; ஆழமான இடத்தில் அவனை மூச்சுத் திணறும்படிசெய்து வீழ்த்தி விட்டு வந்துவிடும்.

இத்தகைய தந்திரங்கள் அங்கே நடைபெற்றதனால் யாரும் மல்யுத்தம் செய்யவோ அந்தக் குதிரையை அடக்கவோ துணிவதில்லை. வரும் வீரர்கள் பேசாமல் அரசாங்கத்து மல்வீரனுக்குப் பணிந்துபோய் அரசர் தரும் பரிசுகளைப் பெற்றுக்கொண்டும் அவர் முன்னிலையில் அவன் புகழைப் பாராட்டிவிட்டும் செல்வது வழக்கமாகிவிட்டது.

குப்பிச்சி விஜயநகரத்தை அடைந்தவுடன் அங்குள்ள காட்சிகளைக் கண்டு வியந்தான். அப்பால் அரசாங்கத்து மல்வீரனது செயலைப்பற்றிக் கேள்வியுற்றான்; 'அடே! அவன் கால்விரலில் பிடித்த சங்கிலியின்கீழ் நாம் தலைகுனிந்து செல்லவா வேண்டும்? இப்படிச் செய்வதை விடப் பேசாமல் உயிரை விட்டுவிடலாமே! அந்தச் சங்கிலியை அவன் காலிலேயே

கட்டி அடிக்கிறதை விட்டுவிட்டு இந்த மானங்கெட்ட காரியத்தைச் செய்யும் மனிதர்கள் இந்த உலகில் இருப்பது ஆச்சரியம் !' என்று அவன் நினைத்தான்.

" நான் அரசாங்கத்து மல்வீரனோடு மற்போர் புரிய விரும்புகிறேன்" என்ற தன் கருத்தைக் குப்பிச்சி வெளியிட்டான். ஒருவர் அவனது தேகக்கட்டைப் பார்த்து, " நீ யாரப்பா? இந்த ஊர்ச் சங்கதி தெரியாமல் நீ பேசுகிறதாகத் தோற்றுகிறதே. இந்த ராஜாங்கத்து மல்லர் உன்னை லேசில் விடமாட்டாரே. கசக்கிப் பிழிந்து விடுவாரே. பார்ப்பதற்கு அழகாக இருக்கிறாய். பேசாமல் வந்த காரியத்தைப் பார்த்துக் கொண்டு திரும்பிவிடு" என்றார்.

" நான் வந்த காரியம் இதுதான் " என்று தைரியமாக அவ்வீரன் விடை அளித்தான்.

" சரி, உன் தலைவிதி" என்று அவர் போய் விட்டார்.

வெகுநாளாகத் தனக்கு எதிரியே இல்லை யென்று அகங்காரம் கொண்டிருந்த அரசாங்க வீரனுக்குக் குப்பிச்சியைக் கண்டபோது வியப்பு உண்டாயிற்று; " இவனா நமக்கு ஈடு கொடுக்கப்போகிறான்" என்று அலக்ஷியமாக நினைத்தான்.

குறிப்பிட்ட ஒரு தினத்தில் மற்போர் தொடங்கியது. பலநாளாக மல்யுத்தம் செய்யாமையாலும் அகங்காரத்தாலும் நலல உணவை உண்டு உண்டு தசைப்பற்று ஏறி இருந்தமையாலும் அரசாங்கத்து மல்வீரன் பழைய வலிமையை இழந்திருந்தான். அவன் நரம்புகளில் முன்பு இருந்த முறுக்கு இல்லை. வெறும் முடுக்கினால் வந்தவர்களைப் பயமுறுத்தி வந்த அவன்

குப்பிச்சியின் பலத்திற்குமுன் நிற்கமுடியவில்லை. அவன் தன் முழுப்பலத்துடன் போராடினான்; அதனோடு மானமும் போராடியது. ஒன்றும் பலிக்கவில்லை. கடைசியில் அவன் தோற்றான்.

தோற்ற பின்பும் அரசாங்க மல்லனுக்குப் புத்தி வரவில்லை. 'இவனை எப்படியாவது ஒழித்துவிட வேண்டும்' என்று எண்ணினான்.

"நீ குதிரை ஏறுவாயா?" என்று குப்பிச்சியை நோக்கி அவன் கேட்டான்.

"ஏறுவேன்" என்றான் கொங்கு நாட்டு வீரன்.

"இந்த ஸமஸ்தானத்தில் யாருக்கும் அடங்காத குதிரை ஒன்று இருக்கிறது. எனக்கு மாத்திரம் அடங்கும். நீ அதை அடக்கினால் உன்னை உண்மையில் ஒரு வீரனாக நான் மதிப்பேன்" என்று அந்தப் பொறாமைக்காரன் கூறினான்.

"ஆகா, அப்படியே செய்கிறேன்" என்று சம்மதித்தான் குப்பிச்சி.

குப்பிச்சி அந்தக் குதிரையைப்பற்றிய செய்திகளை முன்னமே அறிந்து வைத்திருந்தான். வெறும் உடல் வலிமைமாத்திரம் இத்தகைய இடங்களில் உதவாதென்பதை அவன் அறிவான். ஆதலால் அம்மல்லன் செய்யும் தந்திரத்துக்கு மாறாக வேறு ஒரு தந்திரம் செய்ய வேண்டுமென்று அவன் நிச்சயித்துக்கொண்டான்.

குதிரை குப்பிச்சியின் முன் கொணர்ந்து நிறுத்தப்பட்டது. அதற்குத் தான் சித்தம் செய்திருந்த சேணத்தை அணிந்து அதன்மேல் அவன் ஏறிக்கொண்டான். அடுத்த க்ஷணத்தில் அந்தக் குதிரை தன் முரட்டுத்தனத்தைக் காட்டத் தொடங்கிவிட்டது.

" இனி இவன் உயிரோடு மீளமாட்டான். இந்தக் குதிரை யமலோகத்துக்கு வழிகாட்டுவது என்பதை இந்தச் சிறு பையன் தெரிந்துகொள்ளவில்லை " என்று ஸமஸ்தான மல்லன் தன் நண்பர்களிடம் சொல்லி ஆறுதலடைந்தான்.

குதிரை குதித்தும் சுழன்றும் தாவியும் புரண்டும் மனோவேகத்தில் ஓடியும் தன்னுடைய பராக்கிரமத்தையெல்லாம் காட்டியது. குப்பிச்சி அதன்மேல் ஆரோகணித்துச் சிறிதும் அச்சமின்றி இருந்தான். சிறிது நேரம் அதன் போக்குப்படியே விட்டுப் பிறகு மெல்ல மெல்லத் தன் பலத்தைக் காட்ட ஆரம்பித்தான்.

அதன் வயிற்றில் காலால் அவன் உதைத்தபோது கனமான சம்மட்டியால் அடிப்பதுபோல இருந்தது. அவன் கடிவாளத்தைப் பிடித்து இழுத்த இழுப்பில் அதன் வாயே கிழிந்துவிடுமென்று தோற்றியது. அந்தக் குதிரை அவனது பலத்தை மெல்லமெல்ல உணர ஆரம்பித்தது. அதன் வாயில் நுரை பொங்கி வழிந்தது.

அந்தக் குதிரையேற்றத்தைப் பார்க்க ஜனங்கள் கூடிவிட்டனர். அரசர் முதலியோர் உயர்ந்த இடத்தில் நின்றுகொண்டு கவனித்தனர். குதிரை காற்றாடிபோலவும் சக்கரம் போலவும் சுழன்று சுழன்று அலைத்தது. அந்த வீரன் அயரவே யில்லை.

குதிரை தன் கடைசித் தந்திரத்தைச் செய்யத் துணிந்து திடீரென்று நாலுகால் பாய்ச்சலில் முன்னே குறிப்பிட்ட ஏரிக்கு ஓடியது. அதற்குள் இறங்கியது. ஜனங்களும் ஓடி வந்து கரையில் கூடினர்.

"ஐயோ, இந்த வீரனை இப்படி அநியாயமாகக் கொல்லுவது பாவம்!" என்று சிலர் முணுமுணுத்தனர்.

"இந்த ஏரிக்கு வீரசுவர்க்கம் சமீபமென்பது இவனுக்குத் தெரியாதோ?" என்று சிலர் கூறினார்கள்.

குதிரை ஏரியில் இறங்கிவிட்டது. குப்பிச்சி அதைத் தடுக்கவே இல்லை; கடிவாளத்தை இறுக்கிப் பிடிக்கவும் இல்லை. "இதென்ன இவன் இதை அடக்காமல் போகிற போக்கில் விடுகிறானே!" என்று பலர் அஞ்சினர்.

வேகமாக இறங்கின குதிரை தன் உடம்பு பாதி ஜலத்தில் மறையும் வரைக்கும் சென்றது; "சரி, அடுத்த க்ஷணத்தில் இவனைத் தள்ளிவிட்டு வரப் போகிறது" என்று யாவரும் எண்ணினர்.

குதிரையின் உடம்பு பாதி மறையும்படியான ஆழத்திற்குச் சென்றவுடன் குப்பிச்சி கடிவாளத்தை இறுக்கிப் பிடித்தான்.

என்ன ஆச்சரியம்! குதிரை மேலே நகரவில்லை. அது கரையை நோக்கித் திரும்பத் தொடங்கியது. குப்பிச்சி அதைத் திரும்ப விடவில்லை. குதிரை முன்னங் கால்களைத் தூக்கி அடித்தது. திரும்பித் திரும்பித் தன்னையே சுற்றியது. தத்தளித்துத் தவித்தது. அதன் செயல்கள் அதன் பலம் குறைந்துவிட்டதென்பதைக் காட்டின. சற்று நேரத்துக்கெல்லாம் குப்பிச்சி குதிரையின் கடிவாளத்தைத் தளர்த்தினான். அது பேசாமல் கரைப்பக்கமாக விரைந்து சென்றது. கரைக்கு வந்தவுடன் அது வீரனது இஷ்டப்படியே செல்லத் தொடங்கியது. குப்பிச்சி அதனைச் சுலபமாக அடக்கிச் செலுத்தி அரசர்முன் கொணர்ந்து நிறுத்தினான்.

அந்த ஆச்சரியத்தைக் கண்டு எல்லோரும் பிரமித்து நின்றார்கள். "இவன் தேகபலம் மாத்திரம் கொண்ட வீரனல்லன்; தெய்வபலமும் உடையவன்" என்று அவர்கள் பாராட்டினார்கள். ராஜாங்கத்து மல்லன் முகம் கவிழ்ந்தான்.

குதிரையின் முரட்டுத்தனத்தையும் ஏரியில் வீழ்த்திக் கொல்லும் உபாயத்தையும் முன்பே உணர்ந்திருந்த குப்பிச்சி சுண்ணாம்புக் கற்களை நிறைய வாங்கித் துணியில்கட்டி ஒரு சேணம்போல் அமைத்தான். வயிற்றுப் பக்கத்தில் மட்டும் அந்தச் சுண்ணாம்புக்கல் மூட்டை இருக்கும்படி அதைக் கட்டினான்.

குதிரை ஜலத்தில் இறங்கியவுடன் சுண்ணாம்புக் கல் பொங்கத் தொடங்கியது. அதன் வயிற்றில் அந்த உஷ்ணம் பட்டுப் புண்ணாயிற்று. அதனால் அது தன் கடுமை அடங்கித் தப்பினால் போதும் என்ற எண்ணங் கொண்டு கரையை நோக்கி ஓடலாயிற்று. குப்பிச்சியினிடம் அதற்கு அதிகமான பயம் உண்டாயிற்று. அதனால் அவன் செலுத்தியபடியே நடக்கத்தொடங்கியது. அவன் செய்த அந்தத் தந்திரத்தை யாரும் அறிந்துகொள்ளவில்லை.

அரசர் குப்பிச்சியை அழைத்து அவன் பேர் ஊர் முதலியவற்றை விசாரித்தார். அவனது வீரத்தைப் பாராட்டிப் பலவகைப் பரிசுகளை அவனுக்கு அளித்தார். அப்போது அந்த வீரன் அரசரை நோக்கி, "மகாராஜாவிடம் ஒரு விண்ணப்பம் செய்துகொள்கிறேன்" என்றான்.

"என்ன அது?"

"இந்த ஸமஸ்தானத்து மல்வீரர் இனிமேல் தம் காற்சங்கிலியைத் தோரணவாயிலில் கட்டி, வரும் வீரர்களை அதன் கீழே செல்லும்படி சொல்லும் வழக்கத்தை நிறுத்திவிடச் செய்யவேண்டும்."

அவன் வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டது; ஸமஸ்தானத்து மல்வீரனது அகங்காரமும் அடங்கியது.

[கொங்குமண்டல சதகம், 56-ஆம் செய்யுளை ஆதாரமாகக் கொண்டு எழுதிய வரலாறு இது.]

# 17. சில ஊர்களைப்பற்றிய குறிப்புகள்

## திருப்பனந்தாள்*

திருப்பனந்தாள் பலவகையிலும் விசேஷமான இடம். பண்டைக்காலம் முதற்கொண்டே தமிழ் நூல்களையும் பிற நூல்களையும் தன்னகத்தே தாங்கி வந்த பனந்தாளின் (பனையேட்டின்) பெயரைக் கொண்டதே இவ்வூர் தமிழ் வளர்த்தற்குரியது என்பதற்கு அறிகுறியாம். அன்றித் தாடகை யென்னும் பெண்ணிற்கு வளைந்தும், குங்கிலியக்கலய நாயனுருக்கு நிமிர்ந்தும் சிவபெருமான் அடியவர்களுக்கு எளியராய் இரங்கிய

* கும்பகோணம் போர்ட்டர் டவுன் ஹாலில் 1929-ஆம் ௵ ஸெப்டம்பர்மாதம் 15-ஆம் தேதி நடைபெற்ற திருப்பனந்தாள் ஆயிரரூபாய்ப் பரிசளிப்புக் கூட்டத்தில் தலைமை வகித்தபோது செய்த பிரசங்கத்தின் ஒரு பகுதி.


தலம் இது. க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழில் இது சுப்பிரமணிய ஸ்தலங்களில் ஒன்றாகக் கூறப்பட்டிருக்கின்றது. ஈசுவரன் சந்நிதி மேற்கு நோக்கியும் அம்பிகையின் சந்நிதி வலப்பாகத்தில் கிழக்கு நோக்கியும் இருக்கின்றன. இவ்வாறு உள்ளவற்றை உபதேச ஸ்தலம் என்பர்.

இவ்வூர்ப் பக்கத்தில் ஓடும் நதியின் பெயர் சுப்பிரமணிய நதி என்பது. இக்காலத்தில் அது மண்ணி என மருவி வழங்குகிறது. சில நல்ல பெயர்கள் அழகற்ற உருவாக மருவுதல் இயல்பு. அவ்வாறில்லாமல் பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல இந்நதியின் பெயர் கழுவுவதாகிய நதி என்னும் பொருள்பட மண்ணிநதி என்று மருவியது விசேஷமே. புறத்தே உள்ள உடம்பின் அழுக்கையும், அகத்தே உள்ள பாவ அழுக்கையும் மண்ணுவதாதலின், மண்ணி என மருவியது மிக்க பொருத்தமுடையது. எனவே மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய இம்மூன்று சிறப்புக்களையும் உடையது இத்தலம் என்பதை அறிந்தோம்.

இத்தலத்தைச் சூழ்ந்த இடங்களும் மிகச்சிறந்த தலங்களாக அமைந்திருக்கின்றன. எல்லா ஆலயங்களிலும் எவரை வணங்குதலால் சிவபெருமானுடைய தரிசனம் பூர்த்தியாகுமோ அந்தப் பெருமை வாய்ந்த சண்டேசுவரர் அவதரித்த சேய்ஞலூரும், அவர் சிவபூஜை செய்து முக்திபெற்ற திருவாப்பாடியும் இத்தலத்தைச் சார்ந்தனவே. சேய்ஞலூரில் முருகக்கடவுள் சிவபெருமானைப் பூசித்துப் பாசுபதாஸ்திரம் பெற்றார். அவரால் உண்டாக்கப்பட்டதே மண்ணியாறும். திவ்யப்பிரபந்தம் முழுவதற்கும் முதலில் சிறந்த வியாக்

கியானம் செய்த பெரியவாச்சான்பிள்ளை என்னும் பெரியார் அவதரித்த இடம் அந்தச்சேய்ஞலூரே. இன்னும், தஞ்சைக் கோயிலைக் கட்டிய முதல் ராஜ ராஜ சோழன் புதல்வனாகிய ராஜேந்திர சோழன் ஏழு மதில்களோடு கட்டிய பெரிய கோயிலையும், அரண் மனையையும் தன்பாற்கொண்ட கங்கைகொண்ட சோழ புரம் இத்தலத்திற்கு அருகில் உள்ளது.

இரண்டாவது இராஜராஜசோழன் இத்தலத் துள்ள செஞ்சடையப்பர் கொள்ளிடத்திற்கு தீர்த்தங்



கங்கைகொண்ட சோழபுரம் ஆலயம்

கொடுக்க எழுந்தருளுவதற்குத் தன் பெயரால், 'இராஜ கம்பீரன் திருவீதி' என்ற சாலையை அமைத்து இருபுறமும் தென்னைமரங்களை வைக்கச் செய்தனன் என்று சிலாசாஸனங்கள் தெரிவிக்கின்றன.

பழைய தமிழ்ப்பாட்டொன்றில்,

" தண்ணீருஞ் சோறு மளித்தான் திருப்பனந் தாட்பட்டனே "

என்று கூறப்பட்டிருத்தலால் இத்தலத்தில் ஒருவர் முன்பு பஞ்சகாலத்தில் அன்னதானம் செய்து வந்தா ரென்று தெரிகிறது. இப்பொழுது இருக்கும் மடாலயத்துத் தலைவர்களும் ஆதிகுமரகுருபரர் தினத்தில் வருஷந்தோறும் பல்லாயிரக்கணக்கான ஏழைகளுக்கு அன்னதானம் செய்கின்றார்கள். அவ்வன்னதானத்தின் பெருமை உலக முழுவதும் பரவியிருக்கின்றது. சமீப காலத்திற்கூடப் பஞ்சமர்களில் அளவிறந்த பேர்களுக் குப் பக்ஷண பரமான்னத்தோடு இலைபோட்டு உணவு அளித்ததைக் கண்டும் கேட்டும் வியந்தோர் பலர். ஸ்ரீ அன்னபூர்ணியம்மையை வழிபடும் இவர்களுக்கு இச்செயல் அமைந்ததே.

## திருவேட்டீசுவரன்பேட்டை*

இந்த ஸ்தலம் மிகவும் புராதனமானது. இது தேவாரத்தில் "சீக்காலி வல்லந் திருவேட்டியும்" என்ற தாண்டகத்தில் வைப்பாகச் சொல்லப்பட் டிருக்கிறது. இந்த ஸ்தலத்தில் உள்ள லிங்கம் ஸ்வயம்பு மூர்த்தி. பாறையின்மீது தான் ஸ்வாமி இருக்கிறார். வேட்டீசுவரன் என்றால் வேடரூபமாக வந்த ஈசுவரன் என்பது பொருள். அர்ஜுனன் பாசுப தாஸ்திரம் பெறுவதற்காகத் தவம் செய்தபொழுது

* ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கரா சார்யஸ்வாமிகள் 20–11–32-இல் காலையில் திருவேட்டீசுவரன் பேட்டையில் உள்ள அவர்கள் மடத்துக்கு விஜயம் செய்தபோது ஐயரவர்கள் செய்த பிரசங்கத்தின் ஒரு பகுதி.

வேட வடிவம் எடுத்துக்கொண்டு சிவபெருமான் அவன்முன் எழுந்தருளி அவனோடு சண்டையிட்டு அவனுடைய கையால் அடியுண்டார். அந்த அடியானது ஸர்வலோகங்களிலும் பட்டது. சிவபெருமானுடைய தலையில் பட்ட அந்த அடியின் சின்னம் உடைய சிவலிங்கங்கள் **பார்த்தப் பிரகர லிங்கம்** என்று சொல்லப்படும். அவை மிகவும் விசேஷமானவை. இந்த ஸ்தலத்தில் உள்ள லிங்கம் பார்த்தப் பிரகர லிங்கமாகும். இந்தச் சிவலிங்கப் பெருமான் திருமுடியில் ஒரு பிளவு இருக்கிறது.

இந்த இடம் மும்மூர்த்திகளும் இருக்கும் இடம். இங்கே ஆஞ்சனேயர் கோயில் இருக்கிறது. அவர் பிரம்ம பதவிக்கு உரியவராதலால் பிரம்மாவென்றே சொல்லிவிடலாம். பவிஷ்யச்சதுரானனன் என்று அவருக்கு ஒரு பெயருண்டு. திருவல்லிக்கேணியில் மகாவிஷ்ணு இருக்கிறார். இந்த இரண்டு ஸ்தலங்களும் அர்ஜுனனுடைய சம்பந்தமுடையவை. இங்கே அர்ஜுனனுக்குப் பாசுபதாஸ்திரம் கொடுக்க வந்த மூர்த்தி இருக்கிறார். அங்கே அவனுக்கு ஸாரத்யம் செய்து அவன் பெயரை முன்னுக்குக் கொண்டுவந்த பார்த்தஸாரதி இருக்கிறார். ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஸாரத்யம் செய்துகொண்டிருக்கையில் பீஷ்மருடைய பாணங்கள் அவருடைய முகத்தைத் துளைத்துவிட்டன. ஸ்வாமிக்குக் கோபம் வந்துவிட்டது. ‘இதோ தொலைத்துவிடுகிறேன் பார்’ என்று சக்கராயுதத்தைப் பிரயோகம் பண்ண எடுத்தார். அப்படி எடுத்த அவசரந்தான் பார்த்தஸாரதி கோயிலில் உள்ள மூர்த்தி. முகமெல்லாம் ரத்தக்காயம்பட்டிருந்தமை

யால் அந்த மூர்த்திக்குக் காரம் சேர்ப்பதில்லை. அர்ஜுனனுக்காக முகத்திலடிபட்ட மூர்த்தி அங்கே விஷ்ணு ஆலயத்தில் இருக்கிறார். அவனுக்காகத் தலையிலடிபட்ட மூர்த்தி இங்கே சிவாலயத்தில் இருக்கிறார்.

## வேலூர்*

இங்கே முன்பு விஜயநகரத்தரசருடைய பிரதிநிதியாகிய விரூபாக்ஷிராயரென்ற ஒருவர் அரசு செலுத்தி வந்தார். அக்காலத்தில் சிதம்பரத்தில் அவருடைய அதிகாரத்திற்குட்பட்ட ஓரதிகாரி ஸ்ரீ நடராஜப்பெருமான் சந்நிதியிலுள்ள சிறப்புக்களைக் குலைக்க ஆரம்பித்தார். அதைக்கண்டு வருந்திய சிதம்பரம் தீக்ஷிதர்கள் அவ்வதிகாரியின் செயலைப் போக்குவதற்கு வழி காணுமல் வருந்தினர்கள். பிறகு தம்மரபில் உதித்துச் சந்தானுசாரியராக விளங்கிய உமாபதி சிவாசாரியருடைய சிஷ்யரான ஸ்ரீ நமசிவாய தேசிகரிடம் இதனை முறையிட எண்ணினர்கள். நமசிவாய தேசிகர் திருவாவடுதுறை ஆதீனத்தின் முதல் தலைவர். அவரிடம் தீக்ஷிதர்கள் தெரிவித்தபொழுது அவர் தம்முடைய சிஷ்யராகிய சிவப்பிரகாச தேசிகரென்பவரிடம் சொல்லி இக்குறையை நீக்கும்படி வெளியிட்டனர்.

சிவப்பிரகாசர் இவ்வூருக்கு வந்து இக்குறையை அரசரிடம் கூறி நீக்க நினைத்தனர். இங்கே வந்த காலத்தில் இங்கே அரசருக்கு மந்திரியாக இருந்த

* 30–11–35-இல் வேலூரில் திருப்பனந்தாள் ஆயிர ரூபாய்ப் பரிசளிப்பு விழாவில் ஐயரவர்கள் செய்த பிரசங்கம்.

லிங்கண்ண பக்தர் மூலமாகத் தம் கருத்தை நிறைவேற்றிக்கொள்ளலாமென்றும், அம்மந்திரியார் வீர சைவர்களிடத்திலேதான் அதிகப் பற்றுடையவர் என்றும் அறிவித்தார். இதனை அறிந்து தம்முடைய பூஜையிலுள்ள லிங்கத்தையே வெள்ளிப் பேழையில் வைத்து மார்பில் அணிந்து வீரசைவராகிய மந்திரியாரைக்கண்டு தம் குறை நீங்கப்பெற்றார்.

அதன்பிறகு அவர் தம்முடைய ஆசிரியரின் அனுமதி பெற்று வீர சைவராக இருந்து துறையூரில் ஒரு மடத்தை ஸ்தாபித்தார். அவருடைய சிஷ்யராகிய சாந்தலிங்கர் பேரூரில் ஒரு மடம் அமைத்தார். அவர் சிஷ்யர் குமார தேவர் விருத்தாசலத்தில் ஒரு மடம் ஸ்தாபித்தார். அவர் சிஷ்யர் சிதம்பர ஸ்வாமிகள் திருப்போரூரில் ஒரு மடத்தை அமைத்தார். இவ்வாறு நான்கு வீர சைவ மடங்கள் உற்பத்தியானதற்கு முக்கிய காரணமாகிய நிகழ்ச்சி இந்த வேலூரில் நடந்தது.

சங்க நூல்களில் ஒன்றாகிய பத்துப் பாட்டிலுள்ள சிறுபாணாற்றுப்படையை நான் முதலில் ஆராய்ந்த காலத்தில் அதில் வந்துள்ள வேலூரென்பது இவ்வூரென்றே எண்ணினேன். அப்பொழுது இங்கே வந்து பார்க்கவேண்டுமென்ற அவா அதிகமாக இருந்தது. பிறகு ஆராய்ச்சியினால் அவ்வேலூர் வேறென்று தெரிந்தாலும் இதனைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை நீங்காமல் இருந்தது. இறைவன் திருவருளால் இன்று அவ்வாசை நிறைவேறியது.

இயற்றமிழாசிரியராகிய விசாகப் பெருமாளையர் பெருமையை யாவரும் அறிவார். அவர் இயற்றிய பால போத இலக்கணம் தமிழிலக்கண நூல்களுக்கு

அஸ்திவாரமாக இருக்கிறது. அவர் சென்னையில் கம்பெனியாரால் நடத்தப்பட்டு வந்த கலாசாலையில் பண்டிதராக இருந்து பெரும் புகழைப் பெற்றவர். அவர் உபகாரச் சம்பளம் பெற்றபின்பு இவ்வூரிலிருந்த தம்முடைய மருமகராகிய இரத்தினவேலு ஐயர் வீட்டிலேயே இருந்து வந்தார். இந்த ஊர் அவருடைய பெரிய புலமைத் திறத்தை நினைப்பதற்கு இடமாக விளங்குகின்றது. இந்த இரத்தினவேலு ஐயர் மூலமாக எனக்குத் தொல்காப்பியம் பொருளதிகாரம் முழுவது முள்ள ஏடு கிடைத்தது.

## திருச்சிராப்பள்ளி*

திருச்சிராப்பள்ளியில் அகில இந்திய ரேடியோ வின் கிளை ஒன்றை ஆரம்பிப்பது தெரிந்து மிக்க சந்தோஷமடைகிறேன். தமிழ் நாட்டுக்கு உபயோக முள்ள விஷயங்களைத் தமிழிலே பரப்பும் அரிய தொண்டை இந்த ஸ்தாபனம் முக்கியமாகக் கொண் டுள்ளதென்பதை எண்ணுகையில் என் உள்ளம் திருப்தியுறுகின்றது.

இவ்விஷயத்தை நான் முதல் முதலில் அறிந்த போது, எனக்கு வேறொரு ரேடியோவின் ஞாபகம் வந் தது. இந்த ரேடியோ இருந்த இடத்திலிருந்து பல ருடைய செவிகளுக்கு நல்லுரையாகிய விருந்தை உதவு வது. நான் குறிப்பிடும் ரேடியோ திருச்சிராப்பள்ளி யிலேதான் தோன்றியது. ஆனால், அது பல இடங்க ளுக்குச் சென்று தன் நல்லுரையாகிய அமுதத்தைப்

*திருச்சிராப்பள்ளியில் அகில இந்திய ரேடியோ நிலயத்தின் திறப்புவிழாவன்று (21—5—39) படிக்கப் பெற்றது.

பிறர் செவியிலே பாயும்படி செய்தது. பலர் அந்த ரேடியோவினிடத்திலே சென்று பல உரைகளைக் கேட்டுப் பயனடைந்தனர். ஆனால், அந்த ரேடியோ உயிருள்ளது; தானே பேசுவது; இதுவோ பிறர் பேசுவதைப் பரப்புவது.

நான் குறிப்பிடும் ஆச்சரியமான ரேடியோ சென்ற நூற்றாண்டில் இந்தத் திருச்சிராப்பள்ளியில் இருந்தது. திருவாவடுதுறை, சென்னை, பட்டீசுவரம், கும்பகோணம், மாயூரம் என்னும் நகரிலுள்ளவர்கள் அந்த உயிருள்ள ரேடியோவைக் கேட்டனர். அப்படி கேட்டுப் பயன் பெற்றவர்களில் நானும் ஒருவன். நான் உங்களுக்கு இந்தச் செய்தியை அனுப்பும் தகுதி பெறுவதற்கு முதற்காரணம் அந்த உயிருள்ள ரேடியோதான்.

**திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்** என்ற தமிழ்ப்பேரறிஞரைத்தான் இவ்வாறு குறிப்பிடுகிறேன். என்னுடைய ஆசிரியரென்பதற்காக மட்டும் அவர்களை இங்கே குறிப்பிடவில்லை. அவர்கள் இந்த ரேடியோ ஸ்தாபனம் உள்ள ஸ்தலத்தில் உதித்தவர்கள். அவர்களுடைய கவி மயமான உரைகளும், மாணாக்கர்களுக்குப் பாடம் சொல்லும் முகமாக வந்த உரைகளும் அக்காலத்தில் தமிழுலகை நிரப்பி நின்றன. அவர்களுடைய கவித் தொகுதி இன்னும் தமிழ் நாட்டில் நிலவி யிருக்கின்றது.

திருச்சிராப்பள்ளியின் ஞாபகம் என் ஆசிரியர் நினைவை முதலில் உண்டாக்குகிறது. அப்பால் பழைய காலத்தின் நினைவைத் தோற்றச் செய்கின்றது. இதனருகில்தான் உறையூர் இருக்கிறது. உறையூர் கரிகாற் சோழனது இராசதானியாகப் பெரும் புகழ் பெற்றது.

அங்கே இருந்த 'அறங்கூறவையம்' என்னும் நியாய சபை சங்க நூல்களில் பாராட்டப் பெறுகிறது. அந் நகரில் புலவர்கள் இருந்து தமிழை ஆராய்ந்து வந் தனர். கடைச் சங்கப் புலவர்களிற் சிலர் உறையூரில் வாழ்ந்தவர்கள்.

கரிகாலன் காலத்தில் உறையூர் பெரிய நகரமாக விரிவுபெற அமைக்கப் பெற்றது. அவன் தனக்குக் காவிரிப்பூம் பட்டினமாகிய கடற்கரை நகரம் இருப்ப தோடு, உள்நாட்டு நகரமொன்றும் வேண்டுமென்று விரும்பினான். இராசதானியாதற்கு ஏற்ற சிறப்புடைய ஊர் எதுவென்று பார்ப்பதற்காக ஒரு யானையின்மேல் ஏறிப் பரிவாரங்கள் தொடர வந்தான். உறையூருக்கு அருகில் வருகையில் ஒரு கோழி அந்த யானையை எதிர்த்துப் பொருததாம். அதைக்கண்ட கரிகாலன் 'பறவை யென்னும் பெயர் கொண்டதையன்றிப் பறத் தற்கும் ஆற்றல் இல்லாத இக்கோழி விலங்குகளிற் பெரிதாகிய இந்த யானையை எதிர்க்க வேண்டுமெனில் இந்த மண்ணுக்கே தனிப் பெருமை இருக்கவேண்டும். நம்முடைய போக்கை இக் கோழி தடுத்து நிறுத்திய தோடு இவ்விடத்தின் பெருமையையும் புலப்படுத்தி யது. இந்த இடமே நமக்கு ஏற்ற ராஜதானி' என்று கருதி அங்கே நகரத்தை உண்டாக்கினான். ஒரு கோழி யால் அறிந்து அமைக்கப்பெற்ற நகரமாதலின் அதற் குக் கோழியென்ற பெயரும் ஏற்பட்டது.

தமிழ் நாட்டின் மத்திய ஸ்தானத்தில் திருச்சிராப் பள்ளி இருக்கின்றது. இந்த நகரத்திலுள்ள குன்றை,

**"கறங்கிசை விழவி னுறந்தைக் குணாது
நெடும்பெருங் குன்றம்"**

என்று சங்க காலப் புலவர் ஒருவர் அகநானூற்றில் சொல்லுகிறார். இக் குன்றத்தின்மேலே பல்லவர் காலத்தில் மலையைக் குடைந்து அமைக்கப் பெற்ற குகைகளும் அவற்றில் அருமையான சிற்பங்களும் இருக்கின்றன. தமிழ் நாட்டுச் சிற்பியர்களுடைய கலைத் திறமை அச் சிற்பங்களிலே விளங்குகின்றது. 104 செய்யுட்கள் அடங்கிய அந்தாதி ஒன்று இக் குன்றின்மேலுள்ள கல்வெட்டிற் காணப்படுகின்றது. சாதாரணமாக நூறு பாட்டைச் சுலபமாக எழுதக்கூடிய பேனா முதலிய கருவிகளைக் கொண்டு காகிதத்தில் எழுதுவதென்றாலே நமக்கு எவ்வளவோ கஷ்டமாக இருக்கிறது. இந்தக் குன்றின்மேல் கல்லில் நூற்று நான்கு பாடல்களுள்ள தமிழ் நூலொன்றை எழுதினார்களென்றால், அவர்களுக்கு எவ்வளவு பொறுமையும் தமிழபிமானமும் இருந்திருக்க வேண்டும்! அந்த அந்தாதியும் பிற சிற்பங்களும் குன்றின்மேலிட்ட விளக்கைப்போல விளங்குகின்றன.

திருச்சிராப்பள்ளி சிறந்த சிவஸ்தலம். இதைச் சூழத் திருவானைக்கா, திருக்கற்குடி, மூக்கீச்சுரம் முதலிய சிவ ஸ்தலங்கள் உள்ளன. இதற்கருகிலேதான் வைஷ்ணவர்கள் 'கோயில்' என்று கொண்டாடும் முதல் திருப்பதியாகிய ஸ்ரீரங்கம் இருக்கின்றது. அருணகிரி நாதருக்கு முருகக் கடவுள் அருள்செய்த வயலூரென்னும் சுப்பிரமணிய ஸ்தலம் இதனருகே உள்ளது.

இவ்வாறு, இந்தத் திருச்சிராப்பள்ளி தெய்வங்களுக்கு உறைவிடமாகவும், பழைய சோழ இராசதானியோடு சம்பந்தப்பட்டதாகவும், தமிழுக்கும் சிற்பத்துக்

கும் பெருமை தருவதாகவும் அமைந்திருக்கிறது. இத்தகைய இடத்தில் அமைக்கப் பெறும் ரேடியோ ஸ்தாபனம் தமிழ்நாட்டினருக்குத் தெய்வ நம்பிக்கையையும், உலகியலறிவையும், தமிழன்பையும், கலைச் சுவையையும் உண்டாக்கும் நல்லுரைகளைப் பரப்பி நன்மையை விளைவிக்குமென்று நம்புகிறேன்.

இந்த நிலயம் மேன்மேலும் சிறப்புற்று விளங்க வேண்டுமென்று இறைவன் திருவருளைச் சிந்திக்கின்றேன்.

# 18. வில்லைச் சேவகன்*

“இந்தா அப்பா, உன்னைத்தான். எனக்குப் பல தபால்கள் வரும். அவைகளை எடுத்துக்கொண்டு வந்து கொடுப்பாயா?” என்று நான் கேட்டேன்.

நான் சொன்ன வார்த்தைகளை அந்த மனிதன் காதில் போட்டுக் கொண்டதாகவே தெரியவில்லை. வேறு முக்கியமான வேலையைக் கவனிப்பவன்போலிருந்தான்.

“உன்னைத்தான், அப்பா. என் தபால்களையும் சேர்த்து வாங்கி வைத்திருந்து கொடுக்கிறாயா?” என்று மறுபடியும் நான் மெல்லக் கேட்டேன்.

அவன் அருகிலிருந்த மற்றொருவனை அலக்ஷியமாகப் பார்த்து, “டே, இவர் என்ன சொல்லுகிறார், கேள்” என்று சொல்லிப் போய்விட்டான். நேரே நான் சொல்வதைக் கேட்டுக் கவனிப்பது அவன் அந்

* ஆனந்தவிகடன், 20—7—1941.

தஸ்திற்குத் தாழ்ந்ததென்று அவன் நினைத்தான் போலும்! இல்லாவிட்டால், உண்மையில் நான் சொல் வதைக் கவனிக்க அவனுக்கு அவகாசம் இல்லையோ, என்னவோ?

சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜுக்கு நான் வந்த காலத்தில் காலேஜ் திறந்தபோது இது நிகழ்ந் தது. திருவேட்டீசுவரன் பேட்டையில் குடியிருக்கும் எனக்கு வரும் தபால்களை மாலையில் வீட்டிற்குச் சென்று பார்ப்பதை விடக் காலேஜுக்கே வருவித்துப் பார்த்து விடுவது நல்லதென்று தபால் ஆபீஸில் ஏற் பாடு செய்திருந்தேன். அந்தத் தபால்கள் மற்றத் தபால்களோடு சேர்ந்து காலேஜுக்கு வரும். அவற் றைத் தனியே எடுத்துவைத்துக் கொடுக்கவேண்டு மென்பதைத்தான் அந்தச் சேவகனிடம் சொன்னேன். நான் சொல்வதைக் கேட்கக்கூட அந்தப் பியூனுக்கு அவகாசமில்லை; தன் உதவி உத்தியோகஸ்தனாகிய சின்னப் பியூனை ஏவினான்.

வில்லைச் சேவகனென்றால் அவனுடைய பரபரப் பும் உத்ஸாகமும் கௌரவமும் தனி. பள்ளிக்கூடம் திறக்கும்போது அவனுடைய சுறுசுறுப்பு நூறு மடங்கு அதிகமாகிவிடும். அந்தக்காலத்தில் பம்பரம் போலச் சுற்றிச் சுற்றி அவன் தன் வேலையைப் பார்ப் பதைக் கவனித்தால் நமக்கே ஆச்சரியம் உண்டாகும். வாசலில் நின்று துரையின் குடையை வாங்கி வைப் பான். அடுத்தநிமிஷம் தாழ்வாரத்தில் வெகு வேக மாகப் போய்க்கொண்டிருப்பான்; மறு விநாடியில் 'ரைட்டர்'ருடைய அறையில் இருப்பான்; புதிய மாணாக்கர்களை அழைத்து வருவான்; பழைய மாணாக்

கர்களை வரவேற்பான்; இடையிடையே யாரையாவது பார்த்து ஓர் அதட்டல் போடுவான். எங்கும் இருப்பான்; எல்லாரோடும் பேசுவான்.

என்ன சுறுசுறுப்பு! என்ன பரோபகாரம்! பள்ளிக்கூடப் பிள்ளைகளிடத்தில்தான் அவனுக்கு எத்தனை அன்பு! பணக்கார வீட்டுப் பிள்ளைகளிடத்தில் அவன் பழகுகின்ற விதமே வேறு. பையன் வண்டியிலிருந்து இறங்கும்போதே புஸ்தகங்களை வீசி யெறிவான். அவைகளைப் பந்துபோல அப்படியே பிடித்துக்கொள்வான் 'பியூன்'. மாணுக்கன் பள்ளிக்கூடத்தைச் சுற்றி உலாவந்து தன் சிநேகிதர்களுடன் சல்லாபம் செய்து முடித்தபிறகு வகுப்புக்குப் போகலாமென்று திருவுள்ளங்கொண்டு அங்கே போனல் அவன் புஸ்தகங்கள் அவனுடைய மேஜையின்மேல் முன்பு தயாராக இருக்கும். வெற்றிலை பாக்கு, பொடி, காப்பி, பக்ஷணம், பழம் எது வேண்டுமானலும் வில்லைச் சேவகன் மனம் குளிர்ந்தால் வருவித்து விடுவான். அந்தக் காலத்தில் சிகரெட் பள்ளிக்கூடத்திற்கு வரவில்லை.

பள்ளிக்கூடத்தில் வேலைசெய்யும் ஆசிரியர்களுக்கும், மேலதிகாரிகளுக்கும் மாணுக்கர்களிடத்தில் உள்ள சிரத்தையை விடப் பள்ளிக்கூடச் சேவகனுக்குத்தான் அதிக சிரத்தை. மாணுக்கர்களுடைய மனம் கோணுமல் நடப்பதற்கு ஆசிரியர்கள் பழகவில்லை. சேவகனே அதைத்தான் முதலில் கற்றுக்கொள்கிருன். பிள்ளைகளோடு எப்படிப் பழகவேண்டுமென்பதை ஆசிரியர்கள் எவ்வளவோ புஸ்தகங்களைப் படித்து ஆராய்ந்து பரீட்சை கொடுத்துத் தெரிந்துகொண்டதாகச் சொல்கிருர்கள். ஒரு புஸ்தகத்தையும் வாசியாமல் ஒரு

பரீட்சையும் கொடுக்காமல் அவர்கள் மன நிலையை அறிந்துகொண்டவன் சேவகன்தான். அவன் ஓர் அதிசய மனித னல்லவா?

நான் யாருடைய தயவை விரும்பினேனே அந்தப் பியூன் என்னைக் கண்டு முதலில் மதிக்கவில்லை. என்னுடைய தலைப்பாகையையும் நெடிய வெள்ளைச் சட்டையையும் பஞ்ச கச்ச வேஷ்டியையும் கண்டு, 'இவரோடு பேசும் நேரத்தில் இன்னும் இரண்டு பேர்களுக்குப் பயனுள்ள காரியத்தைக் கவனிக்கலாம்' என்று எண்ணிப் போய்விட்டான். அவனுக்கு எவ்வளவோ வேலை.

பள்ளிக்கூடம் திறந்தால் எல்லோருக்கும் வேலை அதிகமாகவே இருக்கும். ஆசிரியர்களுக்குப் பாடத் திட்டத்தில் ஓர் ஒழுங்கு ஏற்படும்வரையில் வேலை அதிகம்; காலேஜ் தலைவருக்கோ புதிய மாணுக்கர்களையும் அவர்களை அழைத்து வருபவர்களையும் அவர்களுடைய நண்பர்களையும் பார்த்துப் பேசுவதும், அவர்கள் கொண்டுவரும் சிபார்சுக் கடிதங்களைப் பார்ப்பதுமாகப் பல வேலைத் தொல்லைகள் இருக்கும். ரைட்டருக்கோ சொல்லவேண்டியதே இல்லை. இவ்வளவு பேர்களும் தங்கள் தங்கள் வேலையைக் கடமையென்று எண்ணிச் செய்துவந்தார்கள். அதனல் அவர்களுக்குப் புதிய சந்தோஷம் ஒன்றுமில்லை.

ஆனல் ஸ்ரீமான் வில்லைச் சேவகனுக்கோ பள்ளிக்கூடம் திறந்ததென்றல் புது வருஷம் பிறந்ததுபோன்ற குதூகலம் உண்டாகும். அப்பொழுது அவன் உடம்பில் ஒரு புதிய முறுக்கு, முகத்தில் புதிய களை, உள்ளத்தில் புதிய சந்தோஷம் ஏற்படுகின்றன.

அவனால் ஆகாத காரியமே இல்லை. புத்திசாலி யான மாணாக்கர்கள் அந்த முன்னடியானைத் திருப்தி செய்து எவ்வளவோ காரியத்தைச் சாதித்துக்கொள் வார்கள். அவனுடைய கோபத்துக்கு இலக்காகிவிட் டாலோ எவ்வளவோ தடைகள் உண்டாகும்.

கும்பகோணம் காலேஜில் ஹென்ஸ்மன் என்ப வர் பிரின்ஸிபாலாக இருந்தபோது ஒரு சேவகனை எதற்காகவோ கண்டித்தார். அவன் சிறிதும் அஞ்ச வில்லை; "அதிகமாகப் பேசவேண்டாம். நீங்களும் சர்க்கார் சம்பளக்காரர். நானும் சர்க்கார் சம்பளக் காரன். உங்களுக்குள்ள சுதந்திரம் எனக்கும் உண்டு" என்று எதிர்த்துப் பேசத் தொடங்கினான். ஹென்ஸ் மன் தயையுள்ளவராகையால் ஒன்றும் செய்யவில்லை.

அவருக்குப் பின்பு பிரின்ஸிபாலாக வந்த நாகோஜி ராவ் என்பவர் இந்த விஷயத்தைத் தெரிந்து கொண் டார். ஒரு நாள் ஓர் ஆசிரியர், "நான் கூப்பிட்ட போது ஒரு பியூனும் வரவில்லை" என்று ஒரு விண் ணப்பம் எழுதி யனுப்பினர். அதன் மேல் நாகோஜி ராவ் பியூன்களுக் கெல்லாம் ஓர் உத்தரவு போட்டார்: "ப்யூன்கள் எப்போதும் இந்தக் காலேஜைச் சுற்றிக் கொண்டே யிருக்க வேண்டும். யார் கூப்பிட்டாலும் தயாராக இருக்கவேண்டும். எந்த இடத்திலும் நிற்கக் கூடாது" என்பது அவ்வுத்தரவு. அது முதல் அந்தச் 'சர்க்கார்ச் சம்பளக்கார'ரோடு மற்றச் சேவகர்களும் சுற்றிச் சுற்றிக் காலோய்ந்து போயினர். அவனுக்குக் கால் வலி எடுத்தது. விஷயம்தெரிந்த மற்றச் சேவகர் கள் அவனை, "அட படுபாவி! உன்னால் அல்லவோ எங்களுக்குக் கஷ்டம் உண்டாயிற்று?" என்று கண்

டிக்கத் தொடங்கினர். இதைக் காட்டிலும் வேறு தண்டனை எதற்கு? அவன் வர வரப் பழைய முறுக்குத் தளர்ந்து போய்ப் பெட்டிப் பாம்பு போல் ஆகி விட்டான்.

வில்லைச் சேவகர்களே ஒரு தனி வகுப்பு. ஜனங்களுடைய ஆவலை அளந்து பார்த்துச் சமயத்தில் 'பிகு' பண்ணுவதும், கல் நெஞ்சர்களையும் கலங்க வைப்பதும், எந்தச் சமயத்தில் மனிதர்களிடமிருந்து லாபம் பெறலாமென்பதை அறிந்து நடப்பதும் அவர்களுடைய தொழில் இரகசியங்கள். பள்ளிக்கூடத்துச் சேவகனைப் பரம சாது வென்று சொல்ல வேண்டும்; கலெக்டர் கச்சேரி, மற்ற ஆபீஸுகள், ஆஸ்பத்திரிகள் முதலிய இடங்களிலுள்ள வில்லை மார்பு வீரர்கள் எல்லோர் கண்ணிலும் விரலை விட்டு ஆட்டி விடுவார்கள். ஆஸ்பத்திரியைத் தான் பார்க்கலாமே. அந்தப் பியூன்களுக்குப் பிரீதி செய்யாவிட்டால் சாமான்யமாக ஆஸ்பத்திரிக் கோட்டைக்குள் நுழைய முடிகிறதா? எத்தனை கேள்விகளை அவர்கள் சரமாரியாகப் போடுகிறார்கள்? எவ்வளவு சட்டம் பேசுகிறார்கள்? எவ்வளவு அலக்ஷியமாகப் பார்க்கிறார்கள்! அந்தப் பார்வையிலேதான் எத்தனை கம்பீரம்! அவர்கள் கையில் அதிகமாக வேண்டாம்; இரண்டணுவை இரகசியமாக வைத்து அழுத்துங்கள்; அப்புறம் அவர்கள் உங்களுக்கு அடிமையாகி விடுகிறார்கள். அவர்களுக்குத் தெரியாமல் அவர்கள் தயையை எதிர்பாராமல் ஆஸ்பத்திரியில் நுழைபவர் யாரும் இல்லை; யமன் ஒருவனுக்குத் தான் அந்தச் சுதந்திரம் உண்டு.

சப் ரிஜிஸ்டிரார் ஆபீஸ், கோர்ட்டு முதலிய

காரியாலயங்களில் விநாயகக் கடவுளைப் போல முதலில் காட்சி கொடுக்கும் வில்லைக் சேவகர்களிடம் அகப்பட்டுக் கொண்டவர்களுடைய அநுபவங்களைக் கேட்டால் மிகவும் ரஸமுள்ள புராணமாக விரியும். "ஸ்வாமி வரங் கொடுத்தாலும் பூசாரி வரங் கொடுக்க வேண்டாமா?" என்ற பழமொழியை மாற்றி "அதிகாரி வரங் கொடுத்தாலும் வில்லைச் சேவகன் வரங் கொடுக்க வேண்டாமா?" என்று புது மொழியாக்கி விட்டால் இக்காலத்தில் எல்லோருக்கும் விளங்கும்.

ஆனாலும், இந்த வில்லைச் சேவகர்கள் அற்ப சந்தோஷிகள். சில அணுக்களால் அவர்களைத் திருப்தி பண்ணி விடலாம். 'மலையத்தனை சாமிக்குக் கடுகத்தனை கற்பூரம்' என்பதுபோல மலைபோல நிற்கும் வில்லைச் சேவகனுக்கு ஓரணா இரண்டணா அவ்வப்போது வீசி எறிந்து விட்டால் நம் காரியம் பாதி ஜயமானது போலவே எண்ணி விடலாம்.

இந்த மர்மம் எனக்கு அநுபவத்தால் தெரிந்த பிறகு எந்தச் சேவகனையும் நான் சுலபத்தில் வசப்படுத்தி விடத் தொடங்கினேன். காலேஜில் முதலில் என்னிடம் பராமுகமாக இருந்த 'பியூன்' அப்பால் என் வேலை எதையும் தட்டாமல் செய்யத் தொடங்கினான். என்னிடம் அவனுக்கு அளவற்ற பிரீதி உண்டாகி விட்டது. என்னிடம் தமிழ் நூலைப்பாடம் கேட்டு அப்படியாகி விட்டதாக எண்ண வேண்டாம். விசேஷ காலங்களில் அவனை நான் 'கவனித்துக் கொள்'வேன். நாம் அவனை அடிக்கடி கவனித்துக் கொண்டால் அவனும் நம்மைக் கவனிப்பதற்கு என்ன தடை?

நான் காலேஜ் வேலையி லிருந்து ஓய்வு எடுத்துக் கொண்டேன். அந்தப் பியூனும் வேலையி லிருந்து 'பிஞ்ஜின்' பெற்றுக் கொண்டான். நான் கிழவனாகி விட்டேன்; அவனும் கிழவனாகி விட்டான். இப் போதும் விசேஷ காலங்களில் என் வீட்டிற்கு வந்து என்னிடம் பழைய கதைகளைச் சொல்லிவிட்டு வழக்கம் போல ஏதாவது பெற்றுக் கொண்டு போகிறான். காலேஜ் உறவு விட்டுப் போய் எவ்வளவோ வருஷங்க ளாகியும் அவனுடைய உறவு மட்டும் விடவே இல்லை.

# 19. ஹரதத்தரின் சிவபக்தி*

**சை**வத்தின் மேன்மையைத் தம்முடைய செயல் களாலும், நூல்களாலும் நிலைநிறுத்திய பெரியார்களுள் ஸ்ரீ ஹரதத்த சிவாசாரியார் ஒருவர். சோழவள நாட்டில் கஞ்சனூரென வழங்கும் †கம்ஸபுரம் என்னும் ஸ்தலத்தில் ஸ்ரீவைஷ்ணவ குலத்தில் அவர் உதித்தார். பிறகு சிவபக்தராகி அவர் சுருதி சூக்தமாலை, சுலோக பஞ்சகம் முதலிய நூல்களை அருளிச் செய்தவர். அவரைக் கஞ்சனூராழ்வார் எனவும் சொல்வதுண்டு.

ஹரதத்த சிவாசாரியார் வேதாகமங்களிலும் சாஸ்திரங்களிலும் சிறந்த தேர்ச்சி பெற்றவர். சிவ பூஜையை முறைப்படி செய்து அதில் இன்பம் காணுபவர். அக்காலத்தில் ஆண்டுவந்த அரசனுக்குக்

---

* கல்கி, 1—8—41.

† இது திருவாவடுதுறைக்கு வடமேற்கே ஒரு மைல் தூரத்தி லுள்ள ஒரு சிவஸ்தலம்.

குருவாக விளங்கினார். அவ்வரசன் தமக்கு அளித்த பொருளைக்கொண்டு அவர் திருவிடைமருதூரிலுள்ள காருண்யாமிர்தமென்னும் தீர்த்தத்திற்குப் படிக் கட்டுக்கள் கட்டுவித்தார். தினந்தோறும் கஞ்சனூர் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள அக்கினீசுவரரையும், கற்பகவல்லியம்மையையும் தரிசிப்பதோடு வேறு சில சிவஸ்தலங்களுக்கும் சென்று தரிசனம் செய்து வருவதை ஒரு நியமமாக அவர் வைத்துக்கொண்டிருந் தார். முக்கியமாகப் பிரதோஷ காலத்தில் திருவிடை மருதூருக்குச் சென்று ஸ்ரீ மஹாலிங்க மூர்த்தியை வழிபடும் விரதமுடையவர்.

ஒருநாள் பகலில் அவர் சிவபூஜை செய்வதற்கு அமர்ந்தார். சிவபெருமானின் திருவுருவங்களாகிய ஸத்யோ ஜாதம் முதலிய ஐந்து மூர்த்தங்களையும் ஐந்து தீர்த்த பாத்திரங்களில் ஆவாகனம் செய்து ஜபித்து, ருத்ரம் சமகம் முதலியவற்றைச் சொல்லி அத்தீர்த் தைக்கொண்டு சிவலிங்கத்துக்கு அபிஷேகம் செய்வது அவர் வழக்கம். அப்படியே அன்று ஆவாகனம் செய்து ஜபம் செய்யும்போது கண்ணை மூடிக்கொண்டு தியானத்தில் இருந்தார். அச்சமயம் ஒரு நாய் உள்ளே வந்து ஒரு பாத்திரத்திலுள்ள அபிஷேக தீர்த்தத்தை நக்கத் தொடங்கியது. ஹரதத்தர் கண்ணைத் திறந்து பார்த்தார். நாய் அபிஷேக தீர்த்தத்தை எச்சிற் படுத்திக்கொண்டிருப்பதை உணர்ந்தார். அவர் அதை ஓட்டவில்லை. அது தன் தாகம் தீருமட்டும் தீர்த்தத் தைப் பருகிப் போய்விட்டது. அப்பெரியவர் வழக்கம் போல நான்கு பாத்திரங்களிலுள்ள தீர்த்தத்தோடு ஐந்தாம் பாத்திரத்தில் நாய் உண்டு எஞ்சிய தீர்த்தத்

த்தையும் சிவலிங்கப்பெருமானுக்கு அபிஷேகம் செய்தார்.

அருகில் இருந்து அதைக் கவனித்த சிலருக்கு அப்பெரியார் செய்த காரியம் உசிதமாகத் தோற்ற வில்லை. அந்நாயை ஓட்டாமல் இருந்தது அவரது கருணை மிகுதிக்கு அடையாளமானாலும், அதனால் எச்சிற்படுத்தப்பட்ட தீர்த்தத்தை அபிஷேகம் செய்தது மாத்திரம் அவர்கள் மனத்தில் ஒரு பெரிய சங்கடத்தை உண்டாக்கிவிட்டது. சிறந்த ஆசாரசீலராகிய ஹர தத்தர் அவ்வாறு செய்ததை மறுப்பதற்கும் அவர் களுக்குத் தைரியம் உண்டாகவில்லை. ஆனாலும் அவர்கள் அச்செய்தியை மெல்ல அயலார்களுக்குத் தெரிவித்தனர். கேட்டவர்கள் யாவரும் ஒன்றும் தெரியாமல் மயங்கினர். அச்செய்தி எங்கும் பரவியது. கடைசியில் வேதாத்தியயனம் செய்து ஒழுக்கத்தால் நிரம்பிய சிலர் அப்பெரியாரை அணுகி, "ஒரு சந்தேகம் இருக்கிறது. அதைப் போக்கவேண்டும்" என்று ஆரம்பித்தார்கள்.

அவர்கள் கருத்தை ஹரதத்தர் ஊகித்துக் கொண்டார்; "உங்கள் சந்தேகத்தை நீங்கள் வெளிப் படையாகச் சொல்வதற்குமுன்பே நான் சமாதானம் சொல்லுகிறேன்; கேளுங்கள்: வேதங்களுக்குள் சிறந்த தாகிய யஜுர் வேதத்தின் மத்திய பாகமாக இருப்பது ஸ்ரீருத்ரம். பரமேசுவரனுடைய பெருமையை அது வெகு விரிவாக வெளிப்படுத்துவது. அதில் 'ஸ்வப்ய ஸ்வபதிப்யஸ்ச' என்று வருகிறது ஞாபகம் இருக் கிறதா? அதற்கு என்ன அர்த்தம்? நாயாகவும் நாய்க்குத் தலைவனாகவும் இருப்பவன் பரமசிவன் என்ற

தாத்பர்யம் அதனால் விளங்குகிறதே. அபிஷேக தீர்த்தத்தை நக்கிய அந்நாயை நான் பரமசிவனாகவே பாவித்தேன். நான் ருத்திர ஜபம் செய்துகொண்டிருந்த சமயம் அது; 'அந்த ருத்திரம் வாயளவில் இருக்கிறதா? மனத்திலும் இருக்கிறதா?' என்பதைப் பரிசோதிப்பதற்காகப் பரமேசுவரன் செய்த லீலை இதுவென்பதே என் எண்ணம்" என்றார் அந்தச் சிவ ஞானி. ஆக்ஷேபம் செய்ய வந்தவர்கள் மறுமொழி ஒன்றும் கூற இயலாமல் அப்பெரியாரை வந்தனம் செய்துவிட்டுச் சென்றனர்.

நாய் மேலேபட்டால் ஸ்நானம் செய்வது அந்தக் காலத்து வழக்கம். அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு கஞ்சனூரிலும் அதைச் சார்ந்த மணலூர், துகிலி, கோட்டூர் என்னும் அக்கிரகாரங்களிலும் நாய் மேலேபட்டால் அதனை அசுசியாகக் கருதி ஸ்நானம் செய்வதில்லை.

ஒருநாள் சாயங்காலம் ஹரதத்த சிவாசாரியார் திருவிடைமருதூர் ஆலயத்திற்குச் சிவதரிசனம் செய்யும் பொருட்டு வந்தார். ஆலயத்தினுள் நுழையும்போது ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்டது. "இல்லை; இனிமேல் இல்லை" என்று அவள் சொல்லிச் சொல்லி அழுதாள். அவர் எங்கிருந்து அவ்வொலி வருகிறதென்று கவனிக்கும்போது ஆலய வாசலின் ஒரு பக்கத்தில் அந்த ஆலயத்தைச் சேர்ந்த ருத்திர கணிகையர் சிலரை ஆலய மணியகாரர் தண்டித்துக் கொண்டிருந்தார். முதலில் ஒருத்திக்கு அண்ணாந்தாள் பூட்டி அவள் முதுகில் கல்லை ஏற்றிக் கையில் பிரம்புடன் அவளைப் பயமுறுத்திக் கொண்டிருந்தார். கணிகையோ தண்டனையைத் தாங்க முடியாமல் கதறினாள்.

ஹரதத்தர் கண்ணில் அந்தக் கர்ட்சி பட்டது. அவருக்கு மிக்க இரக்கம் உண்டாயிற்று. அவர் ராஜகுரு வென்றும் பெரிய மஹானென்றும் உணர்ந்து ஆலயத்தைச் சார்ந்தவர்களும் மற்ற ஜனங்களும் அவர்பால் பயபக்தியோடு நடந்துகொள்வார்கள். அங்கே நின்றிருந்த ஆலய அதிகாரி ஒருவரை அழைத்து "ஏன் ஐயா இப்படி அந்தப் பெண்ணை வருத்துகிறீர்கள்?" என்று கேட்டார்.

அதிகாரி, "இவள் இந்த ஆலய கைங்கரியம் செயயும் ருத்திர கணிகையர்களில் ஒருத்தி. ஒரு வார மாக ஆலயத்திற்கு வரவே இல்லை. இடையிடையே இவள் மஹாலிங்க மூர்த்தியின் கைங்கரியம் செய்யா மல் இப்படியே தவறு செய்து வருகிறாள். பல முறை வார்த்தைகளால் கண்டித்துப் பார்த்தோம். அபராதம் போட்டோம். மீண்டும் மீண்டும் இந்தக் குற்றத்தைச் செய்து வருகிறாள். அதனால் தண்டோபாயந்தான் இவளைத் திருத்துவதற்கு ஏற்றதென்று இவ்வாறு செய்கிறோர்கள்" என்று விஷயத்தை விளக்கினார்.

இயல்பாகவே மிக்க இரக்கத்தோடு அதைக் கேட்டு வந்த அப்பெரியார், அதிகாரி சொல்லச் சொல்ல ஏதோ துக்கத்தில் ஆழ்ந்தவரைப்போல விம்மத் தொடங்கினார். அவர் உதடுகள் துடித்தன. உடம்பில் ஒரு படபடப்பு உண்டாயிற்று. விஷயம் முழுவதை யும் அதிகாரி சொல்லி முடித்தவுடனே ஹரதத்தர் அப்படியே கீழே விழுந்து புரண்டு புரண்டு கதறத் தொடங்கினார்.

அதைக்கண்ட யாவரும் திடுக்கிட்டுப் போயினர். தாசியைத் தண்டித்தவர்கள் தண்டனையை நிறுத்தி

அவரைப் பார்த்தனர். அழுதுகொண்டிருந்த தாசி கூட ஆச்சரியத்தால் ஸ்தம்பித்து அழுகையை நிறுத்தினாள். ஒரே கூட்டம் கூடிவிட்டது.

ஹரதத்தர் உண்மை ஞானி என்று உணர்ந்திருந்த பலர் அவர் செய்கைக்கு காரணம் தெரியாமல் பிரமித்தனர். பிறரால் அவர் பெருமையைத் தெரிந்துகொண்டிருந்த பலருக்கு அவர்பால் இருந்த நன்மதிப்பு சிறிது கலைந்தது. வம்புச் பேச்சில் இன்பம் காணும் சிலர், "இந்தக் காலத்தில் யாரையும் நம்பக்கூடாது. அந்தத் தாசியை யடித்தால் இவர் எதற்காக இப்படிக் கதற வேண்டும்? இதில் ஏதோ இரகசியம் இருக்கிறது" என்றனர்.

"யார் கண்டார்கள்? அவள் அடிக்கடி கோவிலுக்கு வராமலிருப்பதற்கு இவரே காரணமாக இருக்கலாம். தம்மால் அவள் அடிபடுவதைக் கண்டு இவருக்கே பொறுக்க முடியவில்லை. அதனாலேதான் எல்லாவற்றையும் மறந்து இப்படி இவர் துக்கிக்கிறார்" என்றார் சிலர். ஒருவராவது உண்மை இன்னதென்று தெரிந்துகொண்டவராகத் தெரியவில்லை.

துக்கம் தாங்காமல் அவசமாகச் சிறிது நேரம் கிடந்த ஹரதத்தர் மெல்ல எழுந்திருந்தார். கோவில் உத்தியோகஸ்தரில் ஒருவர் தைரியமாக அவரை அணுகி அஞ்சலி செய்து, "ஸ்வாமி, நாங்கள் செய்த காரியம் தங்களுக்கு இவ்வளவு துக்கத்தை உண்டாக்கக் காரணமாகுமென்று தெரிந்திருந்தால் அவளைத் தண்டித்திருக்கமாட்டோம். குறிப்பாக ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் முன்பே தண்டனையை நிறுத்தி

யிருப்போம். கோயில் வழக்கப்படி நாங்கள் செய்தோம். க்ஷமிக்க வேண்டும்" என்றனர்.

அப் பெரியார் சிறிது நிதானித்தார்; அதிகாரியின் பேச்சில் அவன் சொன்ன வார்த்தைகளுக்கு ஊடே வேறு குறிப்பு இருப்பதை உணர்ந்து தம்மை அறியாமலே புன்னகை பூத்து, "நீங்கள் அவனைத் தண்டித்தது பற்றி நான் துக்கப்படவில்லை. பரமேசுவரனது கைங்கரியத்தைச் சரியாகச் செய்யவில்லை யென்று நம்மையும் தண்டித்து ஈசுவர கைங்கரியத்திலிருந்து மாருமல் இருக்கும்படி செய்பவர்கள் இல்லையே என்றுதான் துக்கித்தேன். ஸ்ரீ மஹாலிங்க மூர்த்தியின் கைங்கரியமே கண்ணுக இருக்கும் நீங்கள் சிவகணங்களுக்கு ஸமானமானவர்கள். உங்கள் கூட்டத்தில் நானும் ஒருவனுக இருந்து கைங்கரியம் செய்வதற்கு இல்லையே என்ற குறை எனக்கு இருக்கிறது" என்ருர்.

அங்கிருந்தவர்களெல்லோரும் உள்ளம் உருகிக் கண்களில் நீர்ததும்ப அப்பெரியாரின் சிவ பக்தித் திறத்தைப் பாராட்டினர். தவருக எண்ணியவர்களும் "இவர் உலகியலுக்குப் புறம்பானவர் என்பதை நாம் அறியாமல் அபசாரம் செய்தோமே" என்று கன்னத்தில் அடித்துக் கொண்டனர்.

நாயின் உருவத்திலே சிவபெருமானையும் தாசியின் உருவத்திலே தம் குறையையும் நினைந்து கனிந்து உருகும் சிந்தையையுடைய ஹரதத்தர் அப்பால் ஆலயத்தினுள்ளே புகுந்தார்.

# 20. சைவமும் தமிழும்*

'**சைவம்**' என்பதற்குச் சிவ சம்பந்தம் உடையது என்று பொருள் கூறுவர். வேதங்களை ஆதாரமாகக் கொண்ட மதங்களுள் இதுவுமொன்று. சிவம் என்பது மங்களம் எனப் பொருள்படும். இச்சொல் பொதுவாக எல்லாக் கடவுளரையும் குறித்தாலும் சிறப்பாகச் சிவபெருமானுக்கே உரியதாக நிற்கின்றது.

"**சிவனெனு நாமந் தனக்கே யுடையசெம் மேனியெம்மான்**"

என்று **திருநாவுக்கரசர்** சொல்லியிருக்கிறார்.

'சிவ' என்னும் மந்திரத்தின் பெருமை பலபடியாகப் பெரியோர்களால் சொல்லப்பட்டிருக்கின்றது. திருவிசைநல்லூரில் ஐயா அவர்கள் என்ற சிறப்புப் பெயர் பெற்ற ஸ்ரீதர வேங்கடேசர் என்னும் பெரியார் இந்த மகாமந்திர ஜபத்தால் என்றும் பொன்றாப் பெருநிலையைப் பெற்றார். ருக், யஜுர், சாமம் என்னும் மூன்று வேதங்களுள் நடுவணதாகிய யஜுர் வேதம் ஏழு காண்டங்களை உடையது. அதில் நாலாவது காண்டம் நடுஸம்ஹிதை 'நமசிவாய' என்னும் மகா மந்திரத்தைப் பேசுகிறது. பழங்காலத்தில் தமிழ் நாட்டில் கல்வி கற்கப் புகும்பொழுது முதலில் 'நமசிவாய' என்பதைச் சொல்லிக்கொடுக்கும் வழக்கம் இருந்தது. திருவாசகம்,

"**நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க**"

என்று தொடங்குகின்றது.

---

* **17-9-1936**-இல் புதுக்கோட்டை. மகாராஜா காலேஜில் செய்த பிரசங்கம்.

சைவத்துக்கும் தமிழுக்கும் மிகுதியான தொடர்பு உண்டு. இமயமலை அரையன் திருமகளாகிய பார்வதிக்கும் சிவபெருமானுக்கும் திருமணம் நடைபெற்ற காலத்தில் தென்னாட்டவரும், பிறரும் கைலையங்கிரியை அடைந்தனர். அக்கூட்டத்தின் பாரத்தால் வடதிசை தாழ்ந்து தென்திசை உயர்ந்தது. அதுகண்ட சிவபெருமான் அகத்தியரை அழைத்துத் தென்னாட்டிற்குச் சென்று பொதியமலையில் இருக்கும்படி பணித்தார். அப்பொழுது அகத்தியர் இறைவனைப் பணிந்து, "எம்பெருமானே, தென்னாட்டில் வழங்கும் தமிழ் மொழியை நான் அறிந்திலேனே! அங்கே போய் என் செய்வேன்!" என்றார். அப்பொழுது இறைவர் இன்னருள் சுரந்து அம்முனிவருக்குத் தமிழ் இலக்கணத்தை உபதேசித்தார். அதன்பின் அகத்திய முனிவர் தென்னாடு வந்து பொதியமலையில் இருந்து வரலானார். அப்போது தொல்காப்பியர் முதலிய மாணாக்கர் பன்னிருவருக்குத் தமிழ் கற்பித்தார்.

தமிழ்மொழி அகத்தியரால் உண்டாக்கப்பட்டது என்று சிலர் சொல்லுவர். அது பிழை. தமிழ் நாட்டில் தமிழ் மொழியானது நெடுங்காலத்திற்கு முன்பிருந்தே வழங்கி வந்தது. அகத்தியர் அதற்கு இலக்கணம் அமைத்து வளப்படுத்தினார். வளர்த்தவரையும் தந்தையென்று சொல்வது வழக்கம். அதன்படி அகத்தியரைத் தமிழ் தந்தவர் என்று சொல்வது ஓர் உபசார வழக்கு. இதனால்தான் தமிழுக்கு அகஸ்திய பாஷை. அகஸ்தியம் என்ற பெயர்கள் வழங்குகின்றன.

அகஸ்தியர் பொதியமலையில் பல மாணாக்கர்களுக்குப் பாடம் சொல்லி வந்தார். பொதியமலையில் ஒரு

சங்கமே இருந்தது என்று கம்பர் புலப்படுத்துகிறார். சீதையைத் தேடிக்கொண்டு தென்னாட்டிற்குப் போகும் வானர வீரர்களை நோக்கி வழிகூறும் சுக்கிரீவன், "பொதியமலையின்கண் அகத்தியர் ஒரு தமிழ்ச் சங்கத்தைக் கூட்டி நடத்தி வருகிறார். அங்கே நீங்கள் போனால் அந்தத் தமிழின் இனிமையிலே ஈடுபட்டுக் காரியத்தை மறந்துவிடுவீர்கள். ஆகையால் அம்மலையை விரைவில் கடந்து செல்லுங்கள்" என்று சொல்லுகிறான். இதனால் ராமாயண காலத்திலேயே தமிழ் நாட்டில் அகத்தியர் நிறுவிய தமிழ்ச்சங்கம் பொதியமலையில் திகழ்ந்ததென்பது தெளிவாகும்.

சிவபெருமானுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு எல்லையில்லாதது. சிவபெருமான் தமிழின்பால் பேரன்புடையாரென்பதை விளக்கும் வரலாறுகள் பல உண்டு. திருவிளையாடற் புராணத்தில் உள்ள சில திருவிளையாடல்கள் அத்தகையனவே. ஒரு காலத்தில் மதுரையில் பாண்டிய மன்னன் ஒருவன் அரசாண்டு வந்தான். அவன்பால் இடைக்காடர் என்னும் புலவரொருவர் போய்ச் சில செய்யுட்களைச் சொன்னார். அவன் தன் தலையையும் அசைக்காமல் பரிசும் கொடாமல் வாளாவிருந்தான்.

புலவர் அதைப் பார்த்தார். திருவாலவாய் அண்ணலின் திருக்கோயிலை அடைந்து, "தமிழறியும் பெருமானே, நான் மிகவும் இனிமையான கவியைத் தொடுத்துப் பாண்டியனை அணுகினேன். நான் சொல்லச் சொல்ல அவன் அசையாமல் வாளாவிருந்தான். முடி துளக்கவில்லை; பரிசும் வழங்கவில்லை. அஃறிணையைப் போல இருந்தான். தமிழுக்கு ஏற்பட்ட இழுக்குத்

தான் என்னே! தமிழ்த் தெய்வமாகிய உன் பெருமை தான் எங்கே போயிற்று?" என்று பலவாறு கூறிப் புலம்பி நைந்தார். அது கண்ட எம்பெருமான் மதுரையை விட்டு வடதிருவாலவாய் என்னும் இடத்தை அடைந்தார். மறுநாள் குருக்கள், கோயி லில் சொக்கலிங்கக் கடவுளைக் காணவில்லை. இந்தச் செய்தி பாண்டியன் வரைக்கும் போயிற்று. அவன் தாயைப் பிரிந்த கன்றுபோல வருந்தி நின்றான். சிவ பெருமான் அவன் கனவில் வந்து இடைக்காடரை அவ மதித்தமையாலே தான் மதுரையை விட்டு விலகிய தாகக் குறிப்பித்தார். அப்பொழுது பாண்டியனுக்கு நல்லறிவு வரவே தான் செய்த பிழைக்கு வருந்தி அவன் உடனே இடைக்காடரை வருவித்து வேண்டிய உபசாரங்களையெல்லாம் செய்தான்.

திருவிளையாடற் புராணத்தில் தருமிக்குப் பொற் கிழி அளித்தது என்ற திருவிளையாடல் ஒன்றுண்டு. சொக்கலிங்கப் பெருமான் தருமி என்னும் அந்தணப் பிரமசாரிக்கு ஒரு பாட்டு எழுதிப் பாண்டியனிடம் அனுப்பினார். அச்செய்யுளைச் சங்கப் புலவராகிய நக்கீ ரர் கண்டு அது குற்றமுடையது என்று சொல்லித் தடுத்தார். அப்பொழுது சொக்கநாதர் ஒரு புலவரைப் போல வந்து நக்கீரரோடு வாதம் செய்தார். அவர் வந்த காலத்தில் சங்கப் புலவர்கள் எல்லோரும் பெரு மிதத்தோடு சங்கப் பலகையில் வீற்றிருக்க அவர் நின்றுகொண்டு பேசினாராம். இதனைப் பழைய திரு விளையாடலின் ஆசிரியர்,

**" ஆவியந் தென்றல் வெற்பி னகத்தியன் விரும்புந் தென்பால்**
**நாவலந் தீவம் போற்றி நாவலந் தீவந் தன்னுள்**

**மூவர்கட் கரியா னிற்ப முத்தமிழ்த் தெய்வச் சங்கப்**
**பாவலர் வீற்றி ருக்கும் பாண்டிநன் னாடு போற்றி ''**

என்று கூறுகிறார். மூவர்களுக்கும் அரியவராகிய சிவ பெருமான் தமிழ்ப்புலவர்களுக்குமுன் தமிழின் பெருமையை வெளிப்படுத்துவார் போல நின்றாராம்.

நாயன்மார்கள் திறத்தில் சிவபெருமான் செய்த அருட்செயல்கள் பல. அவர்களுள் சைவசமய ஆசாரியர்களாகிய நால்வரும் தம்முடைய தமிழ்ப்பாடல்களால் சிவபெருமானது பெருமையை வெளியிட்டார்கள். அவர்களுடைய பாடல்கள் மந்திரங்களைப் போல ஆக்கவும் அழிக்கவும் சக்திபெற்றன. சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகையைப் பாடத் தொடங்கும்போது இறைவர், " தில்லைவாழந்தணர்த மடியார்க்கு மடியேன் " என்றும், சேக்கிழார் பெரிய புராணத்தைத் தொடங்கும்போது, " உலகெலாம் " என்றும் அடியெடுத்துக் கொடுத்தார். மாணிக்க வாசகர் திருக்கோவையார் என்னும் நூலை இயற்றிய பொழுது அவர் சொல்லச்சொல்லச் சிவபெருமானே ஏட்டில் எழுதினாராம். அங்ஙனம் தாம் எழுதியதற்கு அடையாளமாக இறுதியில், 'அழகிய திருச்சிற்றம்பல முடையான்' என்று கையெழுத்திட்டார். திருக்கோவையார் தமிழிலுள்ள அகப்பொருள் இலக்கணத்திற்கு இலக்கியமாக விளங்குவது. இந்த அகப்பொருள் இலக்கியத்தை ஏட்டில் எழுதிய சிவபெருமானே அகப்பொருள் இலக்கணம் ஒன்றை இயற்றியிருக்கிறார். அதற்கு **'இறையனார் அகப்பொருள்'** என்று பெயர்.

பழைய தமிழ் நூல்களில் சிவபெருமானைப்பற்றிய பல செய்திகள் வருகின்றன. புறநானூற்றில் ஔவை யார் தாம் பாடிய ஒரு செய்யுளில், "நீல மணிமிடற் றொருவன்" என்று குறிக்கின்றார். அதிகமான் என் னும் வள்ளல் அவருக்கு ஒரு நெல்லிக்கனியை வழங் கினான். அந்த நெல்லிக்கனி தன்னை உண்டாரைச் சாவாதிருக்கச் செய்வது. அதிகமான் அதனை உண்ணா மல் தமக்கு அளித்த பெருஞ்செயலைப் பாராட்டி ஔவையார் ஒரு செய்யுள் பாடினார்.

**"நீல மணிமிடற் றொருவன் போல**
**மன்னுக பெரும நீயே"**

என்று வாழ்த்துகிறார். 'தேவர் அமுதுண்டும் சாவ, விடமுண்டும் சாவாது நிற்கும் நீலகண்டப் பெரு மானைப்போல வாழ்வாயாக' என வாழ்த்தியது மிகவும் பொருத்த முடையது.

சைனர் முதலிய வேறு மதத்தினரும் சிவபெரு மானைச் சிறப்பித்துச் சொல்லி யிருக்கின்றனர். 'காவி ரிப்பூம்பட்டினத்தில் உள்ள கோயில்களை விளக்கும் போது, "நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப், பதிவாழ் சதுக்கத்துத் தெய்வ மீறா". என்று சிவபெரு மானை முதலில் வைத்து மணிமேகலை ஆசிரியர் கூறு கிறார். அவர் ஒரு பௌத்தர்.

**சூடாமணி நிகண்டின்** ஆசிரியர் ஒரு சைனர். அவர் பகவன் என்னும் சொல்லுக்குப் பொருள் உரைக்கும் பொழுது,

**"பகவனே யீசன் மாயோன் பங்கயன் சினனே புத்தன்"**

என்று சிவபெருமானை முன் வைக்கின்றார்.

**சீவக சிந்தாமணியில்** ஓரிடத்தில் சீவகன் மறைவாக வளர்ந்த செய்தியை விளக்கவந்த திருத்தக்கதேவர்,

**"போகம் மீன்ற புண்ணிய னெய்த கணையேபோல்**
**மாகம் மீன்ற மாமதி யன்னுன் வளர்கின்ருன்"**

என்று இயம்புவர். கண்ணபிரான் ஆய்ப்பாடியில் மறைவாக வளர்ந்ததுபோலச் சீவகன் வளர்ந்தானும். இங்கே கண்ணபிரானை, 'போகம் மீன்ற புண்ணிய னெய்த கணை' என்று குறிப்பிக்கின்ருர். சிவபிரான் திரிபுரசங்காரம் செய்தபோது திருமால் அம்பாக இருந்த செய்தியையே அவர் சுட்டுகின்ருர்.

இங்ஙனமே தமிழ் நூல்களில் வரும் சிவபெருமானைப் பற்றிய செய்திகளும், அப்பெருமானது தமிழன்பை விளக்கும் வரலாறுகளும் பல. அவை தனியே ஒரு புத்தகமாக எழுதுவதற்கு உரியன.

## 21. புலவர் தைரியம்

அதியமான் நெடுமான் அஞ்சியென்ற அரசன் கடையெழு வள்ளல்களில் ஒருவன்; சேர அரசர்களுக்கு உறவினன்; அவர்களைப் போலவே பனை மாலையை அணிபவன். வீரத்தாலும் கொடையாலும் சிறப்புப் பெற்றவன்; ஏழு பகையரசர்களை வென்று அவர்களுடைய நாடு முதலியவற்றைக் கைக்கொண்ட வெற்றிச் செல்வமுடையவன்; ஔவையாராலும் பரணர் முதலிய பெரும் புலவர்களாலும் புகழ்ந்து பாடப்பெற்றவன்.

அவனுடைய இராசதானி தகடூரென்பது. எல்லா வளங்களும் சிறந்து வெற்றிமிடுக்கோடு வீற்றிருந்த அவனைப் பாணரும் விறலியரும் வந்து கண்டு பாடியும் ஆடியும் பரிசு பெற்றனர். கூத்தர் தம் சுற்றத்தாருடன் வந்து தம்முடைய ஆடல்வன்மையைக் காட்டிப் பரியும் கலனும் பெற்றனர். புலவர்களோ எப்பொழுதும் அவனைச் சூழ இருந்து தம் தமிழ்ச் செய்யுட்களைச் சொல்லி இன்புறுத்திப் பலவகைப் பரிசுகளை அவன் வழங்க வழங்கப் பெற்று மகிழ்ந்தனர்.

எங்கெங்கே உபகாரிகள் உண்டோ அங்கெல்லாம் புலவர்கள் இருப்பார்கள். பிறநாட்டுப் புலவர்கள் அவர்களைத் தேடி வருவார்கள். தம்முடைய புலமைத் திறத்தை அளவிட்டு மதிக்கும் ஆற்றல் யார் யாரிடம் உண்டோ அத்தகைய வள்ளல்களையே அவர்கள் மிக்க விருப்பத்தோடு நாடி அடைவார்கள்.

நல்ல புலமையும் கவித்துவசக்தியும் நிரம்பிய நல்லிசைப் புலவர்கள் அறிவுடைய அரசர்களைத் தேடிச் சென்று நட்புப் பூண்பார்கள்; பிறர் புலமை கண்டு மகிழ்ந்து பாராட்டுவார்கள். தம்பாலுள்ள குறையைப் பிறர் கண்டால் என்ன செய்வதென்ற பயம் அவர்களுக்கு இல்லை. மதிநுட்பமும் நூலறிவும் ஒருங்கே வாய்ந்த அவர்களுடைய புலமையில் குற்றம் தோற்றுவது மிகவும் அரிது. ஆதலின் அவர்கள் சிங்கத்தைப் போல எந்த நாட்டிலும் எந்தச் சபையிலும் சென்று புகழ்பெறுவார்கள்.

இத்தகைய நல்லிசைச் சான்றோர்களுள் பெருஞ்சித்திரனாரென்பவர் ஒருவர். அவர் அறிவுக்கு மதிப்பளிப்பவரேயன்றிச் செல்வத்துக்கு உயர்வு கற்பிப்

பவர் அல்லர்; சிறந்த செல்வமுடையவராக இருப்பினும் அறிவும் அன்பும் இல்லாரைப் பாராட்ட மாட்டார்; சமயம் வந்தால் அவரை இகழ்வதற்கும் அஞ்சார். இந்தக் கல்வி வீரத்தால் அவரிடம் எல்லாருக்கும் அச்சமும் தனிமதிப்பும் இருந்துவந்தன.

அவர் அதியமானது புகழைக் கேள்வியுற்றிருந்தார். பரணர் முதலிய புலவர்களாற் பாராட்டப் பெற்றவனாகிய அவன் எல்லா வகையாலும் சிறப்புடையவனாகவே இருக்கலாமென்ற எண்ணத்தால் அவனிடம் சென்று அவனைப் பார்த்துப் பழக வேண்டுமென்ற விருப்பம் அவர்பால் எழுந்தது. மலை நாட்டைச் சார்ந்துள்ள தகடூருக்குப் போவதென்றால் எளிய காரியமா? குன்றும் மலையும் பல கடந்து சென்றார். அவற்றைக் கடந்து செல்லும்போது உண்டான வருத்தத்துக்கு ஒரு முடிவு உண்டென்றும், அதியமானுடைய அவையை அடைந்தால் எல்லா வருத்தமும் மறந்துபோகுமென்றும் அவர் நம்பியிருந்தார்.

தகடூரை அடைந்தார். அங்கே அதியமானது அரண்மனையை அணுகி உள்ளே புகுந்தார். புலவரை இன்னாரென்று தெரிந்தவர் யாரும் அங்கே இல்லை. ஆயினும் அங்கிருந்த அதிகாரி ஒருவன் வந்தோரை உபசரித்துப் போற்றும் வழக்கத்தின்படி அவரையும் வரவேற்று இருக்கச் செய்தான். அவர் புலவரென்றும் அதியமானைக் காணும் விருப்பமுடையவரென்றும் உணர்ந்துகொண்டான்.

அப்போது அதியமான் தன்னுடைய மந்திரச் சுற்றத்தாரோடு இருந்து அந்தரங்கமான ஆலோசனை

செய்துகொண்டிருந்தான்; யார் வரினும் விடவேண்டா மென்று கட்டளையிட்டிருந்தான். அரசியல் விஷயங் களில் ஈடுபட்ட மன்னர்களுக்கு உணவுகொள்வதும், உறங்குவதுங்கூட மிகையாகத் தோற்றும். ஆகவே, அதியமான் முக்கியமான ஆலோசனையில் ஈடுபட்டு அந்தரங்கமாகப் பேசிக்கொண்டிருந்த அந்தச் சமயத் தில் புலவர் வரவை அவனிடம் சென்று தெரிவிப்பது இயலாத காரியம். புலவர் விருப்பத்தை நிறை வேற்றுமல் இருப்பதும் குற்றமாகும். இந்த நிலையில் அதிகாரி இன்னது செய்வதென்று தெரியாமல் மயங்கினுன்.

புலவரை உபசரித்து அவரைப்பற்றிய விஷயங் களையும் க்ஷேம சமாசாரங்களையும் அவன் பேசிக் கொண்டிருந்தான். எப்படியாவது அவரிடம் பேசிப் பொழுது போக்கினுல் அதற்குள் அதியமான் வந்து விடக் கூடுமென்று அவன் எதிர்பார்த்தான்.

புலவருக்கோ அதியமானைக் காண வேண்டு மென்ற ஆவல் அதிகமாக இருந்தது. அதிகாரியுடன் பேசிக் கொண்டிருக்கும்போது அடிக்கடி, "அரசரைப் பார்க்கவேண்டுமே; என் வரவைச் சொல்லியனுப்புங் கள்" என்று சொன்னுர். அதிகாரி அரசனைப் பார்க்க முடியாது என்று சொல்லிவிடலாமா என்றுகூட நினைத்தான். புலவர்களிடம் அவ்வாறு சொல்வதற்கு அவனுக்கு அதிகாரம் இல்லை.

நேரம் போய்க்கொண்டே இருந்தது. "பார்க்க முடியாதா? அரசர் எங்கே இருக்கிறுர்?" என்று புலவர் கேட்டார். அந்தக் கேள்வியிலே ஒரு கம்பீரமும் தைரியமும் புலப்பட்டன. அதிகாரிக்கு உள்ளத்தே

ஒரு நடுக்கம் தோன்றியது. 'இவர் கோபித்துக் கொண்டு விட்டால் என்ன செய்வது?' என்று அஞ்சினன்.

"நான் அரசரைப் பார்க்கவேண்டுமென்று நெடுந் தூரம் பிரயாணம் செய்துவந்திருக்கிறேன். அவருடைய காட்சியைப் பெருதவாறு முதலில் குன்றும் மலையும் தடுத்தன. அவற்றையெல்லாம் கடந்து இங்கே வந்தும் என் துரதிருஷ்டம் பெரிய மலையாக நின்று தடுக்கிறது" என்று வருத்தத்தோடு புலவர் சொன்னர். அதிகாரியைக் குறிப்பாக நிந்தித்தபடி இருந்தது அந்த வார்த்தை.

'இனிமேல் தாமதம் செய்தால் இவருடைய சாபத்துக்கு நாம் ஆளாக வேண்டும். அரசரிடம் சென்று இவர் வரவைத் தெரிவித்துவிடலாம். அரசரது கோபத்தைப் பொறுத்தாலும் பொறுக்கலாம்; புலவர் கோபத்தைப் பொறுக்கமுடியாது' என்ற யோசனையின்மேல் அதிகாரி துணிந்து மந்திராலோசனை நடக்கும் இடத்துக்குச் சென்முன்.

"அரசே, பெருஞ் சித்திரனரென்னும் புலவர் ஸமுகத்தைக் காண வேண்டுமென்ற பேராவலோடு வந்து காத்திருக்கிருர். நெடுந்தூரத்திலிருந்து வருகிருராம்" என்று தெரிவித்தான்.

ஆழ்ந்த யோசனையில் இருந்த அதியமான் காதில் இந்த வார்த்தைகள் விழுந்தன. வேறு ஏதேனும் சொல்லியிருந்தால் அதிகாரி அரசன் கோபத்துக்கு ஆளாகியிருப்பான். புலவர் வரவைப் பற்றிச் சொன்னமையால் அவன் பிழைத்தான்.

அதியமான் உடனே, "சரி, வேண்டியபடி உபசாரம் செய்து மணியும் பொன்னும் வழங்கி அனுப்பிவிடு. பின் ஒரு முறை பார்த்துப் பேசலாம்" என்று சொல்லிவிட்டு மீட்டும் ஆலோசனையில் மூழ்கி விட்டான்.

அதிகாரி புறத்தே வந்தான். பொக்கிஷத்துக்குச் சென்று ஒரு பெரிய தட்டுநிறையப் பொன்னும் மணியும் கொணர்ந்து புலவர் முன்னே வைத்தான்; "புலவர் பெருமானே, அரசர் இப்போது அரசியல் விஷயமாக மந்திரிகளோடு ஆலோசித்துக்கொண்டிருக்கிறார். அரசர் இவற்றைச் சேர்ப்பிக்கும்படி கட்டளையிட்டார். அங்கீகரித்துக்கொள்ள வேண்டும். மற்றொரு முறை வந்தால் அவரைப் பார்த்துச் செல்லலாம்" என்றான்.

பெருஞ் சித்திரனார் அந்தப் பரிசிலை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. சிறிதுநேரம் அவர் ஒன்றும் பேசாமல் அமர்ந்திருந்தார். பிறகு ஒரு சிறு நகை செய்தார்; சினத்திற் பிறந்த சிரிப்பு அது. "சரி, நான் போய் வருகிறேன்" என்று எழுந்தார்.

அதிகாரிக்கு அவர் கருத்து விளங்கவில்லை. "இதை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று தட்டைச் சுட்டிக் காட்டினான்.

"நான் இதற்காக வரவில்லை. பொன்னும் மணியும் நான் காணாப் பொருளல்ல; உங்கள் அரசரைத் தான் காண வந்தேன். எனக்கும் அவரைக் காண முடியவில்லை; அவருக்கும் என் திறமையைக் காண நேரமில்லை. இந்தப் பொன்னும் மணியும் எனக்குப் பொருளல்ல."

அதிகாரி திடுக்கிட்டான்; "கோபம் கொள்ள வேண்டாம். அரசரே இவற்றை வழங்கச் சொன்னார்" என்றான்.

"உங்கள் பொக்கிஷத்திலுள்ள பொருள் முழுவதையும் அளித்தாலும் எனக்கு வேண்டுவதில்லை. உம்முடைய அரசரிடம் போய்ச் சொல்லும். குன்றும் மலையும் பல பின்னாலே நீங்க, அவற்றைக் கடந்துவந்து இங்கே நின்று பரிசு வாங்கிப் போக வந்தேனென்று என்பால் இவ்வளவு தூரம் கிருபை வைத்து, 'இதைப் பெற்றுக்கொண்டு போ' என்று சொல்லி அனுப்புவதற்கு உங்கள் அரசர் என் இயல்பை எவ்விதம் அறிந்துகொண்டாரோ, தெரியவில்லை! நேரிலே பாராமல் கொடுப்பதை வாங்கிக்கொண்டு போக நான் பிச்சைக்காரனல்லன்; கையில் கிடைக்கும் ஊதியத்தையே கருதும் வியாபார நோக்கம் என்னிடம் இல்லை. விரும்பிப் பேசி என் புலமையை அறிந்து மகிழ்ந்து தினையளவு கொடுத்தாலும் சந்தோஷமடைபவன் நான். இந்த விஷயத்தை உங்கள் அரசர் இதுவரையில் தெரிந்துகொள்ளாவிட்டால் இப்பொழுதாவது தெரிந்துகொள்ளட்டும்."

தலையைத் தொங்கப் போட்டபடியே புலவரது வீரவாசகத்தைக் கேட்டுக்கொண்டு நின்ற அதிகாரி தலையை நிமிர்த்திப் பார்த்தான். அதற்குள் புலவர் வாசலை நோக்கி நடந்துகொண்டிருந்தார்.

* * *

அதியமானது வெற்றியையும் கொடையையும் புலப்படுத்தும் செய்யுட்கள் பல புறநானூறென்னும் சங்கநூலில் உள்ளன. அவற்றினிடையே அவனது

சோர்வையும் பெருஞ்சித்திரனாது தைரியத்தையும் புலப்படுத்திக்கொண்டு அப்புலவர் வாக்காகிய பின் வரும் செய்யுள் நிற்கிறது:

**குன்றும் மலையும் பலபின் னொழிய**
**வந்தனென் பரிசில் கொண்டனென் செலற்கென**
**நின்ற என்னயந் தருளி யீதுகொண்**
**டீங்கனஞ் செல்க தானென என்னை**
**யாங்கறிந் தனனோ தாங்கரும் காவலன்**
**காணு தீத்த இப்பொருட்கி யானோர்**
**வாணிகப் பரிசில னல்லேன் பேணித்**
**தினையனைத் தாயினும் இனிதவர்**
**துணையள வறிந்து நல்கினர் விடினே.**

## 22. நான் கேட்டபடி

**த**மிழ்ப் புலவர்களில் கவி, கமகன், வாதி, வாக்கி யென நான்கு வகையினர் உண்டு. எந்தச் சமயத் திலும், கொடுத்த விஷயத்தைக் குறித்துத் தெளிவாகப் பேசும் ஆற்றலுடையவரை வாக்கியென்று சொல் வார்கள். வாக்வி என்ற வட சொல்லின் திரிபே அது. அதனையே 'நாவலர்' என்று தமிழிற் கூறலாம். பண்டைக்காலத்தில் கவிபாடும் ஆற்றலுடையாரையும் நாவலரென்று வழங்கினர். இக்காலத்தில் நல்ல பிரசங்க சக்தி வாய்ந்தவர்களை நாவலரென்று சொல் வதிற் பிழையொன்றுமில்லை.

தமிழ் நாட்டில் எவ்வளவோ நாவலர்கள் இருப் பினும் நாவலரென்று கூறியமாத்திரத்தில் அச்சொல்

யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீ ஆறுமுக நாவலரையே குறிக்கும். இதற்குக் காரணம் அவர் நாவலர்களுக்குள் சிறந்தவராக விளங்கியமையேயாகும்.



ஸ்ரீ ஆறுமுக நாவலர்

நாவலரை நான் பார்த்துப் பழகுவதற்குரிய சமயம் நேர்ந்ததில்லை. ஆயினும் அவரோடு பழகியவர்களிட மிருந்தும் அவரிடம் பாடம் கேட்டவர்களிடமிருந்தும் அவரைப்பற்றிப் பல செய்திகளைக் கேட்டிருக்கிறேன்.

அவற்றைக்கொண்டு என் அகக் கண்ணில் ஓர் உருவத்தை அமைத்துப் பார்ப்பது என் வழக்கம்.

அவரை நினைக்கும்போதெல்லாம் அவரது வாழ்க்கை நெறி என் உள்ளத்தைக் கவரும். கல்வியறிவு மிகச் சிறந்ததே; ஆயினும் அவ்வறிவு ஒழுக்கத்தோடு இயையும்போது அதற்கு ஒரு தனிச்சிறப்பு உண்டாகின்றது.

நாவலருடைய தூய்மையான வாழ்க்கை யாவராலும் பாராட்டுதற்குரியது. பொருள் வருவாயையே தலைமையாகக் கருதி அவர் வாழ்வு நடத்தவில்லை. சைவமும் தமிழும் தழைத்து ஓங்கும்பொருட்டு அவர் மனமொழி மெய்களால் தொண்டு புரிந்து வந்தார். "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் அப்பர் திருவாக்குக்கு இலக்கியமாக அவரைக் கூறலாம். அவர் நிறுவியுள்ள சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையும் யாழ்ப்பாணத்தில் அமைத்துள்ள நிலையங்களும் இதற்குப் போதிய சாக்ஷிகளாகும்.

அவருடைய பிரசங்க சக்தி அவருக்குப் பெரும் புகழை உண்டாக்கிற்று. நாவலரென்னும் பெயரும் அதனாலே வந்ததுபோலும். "வார்த்தை பதினாயிரத்தொருவர்" என்பது ஒரு தமிழ்ச் செய்யுட் பகுதி. படைகளோடு சென்று போர் புரிந்து சாவார் எளியர்; சபையிலே போய்த் தைரியமாகப் பேசுவோர் மிகச் சிலர் என்று திருவள்ளுவரும் கூறினார். அத்தகைய அரிய பிரசங்க வன்மை நாவலரிடத்திலே நன்கு அமைந்திருந்தது.

அக்காலத்துக்கு முன்பு பெரும்பாலும் புராணப் பிரசங்கங்களும் வாதங்களுமே சபைகளில் நடை

பெற்று வந்தன. பொதுவாக ஒரு விஷயத்தை மேற் கொண்டு முறைப்படுத்திக் காரண காரியங்களைக் காட்டி ஆக்ஷேப சமாதானங்களோடு பேசும் வழக்கம் தமிழ் நாட்டில் மிகக் குறைவாக இருந்தது. கிறிஸ்தவ சமயப் பாதிரிமார் செய்த உபந்நியாசங்களின் முறை தெளிவாகவும் எளிதிலே யாவரும் அறிந்து சுவைப் பதற்குரியதாகவும் இருந்தது. அந்த முறையை நாவலர் பயின்று அதிற் பேராற்றலை அடைந்தார்.

தமிழ் வளர்ச்சியின் பொருட்டு அவர் செய்த அருஞ் செயல்களுக்கு அடையாளங்களாக அவர் பதிப் பித்த நூல்கள் விளங்குகின்றன. அவருடைய பதிப்பு முறை தமிழ் நாட்டாராற் பெரிதும் மதிக்கப்படுவது.

நூலாசிரிய முறையில் நாவலர் எழுதிய நூல்கள் இந்நாட்டில் உலவுகின்றன. பால பாடங்கள் ஒழுக் கத்தையும் சைவ சமய உணர்ச்சியையும் உண்டாக் குவன. நன்னூலுக்கு அவர் ஒரு காண்டிகையுரை எழுதியிருக்கின்றார். இலக்கணச் சுருக்கம் முதலிய சிற்றிலக்கண நூல்கள் சிலவற்றையும் இயற்றி வெளி யிட்டிருக்கின்றார். இவை தமிழிலக்கணம் பயிலும் மாணாக்கர்களுக்கு மிகப் பயன்படுவனவாகும்.

சில இலக்கிய நூல்களுக்கும் அவர் உரை எழுதி யிருக்கின்றனர். அவருடைய வசன நடை எளியது; வட சொற்களோடு கலந்து அழகுபெறுவது. பாலர் முதல் பண்டிதர் ஈறாகவுள்ள யாவருக்கும் பயன் தரத் தக்கது. அவர் காலத்தில் தமிழில் அழகிய வசனநடை எழுதுவோர் மிக அரியராக இருந்தனர். பிறரிடம் குறைகாணின் கண்டிப்பது நாவலர் இயல்பு. பொது நிலயங்களிலும், தர்ம ஸ்தாபனங்களிலும் நிகழும்

தவறுகளை யாருக்கும் அஞ்சாது வெளியிட்டார். அவர் எழுதிய கண்டனப் பத்திரங்கள் பல. அவற்றை ஆராய்ந்தால் ஒவ்வொரு ஸ்தாபனமும் நெறி வழாமல் நடைபெற்று வரவேண்டுமென்பதில் அவருக்கு இருந்த ஊக்கம் புலப்படும்.

நாவலர் வாழ்க்கையில் ஒழுக்கத்தின் உயர்வும், கல்விப் பெருமையும், சைவ சீலத்தின் சிறப்பும் கமழ்ந்தன. அவர் சமயத் தொண்டராகவும், நாவன்மை மிக்கவராகவும், நூலாசிரியராகவும், உரையாசிரிய ராகவும் விளங்கினர்.

என்னுடைய தமிழாசிரியரான திரிசிரபுரம் மகா வித்துவான் ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களும் நாவலரும் ஒரு காலத்தினரே. இருவரும் நெருங்கிப் பழகியதுண்டு. நாவலருடைய குணாதிசயங்களைப் பிள்ளையவர்கள் அடிக்கடி பாராட்டிச் சொல்லியிருக் கிறார்கள்.

இப்பொழுது தமிழ் நாட்டினருக்குத் தமிழினி டத்தில் அன்பு வளர்ச்சி பெற்று வருகின்றது. அதற்கு ஸ்ரீ ஆறுமுக நாவலரும் ஒரு காரணம் ஆவர். அவர் என்றும் தமிழ் நாட்டினரது நினைவில் இருப்பவ ராதலின் அவருடைய புகழுடம்பு என்றும் மறைத லின்றி நிலவி ஒளிருமென்பதில் ஐயமில்லை.

# 23. என்னுடைய ஞாபகங்கள்*

பிரஸிடென்ஸி காலேஜிலிருந்து நான் விலகி இருபது வருஷங்களுக்கு மேலாகின்றன. ஆனாலும் இப்போது இந்தக் காலேஜ் சம்பந்தமாக எனக்குத் தெரிந்தவற்றை எழுதும்படி ஒரு சந்தர்ப்பமளித்த பிரின்ஸிபால் ஸ்ரீமான் ஹெச். ஸி. பாப்வொர்த் துரையவர்களுக்கு முதலில் நன்றி பாராட்டிவிட்டு என் ஞாபகத்திலுள்ளவற்றைச் சுருக்கமாகத் தெரிவிக்கிறேன்.

கும்பகோணம் காலேஜிலும் பிரஸிடென்ஸி காலேஜிலும் நான் ஏறக்குறைய 39 வருஷங்கள் தமிழ்ப் பாடஞ் சொல்லிக் கொடுக்கும் வேலையில் இருந்தேன். ஆயிரக் கணக்கான அன்பர்களுடைய பழக்கத்தை உண்டாக்கி அவர்களுடைய அன்பு என்றும் குன்றாமல் இருக்கும்படி செய்வதற்குக் காரணமாக இருந்தவை இந்த இரண்டு காலேஜுகளுமாகும். இவற்றுள் பிரஸிடென்ஸி காலேஜுக்கு வந்த பிறகு பல அன்பர்களுடைய பழக்கம் எனக்கு அதிகமாக ஏற்பட்டது.

ஏறக்குறைய 65 வருஷங்களுக்கு முன்பு நான் திருவாவடுதுறையில் தமிழ் படித்த காலத்திலே என் ஆசிரியர் மகா வித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் மூலமாக முதல் முதலில் பிரஸிடென்ஸி காலேஜைப்பற்றியும் இங்கே தமிழ்ப் பண்டிதராக இருந்த மழவை மகாலிங்கையரைப்பற்றியும் கேள்வியுற்றேன். 1880-ஆம் ஆு கும்பகோணம் காலேஜில்

---

* சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜ் நூற்றாண்டு விழா மலர், பிப்ரவரி, 1940.

நான் வேலையை ஒப்புக்கொண்ட பிறகு இந்தக் காலேஜைப்பற்றி அதிகமாகத் தெரிந்துகொண்டேன்.

பிரஸிடென்ஸி காலேஜ் முதலில் ஹைஸ்கூலாகவே இருந்ததும் பிறகு காலேஜானதும் அநேகருக்குத் தெரியும். காலேஜான பிறகு கூட இதை ஹைஸ்கூலென்றே பாமர ஜனங்கள் வழங்குவதுண்டு. ரிக்ஷாக்காரர்களுக்கும் வண்டிக்காரர்களுக்கும் ஹைஸ்கூல் என்றால்தான் தெரியும். நான் இந்தக் காலேஜுக்கு வந்தபோது சில பழைய மேஜைகளில் சிலேட், பலப்பம் முதலியன வைப்பதற்குரிய பள்ளங்கள் இருந்தன. அவை இது ஹைஸ்கூலாக இருந்ததை ஞாபகப்படுத்தின.

ஹைஸ்கூலாக இருந்தபோது இதில் தலைமையாசிரியராக இருந்து அப்பால் காலேஜானபோது முதல் பிரின்ஸிபாலான ஸ்ரீமான் இ. பி. பவல் துரையவர்களிடம் கல்வி பயின்றவர்கள் யாவரும் சிறந்த அறிவாளிகளாயினர். சிலர் திவான் முதலிய பெரிய உத்தியோகங்களில் இருந்து விளங்கினர். மாணாக்கர்களுக்குப் பழங்கள், வேண்டிய புஸ்தகங்கள் முதலியவற்றை அவர் கொடுப்பாராம்; பல வகையில் அவர்களுக்கு அநுகூலம் செய்வாராம்.

புதுக்கோட்டையில் திவான் ரீஜண்டாக இருந்த ஸ்ரீ அமராவதி சேஷையா சாஸ்திரிகள் இந்தக் காலேஜில் படித்தவர். அவர் பல சமயங்களில் இதன் பெருமையையும் தமக்கு ஆசிரியராக இருந்த ஸ்ரீமான் பவல் துரையின் அறிவாற்றலையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார். ஒருமுறை சாஸ்திரிகள் தம்மைப்பற்றி, "தென்னிந்தியாவாகிய கடலில் பவல் துரை 14 கப்பல்

களை ஓடவிட்டார். மற்றவையெல்லாம் போய் விட்டன. இந்த ஒரு கப்பல்தான் மிஞ்சி இருக்கிறது" என்று சொன்னார்.

பவல் துரைக்குத் தம்முடைய மாணாக்கர்களிடத்தில் அளவற்ற பிரீதி இருந்து வந்தது. அவர் சீமைக்குச் சென்ற பிறகும், தம்மிடம் படித்தவர்களை மறவாமல் அவர்களுக்குக் கடிதம் எழுதி வந்தார். ஸ்ரீ சேஷையா சாஸ்திரிகளுக்கு ஒரு முறை பவல் துரை தம்முடைய மாணாக்கராகிய ஸ்ரீ ரங்காசார்லு என்பவரைப்பற்றி விசாரித்து, அவர் எங்கே உள்ளாரென்று எழுதினார். ரங்காசார்லு மைசூரில் திவானாக இருந்து பல சீர்திருத்தங்களைச் செய்தவர். பவல் துரை விசாரித்த காலத்தில் அவர் இறந்துவிட்டார். சாஸ்திரிகள் அச்செய்தியைத் தெரிவித்தவுடன் பவல் துரை மிகவும் வருத்தமுற்று ஒரு கடிதம் எழுதினார். அக்கடிதத்தைச் சேஷையா சாஸ்திரிகள் என்னிடமும் உடன் வந்த சில நண்பர்களிடமும் காட்டினார். அவருடைய கையெழுத்து மிகவும் நன்றாக இருந்தது. முதுமைப் பிராயத்திலும் அழகாக எழுதியிருப்பதைக் குறித்து யாவரும் வியந்தார்கள்.

மகாலிங்கையரிடம் தமிழ்ப் பாடங் கேட்டதையும் அவருக்குத் தாம் சில புஸ்தகங்கள் பிரதி பண்ணிக் கொடுத்த செய்தியையும் சாஸ்திரிகள் என்னிடம் சொல்லியிருக்கிறார்.

கும்பகோணம் காலேஜில் இருந்த பலர் சென்னைக் காலேஜுக்கு வந்து பிரின்ஸிபாலாகவும் ஆசிரியராகவும் இருந்து விளங்கினார்கள். தண்டலம் கோபால ராவ் கும்பகோணம் காலேஜில் இருந்து மிகவும் புகழ்

பெற்ருர். இக்காலேஜிலும் சில வருஷங்கள் சரித்திர ஆசிரியராக இருந்தார். அவர் தாமே படித்து முன்னுக்கு வந்தவர். படித்தல், பாடஞ் சொல்லுதலென்னும் இவற்றைத் தவிர மற்ற விஷயங்களில் அவருடைய மனம் செல்லவே செல்லாது. அவர் இங்கிலீஷ்ப் பாடம் சொல்வதை மாணுக்கர்கள் மிகவும் பாராட்டுவார்கள். இங்கே தமக்குப் பிரியமான இங்கிலீஷ்ப் பாடத்தை விட்டுச் சரித்திர பாடஞ் சொல்ல நேர்ந்ததில் அவருக்கு அதிருப்தி இருந்து வந்தது. அவர் தமிழிலும் பயிற்சி உடையவர். தம்முடைய புஸ்தகங்களில்,

"அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்"

என்ற குறளை முதலில் எழுதி வைத்திருப்பார்.

பூண்டி அரங்கநாத முதலியார் கும்பகோணத்திலும் சென்னையிலும் இருந்தார். அவர் இங்கே கணித புரொபஸராக விளங்கினர். ஆச்சரியமான சக்தியுடைய மேதாவியென்று அவரையறிந்தோர் யாவரும் பாராட்டுவார்கள். அவர் ஏகசந்தக்கிராகி. தமிழில் சிறந்த பயிற்சி உடையவர். கச்சிக் கலம்பகமென்னும் நூலொன்றும் வேறு பல தனிப் பாடல்களும் இயற்றியிருக்கின்ருர். தமிழ் வித்துவான்களை நன்கு ஆதரிப்பவர். அவர் எனக்கு மிகவும் சிறந்த நண்பர். எங்களிருவருக்கும் செய்யுளுருவத்திற் கடிதப் போக்குவரத்து நடைபெற்றதுண்டு.

பத்திரப்பதிவிலாகாத் தலைவராக இருந்த திவான் பகதூர் ஆர். வி. ஸ்ரீநிவாஸையரென்னும் பெரியார் கும்பகோணம் காலேஜில் இருந்தவர்; இங்கும் சில

காலம் ஆசிரியராக இருந்தார். அவர் கணிதத்தில் மிகச் சிறந்த அறிவுள்ளவர். அவரை "யூக்ளிட் ஸ்ரீநிவாஸையர்" என்று சொல்வார்கள். அவருடைய அறிவுக்கு விளங்காத புதிய விஷயம் எதுவும் இல்லை. எந்த விஷயத்தையும் உழைத்து விரைவில் கற்றுக் கொண்டு பாடஞ்சொல்வார். தமக்குரிய பாடமல்லாத மற்றப் பாடங்களைக்கூட அவர் திறம்படக் கற்பித்திருக்கிறார். அவர் தமிழிலும் அறிவுள்ளவர். ஒரு முறை அவரைச் சர்வ கலாசாலையார் தமிழ்ப் பரீட்சகராக நியமித்தபோது அவர், "நான் இதற்கேற்ற தகுதியுடையவனல்லன்" என்று மறுத்துவிட்டனர். இங்ஙனம் தம்முடைய தகுதியை அறிந்து அதற்கு மேற்பட்ட முயற்சிகளில் தலையிடாமல் இருப்பவர்கள் இவ்வுலகில் மிக அரியர்.

இங்கே சிலகாலம் லத்தீன் (Latin) மாஸ்டராக இருந்த திவான்பகதூர் எல். டி. ஸ்வாமிக்கண்ணுப் பிள்ளையவர்கள் எனக்குப் பழக்கமானவர். அவர் இங்கே வேலை பார்த்தபிறகு பல பெரிய பதவிகளில் இருந்து நற்புகழ் பெற்றவர். கணித சாஸ்திரத்தில் மிகவும் உழைத்துச் சில புஸ்தகங்கள் வெளியிட்டிருக்கிறார். தமிழ் இலக்கியங்களிலும் சிலாசாஸனங்களிலும் வரும் காலக் குறிப்புக்களை அவர் ஆராய்ந்து விளக்கியுள்ளார். அவை சரித்திர ஆராய்ச்சியாளர்க்கு மிகவும் உபயோகமாக உள்ளன. அவர் எல்லோரிடமும் சுலபமாகப் பழகும் இயல்புடையவர்.

இக்காலேஜில் ஸ்ரீ எம். சேஷகிரி சாஸ்திரியாரென்பவர் சிலகாலம் ஸம்ஸ்கிருத புரொபஸராக இருந்தார். அவருக்கு ஆறு பாஷைகளிலும் சங்கீதத்

திலும் பயிற்சி உண்டு. வீணை வாசிப்பார். மொழியிலக்கண ஆராய்ச்சியில் அவர் அதிகமாக ஈடுபட்டிருந்தார்.

கும்பகோணத்திலும் பின்பு சென்னையிலும் புரொபஸராக இருந்த ஸ்ரீ மளூர் அரங்காசாரியா



ஸ்ரீ மளூர் ரங்காசாரியர்

ரென்பவர் ஸயன்ஸிலும் தத்துவசாஸ்திரத்திலும் ஸம்ஸ்கிருதத்திலும் சிறந்த பண்டிதர். வெளிநாடுகளிலிருந்து எந்த அறிஞர் வரினும் அவரைக் கண்டு பேசிவிட்டுச் செல்வது வழக்கம். அவருடைய உபந்யாசம் மிகச் சிறந்ததாக இருக்கும். மணிமேகலை யென்னும் தமிழ்க்காவியத்தை நான் ஆராய்ந்து பதிப்பித்த காலத்தில் பௌத்த மத சம்பந்தமான பல விஷயங்களை அவர் எனக்குத் தெரிவித்து உதவிபுரிந்தார். இந்தக் காலேஜில் ஸம்ஸ்கிருத புரொபஸராக உள்ளவர்கள்

சென்னை அரசாங்கத்துக் கையெழுத்துப் புஸ்தகசாலை யின் தலைவராகவும் இருப்பதால் இந்தக் காலேஜுக்கும் அந்தப் புஸ்தகசாலைக்கும் நெருங்கின சம்பந்தம் இருந்திருக்குமென்றெண்ணுகிறேன்.

இந்தக் காலேஜில் பிரின்ஸிபாலாக இருந்து பிறகு டைரக்டர் பதவியை வகித்த ஸ்ரீமான் ஜி. எச். ஸ்டூ வர்ட்டு துரையவர்களால் நான் கும்பகோணத்திலிருந்து இங்கே மாற்றப்பெற்றேன். அவர் சிறந்த நுண்ணறி வுடையவர். பிறருடைய கருத்தைக் குறிப்பினாலே அறிந்துகொள்ளும் திறமையினர். 1903-ஆம்ஆண்டு முடி வில் நான் இந்தக் காலேஜுக்கு வந்தேன். அதுமுதல் 1919-ஆம் வருஷம் மார்ச்சுமீ முடியப் பதினாறு வருஷ காலம் இங்கே இருந்து தமிழ்ப் பாடஞ் சொல்லி வந்தேன். நான் இங்கேவந்த காலத்தில் ஸ்ரீமான் ஜே. பி. பில்டர் பெக் துரையவர்கள் பிரின்ஸிபாலாக இருந்தார். அவர் கும்பகோணத்தில் இருந்தபோதே எனக்குப் பழக்கமானவர். அங்கே இருந்த காலத்தில் அவருடைய கல்விப் பெருமையை நான் அறிந்தேன். நான் சீவக சிந்தாமணி யென்னும் ஜைன காவியத்தை முதல்முறை பதிப்பித்த காலத்தில் அவர் ஐந்து பிரதி களை விலைக்கு வாங்கிக் கேம்பிரிட்ஜ் யூனிவர்ஸிடி முதலிய இடங்களுக்கு அனுப்பி அங்கிருந்து ரசீது வருவித்துக் கொடுத்தார்.

பாரிஸ் யூனிவர்ஸிடியில் ஆசிரியராக இருந்த ஜூலியன் வின்ஸோனென்பவர் சிந்தாமணியைப் பற்றிப் பிரெஞ்சு பாஷையில் ஒரு கட்டுரை எழுதி அந்நூலிலிருந்து சில பகுதிகளையும் மொழிபெயர்த்து வெளியிட்டார். அந்தப் புஸ்தகத்தில் ஒரு பிரதி அவர்

எனக்கு அனுப்பவே பிரெஞ்சு தெரிந்தவர் பில்டர் பெக் துரையையன்றி வேறொருவரும் இல்லாமையால் அவரிடம் காட்டினேன். அவர் படித்துப் பார்த்து விட்டு, "நீங்கள் அச்சிட்ட நூலைப்பற்றி எழுதியிருக்கிறார். உங்களையும் பாராட்டியிருக்கிறார். உங்களால் காலேஜின் பெயர் விளங்குகிறது" என்றார். ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸிடியில் தமிழாசிரியராக இருந்த ரெவரெண்டு ஜி. யூ. போப் துரை அவருடைய நண்பர். அவர் தம்மிடம் என்னைப்பற்றிப் பலமுறை சொல்லியிருப்பதாகப் பில்டர்பெக் துரை கூறுவதுண்டு.

என்னுடைய தமிழாராய்ச்சியைக் குறித்துத் துரைத்தனத்தாருக்குத் தெரிவித்து 1905-ஆம்ஞு எனக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கும்படி செய்வித்தவர் அவரே. அவர் சீமைக்குப் போகும் காலத்தில் நான் பார்க்கச் சென்றிருந்தேன். அவர் அன்போடு சில நேரம் பேசியிருந்துவிட்டு, "நான் அங்கே ரெவரெண்டு ஜி. யூ. போப்பைக் காண்பேன். அவர் உங்களைப்பற்றி விசாரிப்பார். வைதிகக் கோலத்தோடுள்ள உங்கள் படம் ஒன்று வேண்டுமென்று முன்பே அவர் கேட்டிருக்கிறார். நீங்கள் கொடுத்தால் அவரிடம் சேர்ப்பிப்பேன்" என்றார். நான் அப்படியே கொடுத்தேன். சீமை சென்றபிறகும் அவர் அன்புடன் சில கடிதங்கள் எழுதியிருக்கிறார். தம் கையெழுத்திட்டு அவர் கொடுத்த அவரது படத்தை எனக்கு அருகிலே இன்னும் வைத்துக்கொண்டிருக்கிறேன்.

அவருக்குப்பின் பிரின்ஸிபாலாக இருந்த ஸ்ரீமான் ஜே. எச். ஸ்டோன் துரையவர்களும் எனக்குப் பலவித

அநுகூலங்களைச் செய்திருக்கிறார். அவர் மிக்க கருணை யுடையவர். பகைவர்களுக்கும் நன்மையையே செய்ய விரும்புபவர். அவர் கும்பகோணத்திலும் இருந்தார். அப்போதே அவருடைய பழக்கம் எனக்கு உண்டு. அங்கே அவர் இருந்த காலத்தில் மாணாக்கர்கள் கல்வி யில் அபிவிருத்தியடைவதோடு தேகப் பயிற்சியிலும் அதிகமான கவனம் செலுத்த வேண்டுமென்னும் விருப்பமுடையவராதலின் முதல்முதலாகக் காற்பந்து (Foot-ball), கிரிக்கட் முதலிய விளையாட்டுக்களை மாணாக்கர்களுக்குப் பழக்குவித்தார்; ஒரு வருஷம் ஷேக்ஸ்பியர் இயற்றிய நடுவேனிற் கனவு என்னும் நாடகத்தையும் அடுத்த வருஷம் வெனிஸ் வணிகன் என்னும் நாடகத்தையும் ஆங்கிலத்தில் மாணாக்கரைக் கொண்டு நடிக்கச் செய்தார்; அவ்விரண்டு நூல்களை யும் தமிழிலும் மொழிபெயர்க்கச் செய்தார். அவருக்கு அம் மகாகவியினிடத்திருந்த அபிமானமும் ஈடுபாடும் அப்போது வெளியாயின. பிரஸிடென்ஸி காலேஜில் அவர் இருந்த காலத்தில் ஒருசமயம், காலஞ்சென்ற தூத்துக்குடி வ. உ. சிதம்பரம் பிள்ளை சிறையிலிருந்து திருக்குறளிற் சில சந்தேகங்களை எனக்கு எழுதி யனுப்பி விடையெழுத விரும்பினார். சிறையிலுள்ள அவருக்கு நான் கடிதம் எழுதுவது உசிதமாக இருக்குமாவென்று ஸ்டோன் துரையைக் கேட்டேன். "அவசியம் எழுதவேண்டும். சிறைச்சாலைக்குள் ஒரு வருடைய பழக்கமும் இல்லாமல் கஷ்டப்படுபவர் களுக்கு நாம் உதவிசெய்வது அவசியம். ஆனால் கடிதத்தை நீங்கள் நேரே அனுப்ப வேண்டாம். எழுதி என்னிடம் கொடுங்கள்; நான் சிறையதிகாரி மூலம்

அவருக்கு அனுப்பிவிடுகிறேன்" என்றார். நான் அங்ஙனமே செய்தேன்.

ஸ்டோன் துரைக்குப் பிறகு காலேஜ் தலைவராக ஸ்ரீமான் இ. டபள்யூ. மிடில் மாஸ்ட் துரை சில காலம் இருந்தார். அவர் முதலில் உதவிக் கல்வியிலாகாத் தலைவர் வேலையையும் சேர்த்துப் பார்த்து வந்தார். அவர் எப்பொழுதும் முயற்சியோடு இருப்பவர். ஒவ்வொரு காரியத்தையும் திருத்தமாகக் கவனிப்பார். வேலைகளைப் பார்த்த காலம் போக மற்றக் காலங்களிற் படித்துக்கொண்டே இருப்பார்.

சென்னைக் கவர்னராக இருந்த லார்ட் கார்மைக்கேல் அவர்கள் 1911-ஆம் ஞு மகாபலிபுரத்துக்கு விஜயம் செய்தார்கள். அதற்கு முன் அத்தலத்தைப்பற்றிய செய்திகளைத் தெரிவிக்க வேண்டுமென்று செங்கற்பட்டு ஜில்லா கலெக்டர் விரும்பியபடி மிடில் மாஸ்டு துரைமுகமாக நான் தெரிந்தவற்றைத் தொகுத்து எழுதி அனுப்பினேன். துரைத்தனச் சிற்ப இலாகாக் காரியாலயத்துக்கு அந்தக் கவர்னர் வந்தகாலத்தில் அங்குள்ள விக்கிரகங்கள் முதலியவற்றைப்பற்றித் தெரிவிக்கும் பொருட்டு மிடில் மாஸ்டு துரை என்னை அனுப்பினார். நான் சென்று அங்ஙனமே அவற்றை விவரமாக விளக்கிச் சொல்லிவிட்டு வந்தேன்.

சில தினங்களுக்குப் பின்பு அக் கவர்னர் இந்தக் காலேஜிற்கு விஜயஞ் செய்தார். அப்போது அவர் விஷயமாக இரண்டு செய்யுட்களை எழுதி வாசித்தேன்; பிறகு தமிழ் வகுப்புக்கு வந்த போது நான் பதிப்பித்த நூல்களின் ஏட்டுச் சுவடிகளையும் அச்சுப் பிரதிகளையும் எழுத்தாணியையும்

காட்டினேன். கவர்னர் துரை அந்த வகுப்பில் மட்டும் அரை மணிக்கு மேல் இருந்து அவற்றைப் பார்த்து மகிழ்ந்து சென்றார். மிடில் மாஸ்ட் துரையும் கல்வி இலாகாத் தலைவராக இருந்த ஸ்ரீ போரன் துரையும் நான் கவர்னருக்கு வாழ்த்துப் பாடல் கூறியதையும், ஏட்டுச் சுவடிகள் காட்டியதையும் மிகவும் பாராட்டினார்கள்.

மேற் கூறிய பிரின்ஸிபால்களுள் பெரும்பாலோர் என் ஜாகைக்கு வந்து என்னுடைய புஸ்தகசாலையைப் பார்த்து மகிழ்ந்து சென்றதுண்டு.

மிடில்மாஸ்டுக்குப் பிறகு பிரின்ஸிபாலாக வந்தவர் ஸ்ரீமான் எச். ஜே. ஆலன் துரையவர்கள். அவர் காலத்தில் 1919-ஆம் வருஷம் காலேஜிலிருந்து நான் விடைபெற்றுக்கொண்டேன். அப்போது, "தங்களுக்கு ஏதாவது என்னால் ஆகவேண்டியதிருந்தால் கவனிப்பேன்" என்றார். நான், "என்னுடன் இருந்து தமிழாராய்ச்சியில் எனக்கு உதவி செய்து வரும் பண்டிதராகிய இ. வை. அனந்தராமையருக்கு என் ஸ்தானத்தை அளிக்க வேண்டும். இதுதான் என் விருப்பம்" என்றேன். அவர் அதை மனத்தில் வைத்திருந்து என் விருப்பத்தை நிறைவேற்றினார்.

அதே வருஷத்தில் சில அன்பர்கள் சேர்ந்து என் படத்தைக் காலேஜில் வைக்க ஏற்பாடு செய்தார்கள். அதை ஏற்றுக்கொண்டு மேற்கூறிய ஆலன் துரை அரை மணி நேரம் என்னைப் பாராட்டிப் பேசினார். அவர் பேச்சின் கருத்தை நண்பர்கள் முகமாக அறிந்தபோது, என்னைப்பற்றி அவர் அவ்வளவு தூரம் அறிந்துகொண்டிருப்பது ஆச்சரியமாக இருந்தது.

ஆலன் துரைக்குப் பின் பிரின்ஸிபாலாக வந்த ஸ்ரீ ஹெச். எஸ். டங்கன் துரை எனக்குப் பழக்கமானவரே. அவருடைய தந்தையாராகிய ஸ்ரீ டி. டங்கன் துரை இங்கே பிரின்ஸிபாலாகவும் அப்பால் கல்வியிலாகாத் தலைவராகவும் இருந்தார். அவர் சிறந்த தத்துவ சாஸ்திர ஆசிரியராகிய ஸ்ரீ ஹெர்பர்ட் ஸ்பென்ஸருடைய மாணாக்கர். அவர் காலேஜை விட்டு நீங்கும்போது, "என்னுடைய குருவாகிய ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் பல அரிய வேலைகளைச் செய்து வைத்திருக்கிருர். நான் சீமைக்குப் போய் அவருக்குச் சகாயம் செய்ய எண்ணியிருக்கிறேன்" என்ருர். தம்முடைய குருபக்திக்கு அறிகுறியாகத் தம் குமாரருக்கு ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் டங்கனென்று பெயர் வைத்தார்.

ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் டங்கன் தம்முடைய தந்தையாரைப் போலவே முதலில் இந்தக் காலேஜில் பிரின்ஸிபாலாக இருந்ததோடு பிறகு கல்வியிலாகாத் தலைவராகவும் விளங்கினர். அவர் என் வீட்டிற்கு வந்து என்னுடைய புஸ்தகசாலையைப் பார்த்துச் சென்றிருக்கிருர்.

இக்காலேஜில் கெமிஸ்ட்ரி புரொபஸராக இருந்த ஸ்ரீமான் வில்ஸன் துரை யென்பவர் எனக்குப் பழக்கமானவர். அவர் அஞ்சாத நெஞ்சர். யாரிடத்திலும் தாக்ஷிண்யம் காட்டமாட்டார். ஸயன்ஸ் ஆராய்ச்சிக்குரிய பல அருமையான கருவிகளைச் சேகரித்தார். அவர் இந்தக் காலேஜை விட்டு நீங்கும்போது ஒரு சபை கூட்டி அவரை ஆசிரியர்களும் மாணாக்கர்களும் உபசரித்தார்கள். அந்தச் சபையில் அவர் பேசியபோது,

"நான் எவ்வளவோ சிரமப்பட்டுப் பல கருவிகளைச் சேகரம் செய்தேன். அவற்றின் அருமையை இங்குள்ளவர்கள் உணர்வார்களோ வென்று சந்தேகிக்கிறேன். என்னிடம் பல மாணுக்கர்கள் படித்தார்கள். நானும் உழைத்துக் கற்பித்தேன். சிலர் சிறந்த புத்திசாலிகளாக விளங்கினுர்கள். ஆனுலும் எல்லோரும் படிப்பின் உண்மையான பிரயோசனத்தை அடையவில்லை. மேலும் மேலும் ஆராய்ச்சி செய்து அந்த வித்தையை உலகத்துக்கு உபயோகப்படுத்தவில்லை. உத்தியோகமே பெரிதென்றெண்ணிப் போய்விட்டார்கள்" என்றுர். ஸயன்ஸ் ஆராய்ச்சியில் அவருக்கிருந்த பற்றின் தன்மை அப்போது நன்கு வெளிப்பட்டது.

இங்கே ஸம்ஸ்கிருத புரொபஸராக இருந்த ஸ்ரீமான் ஜி. ஆப்பர்ட் துரையைப் பார்த்துப் பழகியிருக்கிறேன். அவர் பண்டிதர்களுடைய உதவியினுல் சுக்கிர நீதியைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். அவர் தமிழிலும் அபிமானமுடையவர்.

இதுகாறும் கூறிவந்த ஐரோப்பிய ஆசிரியர்களுக்குத் தமிழ் அன்னிய பாஷையாக இருந்தும் அவர்களுக்கும் எனக்கும் நேர்முகமான சம்பந்தம் ஏற்பட இயலாமலிருந்தும் அவர்களில் ஒவ்வொருவரும் என்னிடத்தில் மிக்க அபிமானத்தையும் ஆதரவையும் காட்டியதை இன்றும் நினைந்து மனமாரப் பாராட்டுகின்றேன். அவர்கள் பணத்தை மட்டும் கருதி மதிப்பவர்களல்லரென்பதை நன்கு தெரிந்துகொண்டேன்.

இந்தக் காலேஜில் தமிழ்க் கல்வியின் சம்பந்தம் மிகச் சிறந்த நிலையிலே இருந்து வந்திருக்கின்றது. இங்கே தமிழாசிரியராக விளங்கியவர்கள் சிறந்த

மதிப்புடையவர்களாக இருந்தார்கள். அக்காலத்தில் சென்னையில் கல்விச் சங்கமென்ற சங்கமொன்று இருந்தது. அச்சங்கத்தார் பல அரிய நூல்களை வெளியிட்டிருக்கிறார்கள். இக்காலேஜில் பண்டிதர்களாக இருந்த பலர் அச்சங்கத்தில் சேர்ந்து உழைத்திருக்கிறார்கள்.

ஆரம்பகாலத்தில் இந்தக் காலேஜில் ஸம்ஸ்கிருத பாடமே கற்பிக்கப்படவில்லையென்று தெரிகின்றது. தேச பாஷைகளுக்குத் தனியே புரொபஸர்கள் இருந்திருக்கிறார்கள். தமிழுக்கு இரண்டு ஆசிரியர்கள் இருந்த காலமும் உண்டு.

நான் இருந்த காலத்தில் பல வருஷங்கள் தமிழ்ப் பாடமே இல்லாமல் தமிழ் வியாசம் மாத்திரம் பாடமாக இருந்துவந்தது. நல்ல செய்யுட்களைப் பாடம் சொல்வதற்கில்லையே என்ற வருத்தம் எனக்கு இருந்தது, இப்போது தமிழ் நூல்கள் பாடமாக வைக்கப்பெற்று வருவது திருப்தியை அளிக்கிறது.

இது காலேஜான ஆரம்பத்தில் தமிழாசிரியராக இருந்தவர் முற்கூறிய மகாலிங்கையரென்பவர். அவர் ஆதிசைவர். மழவராயனேந்தலென்னும் ஊரினர். அக்காலத்தில் இந்நகரில் தமிழ் விஷயமாக எந்த நிகழ்ச்சி நடைபெற்றாலும் அவருடைய சம்பந்தம் இருக்கும். அவர் முதல் முதலில் சிறுவர்களுக்கு உபயோகமாகும்படி வசனநடையில் ஓர் இலக்கணம் எழுதினார். தொல்காப்பிய எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியர் உரையைப் பதிப்பித்தார். மழவைச் சிங்கார சதகம் முதலிய சில செய்யுள் நூல்களையும் இயற்றினார்.

ரெவரண்ட், பி. பர்ஸிவல் துரையவர்கள் யாழ்ப் பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரைக் கொண்டு மொழிபெயர்த்த பைபிளை மகாலிங்கையர் பார்த்துத் திருத்தமாக இருப்பதாக ஒப்புக்கொண்ட பின்னரே பாதிரிமார்கள் திருப்தியுற்றனர். இச்செய்தி ஆறுமுக நாவலர் சரித்திரத்தால் விளங்கும். பர்ஸிவல் துரை இந்தக் காலேஜில் முதல் தமிழ்ப் புரொபஸராக இருந் தார். அவர் இங்கிலீஷ்–தமிழ் அகராதி ஒன்று வெளி யிட்டிருக்கிறார். அவ்வகராதி இப்போதும் அதிகமாக வழங்கி வருகிறது.

மகாலிங்கையர் காலேஜை விட்டு விலகும்போது தம்முடைய ஆசிரியராகிய விசாகப்பெருமாளையரென் னும் வீரசைவ வித்துவானைத் தம் ஸ்தானத்தில் இருக்கும்படி செய்வித்தார். விசாகப்பெருமாளையர் பரம்பரையாக வித்துவான்களாக இருந்த குடும்பத்தில் உதித்தவர். அவருடைய தந்தையார் திருத்தணிகைக் கந்தப்பையரென்னும் சிறந்த தமிழ் வித்துவான். விசாகப்பெருமாளையர் இயற்றமிழாசிரியரென்று வித் துவான்களால் அளிக்கப்பட்ட பட்டத்தைப் பெற்றவர். பல தமிழ் இலக்கண இலக்கிய நூல்களுக்கு உரை எழுதிப் பதிப்பித்திருக்கிறார். பொருளிலக்கணத்தைத் தவிர மற்ற நான்கு இலக்கணத்தையும் வினு விடையாக எழுதியிருக்கின்றார். பால போத இலக்கணமென்ற வசன இலக்கணத்தையும், திருக்குறளுக்குத் தெளி பொருள் விளக்கமென்ற ஓர் உரையையும், நன்னூலுக் குக் காண்டிகை உரையொன்றையும் எழுதி அச் சிட்டார். இவை யாவும் மாணுக்கர்களுக்குப் பெரிதும் உபகாரமாக உள்ளன.

அவருக்குப் அப்பால் வந்தவர்களுள் ஸ்ரீநிவாச ராகவாசாரியாரென்பவர் ஒருவர். அவர் வடமொழி யிலும் தென்மொழியிலும் புலமை வாய்ந்தவர். விஷ்ணு புராணத்தையும் உத்தர ராமாயணத்தையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறார். தண்டி யலங்காரசாரம் என்ற அலங்கார இலக்கண வசன நூலொன்றையும் இயற்றினர். அது மிகவும் அருமை யானது.

ஸ்ரீ மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர் களின் மாணாக்கராகிய பொன்னம்பல முதலியாரென் பவரும், கோமளபுரம் இராசகோபால பிள்ளையென் பவரும் பின்பு தமிழாசிரியராக இருந்தனர். இராச கோபால பிள்ளை கம்ப ராமாயணத்தில் நல்ல பழக்கம் உடையவர். பலவைஷ்ணவ நூல்களை அச்சிட்டிருக்கிறார்.

பின்வந்த தொழுவூர் வேலாயுத முதலியாரென் பவர் இலக்கண இலக்கியப் பயிற்சியிலும் செய்யுள் செய்வதிலும் வசனம் எழுதுவதிலும் பிரசங்கம் செய் வதிலும் சமர்த்தர். பல செய்யுள் நூல்களை இயற்றி யிருக்கிறார். பெரியபுராண வசனம், வேளாண் மரபியல், சங்கர விஜயம், பராசரஸ்மிருதி முதலிய வசன நூல்கள் அவரால் எழுதப்பட்டன.

ஸ்ரீ கிருஷ்ணமாசாரியார், பு. ம. ஸ்ரீநிவாசாசாரியா ரென்போர் எனக்கு முன்பு பண்டிதர்களாக இருந் தனர். கிருஷ்ணமாசாரியார் சண்ட கௌசிகமென்னும் வட நூலைத் தமிழில் மொழிபெயர்த்தார். ஸ்ரீநிவா ஸாசாரியார் சங்கீதப் பயிற்சியுள்ளவர்; ஹரிகதை செய்பவர். ஒரு சங்கீத சபைக்குத் தலைவராக இருந்து நடத்தினர். அவர் 1903-ஆம் வருஷம் தேக அசௌக்

கியத்தால் சிலகாலம் ஓய்வு பெற்றுக் கொண்டிருந்த போது ஸ்ரீ வை. மு. சடகோபராமாநுஜாசாரியார் அவரது ஸ்தானத்தில் இருந்துவந்தார். சடகோப ராமாநுஜாசாரியார் புத்தி தீக்ஷண்யமும் சுறுசுறுப்பும் உடையவர். மெட்ரிகுலேஷன், எப். ஏ., பி. ஏ., பரீக்ஷைகளுக்குரிய பாட புஸ்தகங்களுக்கு உரையெழுதி வெளியிட்டார்.

இந்தக் காலேஜில் மாணவர் தமிழ்ச் சங்கமொன்று நெடுநாட்களாக நடந்து வருகிறது. நான் இருந்த காலத்தில் அந்தச் சங்கத்தில் மதுரையில் இப்போதுள்ள தமிழ்ச் சங்கத்தை ஸ்தாபித்தவரும் பாலவனத்தம் ஜமீன்தாருமாகிய ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைத் தேவர், துரைத்தன நிர்வாக அங்கத்தினராக இருந்த வி. கிருஷ்ணசாமி ஐயர், ஜஸ்டிஸ் பி. ஆர். சுந்தரமையர் முதலியவர்கள் ஆண்டு நிறைவு விழாக்களில், அக்கிராசனம் வகித்துப் பேசியிருக்கிறார்கள். ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதியார் இரண்டு மூன்று முறை பிரசங்கம் செய்திருக்கிறார். வேறு அறிஞர் பலரும் பிரசங்கங்கள் செய்ததுண்டு.

இந்தக் காலேஜ் தொடங்கி இப்போது நூறு ஆண்டுகள் ஆயினவென்பதை நினைக்கும்போது இந்த நூறு ஆண்டுகளிலும் எத்தனை மாணுக்கர்களை இக் காலேஜ் உண்டாக்கியிருக்கின்றதென்பதை எண்ணி மகிழ்கின்றேன்.

இது மேன்மேலும் அபிவிருத்தியடைந்து இந்த நாட்டுக்கு அறிவையும் பெருமையையும் அளித்துக் கொண்டு நிலவ வேண்டுமென்று ஸர்வேசுவரனைப் பிரார்த்திக்கின்றேன்.

# 24. பாபநாச முதலியார்*

நந்தன் சரித்திரக் கீர்த்தனை பாடிய ஸ்ரீ கோபால கிருஷ்ண பாரதியார் அடிக்கடி பழைய வித்துவான் களைப் பற்றிய கதைகளை என்னிடம் சொல்லுவார். சிவபக்தி மிக்க அவர் சிவ ஸ்தல சம்பந்தமான விஷயங் களையும் சொல்லிக் காட்டுவார். ஒருநாள் ஒரு கீர்த் தனத்தைப் பாடிக் காட்டி, "எவ்வளவு அழகாக அமைந்திருக்கிறது இது! இப்படித் தமிழ் வித்துவான் களால் பாட முடியுமா?" என்று அவர் கேட்டார்.

"இது யார் கீர்த்தனம்?" என்று கேட்டேன்.

"பாபநாச முதலியார் கீர்த்தனம். சிவ ஸ்தல விஷயங்களை அமைத்து ராக பாவம் நன்றாகப் பொருந் தும்படி அவர் பாடியிருக்கிறார். சங்கீதம் தெரிந்தவர் களுடைய சாகித்தியமென்றால் அதற்கு ஒரு தனிக் கௌரவம் உண்டு" என்றார். அவர் அந்த வகையைச் சேர்ந்தவராகையால் தம்மையும் கருத்திற் கொண்டே அப்படிச் சொன்னாரென்று நான் எண்ணினேன்.


மகா சிவபக்தரும் தமிழில் அருமையான கீர்த் தனங்களைப் பாடியவருமான கோபாலகிருஷ்ண பாரதி யாரே பாராட்டுவாரென்றால் பாபநாச முதலியாருடைய பெருமையைத் தனியே நாம் வேறு எடுத்துச் சொல்வது அவசியமன்று.

என் தந்தையாராகிய வேங்கடசுப்பையரும் பாப நாச முதலியார் கீர்த்தனங்களைப் பாடுவார். ஒருநாள் கும்பகோண சம்பந்தமான கீர்த்தனமொன்றைப் பாடிக் காட்டி "இது கும்பேசர் குறவஞ்சியிலுள்ளது;

---

*ஆனந்த விகடன், 28-12-1941.

பாபநாச முதலியார் வாக்கு" என்று சொன்னார். நான் இயற்றமிழ் இலக்கிய ஆராய்ச்சியில் புகுந்து ஏடு தேடிய காலத்தில் கும்பேசர் குறவஞ்சியையும் தேடிக் கொண்



ஸ்ரீ வேங்கட சுப்பையரவர்கள்

டிருந்தேன். நல்ல வேளையாக அந்தக் குறவஞ்சியின் ஏட்டுப் பிரதிகள் கிடைத்தன; பிரதி செய்து வைத்துக் கொண்டேன். பாபநாச முதலியாரைப் பற்றிச் சில புதிய விஷயங்களும் தெரியவந்தன.

பாபநாச முதலியார் கும்பகோணத்தில் பதினேழாம் நூற்றுண்டில் வசித்தவர். அந்நகரத்தில் வாணுதுறை வடக்கு வீதியில், திருவேங்கடம் பிள்ளையென்பவர் வசித்திருந்த வீடு அவர் வீடென்று சில தஸ்தாவேஜிகளால் தெரியவந்தது. அவர் காலத்தில் தஞ்சையில் மகாராஷ்டிர அரசு ஸ்தாபிதமாகியிருந்தது. மகாராஷ்டிர அரசராகிய ஏகோஜி என்பவர் அரசராக இருந்தார். அவருடைய ஆதரவு பாபநாச முதலியாருக்குக் கிடைத்தது. ஸ்தலங்கள்தோறும் உள்ள விஷயங்களை அமைத்து ரக்தி ராகங்களில் பல கீர்த்தனங்களை அவர் இயற்றினர். பெரும்பாலும் அவை முதற்காலத்திலே அமைந்திருக்கும்.

"நடமாடித் திரிந்த வுமக்கு" என்ற காம்போதி ராகக் கீர்த்தனம் அவர் இயற்றியதே. ஒருசமயம் திருக்கோடிகாவல் கிருஷ்ண ஐயர் இந்தக் கீர்த்தனத்தைப் பிடிலில் வாசித்துப் பாடியபோது அதைக்கேட்டு ராமநாதபுரம் அரசராகிய ஸ்ரீ ராஜராஜேசுவர ஸேதுபதியவர்கள் மிக ஈடுபட்டு உடனே நானூறு ரூபாய் பரிசளித்தார். இந்தக் கீர்த்தனத்தைத் தாம் பாடம் செய்து பாடிக்கொண்டே யிருந்ததோடு தனியே அச்சிட்டு, விரும்பியவர்களுக்குக் கொடுத்தும் வந்தார்.

அவர் தம் கீர்த்தனங்களில் பாபநாசம் என்ற முத்திரையைப் பாட்டின் பொருளோடு இசைந்து நிற்கும்படி அமைத்திருப்பார்.

அக்காலத்தில் சிறந்த சிவஸ்தலங்கள் சிலவற்றில் விசேஷ காலங்களில் நாடகம் நடத்தி வந்தார்கள். ஸ்தல சம்பந்தமான கதைகளை நாடகமாக்கி நடத்துவது வழக்கம். திருக்கழுக்குன்றத்தில் சுரகுரு நாடகமும், மயிலாப்பூரில் பூம்பாவை விலாஸமும் ஆடி வந்தனர். வேறு சில ஸ்தலங்களில் குறவஞ்சி நாடகத்தை நடத்தினர். இவ்வாறு ஏற்பட்ட குறவஞ்சிகளில் சிறந்தது திருக்குற்றாலக் குறவஞ்சி.

இயற்றமிழ்ப் புலவர்கள் பலர் குறவஞ்சிகளை இயற்றியிருக்கிறார்கள். சங்கீத வித்துவான்களிற் சிலரும் சில குறவஞ்சி நூல்களை இயற்றியதுண்டு. உத்தமதானபுரம் லிங்கப்பையர், பெரிய திருக்குன்றம் சுப்பராமையர் முதலியோர் இதற்கு உதாரணமாவர். பாபநாச முதலியார் அந்தக் கோஷ்டியில் முன்னவராக இருக்க வேண்டும்.

கும்பேசர்மீது ஒரு நாயகி காதல் கொண்டு விரக தாபத்தால் துன்பமடைகிறாள். நிலவையும் தென்றலையும் மன்மதனையும் வெறுத்துப் புலம்புகிறாள். அப்போது ஒரு குறத்தி வந்து தன் நாட்டு வளத்தையும் மலை வளத்தையும் சொல்லிக் குறி கூறுகிறாள்: "கும்பநாதர் உனக்கு அருள்செய்வார்" என்று சொல்லுகிறாள். அப்போது அவளைத் தேடிக்கொண்டு அவள் நாயகனாகிய குறவன் வருகிறான். குறத்தியும் குறவனும் சேர்ந்து கும்பேசரைத் துதிக்கிறார்கள். இதோடு நாடகம் முடிகிறது.

* * *

இந்த நாடகம் எளியநடையில் சங்கீத அமைப்புக்கு ஏற்ற கீர்த்தனங்களையும் நாடக அமைப்புக்கு

ஏற்ற பாடல்களையும் கொண்டுள்ளது. குறத்தி தான் கண்ட மலைகளையெல்லாம் அடுக்கிச் சொல்லும்போது பல ஸ்தலங்களின் பெயர்கள் வருகின்றன. இறுதியில்,

"தெரிசனம் பாவநாச மென்ற அசலகிரிக ளின்னஞ்
சொல்லித் தொலையாதே யடிமாதே நான்"

என்று முடிக்கிறாள். இதில் பாவநாசம் என்ற முத்திரை வருகிறது.

குறி சொல்வதற்குமுன் பல தெய்வங்களை அவள் வேண்டிக் கொள்ளுகிறாள். ஆகாசவாணி, பூமிதேவி, எக்கலாதேவி, கண்ணனூர் மாரி முதலிய தெய்வங்களையும், கும்பகோணத்திலுள்ள தெய்வங்களையும் அழைத்துப் பாடுகிறாள். பேராரவாரப் பிள்ளையார், குடந்தை ஊர்காக்கும் குலோத்துங்க காளி என்னும் இரண்டு தெய்வங்கள் எனக்குப் புதியனவாக இருந்தன.

இந்த நூலில் வரும் குறத்தி சாதாரணமானவள் அல்லள். மிகப் பழங்காலம் முதல் இருந்து வருபவள். அவள் சுபத்திரைக்குக் குறி சொன்னவளாம். 'இவன் சந்நியாசியல்ல, அரசன்' என்று ரகஸ்யத்தைச் சொல்லிப் பரிசு பெற்றவளாம்.

"திரிதண்டு சந்நாசியல்ல ராச னென்று
திருச்சுபத் திரைக்குரைத் தேனந்தத்
தெள்ளமுது மெய்தா னுள்ள தென்று நல்ல
வெள்ளிபொன் னளித்தாள் பார்"

என்று அவள் தன் பெருமையைச் சொல்லிக்கொள்ளுகிறாள்.

குந்தி தேவிக்குக்கூடக் குறி சொல்லி, 'வர்ணச் சேலையு மாமுத்துமாலையுங் கொந்தள வோலையும்'

பரிசாகப் பெற்றுளாம். கவிஞன் படைத்த குறத்திக்கு முதலேது, முடிவேது?

இந்தக் குறவஞ்சி நாடகத்தைப் பிற்காலத்தில் கும்பகோணத்திலிருந்த கோப்பு நடராஜ செட்டியா ரென்பவர் நாட்டியக்காரர்களைக் கொண்டு மிகச் சிறப்பாக நடைபெறச் செய்தாரென்று ஒரு செய்யுள் தெரிவிக்கின்றது. அதில்,

> "அவனிபுகழ் முத்தமிழ்க் கவிராச சேகர
> னருள் பாவநாச நேசன்"

என்று பெரியாரொருவரால் பாபநாச முதலியார் பாராட்டப் பெற்றிருக்கிறார். பாகவதம் தசமஸ்கந்தத்தையும் உத்தர ராமாயணத்தையும் கீர்த்தன ரூபமாக இயற்றிய ஸ்ரீ அனந்தபாரதிகளாலும் முதலியார் பாராட்டப் பெற்றிருக்கிறார்.

இடையிடையே கீர்த்தனங்களில் சில சரணங்கள் தெலுங்கு மொழியில் உள்ளன. அதனால் பாபநாச முதலியாருக்குத் தெலுங்குப் பயிற்சியும் உண்டென்று தெரிகிறது. ஒருகால் இவர் தனித் தெலுங்கில் கீர்த்தனங்கள் இயற்றியிருத்தலுங் கூடும்.

* * *

கீர்த்தனங்களின் நடை சாதாரணமாக இருந்தாலும் அவற்றின் சங்கீத அமைப்பு உயர்ந்ததென்பதைச் சங்கீத வித்துவான்கள் நன்கு அறிவார்கள். அதனாலேதான் பாபநாச முதலியார் கீர்த்தனங்களைக் கனம் கிருஷ்ணையர், மதுரகவி, அனந்தபாரதி முதலிய சங்கீத சாகித்திய வித்துவான்கள் பாடி இன்புற்றார்களென்று தெரிகிறது.

அவர் இயற்றிய குறவஞ்சி மறைவில் இருக்கிறது. அந்த நாடகம் உலக அரங்கில் ஏறுங்காலம் எப்போது வருமோ!

# 25. மகளிர் கல்வியும் கலைமகள் பெருமையும்*

[மகளிருடைய கல்விமுன்னேற்றத்தைக் கருதி அமைக்கப்பெற்ற இக் **கலைமகள் கல்லூரி**யில் இந்த நன்னாளில் கலைமகள் திருக்கோயிலைத் திறந்துவைக்கும் நிலை வாய்த்தது குறித்து என் நல்வினையைப் போற்றுகின்றேன். அன்பர்களும் அறிஞர்களும் மிகுதியாகவுள்ள இத்தமிழகத்தில் இந்த நற்செயலை என்னைச் செய்விக்க எண்ணிய இக் கல்லூரியின் தலைவராகிய ஸ்ரீமான் அ. மெ. மெய்யப்ப செட்டியாரவர்களுடைய பேரன்பை நான் மறவேன். சில காலமாக எனக்கிருந்த தேக அசௌக்கியத்தினால் வெளியிடங்களுக்குச் செல்லுதலை நிறுத்தியிருந்தேன். ஸ்ரீமான் செட்டியாரவர்கள் நான் வரவேண்டுமென்று விரும்பியபோது முதலில் மறுத்தேன்; அப்பால் அவர்களுடைய வற்புறுத்தலும் அன்பும் என்னை இங்கே வரச்செய்தன.

இப்போது நான் இங்கே காணும் காட்சி எனக்கு மிக்க ஆறுதலையும் ஊக்கத்தையும் அளிக்கின்றது.

சில வருஷங்களுக்குமுன் நான் இவ்விடம் வந்திருந்தபோது இக்கலைமகள் கல்லூரி ஆரம்ப நிலையில் இருந்தது. அப்பொழுதே இதன் அமைப்புக்களையும், ஸ்ரீமான் மெய்

* புதுக்கோட்டை ஸமஸ்தானம் கொப்பனுபட்டி, கலைமகள் கல்லூரியின் கலைமகள் திருக்கோயில் திறப்புவிழாவில் தலைமை வகித்தபோது பேசிய முன்னுரை (1-6-1939.)

யப்ப செட்டியாரவர்களுடைய முயற்சிகளையும், அவர்களுக்கு ஊக்கமளித்துத் துணை நின்று உதவிவரும் அவர்களுடைய அருமை மனைவியாரது இயல்பையும் அறிந்து நான் பெருவியப்படைந்தேன்.

ஒருவர் போன வழியிலேயே பெரும்பாலும் செல்லும் கொள்கையுடையோர் உள்ள இந்நாட்டில், மகளிர் கல்லூரி ஒன்றை இந்தப் பக்கங்களிலே காணப்படாத புதிய முறையில் எல்லோருக்கும் நன்மை உண்டாகும்படி அமைத்து நடத்திவரும் செட்டியாரவர்களை யாவரும் பாராட்டுங் கடப்பாடுடையர். நெடுநாட்களாக எண்ணி எண்ணி மேற்கொண்ட அவர்களுடைய விருப்பம் நிறைவேறி வருவதனால் அவர்களுக்கு உண்டாகும் உவகை மிகுதியானது. இதனால் என்போலியருக்குப் பின்னும் அதிகமான மகிழ்ச்சி உண்டாகின்றது. தமிழ் நாட்டினருக்கே இக்கல்லூரி ஓர் உதாரணமாகத் திகழ்கின்றது. சென்னையில் உள்ள ஸேவாஸதனம், சாரதாபாடசாலை முதலியன போன்ற சில மகளிர் கல்லூரிகளின் முறைகள் இங்கும் காணப்படுகின்றன.]

மகளிருக்குக் கல்வி இன்றியமையாதது என்று காரணங் காட்டிப் பேசவேண்டிய காலம் ஒன்று முன்பு இருந்தது. இப்பொழுதோ அதற்கு அவசியம் இல்லை. மக்களுக்குட் பெண்பாலார் ஏனையோரைப் போலவே கல்விப்பயிற்சி பெறுதல் அவசியமென்பது யாவரும் உடம்படும் செய்தியாகிவிட்டது. ஆதலின் அதனை இங்கே மீண்டும் நான் வற்புறுத்துவது மிகை.

ஆயினும், பண்டைக்காலத்தில் மகளிருடைய நிலையையும் கல்வியில் அவர்கள் வளர்ச்சியுற்றிருந்த முறையையும் பழைய புலவர்கள் வாக்குக்களால் புலப்படும் செய்திகளையும் சிறிது கூறலாமென்று எண்ணுகிறேன்.

## பண்டைக்காலத்து மகளிரும் கல்வியும்

மகளிரென்று நினைத்தபொழுதே நம் கருத்தில் தோன்றும் குணம் கற்பு என்பது. நம் நாட்டு நூல்கள் யாவும் ஒருமுகமாக மாதர்களின் கற்பு நிலையையே உயர்வாகக் கூறுகின்றன ;

**" உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று "**

என்பது **தொல்காப்பியம்.** அக் கற்பு என்னும் சொல்லை ஆராய்வோமாயின் அதுவே கல்வியோடு தொடர் புடையதென்று விளங்கும். கற்பு, கல்வி என்னும் இரண்டு சொற்களும் **கல்** என்னும் பகுதியடியாகவே பிறந்தன. இரண்டுக்கும் கற்றலென்பதே சொற் பொருள். "எழுதாக் கற்பி னின்சொ லுள்ளும்" என்பதில் கற்பு என்னும் சொல் கல்வியைக் குறித்து நிற்கின்றது. இதனை உணர்ந்தே கற்பென்பதன் பொருளை விளங்க உணர்த்தவந்த நச்சினார்க்கினியர், 'கொண்டானிற் சிறந்த தெய்வம் இன்றெனவும் அவனை இன்னவாறே வழிபடுகவெனவும் இருமுதுகுரவர் கற் பித்தலானும், அந்தணர்திறத்தும் சான்றோர்தேஎத்தும் ஐயர் பாங்கினும் அமரர்ச்சுட்டியும் ஒழுகும் ஒழுக்கம் தலைமகன் கற்பித்தலானும் கற்பாயிற்று' என்றார். இதனால் மகளிர் தமக்கெனச் சிறப்பாக வகுக்கப்பெற்ற சில ஒழுக்கங்களையும் பிறவற்றையும் கற்றுக்கொள் ளுதல் இன்றியமையாததென்பதனை அறிந்து கொள்ள லாம். சென்னையிலும் சென்னையைச் சார்ந்த இடங்களி லும் கற்பித்தலென்பது மணஞ்செய்து கொடுத்தலைக் குறிக்க வழங்குகின்றது.

கல்விக்கும் பெண்மைக்கும் பலவகையிலே தொடர்பு உண்டு. வடமொழியிற் கல்வியென்பதைக் குறிக்கும் சொல்லாகிய வித்யாவென்பது ஸ்த்ரீலிங்கம். இதனையறிந்தே ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்,

"கல்வியே கற்புடைப் பெண்டிர்"

என்று கல்வியைக் கற்புடைய மகளாக உருவகம் செய்கின்றனர். கல்விக்கடவுளே கலைமகளாகிய பெண் தெய்வந்தானே?

பழைய தமிழ் நூல்களை ஆராய்ந்தால் தமிழ் நாட்டில் கல்வித்துறையில் இருபாலாரும் தலைசிறந்து விளங்கினார்களென்பது தெரியவரும். மகளிருக்குக் கல்வி இன்றியமையாததென்பதை அக்காலத்தினர் நன்கு உணர்ந்திருந்தனர். அரசர்களுக்கு அவர் மனைவியர் மந்திரிகளைப்போல இருந்து யோசனை கூறினர். செல்வர்களுடைய மனைவியர் அச்செல்வத்தை நல்ல வழியிலே செலவிடத் துணைநின்றனர். வறியோர் குடும்பத்திற் பெண்கள் தம் அறிவுத்திறத்தினால் குடும்ப வாழ்க்கையிற் பல நன்மைகளை உண்டாக்கினர். மனைக்குத் தலைவியாக இருந்த பெண், தன் தலைவன் ஈட்டிய பொருளை வரவுக்கேற்பச் செலவு செய்து வந்தாள். அத்தகைய வாழ்க்கைத் துணைவி, "மனைத் தக்க மாண்புடையளாகித் தற்கொண்டான் வளத்தக்காள்" என்று பெரியார் பாராட்டும் வண்ணம் வாழ்ந்தனள். அவளால் மனைநலம் நிரம்பியது. 'இவள் வீடு புகுந்தாள். இவளுடைய திறமையினாலே இவ்வீட்டின் செல்வநிலை உயர்ந்தது' என்று சொல்லும் பெருமை அவளுக்கு இருந்தது. இக்கருத்தை,

"ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை
பெருநலக் குறுமகள் வந்தென
இனிவிழ வாயிற் றென்னுமிவ் வூரே" (295)

என்னும் குறுந்தொகைச் செய்யுள் தெரிவிக்கின்றது.

"இவள் வருவதற்கு முன்னெல்லாம் இந்த வீட்டில் ஒரே ஒரு பசு இருந்தது. அதை வைத்துக்கொண்டு ஏதோ கிடைத்ததை உண்டு காலங்கழித்தார்கள். இந்தச் சிறு பெண் வந்தாள். இவளுடைய திறமையினால் இந்த வீட்டில் லக்ஷ்மீ விலாசம் உண்டாயிற்று. இப்பொழுது நாள்தோறும் விருந்தும் விழாவுமாக இருக்கிறது வீடு" என்று பிறர் போற்றுவதாக ஒரு தோழி கூறுகின்றாள். அந்தப் பெண் புக்ககம் வந்த பிறகு அவளுடன் அதிருஷ்டமும் குடிபுகுந்ததென்று கொள்வதிற் பிழையொன்றும் இல்லை. ஆயினும் அவளுடைய முயற்சிகளும் அந்நிலைக்குக் காரணமாக இருந்தனவென்று கொள்வதே சிறப்பாகும். தன் கணவனது வருவாய் இன்னதென்று அறிந்து அதற்கு ஏற்றபடி செலவுகளை அமைத்துக் கொண்டும் அவ்வப்பொழுது தன் கணவனுக்கு ஊக்கம் அளித்துப் புது முயற்சிகளை மேற்கொள்ளும்வண்ணம் செய்தும் தன் வீட்டிற் செல்வ நிலையை அவள் உயர்த்தினாள். அவள் மனையறம் பாதுகாத்துப் பொருள் நிலையைச் செவ்விதாக்கித் தன் நாயகனுக்கு இன்பம் வழங்கினாள்.

பல வருஷங்களாகியும் தமக்கு நரையில்லாததன் காரணத்தைக் கூறவந்த புலவர் ஒருவர் தம் மனம் திருப்தியடைவதற்கேற்ற அமைப்புக்கள் தம் வீட்டிலும் ஊரிலும் நாட்டிலும் இருப்பதாக ஒரு செய்யுளிற் கூறுகின்றனர். அவர் கூறும் காரணங்களுள் முதற்

காரணம், மாட்சிமைப்பட்ட அவர் மனைவி அறிவு மிக்கவளாக இருந்தமையேயென்று தெரிகின்றது;

" யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்."

(புறநானூறு, 191.)

இவ்வாறு நிரம்பிய அறிவுடையவளாக ஒரு பெண் இருக்கவேண்டுமாயின், இயற்கையறிவோடு செயற்கையறிவும் அவளுக்கு அமைவது அவசியமாகும். அவ்வறிவுக்குக் காரணமாவது கல்வி;

" தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு "

என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

செல்வமும் அறிவும் ஒருங்கு வாய்க்கப்பெற்ற மகளிர் இல்லறவாழ்விற்குரிய கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றி வந்தனர். செல்வத்தோடு கல்வியையும் பெறுவதனால் மகளிர் சிறப்புறுவாரென்பது கவிச் சக்கரவர்த்தியாகிய **கம்பர்** கருத்து. இது,

" பெருந்த டங்கட் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே "

என்னும் செய்யுளாற் பெறப்படும்.

சங்ககாலத்துப் புலவர்களிற் பல பெண்பாலார் உண்டு. பிற்காலத்தும் பல மகளிர் சிறந்த புலமையுடையவர்களாகத் திகழ்ந்தனர். எவ்வகைச் சாதியின

ராயினும் எவ்வகைச் சமயத்தினராயினும் மகளிர் கற்றுத் தேர்ந்தன ரென்பதற்கு பல ஆதாரங்கள் உள்ளன.

இவை பழைய செய்திகள். இன்று மகளிர் கற்றல் வேண்டுமென்னும் கொள்கை நாடு முழுவதும் பரவி யிருக்கின்றது. ஆயினும் நம் நாட்டுக்கு ஏற்றபடி பெண்களைப் பயிற்ற வேண்டுமென்பதிற் கவனம் செலுத்துபவர் மிக அரியர்.

## இக்காலத்துக் கல்வி முறை

இப்பொழுதுள்ள கல்விமுறை நம் நாட்டு நாகரிகத் துக்கு முழுதும் தக்கபடி அமையவில்லை. கல்வியினால் விளையும் பயன் முழுதும் இம்முறையினாற் பெறவியல வில்லையென்பது பலர் கொள்கை. ஆடவருக்கே இம் முறை பெரும்பயனைத் தரவில்லையெனின் பெண்களைப் பற்றிச் சொல்ல வேண்டுவதில்லை. ஆடவருக்கு உரியன யாவும் பெண்களுக்குக் கற்பிக்கப் பெற வேண்டு மென்பது தகுதியன்று. பெண்களுக்கே உரிய தனிக் கலைகளும் ஆண்களுக்கே உரிய தனிக்கலைகளும் உண்டு. ஆதலின் நாட்டுமுறைக்கும் பெண்தன்மைக்கும் ஏற்ற வண்ணம் அமையும் கல்வியே மகளிருக்கு மிகவும் நன்மை பயப்பதாகும்.

## கலைமகள்

இந்தப் பிரார்த்தனை மண்டபத்தின் அமைப்பே இங்குள்ள பெண்மைக்கு அடையாளமாக விளங்கு கின்றது. கல்விகற்பார் யாவரும் கலைமகளின் திரு வருளைப் பெறவேண்டும். நம் நாட்டிற் சிறந்த கவிஞர்

களாகப் போற்றப்பெறும் காளிதாஸர், கம்பர், ஒட்டக் கூத்தர், குமரகுருபரர் முதலியோர் கலைமகளுடைய திருவருள் நோக்கத்தைப் பெற்றவர்களே.

கம்பர் சரசுவதியந்தாதி பாடியிருக்கிறார். ஒட்டக் கூத்தர் கூத்தனூரென்னும் ஊரில் திருக்கோயில் கொண்டுள்ள கலைமகளை வழிபட்டுப் புலமை வாய்ந் தனர். குமரகுருபரரோ சகலகலாவல்லிமாலை பாடி ஹிந்துஸ்தானி பாஷையை அறிந்து கொண்டார். பரம சைவராகிய அவர் மனங்கரைந்து கலைமகளைத் துதித் துள்ளார்; 'கண்கண்ட தெய்வம்' என்று பாராட்டு கின்றார். அதனால் கலைமகள் சமயங்கடந்த தெய்வ மென்று அறிகின்றோம்.

பௌத்தர்களும் ஜைனர்களுங்கூடக் கலைமகளை வணங்கி வந்தனர். பௌத்தசமயக் காப்பியமாகிய மணிமேகலையில் ஆபுத்திரன் என்னும் ஒருவனது வரலாறு வருகின்றது. அவன் பௌத்தன். அவன் மதுரையிலே சிந்தாதேவியின் திருக்கோயிலைச் சார்ந்த ஓரிடத்தில் இரவிற் படுத்திருந்தபொழுது அத்தேவி எழுந்தருளி அக்ஷய பாத்திரமொன்றை அவனுக்குத் தந்தாள். அப்பாத்திரம் எடுக்க எடுக்கக் குறையாத அன்னத்தை உதவுவது.

சிந்தாதேவி யென்பவள் கலைமகளே. அக்கோயில் கலைநியமம் என்று வழங்கும். கல்வியையும் குறைவற்ற உணவையும் கலைமகள் அளிக்கும் இயல்பினள் என் பதை இவ்வரலாறு விளக்குகின்றது.

"சிந்தா தேவி செழுங்கலை நியமத்து
நந்தா விளக்கே நாமிசைப் பாவாய்
வானோர் தலைவி மண்ணோர் முதல்வி"

என்று ஆபுத்திரன் சிந்தாதேவியைத் துதித்தானென்று மணிமேகலை கூறுகின்றது. அந்தக் கலைமகளின் திருவுருவம் இன்றும் மதுரைத் திருக்கோயிலின் தென் பிராகாரத்தில் தென்பாக மண்டபத்தில் உள்ளது.

சீவக சிந்தாமணி ஆசிரியராகிய திருத்தக்க தேவர் அந்நூலின் முதல் இலம்பகமாகிய நாமகளிலம்பகத்திலே கலைமகளைப் பற்றிச் சிறப்பிக்கின்றனர். சீவகன் கல்வி கற்றுத் தேர்ந்தனனென்பதை அவ்விலம்பகம் சொல்லுகின்றது. அதனையே, சீவகன் நாமகளை மணந்தனனென்று வேறு வகையாகப் புனைந்து கூறினர்.

சீவகனை வளர்த்தவர்கள் அவனுக்குக் கல்வி கற்பிக்கத் தொடங்கினமையை,

"குழைமுக ஞான மென்னுங் குமரியைப் புணர்க்க லுற்றார்"

என்றும் அவன் கற்றுத் தேர்ச்சி பெற்றதை,

"நாமக ணலத்தை யெல்லாம் நயந்துடன் பருகி"

என்றும் அம்முனிவர் கூறினார். 'கல்வியே கற்புடைப் பெண்டிர்' என்னும் கருத்து இத்தகைய பெரியோர் வாக்குகளின் நினைவிலிருந்தே குமரகுருபரருக்குத் தோன்றியிருத்தலும் கூடும். ஜைனர்களுக்குச் சிறந்த தலமாகிய சிரவணவெண்குளத்தில் கலைமகள் வடிவம் வழிபடப்பெற்று வருகின்றது. தண்டியலங்காரத்தில் உள்ள மேற்கோட் செய்யுள் ஒன்று, நாவலர்களுக்கு ஞானக்கண்ணாக இருந்து உதவும் கலைமகளை, மூன்று சக்திகளாகவும் எல்லாச் சமயத்தாருக்கும் பொதுவான தெய்வமாகவும் பாராட்டுகின்றது:

"இமையவர்கண் மோலி யிணைமலர்த்தாள் சூடச்
சமயந் தொறுநின்ற தையல்—சிமய
மலைமடந்தை வாச மலர்மடந்தை யெண்ணெண்
கலைமடந்தை நாவலோர் கண்"

என்பது அச்செய்யுள். 'சமயந் தொறும்நின்ற தையல்' என்பதைக் காண்க.

ஆடவர் ஆண் தெய்வங்களின் பெயரைச் சூட்டிக் கொள்ளுதலும் பெண்கள் பெண் தெய்வங்களின் பெயரை வைத்துக்கொள்ளுதலும் மரபு. இம் முறை மாறி இயற்பெயராக வழங்குதல் சிறுபான்மையாகும். ஆயினும் கல்விச் சிறப்புடையாருக்குக் கலைமகளாகிய பெண் தெய்வத்தின் பெயர் சிறப்புப் பெயராக வழங்குகின்றது. சரஸ்வதி, பாரதி என்னும் பெயர்கள் ஆடவர்களுடைய இயற்பெயரோடு சேர்த்து வழங்குவதைக் காண்க. கலைமகளுடைய அருள்நிலை சமயங் கடந்தும் பால் வேறுபாடு கடந்தும் ஒளிர்கின்றது.

இத்தகைய சமரஸ தெய்வத்தின் திருக்கோயில் இங்கே அமைந்திருப்பது எல்லா வகையாலும் பொருத்த முடையதேயாகும். கம்பர் கலைமகள் திருவுருவத்தை வருணிக்கையில்,

"தூய, உருப்பளிங்கு போல்வாள்"

என்று பாராட்டுகின்றார். இந்தத் திருவுருவத்தில் கலைமகள் தூய உருப் பளிங்கேயாகிக் காட்சியருள்கின்றாள். இதன் அமைப்பில் அழகும், கலைத்திறமையும், தெய்வத் தன்மையும் ஒருங்கே இலங்குகின்றன.